# தமிழ் வளர்க்கும் தருமபுரம்

www.saivamonline.com

தருமையாதீனம்

1981

# Contact Details

www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online




sspathipagam@gmail.com

+91 94440 21113

Pay +91 94440 21113

UPI 9444021113@UPI



தருமையாதீனக் குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

www.saivamonline.com

உ
குருபாதம்

உனக்குப் பணிசெய்ய உன்றனையெந் நாளும்
நினைக்க வரமெனக்கு நீதா—மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநா தா.

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

www.saivamonline.com

வெளியீடு எண் : 772

உ

குருபாதம்

# தமிழ் வளர்க்கும் தருமபுரம்

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26-வது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

திருவுளப்பாங்கின் வண்ணம்

ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்

வெளியிடப்பெற்றது

மதுரை ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு

வெளியீடு

**தருமையாதீனம்**

**1981**

www.saivamonline.com

முதற்பதிப்பு 1981
உரிமைப் பதிவு

ஆசிரியர்
புலவர். திரு இரா. செல்வக்கணபதி எம். ஏ.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்,
தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

விலை ரூ. 5-00

குருகுலம் அச்சகம்,
வேதாரண்யம்.

www.saivamonline.com

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26-வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய

சுவாமிகள் வழங்கியருளிய

# ஆசியுரை

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே."

தமிழ் உலகமொழிகள் பலவற்றுள்ளும் தொன்மையானது. இலக்கிய வளமும்–இலக்கணச் செறிவும் மிக்க தெய்வீகத்தன்மை மிக்கது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பாண்டிய மன்னர்களால் மதுரையில் சங்கம் நிறுவி வளர்க்கப்பெற்றது. பல்வேறு சமயஞ்சார்ந்த இலக்கியங்கள் தமிழில் இருப்பினும், சைவச்சார்புடைய இலக்கியங்களே இம்மொழியில் பெரும் பங்கு வகிப்பன. திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுளாம் சிவபெருமானே தமிழ்ச்சங்கத் தலைமையேற்று நடாத்தினர் என்பர் நக்கீரர். சிவபிரானும், உமையம்மையும், முருகப்பெருமானும் தமிழ்ச்சுவை மாந்தவே சங்கத்தில் தலைமையமர்ந்து தமிழாய்ந்தனர் என்பர் குமரகுருபரர்:

"தமரநீர்ப் புவனம் முழுதொருங்கு ஈன்றாள்
தடாதகா தேவிஎன்று ஒருபேர்
தரிக்க வந்ததுவும் தனிமுதல் ஒருநீ
சவுந்தர மாறன் ஆனதுவும்

www.saivamonline.com

குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதும் தண்டமிழ் மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில்இக்
கொழிதமிழ்ப் பெருமை யார் அறிவார்?"

மேலும் உமையம்மையாரைக் குறிப்பிடுமிடத்து, 'தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே' என்றும், 'தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்த கொடி' என்றும் தமிழோடு சைவத்தையும், சைவசமயக் கடவுளரையும் இணைத்துப் பேசுகின்றார். இவற்றைக் கற்பனை என்று வாதிட்டாலும், இவ்வாறு கடவுளை மொழியோடு இணைத்துப் பேசும் கற்பனைகூட வேறுமொழிகளில் இல்லாமை இங்கே நினைவுகூரத்தக்கது.

தமிழிற்கும் சைவத்திற்குமிடையே பிரித்தறிய இயலாத ஒப்புமைகள் பல உள்ளன. தமிழ்மொழியில் எழுத்துக்களை அகரஉயிர், ஏனைய பதினொரு உயிர்கள், மெய்எழுத்துக்கள் என மூவகையாகப் பகுக்கலாம். இதேபோல, சைவத்திலும் இறைவன், உயிர்கள், தளைகள் என்று மூன்று பகுப்புக்கள் உண்டு. தமிழ் மொழியில் அகர உயிர் தனித்து நின்று இயங்குவதோடு, நாதமாத்திரையாய் ஏனைய எழுத்துக்களோடும் கலந்து நின்று ஒலிக்கும். இவ்வகர உயிர்போல், சைவசித்தாந்தம் விளக்கிக் கூறும் இறைப்பொருளாகிய பரசிவமும், தாம் தனித்தும் எல்லா உயிர்களோடும் கலந்தும் இயக்கும் இயல்புடையது. பிற பதினொரு உயிர்களும் அகரத்தின் துணையின்றி இயங்கா. இதுபோல் உயிர்த்தொகுதிகளும் அகர உயிர்போல் விளங்கும் இறைவனது அருளின்றித் தாமே இயங்கமாட்டா. மூன்றாவதாகிய மெய்எழுத்துக்களை 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்'' எனக்கூறுவர் இலக்கண நூலார். இவையும் உயிரெழுத்தாகிய அகரத்தின் துணையின்றி இயங்கா. இதுபோல் ஆணவம் முதலாகிய தளைகளும் இறைப்பொருளாகிய சிவத்தின் துணையின்றி இயங்குதல் இல்லை. இம்மெய்கள் வன்கணம், இடைக் கணம், மென்கணம் என மூன்றாகப் பகுக்கப்பெறும். இவ்வாறே மலங்களோடு சம்பந்தப்பட்ட உயிர்களையும் மூன்றாகப் பகுத்தல்

www.saivamonline.com

சைவத்தில் உள்ளது. ஆணவமாதி மும்மலம் உடையாரைச் சகலர் (வன்கணத்தார்) என்றும், ஆணவம் மாயை இரண்டும் உடையாரைப் பிரளயாகலர் (இடைக்கணத்தார்) என்றும், ஆணவம் ஒன்றே உடையாரை விஞ்ஞானகலர் (மென்கணத்தார்) என்றும் கூறுவர்.

உயிர் பொருள்களை அறிதற்கு 36 தத்துவங்கள் துணைபுரிகின்றன. அதுபோல் தமிழிலும் 36 நூல்களைக் கொண்டே எல்லாவற்றையும் அறிதல் இயலும். இதற்கேற்பவே பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்ற 36 நூல்கள் அமைந்துள்ளன. இவை எல்லாம் நினைந்து செய்யப்பட்ட ஒப்புமைகள் அன்று; சைவத்திற்கும் தமிழிற்கும் இடையே இருந்துவரும் பிரித்தறியமாட்டாத தெய்விக உறவுகள்.

இவ்வொப்புமைபற்றியே சைவ முதல் ஆசாரியராய்த் திகழ்ந்த திருஞானசம்பந்தரைச் சைவம் பரப்பிய ஞானசம்பந்தர் என்னுது 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்' என்றும், 'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்' என்றும் பின்வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் வேறுபாடற்ற நிலையில் தமிழோடு இணைத்துப் பாடினுர். இவ்வாறு செந்தமிழ்ல் சிவநெறிவளர்த்த ஞானசம்பந்தர் திருப்பெயரைத் தாங்கி கி. பி. பதினும் நூற்றுண்டின் இடைப்பகுதியில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தருமை யாதீனத்தைத் தோற்றுவித்தருளினுர்கள். இவர்களும், இவர்கள் நிறுவிய தருமையாதீனமும், இவர்கள் வழிவந்த அருளாளர்களும் கடந்த 450 ஆண்டுக்காலத்தில் சிவநெறிவளர்ச்சியோடு இயைந்து நின்று தமிழுக்குச் செய்துவந்திருக்கும் தொண்டுகள் அளப்பரியன. அவற்றுள் ஒரு சிலவற்றைத் 'தமிழ் வளர்க்கும் தருமபுரம்' என்ற தலைப்பில் விளக்கி எழுதப் பெற்றுள்ளது இந்நூல். தமிழ் வளர்க்கும் தருமபுரம் என்றுல் தருமபுரம் தமிழை வளர்த்த வரலாறு என்றுமட்டுமே நம்மில் பலருக்கும் தோன்றும். திருவருளால் அமைந்த இத்தலைப்பை உற்று நோக்கினுல் தமிழை வளர்க்கும் தருமபுரம் என்பதோடு, தமிழால் வளர்க்கப் பெறும் தருமபுரம் என்ற பொருளும் இயைந்திருத்தலை உணரலாம். ஒரு

www.saivamonline.com

தலைவர் ஒரு நாட்டையோ சமுதாயத்தையோ தலைமை ஏற்று வளர்க்கிறார் என்றால், நாடு அவரால் வளர்வது போல் அம் முயற்சியாலேயே, நாட்டின் வளர்ச்சியோடு இணைந்து அவரும் வளர்கிறார் என்பது விளங்கும். இதுபோல் தருமையாதீனம் தமிழை வளர்த்து வருவதோடு, தமிழால் வளர்ந்தும் வந்திருக்கும் சிறப்பு இந்நூலுள் சுவையாக விளக்கப்பட்டுள்ளது.

இத்தகைய மதுரைப் பொற்றாமரைத் தடாகத்தில், அருள் ஞான ஊற்றாகத் தோன்றிய சொக்கநாதப் பெருமானைக் 'கண்ணுக்கினிய பொருளாக' ஞானானுபூதியுடன் கைவரப்பெற்ற ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருவருள் வாழ்வு வாய்க்கப்பெற்றவர்கள். திருநந்தி மரபில் வந்த கமலை ஞானப்பிரகாசரிடம் அருளுபதேசம் பெற்றவர்கள். இவர்கள் திருவுருவம், 'உயிர்க்குத் தாய்-தந்தை யாகிய சொக்கநாதனை விட்டு, உடலுக்குத் தாய் தந்தையாகிய பெற்றோருடன் வரமாட்டேன்' என்றதற்கு ஏற்பத் திருவருள், வாய்ப்பாக அவர்கள் ஞானானுபூதி பெற்ற மதுரைத் திருக்கோயில் இரண்டாவது கோபுரத்தில் அதிகாரநந்திக்கு உரிய இடத்தில் அமைந்திருப்பது சொக்கநாதரின் கருணையையும், இவர்களது திறனையும் உணர்த்துவதாக உள்ளது.

செந்தமிழோடும் சிவநெறியோடும் நெருக்கமான தொடர்புடைய மதுரையில் இப்போது ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு சிறப்பாகத் தமிழக அரசின் பெருமுயற்சியால் நடைபெற இருப்பது பாராட்டத் தக்கதாகும். சென்னையில் 1968-இல் நடைபெற்ற இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட அறிஞர் பெருமக்களுக்குத் தருமையாதீனம் 'சித்தாந்தத் தெளிவியல்' என்ற தமிழ் நூலையும், 'சைவ சித்தாந்தம்' என்ற ஆங்கில நூலையும் வெளியிட்டுத் திருக்கை வழக்கமாக வழங்கியது. அதுபோல் இவ்வுலகத் தமிழ்மாநாட்டிலும் இவ்வினிய 'தமிழ் வளர்க்கும் தருமபுரம்' என்ற தமிழ் நூலையும், 'ஸ்ரீ குருஞான சம்பந்தர் மதுரையில் பெற்ற உள்ளுணர்வு' என்ற ஆங்கில நூலையும் தருமையாதீனம் வெளியிட்டு மாநாட்டுப் பிரதிநிதி களுக்கு மகிழ்வுடன் வழங்குகிறது. மதுரை வழங்கிய மாதவச்

www.saivamonline.com

செல்வர் ஆகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் வரலாற்றையும், அவர்கள் வழங்கிய அறிவுக் கருவூலமாகிய நூல்களின் ஆய்வையும், அவர்கள் வழிவந்தோர் ஆற்றிவரும் அருந்தமிழ்ப் பணிகளையும், மதுரையில் நடைபெறும் உலகத்தமிழ் மாநாட்டில் வழங்குவது மிக்க பொருத்தமுடையது என்ற நோக்கில்தான் இந்நூல் இம் மாநாட்டில் வெளியிடப்படுகிறது. இந்நூலை எழுதிய வித்துவான் இரா. செல்வக்கணபதி எம். ஏ., இத்தகு ஞானப்பண்ணையில் தோன்றி வளர்ந்து வருபவர் என்பதும் மகிழ்ச்சிக்குரியதாகும். இவர் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியில் பயின்று, வித்துவான் தேர்வில் மாநில முதன்மை பெற்றுத் தேறி ஆயிரம் ரூபாய்ப்பரிசு பெற்றுத் தற்போது இக்கல்லூரியிலேயே துணைப் பேராசிரியராகப் பணியாற்றிவருகிறார். இந்நூலை இனிய எளிய தமிழில் எழுதியுள்ளார். இவருக்கும் இம்மாநாட்டைச் சிறப்புற நடத்தும் அன்பர்களுக்கும், இம்மாநாட்டில் பங்கேற்கும் அனைவருக்கும் நலம்பலபெருகச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத நாட்டுடன் உலகம்"

www.saivamonline.com

குருபாதம்

# முன்னுரை

தருமையாதீனம், தமிழகத்துத் தொன்மையான சைவஆதீனங்களுள் குறிக்கத்தக்க சிறப்பு மிக்கது. திருக்கயிலாய மரபில் மெய்கண்ட சந்தான ஞானோபதேச நெறியை இடையறாது உலகுக்கு வழங்கி வருவது. தஞ்சைமாவட்டத்தில், காவிரியின் தென்கரையில், மாயூரம் நகருக்குக் கிழக்கே ஒருகல் தொலைவில் அமைந்துள்ளது. கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் என்ற பேரருளாளரால் தோற்றுவிக்கப் பெற்றது. தமிழகத்தில் சிறந்துவிளங்கும் இருபத்தேழு சிவாலயங்களைப் போற்றிப் புரந்துவருவது. செந்தமிழ் வளர்ச்சிக்கும்-சிவநெறி உயர்ச்சிக்கும் நானூற்றைம்பது ஆண்டுகளாகப் பெரும்பணியாற்றி வரும் பெருமை மிக்கது. சமயவளர்ச்சி நோக்கில் எழுந்ததாயினும் மக்கள்பணியே மகேசன்பணி என்ற நோக்கத்தோடு சமூகவளர்ச்சிக்கு ஒல்லும் வகையெல்லாம் தொண்டாற்றி வருவது.

பாரம்பரியம்மிக்க தருமையாதீனத்தின் பணிகளைச் சமயப் பணிகள்-சமூகவளர்ச்சிப் பணிகள்-தமிழ்வளர்ச்சிப் பணிகள்என மூன்றாகப் பகுத்துக்கொண்டு ஆராய்வது பொருத்தமாகும். தற்போது உங்கள் கைகளில் தவழும் 'தமிழ்வளர்க்கும் தருமபுரம்' என்ற இச்சிறியநூல், தருமையாதீனத்தின் தமிழ்வளர்ச்சிப்பணிகளை மட்டுமே அறிமுகப்படுத்துகின்றது. சிறப்பாகக் குறிப்பிட வேண்டுமானால் இது, இவ்வாதீனம் தமிழுக்கு அடக்கமாகச் செய்துவந்திருக்கும் அரியபணிகளுக்கு ஒருஎல்லைக் கோடிட்டு காட்டும் அறிமுகமே தவிர, முழுமையான மதிப்பீடாகாது. விளம்பரமோ, ஆரவாரமோ இல்லாது ஒரு சமயநிறுவனம்

www.saivamonline.com

மொழிவளர்ச்சி நோக்கில் எடுத்திருக்கும் முன்னோடி நடவடிக்கை களைத் தமிழ்மக்களும்-பிறரும் உணர்ந்து கொள்ளவும் இதன் வாயிலாக இவ்வாதீனத்தின் தொண்டுகளை மேலும் ஆர்வத்தோடு ஆய்ந்து மதிப்பிடவும் வேண்டுமென்ற நோக்கிலேயே இந்நூல் மலர்கிறது.

தருமையாதீன ஞானமரபினைப் போற்றி வளர்த்துவரும் குருமகாசந்நிதானங்கள், இவ்வாதீனத் திருக்கூட்டத்து அடியவர் கள், இவ்வாதீன நல்லாதரவில் வாழ்ந்திருந்த புலவர்பெருமக்கள் போன்றோரால் இயற்றி வழங்கப்பெற்ற பல்துறை நூல்களின் சுருக்கமான அறிமுகங்களும், இவ்வாதீனம் அச்சிட்டு வழங்கி யுள்ள அரியநூல்கள் பற்றிய குறிப்புக்களும், பிறதமிழ் வளர்ச்சிப் பணிகளும் இந்நூலுள் நிரல்பட விளக்கப் பெற்றுள்ளன. இஸ்லாமியர் ஆட்சிக்காலத்திலும், பின்னர் ஆங்கிலேயர் காலத்திலும் தமிழகத்தில் நிலவிய சமுதாயப் பின்னணியை நினைவில்கொண்டு, இந்நூலைப் படிக்க முற்பட்டால்தான், தருமையாதீனத்தின் தமிழ்ப்பணிகளை உள்ளவாறு மதிப்பிட இயலும். தமிழ்ச்சமயம், மொழி, கலாசாரம் போன்றவற்றை ஈர்த்துக்கொண்டு ஓடிய பகைக் காட்டாற்றில் எத்துணைப்பெரிய எதிர்நீச்சல் பணியினை இவ் ஆதீனம் இயற்றி வந்திருக்கிறது என்பதனை நடுநிலைநின்று ஆய்வோர் நன்கு உணர்வர்.

தமிழுக்குப் புதிய வளங்களைச் சேர்க்கும் நோக்கில் மதுரை யில் தமிழக அரசின் சார்பில் நடைபெறும் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் இந்நூல் இதுபோது தருமையாதீனத்தின் சார்பில் வெளியிடப் பெறுகிறது. தருமையாதீன ஞான பீடத்தில் இதுபோது 26-வது குருமூர்த்திகளாக எழுந்தருளி யிருந்து அருளரசு ஒச்சும் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பழுத்ததமிழ்ப்புலமைபாலிக்கப் பெற்றவர்கள். சைவ-சமய வளர்ச்சியையும், செந்தமிழ் வளர்ச்சியையும் தம் இருகண்களாகக் கருதி ஊற்றத்துடன் போற்றிப் புரந்து வருபவர்கள். காலமாறுபாடுகளால் வரும் தடைகள் யாவற்றையும், தம் தவ வலிமையாலும், திருவருள்

www.saivamonline.com

வலத்தாலும் வென்று அருட்செங்கோல் ஓச்சி வருபவர்கள். முறையான தமிழ்க்கல்வியும், சைவத் திருமுறைப் பயிற்சியும் தமிழ் இசைக் கூறுபாடுகளும் கைவரப்பெற்றவர்கள். தமிழ்ப் பண்பின் நிலைக்களன்களாக விளங்கும் திருமடங்களும், திருக் கோயில்களும், பல அரிய தத்துவங்களை அறிவித்து நிற்பன; இவை வழங்கும் ஞானச் செல்வங்களை எல்லாம் உலகறிய வேண்டுமென்ற ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் இவ்வினிய நூல் இதுபோது வெளிவருகிறது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவருட் கருணை இந்நூலைத் தொகுக்கும் வாய்ப்பினை அடியேனுக்கு வழங்கியது. என்னைத் தம் அருள் நோக்கால் வளர்த்து உலகுக்கு அறிமுகப் படுத்தி, வாழ்வளித்து வரும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாணையை மறுத்தற்கு அஞ்சி, ஒருவாறு இந்நூலைக் குருவருளால் தொகுத்துள்ளேனேயன்றி, இதில் என் செயல் ஏதும் இல்லை. கையெழுத்துப் பிரதிகள் முழுவதை யும் ஒரு முறை திருக்கண் சார்த்தி அரியபல திருத்தங்களைத் திருவாய் மலர்ந்தருளிய கருணைத் திறத்திற்கும், இவ்வரிய வாய்ப்பினைவழங்கிய பேரருளுக்கும் மனமொழிமெய்களாலாகிய வணக்கங்களை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளில் பணிவோடு சேர்ப்பித்துக்கொள்கின்றேன். இவ் இனிய நூலை வழங்கியருளும் இவர்களது கருணைத்திறத்திற்குச் சைவத்தமிழ் உலகம் நன்றி பாராட்டும் கடப்பாடுடையது. இந் நூல் இனிது வெளிவர உதவிய பேரன்பர்களுக்கும், அச்சுப் பிழைகள் திருத்தி உதவிய ஆதீன நூலகர் வித்துவான் திரு. மு. ஆறுமுகதேசிகர் அவர்களுக்கும் இந்நூலைக் குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டு உதவிய வேதாரண்யம் குருகுல அச்சக உரிமையாளர் திரு. வே. அப்பாக்குட்டி பிள்ளை அவர் களுக்கும் என் நன்றி. இந்நூலைத் தமிழ்உலகம் ஏற்றுப்போற்றும் என்ற நம்பிக்கையுடையேன்.

தருமபுரம்
11—1—1981

அடியவன்,
**இரா. செல்வக்கணபதி.**

www.saivamonline.com

# உள்ளுறை

பக்கம்

1. சைவமடங்களின் தோற்றம் 1–28

சமய சமூகப் பின்னணி – தமிழ்மக்களின் உரிமைச் சமயம் – சைவத்தின் தொன்மை – சிவநெறியின் அடிப்படை: முப்பொருள்கள் – சிவாகமங்கள் – வேதம்: கர்மகாண்டம் – ஞானகாண்டம்: வேதாந்தம் – பிரம சூத்திரம்: உரைகள் – சித்தாந்தத் தோற்றம்–களப்பிரர்: பல்லவர் ஆட்சி – பௌத்த சமண எழுச்சி – திருமடங்களின் தோற்றம்–காலநிலை–சமயாசாரியர்கள்வருகை – சைவாசாரியர்கள் – சைவசமயாசாரியர்கள் காலத்துக்கு முற்பட்ட திருமடங்கள் - தொன்மையான இந்திய மடங்கள் – சமயாசாரியர் காலத்து மடங்கள் – மடம் என்னும் சொல்வழக்கு – மடங்களின் பணிகள் – திருமடத்துத் தலைவர்கள் - நால்வர் திருமடங்கள் – குகையிடிக்கலகம் – திருக்கயிலாய மரபு – அமைதிச் சூழ்நிலை.

2. தருமை ஆதீனம் 29-108

16-ஆம் நூற்றாண்டின் சமூகநிலை – திருக்கயிலாய பரம்பரை: மெய்கண்ட சந்தானம் – தருமபுர ஆதீன பரம்பரை – மெய்கண்ட நூல்கள் சித்தாந்த சாத்திரங்கள் – சம்பந்தர் மூவர் – குருவே சிவம் – திருவவதாரம் – மதுரை தந்த உள்ளொளி – சொக்கேசன் கட்டளை – ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச தேசிகர் – திருவிளக்கு

www.saivamonline.com

அற்புதம் – குருஞான சம்பந்தராதல் - தருமைத் திருமடம் : தோற்றம் – அருளரசு ஓச்சுதல் – பண்டார சாத்திரப் பனுவல்கள் – ஜீவசமாதி கூடியது – குரு பரம்பரை வரலாறு – ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமி கள் – ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் – ஸ்ரீ திருவம்பல தேசிக சுவாமிகள் – ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் – ஸ்ரீ கந்தப்ப தேசிக சுவாமிகள் – ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்-26வது குருமூர்த்திகள்– ஸ்ரீ குருஞானசம்பந்தர் நூல்கள் – தோத்திரம், சாத்திரம், யோகம் - சொக்கநாதக் கலித்துறை – சொக்கநாத வெண்பா – ஒரு வினவும், விடையும் – யாக்கை இழிவு – உவமை அழகு – தன்னிலை இரக்கம் - அரிய பாடல்கள் சில – குரு வழிபாட்டு நூல்கள் – பண்டாரம் என்ற சொல்வழக்கு – பண்டாரக் கலித்துறை - ஆசிரியரின் குருபக்தி – நவரத்தினமாலை – சிவபோகசாரம் – சிவஞான சித்திநெறி - குருதரிசனம் – தருமையாதீன உபதேச மரபு – பரத்தில் அன்பு – இடும்பை தீர வழிகாட்டுதல் - முத்தி நிச்சயம் – ஆன்மானந்த வாதத்துக்கு மறுப்பு – பிராசாத சட்கம் – பிராசாத யோகம் : ஒரு விளக்கம் – தசகாரிய அகவல் – தசகாரியப் புதிய நெறி - ஞானாவரண விளக்கம் – ஞானாவரண விளக்கம் : அரும்பதவிவேகம் – சிவபூஜா பத்ததி – ஏனைய அருள்நூல்கள் - வருணாசிரம சந்திரிகை –சமாதிலிங்கப் பிரதிட்டாவிதி – சித்தாந்த நிச்சயம் – திருவருட்பா திரட்டு – செந்தமிழ்ப் பூம்பொழில் – திரு வருட் செய்தி – ஆதீன முனிவரர் அருளியன – ஸ்ரீ குமர குருபரர் – ஸ்ரீ குமர குருபரரின் நூல்கள் – கந்தர் கலி வெண்பா – சில அரிய குறிப்புக்கள் – பண்டார மும் மணிக்கோவை – சமுக மாலை முதலியன – முத்தி நிச்சயப் பேருரை - மிருகேந்திரம் - கந்தபுராணச் சுருக்கம் – ஆசௌசதீபிகை – அறிவானந்தசமுத்திரம்– புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் – நித்தியகன்ம நெறிக்

www.saivamonline.com

குறள் – நடராசசதகம் - க்ஷேத்திரக்கோவைப்பிள்ளைத் தமிழ் – சிவானந்த மாலை – சிவப்பிரகாசக் கட்டளை முதலியன–சார்பு நூல்கள்.

3. ஆதீனத் திருக்கோயில்கள் : 109–120

27 திருக்கோயில்கள் – எடுத்துக் காட்டாக விளங்கும் திறம் - ஒரு உருக்கமான நிகழ்ச்சி – ஆட்சியாளர்களின் மதிப்பு – பாடல் பெற்ற தலங்கள் – பல்வேறு சிறப்புக்கள் – நிர்வாகச் சிறப்பு – வேளூர் இலக்கியங்கள் – சீகாழிச் சிற்றிலக்கியங்கள் – ஒரு சுவையான சம்பவம் – மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நூல்கள் – அபிராமி அந்தாதி.

4. ஆதீன வெளியீடுகள் : 121–151

பன்னிரு திருமுறைகள் - திருமுறைகளுக்கு உரை காணப்படாமை ஏன்? – உரைகாணும் முயற்சி - முதல் திருமுறை உரை நூல் – திருமுறை உரை நூல் அமைப்பும் சிறப்பும் – இரண்டாம் திருமுறை - மூன்றாந் திருமுறை நாலாந் திருமுறை – ஐந்தாம் திருமுறை – சித்தாந்தக் கலைமணி – ஆறாந் திருமுறை – ஏழாந் திருமுறை– திருவாசகஉரை – ஒன்பதாம் திருமுறை – திருமந்திரம்: முதல் மூன்று தந்திரங்கள் – தலப்பதிக வெளியீடுகள்– –திருக்குறள் உரைவளம் – உரைவளம் : அறத்துப்பால் – உரைவளம்: பொருட்பால்–உரைவளம்; காமத்துப்பால் –பிற வெளியீடுகள் – ஆங்கில நூல்கள் – பதிப்புரிமை பெற்றநூல்கள் – ஞானசம்பந்தம் – திங்கள் இதழ்.

www.saivamonline.com

5 தமிழ்வளர்ச்சிப் பணிகள் : 152–162

கல்வி நிலையங்கள் – தேவாரப் பாடசாலை – வேத சிவாகம பாடசாலை – தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி – பல்கலைக் கல்லூரி, ஆதீன நூலகம் – சென்னையில் பிரசார நிலையம் – தமிழ் அறிஞர்களுக்குப் பாராட்டும் பட்டமும்- பிற தமிழ்ப்பணிகள்

6. பிற்சேர்க்கை : 163–172

– பிற்சேர்க்கை - தருமையாதீன குருமூர்த்திகள் –தருமையாதீன அருளாட்சிக்கு உட்பட்ட திருக்கோயில்கள் - தருமையாதீனத்தில் தொன்றுதொட்டு வரும் சில தமிழ்வழக்காறுகள் – தருமையாதீனம் ஆவணி மூல விழாவில் சிறப்புப் பட்டம் வழங்கப்பெற்ற அறிஞர்கள் – ஆதீனச் சார்புக் கல்வெட்டுகள்.

www.saivamonline.com



தருமையாதீனம் 26 வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

www.saivamonline.com

# சைவ மடங்களின் தோற்றம்

## சமய-சமூகப் பின்னணி:

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் நானூற்றைம்பது ஆண்டு வரலாற்றுச் சிறப்பு மிக்கது. கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில்[1] ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் என்ற பேரருளாளரால் தோற்றுவிக்கப் பெற்றது. செந்தமிழும் - சிவநெறியும் வளர அருந் தொண்டாற்றி வருவது. தஞ்சை மாவட்டத்தில், காவிரியின் தென்கரையில், மாயூரம் நகரின் கிழக்கே ஒருகல் தொலைவில்

1. சிக்கல் வெண்ணெய்ப் பெருமாள் திருக்கோயிலில் உள்ள விஜய நகர வேந்தன் சதாசிவதேவ மகாராயரின் தஞ்சைப் பிரதிநிதியாக இருந்து ஆட்சிசெய்த கிருஷ்ண மகாராசய்யனின் (சகம் 1483) கல்வெட்டு ஒன்றால் ஸ்ரீ குருஞான சம்பந்தரின் காலம் கி. பி. 1566க்கு முற்பட்டது என்பது உறுதியாகிறது.

மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர், தருமபுர ஆதீனக்கோயில்கள் - 1949 - ஞானசம்பந்தம் பதிப்பகம். தருமபுரம். பக். 13, 14.

www.saivamonline.com

தருமபுரம் திகழ்கிறது. தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் விளக்கமுற்று நிற்கும் இருபத்தேழு திருக்கோயில்கள் தருமையாதீனத்தின் நல்லருளாட்சியின் கீழ் பொலிவு பெற்றுத் திகழ்கின்றன.

தருமையாதீனம் சிவநெறி வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு எழுந்தது என்றாலும் சிவநெறியையும்–செந்தமிழையும் இரு கண்களாகக் கொண்டு போற்றி வளர்த்து வருவது. தமிழகத்தின் சைவ–இலக்கிய வரலாற்றில் இவ்வாதீனம் இயற்றி வந்திருக்கும் பணிகள் தனித்து ஆராய வேண்டிய பெருமையும் சிறப்பும் மிக்கன. 'தமிழ் வளர்க்கும் தருமபுரம்' என்ற தலைப்பில் இவ்வாதீனத்தின் தமிழ் வளர்ச்சிப் பணிகளைக் குறிப்பிடுவதற்குமுன் இதன் அருள் வரலாற்றையும், இதன் தோற்றத்திற்கு அடிப்படையாக நின்ற சமய–சமூகப் பின்னணிகளையும் ஓரளவு அறிய முற்படுதல் இன்றியமையாதது. இது பற்றி முதற்கண் தமிழகத்தில் சைவத் திருமடங்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றினை, கிடைத் திருக்கும் சான்றுகளின் துணையோடு ஆராய்தல் வேண்டத் தக்கது. இம் முயற்சியில் திறந்த மனத்தோடும் உண்மை காணும் நோக்கோடும் பயணந்தொடங்குவோம்.

## தமிழ்மக்களின் உரிமைச் சமயம் :

உலகில் நிலவும் சமயங்களுள் பெரிதும் தொன்மையானது சைவ சமயம். சங்க இலக்கியங்களும் மற்றும் புதை பொருளாராய்ச்சி முடிவுகளும் சைவம் ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்று குறிக்கின்றன. நிலவுலகில் ஏனைப் பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களிடையே கடவுட் கொள்கை தோன்றி நிலவத் தொடங்கிய காலத்திற்கு முன்பிருந்தே, நம் தமிழகத்தில் சைவம் நிலை பெற்றிருந்தது என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். 'தொல்காப்பியம் மற்றும்

www.saivamonline.com

எட்டுத்தொகை நூல்களுள் கடவுள்[1] என்ற சொல்லால் குறிக்கப்படும் பொருள் சிவபரம் பொருளே யாதலின், சிவத்தை முழுமுதற் கடவுளாகக் கொண்டொழுகும் சைவம் தமிழ் மக்களின் உரிமைச் சமயம் என்பது தெளிவு.'[2]

## சைவத்தின் தொன்மை :

முழுமுதற் கடவுளைக் குறிக்கும் சிவம் என்னும் சொல் சங்ககால இலக்கியங்களில் காணப்படவில்லை. இது பற்றிச் சிவநெறி பிற்காலத்தே தோன்றியதாம் எனச் சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் சிவம் என்பது வடசொல் எனவும் எனவே சிவநெறியாகிய சைவம் வடவர் வழி வந்ததெனவும் தமக்குத் தோன்றியவாறே கூறி வருகின்றனர். சங்க காலத்தெழுந்த சமய நூல்களோ, சமயநூற் கருத்துக்களை உள்ளடக்கிய பேரிலக்கியங்களோ இதுகாறும் நமக்குக் கிடைத்தில. ஒரு சில புலவர்கள், ஒரோரு காலத்தில் பாடிய பாட்டுக்களிலிருந்து தேர்ந்தெடுத்துத் தொகுக்கப் பட்ட பாட்டுக்களின் தொகுதிகளே இன்றுள்ள கடைச் சங்கஇலக்கியங்கள். அகம், புறம் என்னும் பொருளிலக்கணத் துறைகளுக்குரிய இலக்கியமாகும் தகுதியுடையபாட்டுக்களே இத்தொகை நூல்களில் பெரும்பாலும் தொகுக்கப் பட்டிருத்தலால், இவற்றையே முழுமையான இலக்கியங்

---

1. இச்சொல் கட+உள் என்பன இணைந்து நின்று, எல்லாவற்றையும் கடந்து அவற்றிற்கு அப்பாற்பட்டவராயினும், உள்ளுள்ளும் நிறைந்திருப்பவர் என்ற பொருளைத் தரும். இதனை,

> 'துன்பமொ டின்பம தெல்லாம்-கடந்தவர் காதலில் வாழும்
> கற்குடி மாமலை யாரே' (திருமுறை-1-பதிகம்-43-பாட்டு-1)

என்ற திருஞானசம்பந்தர் வாக்காலும் அறியலாம். மற்றும் இறை (எங்கும் நிறைந்திருப்பவன்), இயவுள் (இயக்குபவன்) என்பன போன்ற சொற்களும் கடவுளைக் குறித்து வந்துள்ளன.

2. வித்துவான். திரு. ஒளவை. சு. துரைசாமிப்பிள்ளை. ஞானமிர்தமூலமும் பழையவுரையும். 1954. அண்ணாமலைப் பல்கலைக்கழகம். அண்ணாமலை நகர். முன்னுரை பக்: XI.

www.saivamonline.com

களாகக் கொண்டு, தமிழ் மக்களின் தொன்மையான சமய வாழ்வைத் தேர்ந்து முடிவுகாண முயல்வது நிரம்பாது. ஆதலால் சங்கத் தொகை நூல்களுள் 'சிவம்' என்னும் சொல் காணப்படாமை பற்றி அது தமிழர் சமயமன்று எனத் தள்ளக் கருதுவது அறமாகாது. ஏனெனின் 'சிவன்' என்னும் சொல்லால் இன்று குறிக்கப்படும் பொருள் 'முக்கட் செல்வர்', 'ஆலமர் செல்வன்', 'நீலமணிமிடற்று ஒருவன்' என்ற தொடர்களால் சங்கச் செய்யுட்களில் சுட்டப்படுகின்றது. பொருள், முதன்மையானது என்பது பற்றியதே இங்கு கருதத்தக்கது.[1] அதைச் சுட்ட எழுந்த சொல் எப்போது தோன்றியது என்பது இவ்வாராய்ச்சிக்குத் துணையாகாது. எனவே, சிவ வழிபாடும், இது பற்றிய கொள்கைகளும் மிகப் பழமையானவை என்பது உண்மையாகிறது.

## சிவநெறியின் அடிப்படை: முப்பொருள்கள்:

ஒருசில உண்மைகளை அடிப்படையாக ஏற்றுக் கொண்டே சமயத்துறையில் ஆய்வு செய்தல் என்பது இயலும்.[2] சிவநெறியாகிய சைவம் மூன்று பொருள்களை

---

1. பொருளியல்பு கூறுதல்-பொருளையே வரைந்து கூறுதல் என இரண்டு மரபுகள் உண்டு. திருவள்ளுவரும், இன்ன பெயரினன் என வரைந்து கூறாது வாலறிவன், வேண்டுதல் வேண்டாமை இலான், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், எண் குணத்தான் என்றெல்லாம் பொருளியல்பு கூறுதல் நினைவு கூரத்தக்கது. சங்க நூல்களுள் சிவபரம் பொருளின் பொருளியல்பே பெரிதும் கூறப்படுதல் இவ்வாறனதேயாகும்.

2. "ஆய்வு என்ற சொல்லின் ஆழமும் அகலமும் எல்லாத் துறைகளிலும் ஒரேமாதிரி இருப்பதில்லை. ஆய்வு என்ற சொல்லைச் சமயத் துறையில் பயன்படுத்தும்போது அதன் எல்லைகள் வேறு: அறிவியல் துறையில் பயன்படுத்தும்போது அதன் எல்லைகள் வேறு: ஒருசில நம்பிக்கைகளை ஆய்வுக்கு அப்பாற்பட்டதாக வைத்து அதற்குமேல் ஆய்வு செய்வது தான் சமயத்துறையில் இயன்ற ஒன்று."

டாக்டர். திரு. வா. செ. குழந்தைசாமி-ஆராய்ச்சி நெறி முறைகள்-உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்-1975-பக். 53, 54.

www.saivamonline.com

என்றும் உள்ள பொருள் எனக்கொண்டு சாத்திர நுட்பங்களைத் தர்க்கரீதியாக விளக்குகின்றது. தோற்றக்கேடுகள் இன்மையின் நித்தியமாய், தன்னை ஒன்றும் கலத்தல் இன்மையின் தூயதாய், தான் ஏனை உயிர்ப்பொருளோடு உடனுயும், உயிரில் பொருள்களிடை ஒன்ருயும் கலந்து எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாய் இலங்கும் செம்பொருள் ஒன்றே அதுவே சிவம்; உயிர்களும் நித்தமே எனினும், அவை எண்ணிறந்தனவாகும். அவை சிவத்தை நோக்கச் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையன. அனுதியே மலக்கலப்புற்றிருத்தலின், அவை அறியாமை இருளில் கிடப்பன. அறிவித்தால் அறியும் தன்மையன, மலநீக்கம் குறித்து உடம்பொடுகூடி இவ்வுலகில் தோன்றி வினைகளைச் செய்து பிறப்பிறப்புக்களை எய்துவன. இவ்வுலகும், இங்கே உயிர்கள் நிற்றற்குரிய உடம்புகளும் மாயை என்ற முதற் பொருளிலிருந்து சிவத்தால் படைக்கப் படுகின்றன. மாயை என்ற முதற்பொருளும் அனுதிநித்தமாயினும் சிவமும், உயிரும் போல அறிவுடைய பொருளன்று. மாயையினின்றும் தோன்றி, அதன்கண் ஒடுங்குவதால், மாயாகாரியமான உலகும், உடம்பும், மனமும் பிறவுமாகிய பொருள்கள் தோற்றக் கேடுகள் உடைமையால் அநித்தியமாகும். இங்கே கூறிய மலம், வினை, மாயை என்ற மூன்றுமாகிய அறிவில் பொருள்கள் உயிர்களோடு தொடர்புற்றிருப்பதால் அவை 'கட்டு' என்று வழங்கும். எனவே சிவம், உயிர், கட்டு என்ற மூன்றும் சிவநெறியின் அடிப்படையான பொருள்களாம். இவற்றை வடநூல்கள் முறையே பதி, பசு, பாசம் என்று குறிக்கின்றன. இம் முப்பொருளுண்மையைச் சைவ-சாத்திரங்களும் சைவச்சான்ருேர் களும்[1] பலவாறு கூறியிருப்பினும் அடிப்படையான உண்மைகள் இவையே.

---

1. தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞான சம்பந்தர் முப்பொருள் உண்மையை விளக்கியிருக்கும் பாங்கு நினைவுகூரத்தக்கது.

"என்னை அறிவென்ருன்: என்னறிவில் ஆனந்தந்
தன்னைச் சிவமென்ருன்: சந்ததமும்–என்னை உன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்ருன்: இம்மூன்றும்
ஆராய்ந் தவர்முத்த ராம்"

சிவபோகசாரம்-தருமையாதீன வெளியீடு-1971 பக். 21-பாடல் 26.

www.saivamonline.com

இக்காலத்தில் தமிழ்மக்கள் வாழ்வுக்குரிய அரசியல் நெறிமுறைகள் ஆங்கில மொழியில் எழுதப்பட்டிருப்பது போல, மக்களுடைய அரசியல், சமயவாழ்வுகளில் வட மொழி செல்வாக்கு மிக்கிருந்த காலத்தில் இச்சிவநெறி உயர்வை வட மொழியில் எழுதப்பட்டனவே தவிர வேறில்லை. வடமொழியில் இருப்பது கொண்டு விலக்கக் கருதுவதும், வடவர்க்கே உரியவென்பதும் அறிவுடைமை யாகா என்பது இவ்வாற்றால் இனிது விளங்கும். எனவே இன்று வட மொழியில் காணப்படும் சைவமூலாகம உபாகமங்கள் என்பன பொருள் வகையில் தமிழ் நெறியே ஆகும்.

## சிவாகமங்கள் :

இறை, உயிர், கட்டு என்ற மூன்றையும் சமய அடிப் படைப் பொருளாக வகுத்துக்கொண்டு நிலவும் சிவநெறி, வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே நம் தமிழகத்தில் இருந்து வருகிறது. இறையாகிய சிவபரம்பொருள் இன்னவுரு, இன்ன நிறம் என்று கட்டுரைக்க முடியாத ஒன்றாகலின் அதனைக் கந்து கட்டுத்தறி (வடிவில்)[1] வைத்து வழிபடுவது சங்ககால வழக்கு.[2] கந்தும், நிலையமும் கொண்டு நிற்கும் கந்துடை நிலை சிவத்தை அறிவிக்கும் அடையாளம். 'குறி' என்ற பொருள்படும் வடமொழியால் சிவலிங்கம் எனக் கூறப்படுகிறது. இன்று, சிவன் கோயில் களில் திருவுண்ணாழியில் காணப்படும் சிவலிங்கம் யாவும், பண்டைச் சங்க காலக் கந்துடை நிலைகளேயாகும். இதுவன்றி ஏனைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் முதலிய நிலங்களுக்குரிய தெய்வங்களாகத் தமிழ் இலக்கண இலக்கியங்கள் கூறும் சேயோன், மாயோன், இந்திரன்,

1. கட்டுத்தறி–நடுதறி என்றெல்லாம் இச்சொல் பொருள்படும்.
காதன்மையால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே'
திருமுறை-6. பதிகம்-61. பாடல்-11

2. தொல்காப்பியம்-பொருளதிகாரம்- (நச்சினார்க்கினியர்) நூற்பா 88

www.saivamonline.com

வருணன் முதலிய தெய்வங்கள் பிற்காலத்தே சிவன் கோயில்களில் பரிவார தேவதைகளாக வகுக்கப் பெற்றன. ஆதலால், சங்ககாலத்துக் கூறப்படும் கந்துடைநிலையங்களே, படிப்படியாக வளர்ச்சியுற்று, இன்று பெரிய பெரிய சிவத்தளிகளாகக் காட்சியளிக்கின்றனவே தவிர வேறில்லை. சைவத் திருக்கோயில்களில், இவற்றின் அமைப்புப் போன்றவற்றைக் கூறுபடுத்தி விளக்கிக்கூறும் சமய நூல்களே சிவாகமங்கள் எனப்படுகின்றன.

## வேதம்: கர்மகாண்டம்:

வேதம், வேதாந்தம், ஆகமம் என்ற இவை சமயத் துறையில் சிறந்த வடநூல்களாக விளங்குகின்றன. இன்றும் இவற்றை விளக்குவோர் இல்லை. அவற்றுள் இருக்கு முதலிய வேதங்கள் மந்திரம், பிராமணம் என இருவகையாக விளங்குகின்றன. மந்திரங்களுக்குப் பொருளுரைக்கும் உரை போல்வன பிராமணங்கள். மந்திரங்கள் செய்யுள்கள் போல் விளங்குகின்றன. இம்மந்திரங்கள் பலவும் வருணன், இந்திரன், அக்கினி, சவிதா முதலிய பல தெய்வங்களைக் குறித்தும், அவற்றை வழிபடுவதுபற்றியும் விரித்துரைக்கின்றன. இவற்றின் முடிந்த பொருளாகக் காணப்படுவது பல தெய்வ வழிபாடு ஒன்றே. வேதங்களையும், அவற்றிற்குரிய ஐதரேயம் முதலிய பிராமணங்களையும் ஒருசேரக் கொண்டு அவற்றை வேதநூலின் கர்மகாண்டம் என்றும் வழங்குவர்.

## ஞானகாண்டம்-வேதாந்தம்:

வேதங்களுக்குப் பின் நிற்பன உபநிடதங்கள். இவற்றை ஆராய்ந்த அறிஞர்கள், ஈண்டு உணர்த்தப்படும் பொருள்கள், கர்மகாண்டத்தில் உணர்த்தப்பட்டவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டன. அவை வீடுபேற்றின் தன்மையும், வீடுபேறு அடைதற்குரிய சாதனமும் ஆம். முதலில் பயன் கருதாது கடமைகளைச் செய்து மனத்

www.saivamonline.com

தூய்மை பெறவேண்டும். பின்னர் நல்லாசிரியனை எய்தி உயிரின் ஈடேற்றத்திற்கு நல்லுபதேசம் பெறவேண்டும். பெற்ற உபதேசத்தை யுக்தியோடு கலந்து மனப்பாடம் செய்தல் வேண்டும். பின்னர் கடவுளைத் தியானம் செய்ய வேண்டும். அவற்றால் பற்றற்ற மேலானநிலை கைகூடும்; பின்னர்க் கடவுள் அருளால் ஞானம் அடைந்து கடவுளோடு கடவுளாய் ஒன்றாக வேண்டும். ஒன்றான பிறகு பிறப்பிறப்பில்லை. இவ்வுடலோடு இருக்கும்போதே ஒன்றாகிவிட்டால் ஒருவனுக்கு இறப்பு இல்லை. அந்நிலையை ஜீவன் முக்தி என்று கூறுகின்றனர். உபநிடதங்களை, வேதத்தின் ஞான காண்டம் என்றும், வேதத்தின் முடிவில் நிற்பதுபற்றி வேதாந்தம் என்றும் வழங்கும்.

## பிரம சூத்திரம்: உரைகள்:

நாளடைவில் வேத வேதாந்த நூல்களின் செயல் முறைகளிலும், கருத்து வகைகளிலும் மாறுபாடுகள் தோன்றி வேறுபாட்டுணர்வினை விளக்கின. அதனால் பௌத்தம் முதலிய சமயங்கள் பிறந்து வளர்ந்தன. வேத-வேதாந்த நூல்களுக்கு அறிஞர்கள் பலரும் புத்துரை காணத் தலைப்பட்டனர். உண்மை காணும் நோக்கத்தைப் புறக்கணித்துத் தம் புலமையைக் காட்டும் நோக்கிலேயே இவை அமைந்தன. பின்னர் எழுந்த பிரம சூத்திரத்திற்கு இவ்வாறே பேருரைகள் பல வகுக்கப்பெற்றன. சங்கரர், இராமானுஜர், மாத்துவர், நீலகண்டர் முதலியோர் வகுத்துரைத்த பேருரைகள் மக்களைத் தம்தம் வழியில் ஈர்த்தன. இவ்வாற்றால் சமயத்துறையில் கருத்துவேற்றுமைகளும், குழப்பங்களும் மிகுந்தன.

## சித்தாந்தத் தோற்றம்:

இந்திய நாட்டில் வேதம், வேதாந்தம், ஆகமம் என்பன சிறந்த சமய நூல்களாக ஏற்கப்பட்டுள்ளன. பன்னூறு ஆண்டுகளாய் வேதம் மற்றும் வேதாந்த நூல்கள் பல்வேறு

www.saivamonline.com

வகையாக ஆராயப்பெற்றன. இவ்வாராய்ச்சியால் கடவுட் கொள்கை பற்றிய குழப்பங்கள் மக்களிடை வளர்ந்தனவேயன்றித் தெளிவு பிறக்கவில்லை. இன்னொரு பக்கம் ஆகமங்களின் பொருளாராய்ச்சியும் செயல் திறங்களும் ஆராயப்பட்டன. நீண்ட நெடுநாட்களாக நிலவிவரும் ஆகமங்கள் பலவற்றையும் ஆராய்ந்து சிவாகமங்கள் தேர்ந்து கொள்ளப்பட்டன. அவை காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டாகும்.[1] இவற்றினை விளக்கும் முயற்சியில் உபாகமங்கள் பல உண்டாயின. இவற்றின் பொருளியல்பு கண்ட அறிஞர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்களாக இவற்றைப் பாகுபாடு செய்தனர். இவற்றைத் தனித்தனி எடுத்துரைப்பனவும் ஒருசிலவற்றை வரைந்துகொண்டு உரைப்பனவும் என ஆகமங்கள் பலதிறப்படுகின்றன. இச்சிவாகமங்கள் பதி, பசு, பாசம் என முன்னர்க் கூறிய பொருள் மூன்றையும்

---

1. இருபத்தெட்டுச் சைவாகமங்களாவன ;

சைவாகமங்கள்

| | |
|---|---|
| 1. காமிகம் | 2. யோகஜம் |
| 3. சிந்தியம் | 4. காரணம் |
| 5. அஜிதம் | 6. தீப்தம் |
| 7. சூக்ஷமம் | 8. சகஸ்ரம் |
| 9. அம்சுமான் | 10 சுப்ரபேதம் |

இந்தப் பத்தும் சிவபேதம் எனப்படும்.

| | |
|---|---|
| 1 விஜயம் | 2. நிஸ்வாசம் |
| 3. சுவாயம்புவம் | 4. அநிலம் |
| 5. வீரம் | 6 ரௌரவம் |
| 7. மகுடம் | 8. விமலம் |
| 9. சந்திரக்ஞானம் | 10 பிம்பம் |
| 11. ப்ரோத்கீதம் | 12. லலிதம் |
| 13. சித்தம் | 14. சந்தானம் |
| 15. சர்வோக்தம் | 16. பாரமேஸ்வரம் |
| 17 கிரணம் | 18. வாதுளம் |

இவை ருத்ரபேதம் எனப்படும்.

www.saivamonline.com

அறுதியிட்டு முடிவுகட்டிக் கூறுவதுபற்றிச் 'சித்தாந்தம்' என்று வழங்கின. இச்சித்தாந்தம் வேதாந்தத்தின் தெளி பொருளாகவே கொள்ளப்பட்டது என்பது 'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்' என்றும் 'வேதசாரம் இதம் தந்த்ரம் சித்தாந்தம்' என்றும் தமிழ், வடமொழிவல்ல சான்றோர்கள் கூறுதலால் விளங்கும்.

வேதாந்த நூல்கள் உயரிய நடையில் பிரமஞானத்தை யும், அதற்குரிய சாதனவகையினையும் உணர்த்தி வந்தன. அதனால், அவை வடமொழிவல்ல பெரும் புலவர்களிடையே இருந்து ஞானப்பணி புரிந்துவந்தன. ஆயினும் அவற் றிடையே கருத்து வேறுபாடுகள் மிகுந்தனவேயன்றி, யாவரும் உணரத் தக்க எளிய நிலைமை உருவாகவில்லை. அவற்றால், பெரிதும் உயர்த்துக் கூறப்பட்ட வேள்வி முதலிய செயல்வகைகளோடு மாறுபட் டெழுந்த பௌத்த-ஜைன சமயங்களின் வளர்ச்சியால் வேதாந்த நூல்கள் நாட்டில் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ச்சியடைந்து வந்தன. வேதங்களின் மொழி மிகப் பழையதாக இருந்ததாலும், இவற்றை ஒரு சாராரே ஓதல் வேண்டுமென்று கூறப்பட்ட கட்டுப்பாட்டாலும் இவை வீழ்ச்சியுற்றன. சிவாகமங்கள் எளிய நடையில் அமைந்திருந்தமையாலும், யாவராலும் ஓதத் தகும் என்ற நெகிழ்ச்சிப் போக்கைப் பின்பற்றிய தாலும் அவற்றின் செல்வாக்கு ஓரளவு குறையாமலேயே இருந்து வந்தது. அதனால், ஆங்காங்கே மக்களிடையே தொன்றுதொட்டு வந்து கொண்டிருந்த கோயில் வழிபாட்டுச் சைவநெறி குன்றாமலேயே இருந்து வந்தது.

## களப்பிரர்: பல்லவர் ஆட்சி:

செந்தமிழும் – சிவநெறியும் முறையாக வளர்ந்திருந்த தமிழ் நாட்டில் இந்நிலையில் களப்பிரர் என்ற கூட்டத் தார் புகுந்தனர். அவர்கள் தமிழரல்லர். அவர்கள் சமயம் சமணம். அதனால் தமிழ் வாழ்வு சீர்குலைந்தது.

www.saivamonline.com

தமிழிசையும், தமிழ் நாடகமும் ஒளி குன்றின. தமிழ் இலக்கியங்கள் பல இறந்தொழிந்தன. தமிழ்ச் சைவப் பெருநெறிதளர்வுற்றது. அவர்கட்குப்பின்னர்த்தமிழகத்தின் வடபகுதியான தொண்டை நாட்டில் பல்லவர்கள் ஆட்சி புகுந்தது. அவர்களும் தமிழரல்லர், அவர்கள் சமயமும் சமணமே. அதனால் அவர்கள் காலத்தில் வட மொழியே மிக்க செல்வாக்குப் பெற்றது. வட மொழி பயிற்றும் கல்லூரிகள் பல காஞ்சிமா நகரத்திலும், பிறவிடங்களிலும் உண்டாயின. பல்லவ வேந்தர் பலர் வடமொழி வாணர் களுக்குப் பெருஞ்சிறப்புச் செய்து ஆதரித்தனர். முதல் மகேந்திரவர்மன் முதலியோர் வடமொழியில் நாடகங்கள் எழுதினர்.[1] இவ்வாறு, தமிழகத்தில் தமிழ்மொழியின் இடத் தில் வட மொழி செல்வாக்குப் பெற்றது. சமயத்துறை யிலும், ஆட்சி வகையிலும் வடமொழியே முன்னின்றது. பல்லவர்கள் ஆட்சியால் சமணமே மேலோங்கியது. நாட்டு மக்களுக்குத்தாய்மொழியில் சமய உணர்வு நல்கும் நூல்கள் அருகின. அவர்களது பொது வாழ்வில் சமய உணர்வும், ஒழுக்கமும் குன்றின.

## பௌத்த – சமண எழுச்சி :

இதற்கிடையே, பௌத்தத் துறவிகளும், ஜைனத்துறவி களும் ஆங்காங்கே மடங்களும், பள்ளிகளும் அமைத்து மக்களிடையே தத்தம் சமயக்கருத்துக்களைப் பரப்பினர். பல்லவர் காலத்தின் தொடக்கத்தில் பௌத்தப் பள்ளிகளே மிக்கிருந்தன. நூற்றுக்கு மேற்பட்ட பௌத்தப் பள்ளிகளை யும், பத்தாயிரவர்க்குக் குறையாத பௌத்தத் துறவிகளையும் இப்பகுதியில் காணலாம் என ஹியூன்சாங் குறித்துள்ளார்.

---

1. முதல் மகேந்திரவர்மன் எழுதிய வடமொழி நாடகநூல் 'மத்தவிலாசப் பிரகசனம்' என்று வழங்குகின்றது. இது அக்காலச் சமயங்களையும் சமயவாதிகளையும் கேலிசெய்து எழுதப்பட்டது.

2. Pallava Architecture - P. III பக். 9.

www.saivamonline.com

பின்னர் பௌத்த மடங்களில் பெரும் பொருள் சேர்ந்தது. இதனால், அம்மடங்களின் செயல் முறைகளில் பொய்யும் வழுவும் புகுந்தன. அவை காரணமாகச் சிவநெறிக்கு மக்களின் ஆதரவு குன்றியது. இதன் பயனாகப் பௌத்தம் தமிழகத்திலிருந்து மெல்ல மறைவதாயிற்று. ஆயினும் அதன் இடத்தில் ஜைன சமயம் வளர்ந்து அரசைத் தன் வயப்படுத்தி செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டது. தமிழ் நாட்டின் வடக்கே பல்லவ வேந்தன் மகேந்திரவர்மனும் தெற்கே பாண்டிய வேந்தன் நின்றசீர்நெடுமாறனும் ஜைன சமயத்தை மேற்கொண்டனர். 'அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி' என்ற பழமொழியின் வண்ணம் நாட்டில் மக்கள் பலர் ஜைனர்களாயினர். ஜைன சமயத்தை மக்கட்கு எடுத்துரைக்கும் ஜைனச் சான்றோர் சமணர் எனப்பட்டனர். இவர்களால் போதிக்கப்பட்ட மதமும் சமண சமயம் என்றே தமிழகத்தில் வழங்கப்பட்டது.

## திருமடங்களின் தோற்றம்:

பௌத்த – ஜைன சமயங்களின் வளர்ச்சியால் செயற்பாடும், சிறப்பும் குன்றியிருந்த நிலையிலும், வைதிக சமயம் பொதுமக்கள் வழங்கும் தமிழ் மொழியில் தனது சமயப் பணியைச் செய்ய முன் வந்திலது. ஆகம வழி நின்ற அறிஞர்கள் அக்கால நிலையை நன்கு உணர்ந்தனர். அவர்கள் ஆங்காங்கு ஞான நிலையங்களாகத் திருமடங்கள் நிறுவி, அவற்றின் வாயிலாக நாட்டு மக்களுக்கு நற்பணி புரியலுற்றனர். இம் மடங்கள் அறிவு வேண்டுவோர்க்குக் கல்வியும் நோயுற்றோர்க்கு மருத்துவமும், பசித்து வந்தோர்க்கு உணவும் நல்கி வளரலாயின.

## கால நிலை:

கி. பி. ஏழாம் நூற்றாண்டை ஒட்டிய கால நிலை இங்கே சிந்திக்கத்தக்கது. மக்களிடையே உண்மை காண மாட்டாத

www.saivamonline.com

சூழ்நிலை நிலவியது. கடவுட் கொள்கையைவிட வினையுணர்வும் மறுபிறப்பும் சமய வாழ்வின் உயிர் நாடியாக வற்புறுத்தப் பெற்றன. பௌத்தம் மற்றும் ஜைன சமய நூல்கள் கடவுட் கொள்கையை மிகுதியும் வற்புறுத்தாது வினையுணர்வையும், மறுபிறப்பையும்பெரிதெடுத்துப்பேசின. கடவுள் வழி பாட்டை நன்கு வற்புறுத்தாமல், பொய், கொலை, களவு, கள், காமம் என்ற இவற்றைக் கடிவதாகிய நல்லறம் ஒன்றையே சமயம் பேருணர்வென்றும், சமயப் பேரொழுக்கம் என்றும் பேணியுரைத்தன. அவரவர் செய்யும் வினைப்பயன்களை அவரவர்களும் நுகர்ந்து கழிக்க வேண்டுமேயன்றி, வினைத் தொடக்கிலிருந்து உயிர்களை விடுவிக்கும் ஆற்றல் இறைப் பொருட்கும் இல்லை என ஏதுக்களாலும், எடுத்த மொழிகளாலும் வற்புறுத்துவதிலேயே இக்காலத்தில் சமயச் சொற்போர்கள் வழங்கிவந்தன.

## சமயாசாரியர்கள் வருகை:

இந்நிலையில் கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சைவ - சமயாசாரியருள் முதல்வராகிய திருஞான சம்பந்தரின் திருவவதாரம் நிகழ்ந்தது.[1] இவர்கள் காலத்தோடு ஒட்டி, சற்று முன்பின்னாகத் திருநாவுக்கரசு நாயனாரின் வருகையும் இணைந்தது. அவர்கள் காலத்தில் ஆகம வழி வந்த சிவநெறி நாடெங்கும் ஓரளவு பரவியிருந்தது. ஆங்காங்கே சிவன் கோயில்களும் அமைந்திருந்தன. கோயில்களில் நாள் வழிபாடுகளும், ஆண்டு விழாக்களும்[2] நடை

1. டாக்டர். திரு. சொ. சிங்காரவேலனார்-திருஞானசம்பந்தர் வரலாற்று ஆராய்ச்சியும்-தேவாரத் திறனாய்வும். 1969 திருநெல்வேலி சைவ-சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை-1. பக்கம்: 64.

2. திருஞான சம்பந்தர் காலத்தில் மைலாப்பூர் திருக்கோயிலில்-நடைபெற்று வந்த பத்துக்கு மேற்பட்ட பெருவிழாக்களை இவர்களது 'மட்டிட்ட புன்னையங் கானல்' என்று தொடங்கும் 'பூம்பாவைப்' பதிகத்தால்நன்கு உணர முடிகிறது. திருஞானசம்பந்தர் தேவாரம்-திருமுறை-2 பதிக எண் 18-திருமயிலாப்பூர். திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம். தலமுறை: ஸ்ரீ குமர குருபரன் சங்கம். ஸ்ரீ வைகுண்டம். 1980 பக். 692, 93, 94:

www.saivamonline.com

பெற்று வந்தன. ஆயினும், சமண, பௌத்தர்களின் தலை எடுப்பால், மக்களிடையே கடவுட் கொள்கையில் அழுந்திய உள்ளமும், கடவுள் வழிபாட்டால் வினையின் தொடக்கி லிருந்து வீடு பெறலாம் என்ற நம்பிக்கையும் குன்றியிருந்தன. இவற்றை வற்புறுத்தியுரைக்கும் நல்லாசிரியன்மார்களின் வருகையை அக்காலம் எதிர் நோக்கியிருந்தது. திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் இருவரும் சைவத்தின் இரு கண் களாக—சைவ மாளிகையின் இருபெருந் தூண்களாகத் தோன்றினர். இவர்கள் இருவரும் நாடு முழுவதும் சுற்றிச் சிவன் கோயில் இருக்கும் ஊர்தொறும் சென்று தமிழ் நாட்டு மக்களுக்குச் சிறப்பாக உரிய சிவநெறிக் கருத்துக்களை அறிவுறுத்துவாராயினர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவர் வரலாறுகளையும் உற்று நோக்கின் ஓர் உண்மை புலனாகும். ஞானசம்பந்தர் தமிழகத்தின் தெற்கிலும், நாவரசர் வடக்கிலும், சுந்தரர் மேற்கிலும் பெரிதும் தலயாத்திரை செய்து சமயத் தொண்டாற்றி யிருப்பது விளங்கும். அவர்கள் காலத்தில் தமிழகத்தில் சைவஞ்சார்ந்த அகச்சமயங்களாகிய காளாமுகம், பாசுபதம், மாவிரதம் முதலியன இருந்திருக்கின்றன. ஆயினும் அச் சமயத்தவர்கள் ஆங்காங்கு இருந்து கொண்டு தங்கள் சமயக்கொள்கைகளைச் சிற்சிலருக்கு அறிவுறுத்தி வந்தனரே யன்றி இப்பெருமக்களைப் போல நாடு முழுவதும் பரந்து சென்று பணிபுரிந்ததாகச் செய்திகள் இல்லை. அவர்களுள் காளாமுகத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தில் இருந்திருக் கின்றனர் என்பதை தாராசுரம், கொடும்பாளூர், கோயில் தேவராயன்பேட்டை முதலிய ஊர்களிலுள்ள கல்வெட்டுக் கள்[1] அறிவிக்கின்றன. இவ்வாறே காபால சமயத்தவரும்

1. A. R. For 1907-8 Para 66. and A. R. For 1915 Para 11
A. R. No 140 of 1907
A. R. No 247 of 1923

www.saivamonline.com

பாசுபதரும், மாவிரதரும் இருந்தனர் என்பதையும் அரசினரின் கல்வெட்டு அறிக்கைகள்[1] உறுதிப் படுத்துகின்றன.

இங்ஙனம் அக்காலத்தில் தமிழகத்தில் பல்வேறு சமயத்தவர் இருப்பினும், இவர்களது சமயக்கருத்துக்களை விரித்தோதும் நூல்களுள் ஒன்றேனும் இதுநாள் வரை தமிழில் கிடைக்காமையால், இவர்கள் தமது சமய உணர்வைப்பெருக்க மேற்கொண்டிருந்த மொழி தமிழன்று என்பது நன்கு புலனாகிறது. வடமொழியில் செய்யப்பட்ட 'தந்திரம்' என்பவையே இவர்களது சமயநூல்களாகச் சொல்லப்படுகின்றன. இச்சமயங்களின் இடையே திருஞானசம்பந்தர் முதலிய சைவசமயாசாரியர்கள் ஆகம வழிவந்த சைவ நெறியை இனிய வழிபாட்டுத் திருப் பாட்டுக்களாக இசைத்தமிழில் ஓதி மக்களிடையே சமய உணர்வினைப் பெருக்கெடுக்கச் செய்தனர். அவர்களது பாடல்கள் இன்று சைவத்திருமுறைகளாகப் போற்றப் பெற்று வருகின்றன.

இப்பெருமக்கள் காலத்திற்குப் பின் சைவ நெறியில் புது மலர்ச்சி உண்டாயிற்று. நாட்டு மக்கள் அறிந்த மொழியாகிய தமிழில் பல்லாயிரக்கணக்கான திருப்பாட்டுக் கள் தோன்றிச் சமய உணர்வினைப் பெருக்கி, ஒழுக்கத்தை நிலைநிறுத்தின. இவற்றை அனைவரும் பேரார்வத்தோடு பேணிப்பயின்று பயன் பெறுவாராயினர். இவர்கள் காலத்தில் முன்னர்க் குறிப்பிட்ட மகேந்திரவர்மப் பல்லவன் திருநாவுக்கரசராலும், பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் திருஞானசம்பந்தராலும் சிறந்த சைவர்களாக மாற்றப்

1. A. R. For 1912 Para 29
A. R. For 1914 Para 47
A. R. For 1915 Para 31

www.saivamonline.com

பட்டனர். தமிழகத்தில் சிவன்கோயில்கள் கருங்கல்லாலும் செங்கல்லாலும் எடுக்கப்பெற்றன. வானளாவ உயர்ந்த கோபுரங்களும் விமானங்களும் பெருகவுண்டாயின.

## சைவாசாரியர்கள் :

சிவநெறிக்கண் தோன்றிய புதுமலர்ச்சியால் வேந்தர்களும், பொதுமக்களும் சிவவழிபாட்டிலும், சிவன்கோயில் திருப்பணிகளிலும் பேரீடுபாடு கொண்டனர். திருக்கோயில் அமைப்பு மற்றும் வழிபாட்டு முறைகளை வகுத்துரைக்கும் ஆகமப் பயிற்சியில் மக்கட்கு நாட்டமுண்டாயிற்று. சிவாகமங்களை விரும்பிப் பேணிய சிறப்பால் பல்லவ வேந்தன் ஒருவன் ஆகமானுசாரி என்று சிறப்புப்பெயரும் பெற்றுள்ளான். இச்சிவாகமங்களைப் போற்றியுரைக்கும் சான்றோர் சிவாசாரியர் என்றும் சைவாசாரியர் என்றும் கூறப்படுவர். இச்சைவாசாரியர்கள் ஆங்காங்கே தனித்தனி இடம் அமைத்துக் கொண்டும் சைவாகமக் கருத்துக்களையும் ஒழுக்கங்களையும் மக்களுக்கு அறிவுறுத்தி வந்தனர். அவ்விடங்களுக்கு மடம் என்றும் குகை என்றும் பெயர் வழங்கி வந்தன. இவை சிறப்பு வகையில் சமயஅறிவும், சமய ஒழுக்கமும் கற்பித்து வந்தனவாயினும், பொதுவகையில் மக்களது பசிப்பிணிக்கு உணவும், உடற்பிணிக்கு மருந்தும் உதவின. இவ்வாற்றால் இம்மடங்களுக்கு மக்களது நல்லாதரவு பெருகியிருந்தது. வேந்தர்களும் மிக்கபொருளும், நிலமும் வழங்கி இம்மடங்களை நன்கு பேணினர். இச்சைவாசாரியர்களைத் தங்களுக்கு அருட்குருவாகவும், அரசகுருவாகவும் கொண்டு பரவினர்.[1] இவர்கள்பால் சிவதீட்சை பெற்றுச் சைவ ஒழுக்கம் தலைநின்ற வேந்தர் பலர்.

---

1 முதல் இராசேந்திர சோழன்-தன்குல குருவாக விளங்கிய சர்வசிவ பண்டித சைவாசாரியருக்கும் இவரது சீடர்களுக்கும் ஆண்டொன்றுக்கு ஆசாரிய போகமாக 2000 கலம் நெல் வழங்கியுள்ளான்.
தென்னிந்திய திருக்கோயில் கல்வெட்டுக்கள் - பதிப்பாசிரியர் திரு. வி. சா. குருசாமி தேசிகர்: பதிப்பு 1957/65 பக்கஎண் 78, 79.

www.saivamonline.com

## சைவ சமயாசாரியர்கள் காலத்துக்கு முற்பட்ட திருமடங்கள் :

சைவாசாரியர்களைத் தலைவர்களாகக் கொண்ட திருமடங்கள் தேவாரமூவர் காலத்திற்குப் பின் தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கில் தோன்றின. இவர்கள் காலத்திலும் முன்பும் சில சைவத் திருமடங்கள் தமிழகத்தில் நிலவியிருந்தன என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. திருமூலநாயனாரின் காலம் தேவாரமூவர்க்கும் முற்பட்டது என்பதில் அறிஞர்களுக்கிடையே கருத்து வேறுபாடுஇல்லை. சன்மார்க்க சைவத்தைப் பின்பற்றித் திருமூலர்காலத்தில் ஏழுமடங்கள் ஏற்பட்டன. ஒவ்வொன்றிலும் ஒரு குருநாதர் இருந்தார். இவர்கள் முறையே 1. மூலர், 2. காலாங்கர், 3. அகோரர், 4. மாளிகைத்தேவர், 5. நாதாந்தர், 6. பரமானந்தர், 7. போகதேவர் என்பர். திருமூலர்மடத்து வழிவந்த சீடர்கள் மூலன் மரபினர் எனப்பட்டனர். அவர்கள் பல நூற்றாண்டுகள் தமிழ்நாட்டில் இருந்து வந்திருக்கின்றனர். அவர்களுள் ஒருவரே கி. பி. 17 ஆம் நூற்றாண்டினராகிய தாயுமானசுவாமிகளுக்குக் குருவாக விளங்கிய மௌனகுருவாவர்.

*'மந்த்ர குருவே யோக தந்த்ர குருவே மூலன்*
*மரபில் வரு மௌன குருவே'*[1]

என்பது தாயுமானார் தமது குருவைப் போற்றிய திருப்பாட்டு. திருச்சி மலைமீதுள்ள இந்த மௌனகுருமடம் திருமூலர் மரபினது என்பது இதனால்தான் விளங்குகின்றது.[2]

---

1. தாயுமான சுவாமிகள் பாடல்-தருமையாதீன வெளியீடு எண் 564. 1965. மௌனகுரு வணக்கம் பாடல்-1முதல் 10வரை-பக். 24, 25, 26.

2. இந்த மௌனகுரு சுவாமிகளின் திருமடம் நூறுஆண்டுகளுக்கும் மேலாக தருமபுர ஆதீனத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறது. இங்கே இருந்து பணியாற்றும் தம்பிரான் சுவாமிகளின் திருப்பெயரின் முன்னர் 'மௌன' என்ற அடைமொழி சேர்த்தே இன்றுவரை வழங்கப்பெற்றுவருகிறது.



www.saivamonline.com

## தொன்மையான இந்திய மடங்கள்:

இந்தியநாட்டில் தொன்றுதொட்டு நிலவிவரும் சைவ மடங்கள் பதினைந்து என்று ஆராய்ச்சி அறிஞர்கள் கண்டு விளக்கியுள்ளனர்.[1] இவை முறையே 1. கைலாசமடம் 2. பௌண்ட்ரகமடம் 3. வலாககமடம் 4. கற்பகிராமமடம் 5. பதரீமடம் 6. தேவதாருவனமடம் 7. கந்தர்ப்பமடம் 8. உத்தராரண்யகம் 9. தக்ஷ்ஞாரண்யகம் 10. கோவிதார மடம். 11. ஆமந்தகமடம். 12. மத்தமடம். 13. மாயூர மடம். 14. ரணபத்திரமடம் 15. சோழகமடம் என்பன. இச்செய்தி அகோரசிவாசாரிய பத்ததி மகோத்ஸவ விதிப் படலத்துள் கூறப்படுகிறது. இவற்றுள் சோழகம், மாயூரம், தக்ஷ்ஞாரண்யகம் ஆகிய மூன்றும் தென்னாட்டு மடங்கள் என்றும் ஏனையவை வடநாட்டில் நிலவியவை என்றும் அறியப்படுகின்றன. தென்னாட்டில் நிலவிய மடங்களுக்குச் சிலநேரங்களில் வடநாட்டிலிருந்து 'மடபதிகள்' வரவழைக்கப் பட்டனர் என்று முதல் இராஜராஜன் காலத்துக் கல்வெட்டு ஒன்று அறிவிக்கிறது.[2]

## சமயாசாரியர் காலத்து மடங்கள்:

பெரியபுராணத்தில் தேவார ஆசிரியர்கள் காலத்தில் நிலவிய சில சைவத்திருமடங்களைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அடியார்கள் புடைசூழ மதுரை சென்று சேர்ந்த திருஞானசம்பந்தருக்கு அமைச்சர் குலச்சிறையார் தங்குவ தற்குரிய திருமடம் இது எனக் காட்டினார் என்ற குறிப்பு[3]

---

1. மகர்வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் தருமை ஆதீனக் கோயில்கள்: தருமபுர ஆதீனம். தருமபுரம் பக். 10.

2 M. E. R. 357 of 1911, 72 of 1930, 111 of 1930

3. 'சித்தம் இன்புறும் அமைச்சனர் திருமடங் காட்டப் பத்தர் போற்றிடப் பரிசனத் தொடும் இனிதமர்ந்தார்' திருஞான சம்பந்தர் புராணம்-சைவ சித்தாந்த மகாசமாஜப் பதிப்பு (மூன்ரும் பதிப்பு) 1950. பாடல் எண் 679. தொடர்எண் 2579.

www.saivamonline.com

சேக்கிழாரால் தரப்பெற்றுள்ளது. திருஞானசம்பந்தர் வந்து தங்குவதற்கு முன்னர் வேறு பெயரில் இத்திருமடம் நிலவியிருத்தல் வேண்டும். இவர்கள் தங்கிச் சென்ற நாள் முதல் இத்திருமடம் திருஞானசம்பந்தர் திருமடம் என்ற பெயர் பெறுவதாயிற்று. இன்றளவும் இத்திருமடம் மதுரையில் நின்று நிலவிவருதல் இங்கே நினைவுகூரத்தக்கது. மற்றும் திருஞானசம்பந்தரை, திருப்புகலூரில் வாழ்ந்திருந்த முருக நாயனார் வரவேற்றுத் தம் திருமடத்தில் தங்கவைத்தார் என்ற குறிப்பும்,[1] அப்பரடிகள் திருப்பூந்துருத்தியில் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்று அமைத்து நெடுநாள் தங்கியிருந்த குறிப்பும்[2] பெரியபுராணத்தில் உள்ளன.

## ‘மடம்’ என்னும் சொல் வழக்கு:

மடம் என்ற சொல்லுக்கு-முனிவர்வாழிடம் என்று பிங்கலம் என்ற நிகண்டுநூல் குறிக்கிறது. நைஷ்டிக பிரமசாரிகளும், சந்நியாசிகளுமான ஆசாரியர் வாழுமிடம் என பல்கலைக்கழகப்பேரகராதிபொருள்விரிக்கிறது (LEX பக்3020) நைஷ்டிக பிரமசாரிகள் என்பார் ஆசாரியர்க்கும் பெற்றோர் களுக்கும் பணிவிடை செய்து கொண்டு மரணம் வரை பிரமசரியம் கொண்டிருப்பவர் என்றும் இதுவிளக்கியுள்ளது ‘அமரம்’ என்ற வடமொழி நூலில் மடம் என்றசொல்லுக்கு மாணவர் வசிக்கும் இடம் என்று பொருள் கூறப்பட்டிருக் கிறது. பட்டோஜி தீட்சிதரின் குமாரராகிய தாசுேஜி தீட்சிதர் என்பார் இச்சொல்லுக்குப் பரிவிராசக சமணருடைய இடமென்றும், பௌத்த விகாரமென்றும் பொருள் கூறி இறுதியில் மாணவர் வசிக்குமிடம் என்பதே

1. பெரியபுராணம்: கழக பதிப்பு-பாடல்எண் 490. தொடர்எண் 2393.

2. பெரியபுராணம்: கழக பதிப்பு திருநாவுக்கரசு நாயனர் புராணம் பாடல்எண் 389-தொடர்எண் 1659.

www.saivamonline.com

சரியானபொருள் என்று முடிபுகாண்கிறார்.[1] "ஆதியில் மடம் என்பது துறவி ஒருவரின் குடில் என்றே பொருள்பட்டது. பின்னர் பலதுறவிகளின் குடில்களின் கூட்டத்தைக்குறிப்ப தாயிற்று. சாகுந்தல நாடகத்தில் கண்ணுவ முனிவரின் ஆச்சிரமம் அத்தகையது. நாளடைவில் பலதுறவிகள் ஒன்றாகச் சேர்ந்து வாழும் இடம் மடம் என்பதாக ஆயிற்று" என்று தமிழ்க் கலைக்களஞ்சியம்[2] இச்சொற்கு இவ்வாறு விளக்கம் தருகிறது. இவற்றை எல்லாம் ஒன்று திரட்டிப் பார்க்கையில் மடம் என்ற சொற்பொருள்கூறுவதில் ஏதும் முரண்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. மடம் என்ற சொல் துறவுநெறிநிற்கும் ஆசிரியர்களும்-சீடர்களுமாகியசான்றோர் இணைந்து வாழும் இடம் என்று பொருள்படுதலை இனிதின் உணரமுடிகிறது. ஆதீனம் என்ற சொல் ஒன்றால் தமிழகத் துத் திருமடங்கள் சில அழைக்கப் பெற்றன. அதினம்—என்ற வடசொற்கு உரிமை என்பது பொருள். கைலாயத்தில் சிவபெருமான் உபதேசித்த சிவஞானோபதேசத்தை வழிவழி யாக உரிமையோடு போற்றிப் பாதுகாத்து வருவதால் இவை சைவாதீனங்கள்என அழைக்கப்பெற்றன. சென்னைப்பல்கலைக் கழகப் பேரகராதி இத்தொடருக்குச் 'சைவமடம்' என்றே பொருள் உரைக்கிறது.[3] குகை என்றசொல் ஒன்றும் மடம் என்றசொல் வழங்கும் பொருளில் வருகிறது. தொடக்கத் தில் ஞானாசிரியர்கள் மலைக்குகைகளில்தங்கியிருந்த ஒப்புமை யால் இச்சொல் இப்பொருளில் வழங்குதல் கூடும்.

---

1. மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர். தருமை ஆதீனக் கோயில்கள். தருமபுர ஆதீனம் தருமபுரம்-பக். 4, 5.
2. தமிழ்க் கலைக்களஞ்சியம்-பக்கம் 46.
3. "Saiva monastery, A Religious organisation composed of ascetics with a head. Use of great learning and spiritual attainments, who resides at a head-quarters and initiates aspirants and in a general way keeps control over for properties of the matam." TAMIL LEXICON-VOLUMES: six PAGE 230

www.saivamonline.com

## மடங்களின் பணிகள் :

தென்னாட்டுத் திருமடங்கள் தொடக்கத்தில் குருடர், செவிடர் முதலியோர்களுக்கும், துறவிகளுக்கும் உணவு தரும் அறச்சாலைகளாக இருந்தன. கற்றுவல்ல புலவர்கள் தங்குவதற்கும் அக்காலத்தே மடங்கள் இடமாக இருந்தன.[1] நிருபதுங்கவர்மனின் 25ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று காவிரிப்பாக்கத்து வரதராசப் பெருமாள் கோயிலுக்கு ஏற்படுத்தப் பட்டதொரு நிபந்தம் அவ்வூர் மடத்துச் சத்தப் பெருமக்கள் கண்காணிப்பில் இருக்கவேண்டுமென்று கூறுகிறது. (சத்தம்-நூல்) எனவே, திருக்கோயில்களின் பராமரிப்பும் திருமடங்களின் பணிகளுள் ஒன்றாக இருந்து வந்திருப்பதைக் காண்கின்றோம். பல்லவர்கள் காலத்தில் கோயில்கள் அமிர்த கணத்தார் அல்லது மடத்துப் பெருமக்கள் அல்லது ஊரவையார் ஆட்சியில் செவ்வனே பாதுகாக்கப்பட்டன.[2] என்ற செய்தியும் இதனை வலியுறுத்தும். மடங்கள் கோயில்களைச் சார்ந்திருந்தன; அவற்றில் பொதுக் கல்வியும் சமயக்கல்வியும் தரப்பெற்றன. தலயாத்திரை செய்யும் அடியார்கள் உண்டியும் உறையுளும் பெறும் இடங்களாகவும் அவை இருந்தன.[3]

திருமடங்கள்பலவேறுசமய–சமூகப்பணிகளைஇயற்றிடும் பெரிய சமூக நிலையங்களாகத் திகழ்ந்தன. மடத்தில் வேலை செய்ய, சூலமுத்திரை இடப்பெற்ற ஆண்களும், பெண்களும் இருந்தனர்.[4] மடத்திற்கு 36 பேர் ஒரே சமயத்தில் மட

---

1. வித்துவான். திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, சைவ இலக்கிய வரலாறு: 1958/78. அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். பக் 29, 30
2. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார், சைவ-சமய வளர்ச்சி இரண்டாம் பதிப்பு 1950/72–பாரிநிலையம். சென்னை–1 பக்: 115
3. ஷை மேற்கோள் பக் 222, 28.
4. A. R. 76, 216, 219, 409 of 1925. 91 of 1926.

www.saivamonline.com

அடிமைகளாக விற்கப்பட்டனர்[1] என்றெல்லாம் வரும் கல்வெட்டுத் தொடர்கள் மடத்தில் பலவகை வேலைகளைக் கவனிக்க எண்ணற்ற அடியவர்கள் தேவையாக இருந்தனர் என்பதை உணர்த்துகின்றன.

## திருமடத்துத் தலைவர்கள்:

திருமடத்தின் தலைவர்கள் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் தலை நின்றனர். தூய துறவுநெறிபோற்றி வாழ்ந்தனர். அறச் சொத்துக்களையும், திருக்கோயில்களையும் முறையாகப் பரிபாலித்தனர். வேத, ஆகம, ஞான நூல்களில் தேர்ச்சி பெற்று இவற்றை மாணவர்களுக்கு அறிவுறுத்தினர். தகுதி மிக்கவர்களுக்கு ஞானோபதேசம்செய்து,தங்கள் ஞானோபதேச மரபு வளர்ந்து தொண்டாற்றிவர ஆவன செய்தனர். ஞான நூல்கள் பலஇயற்றி உலகுக்கு வழங்கினர். தமிழ் வடமொழி என்ற இரண்டிலுமே சிறந்த ஞானம் பெற்றுத் திகழ்ந்த இவர்கள், இவ்விரு மொழியும் வல்ல புலவர்களைத் திருமடங் களில் தங்கச்செய்து ஆதரித்துவந்தனர். சமூகத்தில் மன்னராலும், மக்களாலும் நன்கு மதிக்கப்பெற்றனர். திருக்கடவூர்த்திருக்கோயிலில் அரசன் விதித்த ஒழுங்கையும் மாற்றி 'சுவாமி தேவர்' என்ற மடாதிபதி புதிய ஏற்பாடு களைப் புகுத்தினர்.[2] என்ற செய்தி இவர்களுக்கிருந்த செல்வாக்கை நன்கு எடுத்துக்காட்டும்.

## நால்வர் திருமடங்கள்:

சங்ககாலந்தொடங்கி, கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் திருக்கயிலாய பரம்பரையில் அவதரித்த மெய் கண்ட தேவர் காலம் வரை தமிழகத்தில் நிலவியிருந்த பல்வேறு கொள்கை களையுடைய மடங்கள் இருநூற்றுக்கும் மேற்பட்டன

1. A. R. 90 of 1916.
2. மகாவித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர், தருமபுர ஆதீனக் கோயில்கள். தருமையாதீன வெளியீடு. பக் 6.

www.saivamonline.com

வாகும்.[1] இவைபற்றிய குறிப்புக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றனவே யன்றித் தொடர்பான செய்திகள் எவையும் கிடைத்தில. இவற்றைத் தோற்றுவித்தவர் யார் என்பது பற்றியோ, இவைஎத்தனை ஆண்டுகள் நின்று நிலவின என்பதுபற்றியோ, இவை இயற்றிய சமய-சமூகப்பணிகள் யாவை என்பது பற்றியோ திட்டவட்டமான குறிப்புக்கள் ஏதும் இல்லை. தேவாரமூவர்கள் பெயராலும், மணிவாசகர் பெயராலும் இவ்வகை மடங்கள் ஏராளமாகத் தோன்றின. சீகாழி ஞானசம்பந்தர் திருமடம்[2] ஆச்சாள்புரம் பரசமய கோளரி மடம்[3] சிதம்பரம் அம்பலநாயகர் பெருந்தெருவில் கோப்பெருஞ்சிங்கன் அமைத்த திருநாவுக்கரசு நாயனார் பெருமடம்[4] திருப்பாற்றுறை திருநாவுக்கரசு தேவன் மடம்[5] திருப்புத்தூர் திருத்தொண்டத் தொகையான் திருமடம்[6] திருவிடைவாயில் திருத்தொண்டத் தொகையான் திருக்குகை[7] திருவாசகன் மடம்[8] என்றெல்லாம் அமைந்திருந்த நூற்றுக்கும்மேற்பட்ட நால்வர்திருமடங்களை கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. ஏராளமாக நாடெங்கும் தோன்றியிருந்த இத்தகையதிருமடங்கள் அவ்வப்பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்குச் சமய-சமூகப்பணியாற்றும் சிறுசிறு அமைப்புக்களாகவே திகழ்ந்திருக்கவேண்டும். இவை

---

1. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார், சைவசமயவளர்ச்சி இரண்டாம் பதிப்பு 1950/72 பாரிநிலையம், சென்னை-1 தலைப்பு: மடங்களும் குகைகளும் பக். 206 முதல் 234 வரை.
2. S. I. I. 370 of 1918.
3. S. I. I 534 of 1918.
4. S. I. I. Vo 8- பக் 43.
5. A. R. 538 of 1908.
6. A. R. No 104 Of 1908. 180, 190, 192. of 1929.
7. A. R. No 10 of 1918.
8. A. R. No 282 of 1915.

www.saivamonline.com

முறையான சைவாசாரியர்களால் தோற்றுவிக்கப்பட்டன வாகவோ அல்லது நீளநின்று தொண்டாற்றத்தக்க கட்டுக் கோப்புடையனவாகவோ திகழ்ந்திருக்கவில்லை. அக்காலத் தில் நால்வர் பெருமக்களால் ஈர்க்கப்பெற்ற அன்பர்களின் முயற்சியால் இத்தகைய திருமடங்கள் பெருமளவில் தோன்றி இருத்தல் கூடுமென்று எண்ண இடமுண்டு. இவற்றுள் ஒரு சில தக்க தலைவர்களின் பராமரிப்பில் சிறந்து விளங்கியிருந் திருக்கலாம். அவ்வப்பகுதியில் வாழும் மக்களின் அறக் கொடைகளால் இவை இயன்றஅளவு பணியாற்றிவந்தனவே அன்றி, குறிக்கத்தக்க நீண்ட பாரம்பரியமுடையதாய் நின்று நிலவியிருக்கவில்லை என்பது தெளிவு.

## குகையிடி கலகம்:

தேவார ஆசிரியர்கள் காலத்தில் நிலவிய மக்களின் சமூக மனப்பாங்கு நாளடைவில் மாற்றமுறலாயிற்று. சிவனை வழிபடுவோர் அனைவரும் ஒரே தன்மையர் என்ற நிலையில் மாறுபட்ட எண்ணங்கள் தலைஎடுத்தன. சிவப் பிராமணர்கள் எனத் தம்மைக் கூறிக்கொண்ட இச்சைவ ஆசாரியர்கள் சிலர், வேளாண்குடியிற் பிறந்து கல்வி கேள்வி ஒழுக்கங்களால் சிறந்து நின்று ஞானோபதேச நெறிநிற்கத் தலைப்பட்டோரின் தலைமையை உடன்பட இசைந்திலர்; இவர்களைச் சூத்திரர்கள் என்றும், இவர்கள் குருவாகத் திகழ்ந்து ஞானோபதேச நெறிநிற்றல் பாவம் என்றும் பிரசாரங்கள் செய்தனர். இவற்றால் சோழர் காலத்தில் திகழ்ந்த சைவத்திருமடங்களின் தலைமைபற்றிய கருத்து வேறுபாடுகள் பல்கின. இவற்றின் எதிரொலியாக மூன்றாம் குலோத்துங்கனின் 22 ஆம் ஆட்சியாண்டில் திருத்துறைப் பூண்டியிலும், தமிழகத்தின் ஏனைப்பகுதிகளிலும் இருந்த திருமடங்களாகிய குகைகள் இவற்றின் சொத்துக்களோடு இடித்து நொறுக்கப்பட்டன.[1] மிகச்சிலவே எஞ்சின.

1. மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர் தருமையாதீனக் கோயில்கள் 1949-தருமையாதீன வெளியீடு பக். 11.

www.saivamonline.com

சிறந்த சிவபக்தனாக விளங்கி, தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தை அடுத்துத் திருபுவனம் என்ற நகரை உருவாக்கி, அங்கே கலைவளம் மிக்க பெருஞ் சிவத்தளி ஒன்றைக் கட்டுவித்த மூன்றாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில், சைவத் திருமடங்கள் இடித்து நொறுக்கப் பெற்றமை வியப்பூட்டுவதாகவே உள்ளது. வரலாற்று ஆசிரியர்கள் பலரும் இக்கலகம் பற்றி விரிவாக ஆராய முற்படாமை மேலும் வியப்பைத் தருகிறது. என்றாலும் இக்கலகம் தமிழுக்கு முதலிடம் தந்த தமிழ்ச்சான்றோர்களால் நடத்தப்பெற்ற சைவத் திருமடங்களின்மீது அரசியல் செல்வாக்கு மிக்க சைவாசாரியர்கள் திட்டமிட்டு நிகழ்த்திய தாக்குதல்களின் விளைவே என்பதற்கு நிறைவான சான்றுகள் உள்ளன.[1] இக்கலகம் பற்றி எழுத வந்த டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார் அவர்கள் "அஃது எதற்காக யாரால் ஏற்பட்டது? அக்கலகம் திருத்துறைப்பூண்டியில் மட்டும் நடந்ததா? நாடு முழுவதும் நடந்ததா என்பது தெரியவில்லை! ஆனால் மூன்றாம் குலோத்துங்கற்குப் பிற்பட்ட காலத்தில்தான் குகைகள் மிகுதிப்பட்டன என்பது கல்வெட்டுக்களால் தெரியவருகிறது"[2] என்று குறித்துள்ளார்கள். இதற்கு ஆதாரமாக அரசினர் வெளியிட்ட கல்வெட்டு அறிக்கை ஒன்றையும் அவர்கள் அடிக்

---

1. "குகையிடிக் கலகம், which happened in the 22nd year of 'பெரிய தேவர்' (குலோத்துங்கன்III) must have been instigated by the Brahmanas against the non-Brahmanisal siva muthas" AR for 1913 Para 42 Vide also AR for 1926-27 Page: 84.

2. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார், சைவசமய வளர்ச்சி. இரண்டாம் பதிப்பு 1950/72 பாரிநிலையம் சென்னை-1. பக். 224.

www.saivamonline.com

குறிப்பில் தந்துள்ளார்கள்.[1] இவற்றை எல்லாம் ஒப்பு வைத்து நோக்குங்கால் சமயாசாரியர்கள் காலத்துக்குப் பின் சைவாசாரியர்கள் அல்லாத சைவச்சான்றோர் பலர் உரிய தகுதியோடு சைவத் திருமடங்களைத் தலைமை தாங்கி நடத்தி வந்துள்ளமையும், அங்கே தமிழ் எழுச்சிபெற்று வளர்ந்தமையும் நன்கு புலனாகின்றன. சமயத் துறையில் தங்கள் செல்வாக்குக் குறைந்து, தலைமை அகன்ற நிலையினைப் பொருத சைவாசாரியர்கள் இத்திருமடங்களின் வளர்ச்சிக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் அவ்வப்போது தீங்கு சூழ்ந்து வந்துள்ளனர் என்பது நன்கு புலனாகிறது.

## திருக்கயிலாய மரபு:

பல்லவர்காலத்தில் தோற்றங்கொண்டு, சோழர்கள் ஆட்சிக்காலத்தில் பலவாக விரிந்து விளங்கிய தமிழகத்துச் சைவத் திருமடங்களின் வளர்ச்சி, சோழர் ஆட்சிக்குப் பின்னர் அரசியல் கொந்தளிப்புக்களால் மெல்ல வலிமை குறையலாயிற்று. என்றாலும், உமாபதிசிவாசாரியருக்குப் பின்னர், மெய்கண்டாரின் மாணவர் வழிவந்த பலரும் தமிழ் நாடெங்கும் ஆங்காங்கே தங்கியிருந்து ஆசாரியர்களாக உபதேசம் செய்து வந்தமை வரலாற்றால் தெரிகிறது. தருமையாதீனம் இம்மெய்கண்ட சந்தானத்தில் தோற்றங் கொண்ட காலத்தில் ஓரளவு இப்போட்டிகள் குறைந்திருந்தன என அறிகிறோம். இந்நிலையில் 13-ஆம் நூற்றாண்டில் மெய்கண்ட சந்தானமும் இச் சந்தானத்தில் கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தருமபுர ஆதினம் புதிய

---

1. "இக்குகையிடிக் கலகம் அப்பிராமண சைவ-மடங்கள்மீது, பிராமணர்களால் தூண்டப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஆயினும் அப்பிராமண மடங்கள் அழிந்துபடவில்லை. இவை 3 ஆம் இராசராசன் காலத்திலும், பிற்காலத்திலும் சிற்றரசர் ஆதரவிலும், தனிப்பட்டவர் ஆதரவிலும் வளர்ந்தன."
— ARE 1913. P 112.

www.saivamonline.com

அழகோடு தோற்றங்கொண்டு வளரலாயிற்று. இதன் விரிவைப் பின்னர்க் காண்போம்.

## அமைதிச்சூழ்நிலை :

தமிழகத்தின் சைவத்-திருமடங்களின் தோற்றம் வளர்ச்சி-வரலாறுபற்றி ஓரளவு இங்கே ஆராயமுயன்றோம். பௌத்த-சமண குருமார்கள் துறவு நெறி நின்று தங்கள் மதத்தைப் பரப்ப முற்பட்ட காலத்தில், சைவ-சமயமும் இம்முயற்சியில் ஈடுபட்டது. இந்த எழுச்சியால் வேத-ஆகமநெறி போற்றும் சைவத்திருமடங்கள் சில[1] நாட்டில் ஆங்காங்கே தோற்றங்கொண்டன. இவை பெரும்பாலும் வேதாகம நெறிநின்ற சிவாசாரியர்களால்-வடமொழியை அடித்தளமாகக் கொண்டே இயங்கின. தேவார காலத்திற்குப் பின்னர் இவ்வகை மடங்கள் பல்கின. திருமடங்களின் தலைமை தமிழர்கள் கைக்கு மாறின. தமிழ் இங்கெல்லாம் உரிய மதிப்பினைப் பெறலாயிற்று. இவற்றால் அவ்வப்போது சில போராட்டங்கள் தலை எடுத்து அடங்கின.

---

1. சைவத் திருமடங்கள் பதினெட்டு என்பர்: இவை முறையே,

1. திருவாவடுதுறை, 2. காஞ்சிபுரம், 3. தருமபுரம், 4. சூரியனார் கோயில், 5. சிதம்பரம்-ஆகமசிவப்பிரகாசர் ஆதீனம், 6. பெருங்குளம்-செங்கோலாதீனம், 7. மதுரை-திருஞான சம்பந்தர் ஆதீனம், 8 குன்றக்குடி திருவண்ணமலையாதீனம், 9. இராமேச்சுர ஆதீனம், 10. நீலப்பாடியாதீனம், 11. அன்னப்பன்பேட்டை-தாயுமான சுவாமிகளாதீனம், 12. சாரமா முனிவர் ஆதீனம் 13. சொர்க்கபுரஆதீனம், 14. வேளாக்குறிச்சியாதீனம், 15. சீகாழி வள்ளலார் ஆதீனம், 16. வரணியாதீனம், 17. நாச்சியார்கோயிலாதீனம், 18. துழாவூராதீனம்-என்பன.

'சைவ மார்க்கப் பதினெண் மடத்தாரும்' என்பது திருப்பூவணநாதருலா.

—தமிழ்ப் புலவர் வரிசை 17-ஆம் நூற்றாண்டு கழகவெளியீடு-பக் 15

www.saivamonline.com

என்றாலும் பாரம்பரியம் மிக்க நீண்ட கால வாழ்வுடைய திருமடங்கள் பெரிதும் சிறக்கவில்லை. மெய்கண்டார் வருகைக்கு முன்னும் பின்னும்கூட இந்நிலையே நீடித்தது. கி.பி.16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தருமையாதீனம் தோற்றங்கொண்ட காலப்பகுதியில்தான் சமயப் போராட்டங்கள் குறைந்து ஓர் அமைதியான சூழ்நிலை நிலவி யிருந்தது என்பதை உணரமுடிகிறது.

www.saivamonline.com

# தருமை ஆதீனம்

## 16-ம் நூற்றுண்டின் சமூகநிலை:

தருமையாதீனம் தமிழ்மொழிக்கு 450 ஆண்டுகளாக ஆற்றிவந்திருக்கும்பணி நிறைவானது. இப்பணிகளை மதிப்பிடுவதற்குமுன்னர், இவ்வாதீனத்தின் வரலாற்றைச் சுருக்கமாக இங்கே நினைவுகூர்தல் வேண்டத்தக்கது. எந்த ஒரு தனி மனிதனின் பணியாயினும் அல்லது ஒரு நிறுவனத்தின் பணியாயினும் அப்பணி நிறைவேற்றப்பட்ட காலச்சூழ் நிலைகளோடு அதனை ஒப்பவைத்து நோக்குதல் இன்றியமையாதது. 20-ஆம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியில் வாழும் நமக்குத் தமிழ் பெருமிதத்தோடு வீற்றிருக்கும் காட்சிமட்டும் விளங்கித் தோன்றும். 450 ஆண்டுகளுக்கு முன்னர் தருமை ஆதீனம் தோற்றங்கொண்ட காலத்தில் நிலவிய சமூக நிலைமை நம்மில் பலருக்கு நினைவில் இருக்காது. மூவேந்தர் ஆட்சி மறைந்து-வடபுலத்து மகமதியர்களால் தமிழகம் மொழி, சமயம், கலாசாரம்யாவற்றையும் இழக்கும்நிலையில் குழம்பிக்கிடந்த காலம் அது. இந்தக்காலச் சூழ்நிலையில்

www.saivamonline.com

ஊன்றி நின்று பல இன்னல்களுக்கிடையே செந்தமிழ் வளர்த்த வரலாற்றுச் சிறப்பு திருக்கயிலாய பரம்பரையில் வந்த சைவ ஆதீனங்களுக்கே உரியது.

ஞானத்தைத் தக்க ஆசாரியர்பால் அணுகி, உபதேச வாயிலாக அடைதல்வேண்டும் என்பதுசைவமரபு. தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வாராது என்பது இப்பொருளைவிளக்கும் ஒரு பழமொழி.[1] ஆசிரியர் மாணவர் என இடையறவு படாது வரும் இவ்வுபதேச நெறியைச் சந்தானம் என வழங்குவர். இவ்வாருன ஞான சந்தானங்கள் பல[2] தமிழகத்தில்நிலவியிருந்ததாக ஆதீன அருள்நூல்களுள் ஒன்ருகிய முத்தி நிச்சயப் பேருரையால்[3] விளங்குகின்றது. இவற்றுள் குறிக்கத்தக்க பெருஞ்சிறப்புடையதாய் இன்றும் நின்று நிலவுவது மெய்கண்ட சந்தானம் ஒன்றே.

## திருக்கயிலாய பரம்பரை: மெய்கண்ட சந்தானம்

இவ்வுபதேச மரபு திருக்கயிலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானிடத்திருந்து வருவது. முறையே சிவபிரான் நந்தியெம்பெருமாஞர்க்கும், அவர் சனற்குமார முனிவர்க்கும், சனற்குமாரர் சத்தியஞான தரிசனிகளுக்கும், அவர் பரஞ்சோதிமா முனிகளுக்கும் உபதேசித்தனர். சிவபெருமானிடம் உபதேசம்பெற்ற இந்நால்வரும் திருக்கயிலாயத்தினர் எனவே இவர்களை அகச்சந்தாஞசாரியர் என்பது மரபு. பரஞ்சோதி முனிவர் திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவர்க்கு உபதேசம செய்தார். இவரிடம் அருணந்தி

---

1. இதனை,
உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
கணத்தில் உணரும்வகை காணேன்
எனக்குறிப்பர் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிகர்.

2. தமிழகத்துச் சைவாதீனங்கள் பதினெட்டு என்று கூறுவர்.

3. வெள்ளியம்பலவாணர் – முத்திநிச்சயப்பேருரை தருமையாதீனம் 1946 பக்கம்: 58-59

www.saivamonline.com

சிவாசாரியரும், அவர்கள்பால் மறைஞான சம்பந்தரும், அவர்களிடம் உமாபதி சிவாசாரியரும் ஞானோபதேசம் பெற்றனர். இந்நால்வரும் நிலவுலகத்தவர் ஆதலின் புறச் சந்தானாசாரியர் என வழங்கப்பெறுவர். உமாபதி சிவாசாரியரின்காலம் (கி.பி.1260-1325) 14-ஆம்நூற்றாண்டின் முற்பகுதி இவர்களுக்குப் பின்-ஏறத்தாழ 300 ஆண்டு களுக்குப் பின்னர்த் தருமையாதீனக் குரு முதல்வர் ஸ்ரீகுரு ஞானசம்பந்ததேசிக சுவாமிகளின் திருவவதாரம் நிகழ்ந்தது. இடைப்பட்ட மூன்று நூற்றாண்டுக்கால ஞானமரபை நாம் அறிந்து கொள்ள உதவிய பேரருளாளர் தருமையாதீனத் திருக்கூட்டத்து அடியவர்களுள் ஒருவரும், முத்தி நிச்சயப் பேருரை கண்ட சான்றோருமாகிய ஸ்ரீ வெள்ளியம்பல வாணமுனிவர்.[1] இவர்களது உரைக் குறிப்பால் முறையே உமாபதி சிவாசாரியருக்குப் பின்னர் அருள்நமச்சிவாயர்,காழிகங்கைமெய்கண்டார், காழிபழுதை கட்டி சிற்றம்பல நாடிகள், காழி பழுதைகட்டி சம்பந்த முனிவர். சிவபுரம் ஞானப்பிரகாசர் சிவபுரம் தத்துவப் பிரகாசர், திருவாரூர் செட்டித்தெரு பழுதைக்கட்டி ஞானப்பிரகாசர், கமலை ஞானப்பிரகாசர் என எண்மர் திருக்கயிலாய பரம்பரையில் உபதேசநெறி போற்றி வளர்த்துவந்தமை அறியப்படுகிறது. திருக்கயிலாய மரபினை யும், இம்மரபில் வந்த அருளாளர்களையும்-அவர்கள் அருளிச் செய்த அருள்நூல்களையும், அவர்களது காலத்தையும் கீழ்க்கண்ட அட்டவணையால் தெளிய உணரலாம்.[2]

## தருமபுர ஆதீன பரம்பரை

திருக்கயிலாயபரம்பரை: மெய்கண்ட சந்தானம்

கயிலை நந்தியெம்பெருமான்

சனற்குமார முனிவர்

1. முத்திநிச்சயப்பேருரை பக்கம் : 57

2. அருணசலம் மு. ஸ்ரீ குருஞானசம்பந்தர். காந்தி வித்தியாலயம் திருச்சிற்றம்பலம், 1975, பக்கம் 51-52

www.saivamonline.com

சத்தியஞானதரிசனிகள்
பரஞ்சோதி முனிவர்
(இந்நால்வரும் அகச்சந்தான குரவர்: கைலாயவாசிகள்)


மெய்கண்டார்
(1125–1175)
(நூல்: சிவஞான போதம்)
|
அருள்நந்தி சிவாசாரியார்
(1080–1200)
(சிவஞானசித்தியார், இருபா இருபஃது)
|
கடந்தை மறைஞானசம்பந்தர்
(1200–1260)
(சதமணிக் கோவை)
|
உமாபதி சிவாசாரியர்
(1260–1325)

(சிவப்பிரகாசம், திருவருட்பயன், சங்கற்பநிராகரணம், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறிவிளக்கம். மற்றும் கோயில் புராணம், திருமுறைகண்ட புராணம்,சேக்கிழார் புராணம்)

(இந்நால்வரும் புறச் சந்தான குரவர்–நிலவுலகத்தவர்)
|
மச்சுச்செட்டியார் என்னும் அருள்நமச்சிவாயர்
(1300–1330)


(ஞானபூசாகரணம், ஞானபூசாவிதி, ஞானதீட்சாவிதி, ஞான அந்தியேட்டி, போசனவிதி,
|
காழி–கங்கை மெய்கண்டார்
(1325–1335)

www.saivamonline.com



மதுரைச் செந்தமிழ்ச்சொக்கன் ஆலயத்தில் உள்ளுணர்வு பெற்ற ஞானசம்பந்தர்
உயிர்க்குத் தாயும் தந்தையுமாகிய சொக்கநாதனை விட்டு
உடற்குத் தாயும் தந்தையுமாகிய உங்களோடு வாரேன் என்றல்.

www.saivamonline.com



மதுரைப் பொற்றுமரைத் தடாகத்தில் பூஜா மூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமானைப்
பெட்டகக்கோயிலோடும் பெறுதல்.

www.saivamonline.com

காழி–பழுதைகட்டி–சிற்றம்பலநாடிகள்
(1325–1350)
(துகளறு போதம் முதலியன)
|
காழி-பழுதைகட்டி–சம்பந்த முனிவர்
(1350–1375)
(சிவானந்த மாலை முதலியன)
|
சிவபுரம்-ஞானப்பிரகாசர்
(1375–1425)
|
சிவபுரம்-தத்துவப்பிரகாசர்
(1425–1475)
|
திருவாரூர்-செட்டித்தெரு–பழுதைகட்டி-ஞானப்பிரகாசர்
(1475–1525)
|
கமலை–ஞானப்பிரகாசர்
(1525–1550)

(சிவபூசை அகவல், பிராசாத மாலை, புட்பவிதி–மழபாடிப் புராணம், தந்திவனப் புராணம் முதலியன)
|
ஸ்ரீ குருஞானசம்பந்தர்
(1550–1575)

## மெய்கண்ட நூல்கள்–சித்தாந்த சாத்திரங்கள் :

திருஞானசம்பந்தர் முதலிய தேவார ஆசிரியர்கள் சிவ பரம்பொருளைப் போற்றி அருளிச் செய்த திருப்பாடல்கள் தோத்திரங்கள்எனப்பட்டன. தேவாரத்திலும், திருமந்திரம் போன்ற ஞான நூல்களிலும் காணப்படும் சைவ-சமய நுட்பங்களை நன்கு ஆய்ந்து அருளிச் செய்யப் பெற்ற



www.saivamonline.com

மெய்கண்டாரின் சிவஞானபோதமும், இந்நூலின் விரிவாகவும், விளக்கமாகவும் அமைந்த ஏனைய பதின்மூன்று நூல்களும் சைவ-சித்தாந்த சாத்திரம் என வழங்கப் பெறுகின்றன. உமாபதி சிவாசாரியருக்குப் பிற்பட்ட அருளாளர்களால் அருளிச் செய்யப்பெற்ற நூல்களுள் சில சாத்திரங்களாகக் கொள்ளத்தக்கன. சில தோத்திரத் தன்மையுடையன. மெய்கண்ட சந்தானத்தில் எழுந்த அருள்ஞான நூல்களின் பெருமை அளவிடற்கரியது. சமயஞ் சார்ந்த நூல்களாக இவை இருப்பினும் இவற்றின் நுட்பமும், செந்தமிழ் அடைவும், சுருங்கிய யாப்பில் தத்துவஞானக் கருத்துக்களை விளக்கும் அருமைப்பாடும் தனியே ஆராயத்தக்க விரிவுடையன. சிவஞான போதமும், சிவஞான சித்தியும் செந்தமிழ்மொழிக்குக் கிடைத்திருக்கும் பெருஞ்செல்வங்கள்.[1] சைவ-சமய ஞானாசிரியர்களின் உலகியல் ஞானம், நூற்கல்வியின் விரிவு, தர்க்கவாதத் திறன், வடமொழிப்புலமை, கவிதை ஆற்றல் போன்ற பல்வகைச் சிறப்புக்களையும் இந்நூல்கள் பறைசாற்றி நிற்கின்றன. ஒரு கோணத்தில் தொல்காப்பியமும், திருக் குறளும் செந்தமிழ் மொழிக்குச் சிறப்புச் சேர்ப்பன போல் இவைகளும் ஒருவகையில் பெருஞ்சிறப்பினை வழங்குவன. இத்தகு ஞானாசிரியர்கள் நிறைந்த திருக்கயிலாய பரம்பரை யில், கமலை ஞானப்பிரகாசரின் மாணவராகத் திகழ்ந்த ஸ்ரீகுருஞானசம்பந்ததேசிக சுவாமிகள் என்ற அருளாளரால் தோற்றுவிக்கப் பெற்றமையின் இவ்வாதீனத்தைத் திருக் கயிலாய மரபினதாகக் கூறுதல் மரபாக இருந்துவருகிறது.

---

1. "பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதன்அருள் மேவும்நாள் எந்நாளோ?"
— தாயுமானசுவாமிகள் பாடல் 1097

"பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியின் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதிபோ தும்."
— ஸ்ரீ குருஞானசம்பந்தர்
சிவபோகசாரம்–23

www.saivamonline.com

## சம்பந்தர் மூவர்:

தமிழகத்துச் சைவசமய வரலாற்றில் ஞானசம்பந்தர் என்ற பெயர் பெற்ற அருளாளர் மூவர். கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் சோழநாட்டுச் சீகாழியில் அவதரித்து மூன்று ஆண்டில் உமையம்மையார் அளித்த ஞானப்பால் உண்டு எண்ணற்றசெந்தமிழ்ப்பனுவல்களை அருளிச்செய்தசம்பந்தர் முதல்வர். இவர் சைவ-சமய தோத்திர நெறியாகிய திரு நெறி புரந்தவர் ஆதல்பற்றித் திருஞானசம்பந்தர் என அழைக்கப்பெற்றார். இரண்டாமவர் சாத்திர ஆசிரியர் களுள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியரின் ஞானாசிரியர். வேதம்வல்ல அந்தணராகிய இவர் கடந்தை மறைஞான சம்பந்தர் என அழைக்கப்பெற்றார். மூன்றாமவர், தம்மை நாடி, ஓடிவரும் காரணர்க்கு உண்மை உபதேசித்த ஞான குருமரபினர். எனவே குருஞானசம்பந்தர் எனப் போற்றப் பெற்றார். ஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக சுவாமிகளின அருள் வரலாறு அருளற்புதங்கள் பல நிறைந்த பெருமிதம்மிக்கது. செந்தமிழின் வரலாற்றோடு சேர்த்து எண்ணத்தக்கது.

## குருவே சிவம்:

சிவபெருமானே மானுடச்சட்டை தாங்கி ஸ்ரீகுருஞான சம்பந்ததேசிக சுவாமிகளாக அவதரித்தருளினார் என்று பாடுவர் தருமையாதீனத் திருக்கூட்டத்து அடியவர்களுள் ஒருவரும், கந்தபுராணச் சுருக்கத்தின் ஆசிரியருமாகிய ஸ்ரீ சம்பந்த சரணாலயமுனிவர். 'குருவே சிவம்' எனக் கொண்டு போற்றுதல் சைவமரபு.[1] மான்காட்டி மான் பிடிப்பது போல், தம்மை ஒரு மானுடனாகக் காட்டி மக்களினத்தை ஈடேற்ற வந்த அருளாளர் ஸ்ரீ குருஞான சம்பந்ததேசிக சுவாமிகள் எனப்போற்றுவர்.

---

1. *திருமந்திரம்:* 1581

www.saivamonline.com

'சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணி அன்பரை ஆள அவர்போல் வந்த
சைவ சிகாமணி'

என்பது குருமுதல்வர் வாழ்த்தின் சில வரிகள். இறை யருளின் முழுவெளிப்பாடாக, கருணைக் கடலாக ஞான விளக்காக-செந்தமிழ்வல்ல அருளாளராகப் பல முனைநின்று ஆராயத்தக்க வீறு மிக்க வரலாறு. ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகளின் அருள் வரலாறு. காவிரிக் கரையில் புகழ் பூத்து நிற்கும் தருமையாதீன ஞானப்பண்ணையின் நாற்றங்காலாக விளங்கிய பெருமை தென்பாண்டி நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்கு உரியதாகிறது.

## திருவவதாரம் :

'சோறுமணக்கும் மடங்களெலாம்' என்ற பெருமிதம் என்றென்றும் தருமைக்கும் உண்டு. இந்தப் பெருமிதம் வேளாண்குடி தந்த பேறு. 'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' என்ற உண்மைக்கு இலக்கிய மாகத் திகழும் கார்காத்த வேளாளர் மரபில் அவதரித்தார் ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக சுவாமிகள். மீனாட்சியம்மை, சுப்பிரமணியபிள்ளை என்னும் அருந்தவத் தம்பதியரின் வேண்டுகோளும், விரதமும் ஒரு சோமவார நன்னாளில் நிறைந்தது. ஞானசம்பந்தர் பதினாறு ஆண்டுகளுக்குள் செந்தமிழ்ச் சிவநெறி நூல்களையும், வடமொழி வேதாகமங் களையும் நிறைவாகக் கற்றுத்தேர்ந்தார். புண்ணியப்பதினா றாண்டில் பெற்றோர் தம் குலதெய்வமாகிய அங்கயற்கண் அம்மை உடனாய செந்தமிழ்ச் சொக்கனைத் தரிசிக்கப் பிள்ளையாருடன் மதுரை சென்றனர். தமக்கு என நினைந் திருந்த பிள்ளை தவத்துக்கு—தமிழுக்கு—தருமைக்கு என்ற உண்மை இங்குத்தான் விளங்கியது.

www.saivamonline.com

## மதுரை தந்த உள்ளொளி:

திருக்கோயில் வழிபாடு முடித்து ஸ்ரீவில்லிபுத்தூர் புறப்பட்ட பெற்றோருடன் வர இசையாது ஞானசம்பந்தர் திருக்கோயிலிலேயே தங்கினார். சொக்கேசன் திருவருளால் ஞான உள்ளொளி பூத்தது. 'என் உடலுக்குத் தாய்-தந்தை நீவிர்! என் உயிர்க்குத் தாய் தந்தையர் இத்திருக் கோயிலில் உளர்' எனக்கூறிப் பெற்றோரை அனுப்பி வைத்தார் பிள்ளையார். 'எல்லாம் உனது பதம்; எல்லாம் உனது செயல்; எல்லாம் உனதருளே' என்ற நினைவோடு நாளும் அம்மையப்பரை வழிபாடாற்றி வந்த ஞான சம்பந்தருக்குப் பொற்றாமரைக் கரையிலமர்ந்து சிவபூசை செய்யும் அடியார்கள் போல் தாமும் பூசிக்க வேண்டுமென்ற பெருவிருப்பம் உளதாயிற்று. 'ஆலந்தரித்த லிங்கத்தை-ஆலவாய்ச் சொக்கலிங்கத்தை-மூலமாய் எங்கும் முளைத்த லிங்கத்தை' மனமுருகி வேண்டி நின்றார். 'தன்னந் தனியே தமியேன் முறையிட்டால், இன்னும் திருச்செவியில் ஏறாதோ' என இறைஞ்சிநின்றார். திருவருள் கூடிற்று. 'பொற்றாமரைக் குளத்தில் பெட்டகத்தில் இருக்கிறோம்; எடுத்துப் பூசிப்பாய்' என அசரீரி எழுந்தது. மறுநாள் காலை இட்டெடுப்பார் போலப் பொற்றாமரைக் குளத்தின் ஈசான திக்கில் மூழ்கிப் பெட்டகக் கோயிலில் எழுந்தருளி இருந்த சொக்கநாதப் பெருமானைக் கைவரப் பெற்றார். இந்த அற்புதம் வியப்பாகிக் கவிதையாய் மலர்ந்தது.

*'கண்ணுக் கினிய பொருளாகி யேஎன்*
*கரத்தில் வந்தாய்*
*விண்ணும் பரவிடும் அற்புத மேஎன்ன*
*விந்தை யிதான்*

www.saivamonline.com

*மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரண*
*வாரி யுள்ளே*
*நண்ணும் படிசெய் மதுரா புரிச்சொக்க*
*நாயகனே'*[1]

என்று தொடங்கிப் பதினொரு திருப்பாடல்கள் கொண்ட 'சொக்கநாதக் கலித்துறை' என்ற நூலால் செந்தமிழ்ச் சொக்கனின் கருணையைப் போற்றிச் சிவபூசை செய்யும் பேறுபெற்று மகிழ்ந்தார்.[2]

## சொக்கேசன் கட்டளை:

சொக்கநாதப் பெருமானைப் பூஜாமூர்த்தியாகப் பெற்ற ஞானசம்பந்தரின் உள்ளம் ஞானாசிரியரைப் பெற விழைந்தது. யார் உண்மையான சற்குரு என்பதனை அறிந்து கொள்ள இயலாதநிலை அக்காலத்தே நிலவியதாகத் தெரிகிறது. தகுதியற்றவர்கள் பலரும் தங்களைத் தாங்களே குருவெனக் கூறித்திரிந்தனர். அவர்களைக் கண்டு அவர்தம் அறியாமைக்கு ஞானசம்பந்தர் உள்ளம் வருந்தினார்.

*'தன்னை அறியார் ; தலைவன் தனையறியார்;*
*முன்னை வினையின் முடிவறியார்—பின்னைக்*
*குருக்களென்றும் பேரிட்டுக் கொள்ளுவர்கள் ஐயோ*
*தெருக்கள் தனிலே சிலர்.*[3]

தக்க குருநாதரை எனக்கு உணர்த்தியருள வேண்டுமென்று சொக்கநாதப்பெருமானைப் பிரார்த்தித்தார். இங்கே யாவும் நின்செயல் ; என்செயல் ஏதுமில்லை ; அப்படியிருக்க யான்

---

1. சொக்கநாதக்கலித்துறை பாடல்-1

2. இன்றளவும் குருஞானசம்பந்தர் திருக்கரத்தில் வந்த சொக்கநாதப் பெருமானே தருமையாதீனப் பூஜா மூர்த்தியாக விளங்குகின்றான்.

3. சிவபோகசாரம் 126

www.saivamonline.com

வாய் திறந்து உன்னிடம் எதனை வேண்டுவேன்! ஒன்றே ஒன்றை மட்டும் எனக்கு உதவிட வேண்டுகின்றேன்!

*'எப்படியோ நாயேனை ஈடேற்ற வேண்டுமுனக்(கு)*
*அப்படியே செய்தருளு வாய்'*[1]

என மனம் உருகி நின்று நல்வழிகாட்டி ஈடேற்ற வேண்டி நின்றார். 'ஞானசம்பந்தனே! நமது உபதேச பரம்பரையில் வந்து திருவாரூரின்கண்உள்ள ஞானப்பிரகாசனிடம் சென்று ஞானோபதேசம் பெற்று நம்மை வழிபட்டு வருவாயாக என்று வழிகாட்டியருளினான் சொக்கநாதப் பெருமான். ஞானசம்பந்தர் வருகைபற்று ஞானப்பிரகாசருக்கும் திருவாரூரில் அசரீரி வாக்கு அறிவுறுத்தியது.

## ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச தேசிகர்:

மதுரையை விட்டுப் பூஜாமூர்த்தியோடு புறப்பட்ட ஞானசம்பந்தர் ஒரு சோமவார தினத்தில் திருவாரூர்த் திருக்கோயில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சந்நிதியில் தம் ஞானாசாரியராகிய கமலை ஞானப்பிரகாச தேசிகரைக்[2] கண்டு வணங்கினார். பரிபக்குவம் மிக்க தம் மாணாக்கரைக் கண்டு மகிழ்ந்த கமலை ஞானப்பிரகாசர் அவருக்குச் சிவஞான உபதேசம் செய்து, சிவஞானசித்திநூல் வாயிலாக முப்பொருள் இயல்பை அறிவுறுத்தினார். தம்மை மாணாக்கராக ஏற்றருளிய திறத்திற்கு மகிழ்ந்து தம் ஞானாசிரியரின் அளவற்ற கருணையினையும், பெருமையினையும் போற்றி,

*"கிடந்தாலும் ஞானப்ர காசனென் பேன்;கிடந்*
*தேளழுந்து*
*படர்ந்தாலும் ஞானப்ர காசனென்பேன்; பசி*
*யோடுபிணி*

---

1. *சிவபோகசாரம்* 89.

2. *இவரது திருநாமத்தை 'சிதம்பரநாத மாசிலாமணிக் கமலைஞானப் பிரகாச பண்டாரம்' என முத்தி நிச்சயப் பேருரை குறிக்கிறது.* பக்-57

www.saivamonline.com

*அடர்ந்தாலும் ஞானப்ர காசனென் பேன்; அந்த*
*அந்தகனுர்*
*தொடர்ந்தாலும் ஞானப்ர காசனென் பேன்பினைச்*
*சொல்லில்லையே"*[1]

என்பது போன்ற முப்பத்தாறு பாடல்கள் கொண்ட ஞானப்பிரகாச மாலை[2] என்ற நூல் ஒன்றை இயற்றினர். தம் ஞானசிரியர்பால் இவர் கொண்டிருந்த பக்திக்கும் பேரீடுபாட்டிற்கும் சான்றான பாடல்கள் பல இந்நூலுள் உள்ளன. என் ஞானசிரியன் உபதேசித்த வசனம் உணர்ந்தேன். இன்பவாரியுள் திளைத்தேன்; இனி எனக்கு வீடுபேறு உறுதி என மகிழ்கிறது ஞானசம்பந்தர் திரு உள்ளம்.

*'வல்லான் கமலையுள் ஞானப்ர காசன் வசனமுணர்ந்து*
*எல்லாம் வெறும்மித்தை என்றுகண் டேன்இன்ப*
*வாரியுள்ளே*
*செல்லாமல் சென்றதைத் தேக்காமல் தேக்கித் தினந்தினமும்*
*நில்லாமல் நின்று கொண்டேன் இதுவேமுத்தி நிச்சயமே'*[3]

இங்ஙனம் ஞானசிரியர்பால் உபதேசம் பெற்றுச் சிறந்து நின்ற ஞானசம்பந்தர், குருஞானசம்பந்தராய் உயர்ந்து தருமை வந்து திருமடம் காண்பதற்கான அற்புத நிகழ்ச்சி ஒன்று ஒருநாள் திருவாரூரில் நிகழ்ந்தது.


## திருவிளக்கு அற்புதம்!

ஒருநாள் தம் குருநாதரோடு திருவாரூர்த் திருக்கோயில் வழிபாட்டுக்குச் சென்ற ஞானசம்பந்தர் வழிபாடு முடித்துத் திரும்புகையில், கைவிளக்கெடுப்போன் இல்லாமையின்,

---


1. ஞானப்பிரகாசமாலை : பாடல்-29
2. இந்நூல் பண்டாரக்கலித்துறை என்றும் வழங்கப்பெறும்.
3. ஞானப்பிரகாசமாலை: பாடல்-7

www.saivamonline.com



மழையிலும் திருவிளக்கு அணையாத அற்புதத்தால் மாணுக்கரின் பக்குவம் அறிந்த
கமலை ஞானப்பிரகாசர், ஞானசம்பந்தரைப் பார்த்து, 'இன்றுமுதல்
குருஞானசம்பந்தரானீர் தருமபுரம் சென்று உபதேசமரபை வளர்ப்பீராக' என்று பணித்தல்.

www.saivamonline.com



திருவாரூர் சித்தீச்சரம் ஸ்ரீதட்சணமூர்த்தி சந்நிதியில்
கமலை ஞானப்பிரகாச தேசிகர் ஞானசம்பந்தருக்குச் சிவஞானோபதேசம் செய்தல்.

www.saivamonline.com

தாமே அப்பணியைச் செய்வாராய் விளக்கைக் கையில் கொண்டு குருநாதருக்கு முன்னே பணிபுரிந்து சென்றார். ஞானப்பிரகாசர் தம் இருப்பிடம் சேர்ந்ததும், மாணுக்கரா கிய ஞானசம்பந்தரை 'நிற்க' எனப்பணித்து உட்சென்றார். பரிபக்குவம் பெற்றிருந்த ஞானசம்பந்தர் தம் ஆசிரியர் உரைத்த சொல்லே துணையாகக் கைவிளக்கை ஏந்தியவாறு விடியுமளவும் வாயிலிலேயே நின்றிருந்தார். சீடரின் பக்குவ நிலை ஞானசிரியருக்கு விளங்கவும், உலகெல்லாம் பரவவும் அன்றிரவு விடாது மழைபொழிந்தது. ஆயினும் கைவிளக் குடன் நின்றிருந்த ஞானசம்பந்தர்மீது மழைத்துளி படாது ஒரு கோல் அளவுக்கு அப்பால் பெய்திருந்தது. மழை நீரும் அவர் நின்ற இடத்தை நனைக்காது அப்பாலே வழிந் தோடியிருந்தது.

## குருஞானசம்பந்தராதல்:

விடியலில் வெளிப்போந்த ஞானப்பிரகாசரின் துணைவி யார் இவ்வற்புதத்தைக் கண்டு வியந்து தம் கணவனுர்க்கு அறிவித்தார். ஞானசிரியர் இக்காட்சிகண்டு, விம்மிதமுற்று ஞானசம்பந்தரை நோக்கி, 'நீர் அனைவர்க்கும் அருள்ஒளி வழங்கும் குருநாதராம் தன்மை எய்தப் பெற்றீர்! இனி உமது விருப்பப்படி, வேண்டிய இடத்தில் சென்று தங்கி, உம்மை நாடி வரும் பக்குவம் மிக்க அன்பர்களுக்குச் சிவ ஞானேபதேசம் செய்து சமய பரிபாலனம் நடத்தி வரு வீராக' என்று பணித்தருளினர். தம்ஞானசிரியர்பால் பெரும் பக்தி கொண்டு விளங்கிய ஞானசம்பந்தர் அவரை விட்டுப் பிரிய மனம் பொருதவராய் வருந்தி நின்றார். வண்டியில் பூட்டப்பட்ட எருதுக்கோ, அன்றி அதில் ஏற்றப்பெற்றிருக் கும் சுமைக்கோ தம்விருப்பம் எனஒன்றுண்டோ? அதனைப் பூட்டிச் செலுத்துவோன் வழிநிற்பன அவை: இவைபோல் 'ஞானகுருநாத! யாவும் தங்கள்விருப்படி நிகழ்வனவேயன்றி இதில் என் விருப்பம் என ஒன்று தனித்து உண்டோ' என நினைத்து, குருவாணைப்படி நடப்பதைத் தவிரத் தமக்கு

www.saivamonline.com

வேறு சுதந்திரமின்மையைப் பணிவோடு ஞானாசிரியர் முன்னிலையில் தெரிவித்தார்.

'கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை
கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சை யோஇணங்
கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச
சிதம்பரஇன்
றுனக்கிச்சை எப்படி அப்படியாக
உரைத்தருளே'[1]

என்றபாடலாக ஞானசம்பந்தரின் உள்ளக் கருத்து வெளிப் போந்தது. தம்மாணவரின் மனவளர்ச்சி கண்டு மகிழ்ந்த ஆசிரியர் 'திருவாரூர்க்கு வடக்கில் காவிரியின் தென்கரையில் மாயூரத்தை அடுத்துத் திகழும் தருமபுரம் செல்க' என்று பணித்தார். எமதருமன் இறைவனைத் தொழுது வழிபாடாற்றியதும், அகத்தியர்முதலிய முனிவர் வழிபட்டதும் இந்திரன் மற்றும் சப்தமாதர்களுள் ஒருவரால் வணங்கப் பெற்றது மாகிய சிறப்பு வில்வாரண்யமாக விளங்கிய அத்தலத்திற்கு உரியது. 'அங்கே சென்று குருஞானசம்பந்தராய் விளங்கிப் பக்குவம் பெற்ற அன்பர்களுக்கு ஞானோபதேசம் செய்து சமய பரிபாலனம் நடாத்தி, ஞானபீடம் அமைத்துவாழ்வீர்' என விடை கொடுத்தார்.

## தருமைத் திருமடம்-தோற்றம்:

ஞானாசிரியர் சொல்வழி அவரை அரிதிற் பிரிந்து தருமபுரம்சேர்ந்த ஞானசம்பந்தர் ஸ்ரீ அபயாம்பிகை உடனாகிய ஸ்ரீ தருமபுரீசுவரரைத் தரிசித்து ஆச்சிரமம் அமைத்து இங்கேயே வாழ்ந்திருந்தார். திருமடம் கண்டு, சொக்கநாதப்பெருமானை இனிய பாமாலைகளால் பூசித்து, பக்குவி

1. சிவபோகசாரம் கலிப்பாடல்-2

www.saivamonline.com

களுக்கு ஞானோபதேசம் செய்து, பற்பல அருளற்புத நிகழ்ச்சிகளால் திருவருள் விளக்கம் செய்து குருஞான சம்பந்தராய் தருமையாதீன முதற்குரவராய்த் திகழ்ந்தார். அகத்தியர் வழிவந்த முனிவர்கள் குருஞானசம்பந்தரின் பக்குவ நிலைகண்டு தங்கள் ஆச்சிரமம், மற்றும் திருக்கோயில் போன்றவற்றை இவர்கள்பால் ஒப்புவித்து இடையறவு படாது பரிபாலிக்கவேண்டி விடைபெற்றுச் சென்றனர்.

## அருளரசு ஓச்சுதல்:

ஒளிவிளக்குத் தன்னைச் சூழ்ந்திருக்கும் இருளை மட்டுமே நீக்கவல்லது.கதிரவனோ உலகத்து இருளை எல்லாம் நீக்க வல்லவன். ஞானபானுவாக வீற்றிருந்த ஸ்ரீகுருஞானசம்பந்த தேசிக சுவாமிகளின் அளப்பரிய கருணைத் திறத்தால் தருமையை நாடிவந்த அன்பர்கள் அறியாமை இருள் கெட அறிவு ஒளிபெற்றுத் திகழ்ந்தனர். தருமை ஆதீனம் திருக் கயிலாய ஞானோபதேசமரபில் ஸ்ரீகுருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் வாயிலாக ஜீவநதியாகப் பெருக்கெடுத்துச் செந்தமிழ் போற்றிச் சைவப் பயிர் வளர்க்கும் ஞானப் பண்ணையாயிற்று. 'தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசுவீற்றிருந்தார்'[1] ஸ்ரீகுருஞான சம்பந்த தேசிகர். தில்லையில் சிவகாமியம்மையார் தானே போந்து வழங்கிய திருவமுதையும்–பாயசத்தையும் உண்டு சிவனருட்செல்வராகத் திகழ்ந்த இவர்கள் அருள் நோக்கில் புலியும்–பசுவும் தம்பகை மறந்து ஒரே துறையில் நீர் அருந்தி விளையாடிக் களித்தன.[2] செந்தமிழ்க்குப் பெருமையும் சிவநெறிக்கு வளமையும் சேர்க்கும் அருள்ஞானத் திருநூல்கள் எட்டு ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமி களால் அருளிச்செய்யப்பெற்றன.

---

1. பண்டார மும்மணிக்கோவை

2. தருமை ஆதீனக் குறிக்கோள் விளக்கச் சின்னத்தில் இக்காட்சி இடம்பெற்றுள்ளது.

www.saivamonline.com

## பண்டாரசாத்திரப் பனுவல்கள் :

மதுரைச் சொக்கநாதனின் கருணையை வியக்கும் சொக்கநாதக்கலித்துறையும், வித்தகமாக அப்பெருமானை முன்னிலைப் படுத்திப் பாடும் தேனினும் இனிய தீந்தமிழ்ப் பாமாலையாகிய சொக்கநாத வெண்பாவும், அவ்வப்போது தம்மை நாடிவந்த அன்பர்களுக்கு முப்பொருள் உண்மையை உபதேசித்த உபதேச மொழிகளின் தொகுப்பாக விளங்கும் சாத்திரத்தன்மைமிக்க சிவபோகசாரமும், தம்ஞாஞசிரியரின் அளப்பரும் கருணையை வியக்கும் பண்டாரக்கலித்துறை என்னும் ஞானப்பிரகாச மாலையும், அவர்கள் திருவருட்பேறு எய்திய காலத்துத் தம் குருநாதரின் பிரிவற்ருமையைப் புலப்படுத்திப் பாடிய பாக்களின் தொகுதியாக விளங்கும் நவரத்தினமாலையும், 'பிராசாதயோகம், என்ற ஒருவகை யோகநெறியைவிளக்கும் சோடசகலாப் பிராசாதசட்கமும், பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் இயல்பைத் தெளியவிளக்கும் திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவலும், ஆன்மானந்த வாதத்திற்கு மறுப்பாக எழுந்த முத்தி நிச்சயமும் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகளால் அருளிச் செய்யப்பெற்ற எட்டு அருள் நூல்களாகும். இவற்றை ஸ்ரீகுருஞானசம்பந்தர் அட்டகம் என வழங்குதல் ஆதீனமரபு.

## ஜீவசமாதி கூடியது:

இங்ஙனம் செந்தமிழ்வல்ல சிவானுபூதிச் செல்வராய் வீற்றிருந்தருளிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் தமக்குப் பரிபூரண நிலை கூடிவருதலைத் திருவருளால் உணர்ந்தார்கள். தமது திருமடத்தில் ஸ்ரீதருமபுரீசுவரர் ஆலயத்தின் மேற்கே ஸ்ரீ ஞானபுரீசுவரர் என்னும் திருப்பெயரால் சிவலிங்கப்பிரதிட்டைசெய்து தம் மாணுக்கருள் பரிபக்குவம் மிக்கவராய் திகழ்ந்த ஸ்ரீ ஆனந்தபரவச தேசிகசுவாமிகளுக்கு வழிவழியாக நிலவிவரும் உபதேசநெறி இடையறவு படாது

www.saivamonline.com

வளர ஞானோபதேசம் செய்து பீடாதிபத்யத்தை நல்கி, அச்சிவலிங்கப் பெருமான் திருவடி நிழலிலே ஜீவசமாதி கூடியருளினார்கள். அதிதீவிர பக்குவம் பெற்றிருந்த ஸ்ரீ ஆனந்தபரவச தேசிகசுவாமிகள் ஞானபீடம் ஏறிய ஞான்றே தம்குருநாதர் கோயிலுக்கு மேல்பால் ஸ்தூபியைப் பார்த்தவண்ணம் சிவயோகத்தில் திளைத்துச் சிவசமாதி கூடிச் சிவானந்த நிட்டையில் அமர்ந்தார்கள்.

இதனை அறிந்த அடியார்கள் ஞானசந்தானம் இடையறவு படுதலை உணர்ந்து, ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக சுவாமிகளின் திருமுன்பு நின்று விண்ணப்பித்துக் கொண்டனர். அரன் அருள் விளக்கமாகிய தருமையாதீன ஞானபீடம், என்றும் நின்று நிலவி ஞானத்தை வழங்க வேண்டுமென்ற திருவுளங் கொண்ட குருமூர்த்திகள் ஜீவசமாதியினின்றும் வெளிப்போந்து அடியவர் கூட்டத்துள் ஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் என்பார்க்கு ஞானோபதேசம் செய்து பீடாதிபத்யத்தை வழங்கினார்கள். ஆயினும், ஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகளுக்குத் திருவருள் கூட்டாமையின் நிட்டானுபூதி கிட்டவில்லை இஃதுணர்ந்த ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் ஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகளின் பரிபக்குவ நிலையை மேற்கோள் காட்டி உண்மை ஞானத்தை உணர்த்தியருளினார்கள்.

'தானந்தம் ஆதிநடு இல்லா தோங்கும்
சச்சிதா னந்தமயந் தானேஆய
ஆனந்த பரவசனைக் கண்டும் கண்டும்
அந்தந்தோ பரகதியை அறிந்தீரில்லை;
மானந்தான் வடிவாகி நிற்ற லாலோ?
மலமாயை கன்மமிவை மடியா தாலோ?
ஞானந்தான் உமதுளத்தில் உதியா தாலோ
நாம் அறியோம் உமதுமயல் நவிற்று வீரே.

என்ற குரு உபதேசத்தால் ஸ்ரீ சச்சிதானந்த தேசிக

www.saivamonline.com

சுவாமிகளுக்கு பக்குவநிலைகூட, ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் மீண்டும் ஜீவசமாதி கூடியருளினார்கள்.

## குரு பரம்பரை வரலாறு :

ஸ்ரீ குருஞானசம்பந்தர் காலந்தொடங்கி 450 ஆண்டுக் காலத்தில் இருபத்தைந்து குருமகா சந்நிதானங்கள் தருமையாதீனத்தின் ஞானபீடத்தை அலங்கரித்துள்ளனர். இப்போது அருளாட்சி நிகழ்த்திவருபவர்கள் 26 வதுகுருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். ஸ்ரீ குருஞான சம்பந்தருக்குப் பின்வந்த குருமூர்த்திகள் அனைவருமே கல்வி கேள்வி ஒழுக்கங்களில் தலைநின்றவர்கள். திருவருளையும் குருவருளையும் நிறைவாகப்பெற்று அருளற்புதங்கள் பலவற்றால் தருமையாதீன அருள் வரலாற்றிற்கு ஒளி ஊட்டியவர்கள்: இவர்கள் சொல்வல்ல சான்றோராய் மொழித் திறம்மிக்க அருளாளராய், இசைத்துறையில் எல்லை கண்டவர்களாய், நன்மாணுக்கர் பலரை உருவாக்கி உலகுக்கீந்தனர்: இவர்களது அருள்ஞான வரலாறு பெருமிதம் மிக்கது. விரிவஞ்சி சிலரது அருள் வரலாறுகள் மட்டுமே இங்கே குறிக்கப் படுகிறது,

## ஸ்ரீ மாசிலாமணிதேசிக சுவாமிகள் :

தருமையாதீன குருபரம்பரை வரலாற்றில் நான்காவது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ மாசிலாமணிதேசிக சுவாமிகள் செந்திலாண்டவன் அருள்பெற்ற ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளுக்கு ஞானதீக்கைசெய்து காசிசென்று சித்தாந்த சைவசமய ஸ்தாபனம் செய்துவருமாறு பணித்தவர்கள். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் குருவாணையின் வண்ணம் காசிக்குச்சென்று இந்திமொழி கற்று சைவசமயத்தின் சிறப்பினை நிலைநாட்டிக் காசியில் இருந்த முகலாய மன்னனிடம் பெருஞ்சிறப்புப் பெற்றார். அவர் அங்குநிறுவிய

www.saivamonline.com

ஸ்ரீ குமாரசாமிமடம் இன்றுவரை பெரும் புகழ் பெற்று விளங்கிவருகிறது. இதன் தலைமையிடம் 18ஆம் நூற்றாண்டில் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தை அடுத்த திருப்பனந்தாளுக்கு மாற்றப்பெற்றது. இன்றளவும் இம் மடம் தருமையாதீனத்தின் சிஷ்ய பாரம்பரியத்தோடு விளக்கமுற்றுத் திகழ்கிறது. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் பிரபந்தங்கள் செந்தமிழ் வரலாற்றில் சிறப்பிடம் பெற்று நிற்பன. தம் ஞானாசிரியர்மேல் இவர்கள் அருளிய 'பண்டார மும்மணிக்கோவை' பெருஞ் சிறப்புமிக்க அருள் நூல்களுள் ஒன்று. நான்காவது குருமூர்த்திகளிடம் உபதேசம் பெற்ற ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர் வட மொழி-தென்தமிழ் இரண்டிலும் பெருவல்லமை பெற்று விளங்கியவர்கள். இவர்களது முத்தி நிச்சயச் சிற்றுரை மற்றும் பேருரை நூல்களும், ஞானாவரண விளக்கமும் தனித்து ஆராயத்தக்க பெருமிதமுடையன.

## ஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் :

ஆறுவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீ திருஞான சம்பந்த தேசிகசுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்ற ஸ்ரீ தமிழாகர முனிவர் இயற்றிய நூல்கள் பல உள்ளன. ஆறுவது குரு மூர்த்திகள் திருக்குற்றாலத்தை அடுத்த வேள்விமலை வழி பாட்டுக்குச் சென்றகாலை, வள்ளி நாச்சியாருடைய திரு மேனி வழிபாட்டின் போது இலக்காகவில்லை. எனவே, 'இங்கு வள்ளித்தாய் இல்லையோ?' என்று வினவினார்கள். 'தாய்இதோஇருக்கிறேன்' என வள்ளியம்மை தலைசாய்த்துக் காட்சி வழங்கினள். இதனை "எழில் வேள்வி மலையிலோ ரம்மை யெங்கேயென் றியம்பியே திருமுன் நிற்கும், சம்பந் தனுக்கு அருள்செய் என்று வள்ளிக்கருள்செய் சைவ நாயகன்" என்ற க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்ப்

www.saivamonline.com

பகுதியாலும் பிறவாற்றாலும்[1] அறியலாம். இவர்களிடம் ஞானதீட்சை பெற்ற ஸ்ரீ சம்பந்தசரணாலய சுவாமிகள் மைசூர் மன்னனிடம் பெருஞ்சிறப்புக்கள் பல பெற்றவர். பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களால் விரிந்து நிற்கும் கந்தபுராணத்தைச் சுருங்கியயாப்பில் இவ்வருளாளர் 'கந்த புராணச் சுருக்கம்' என்ற பெயரால் யாத்து வழங்கியுள்ளார்கள்.

## ஸ்ரீ திருவம்பல தேசிகசுவாமிகள் :

ஏழாவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீ திருவம்பலதேசிக சுவாமிகள் வடமொழியில் 'வருணாசிரம சந்திரிகை' என்ற சிறந்த நூல்செய்து, சிவஞானிகள் வேதவரையறைகளைக் கடந்தவர்கள் என்று நிரூபித்தார்கள். இவர்கள் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் கடலாடித் திரும்பிய தஞ்சை மன்னன் ஒருவன், தருமை ஸ்ரீஞானபுரீசுவரர் திருக்கோயில் அர்த்தஜாம மணியோசைகேட்டு, வணங்கியவன் பிறர் தூண்டுதலால் பின்னர் இச்சூத்திர சமாதியை இடித்து விடுக எனக்கட்டளையிட்டான். மன்னன் ஏவலால் திருக்கோயில் தகர்க்கப்பட, ஆற்றாத அடியவர்கள் இக்குருமூர்த்திகள் முன்னின்று,

'தேசஞ் சிவாலயங்கள் சேர வலையவொரு
மோசம் வந்ததையோ முதல்வனே-தேசத்து
மன்னை வெறுப்பேனோ வருவினையை யூட்டுவிக்கும்
உன்னை வெறுப்பேனோ உரை'[2]

---

1. 'வள்ளியம்மை இல்லையோ என்னவவள் சிரத்தை நீட்டி வையம் அறிந்திட இருக்கின்றேன் என்ற மொழிகேட்டு மகிழ்ந்து நின்ற துய்யவனும் தருமைவரு திருஞானசம்பந்தன்' தனிப்பாடல்.

2. இதனையும், இதனை அடுத்துவரும் பாடலையும் சிவபோக சாரத்தில் இணைத்து அச்சிட்டுள்ளனர் பாடல் 106, 105.

www.saivamonline.com



தருமையில் ஸ்ரீகுருஞானசம்பந்தர் திருமுன்பு
புலியும் பசுவும் தம் பகைமறந்திருத்தல்.

www.saivamonline.com



அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ குருஞானசம்பந்தர்
ஜீவசமாதியினின்றும் வெளிப்போந்து மூன்றாவது குருமூர்த்திகள்
ஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகளுக்கு ஞானானுபூதி நிலை கைவர உபதேசித்தல்.

www.saivamonline.com

என விண்ணப்பித்து நொந்து நின்றனர். திருவருள் வலத்தால் துளங்காத நெஞ்சோடு வீற்றிருந்த குருமூர்த்திகள், ஆக்குபவனும் - அழிப்பவனும் இறைவனாக இருக்கும்போது நாம் கலங்குவது தகாது என்ற பொருள்பட,

*'ஈசன் பலகீனன் என்றக்கால் ஆலயத்தில்*
*மோசம் வந்ததென்று மொழியலாம்-ஈசனே*
*ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தானானால்*
*நோக்குவதென் யாம்பிறரை நொந்து'*

என்ற திருப்பாடலை அருளிச்செய்தார்கள். திருக்கோயிலில் பாறைபட்ட இடங்களில் குருதி பெருகிற்று. இடித்தோர் மூர்ச்சையடைந்தனர். மன்னன் கண்ணொளி மழுங்கினான். தவறுணர்ந்த மன்னன் இக்குருமூர்த்திகளின் திருவடிகளை வணங்கிப் பிழைபொறுக்க வேண்டினான். குருமூர்த்திகளும் கருணைகூர்ந்து திருக்கண்சார்த்த ஒருகண் பார்வை பெற்றான். இரண்டாவது கண்ணும் பார்வைபெற வேண்டிநின்றான். குருமூர்த்திகள் ஒருமண்டலம் இங்கே தங்கியிருந்து ஸ்ரீ ஞானபுரீசுவரரை முறையாக வழிபாடாற்றப் பணித்தார்கள். அவ்வாறே தருமைக்குக் கிழக்கே பாடிவீடு அமைத்துத் தம் பரிவாரங்களோடு தங்கியிருந்து ஒருமண்டல காலம் நாள் தோறும் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் வழிபாடாற்றியபின் பிறிதோர் கண்ணும் ஒளிபெற்றான். அவன் குருமூர்த்திகளின் கருணையினையும், ஸ்ரீ ஞானபுரீசுவரரின் திருவருளையும் போற்றி 'அர்த்தஜாமப் படுகை' முதலாய நிலங்கள் பலவற்றை நிபந்தமாக அளித்து விடைபெற்றான். இவன் பாடிவீடு அமைத்துத் தங்கியிருந்த இடம் இன்றும் தருமையின் கிழக்கே ஒருகல் தொலைவில் 'மன்னன்பந்தல்' என்றபெயரில் விளங்கிநின்று இவ்வருளற்புதத்திற்குச் சான்றுபகர்கிறது. ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகளின் குருமூர்த்த ஆலயம், ஆகமவிதிப்படி ஸ்ரீ ஞானம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாக-பரிவார தெய்வங்கள் - நால்வர் பெருமக்கள் - சந்தானாசாரியர்கள் முதலியோர் திருமேனிகளோடு சிவாலயமாகத் தருமை



www.saivamonline.com

ஆதீன அருளாட்சியில் சிறப்புற்றுத் திகழ்கிறது. முறையாக நித்தியவழிபாடுகளும், வைகாசித்திங்களில் பெருவிழாவும் நடைபெற்று வருகின்றன.

## ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் :

ஒன்பதாவது குருமூர்த்திகள் ஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் காலத்தில், தென்களந்தை படிக்காசுப் புலவர் என்பார், இவர்கள்பால் சைவசந்நியாசம் பெற்று புள்ளிருக்கு வேளூர்க் கட்டளைத் தம்பிரான் சுவாமிகளாகத் திகழ்ந்து புள்ளிருக்கு வேளூர்க்கலம்பகம் பாடினார். சித்தாந்தநிச்சயம் என்பதோர் நூல் ஒன்பதாவது குருமூர்த்திகளால் அருளிச் செய்யப்பெற்றுள்ளது. பத்தாவதுகுருமூர்த்திகள் ஸ்ரீசிவஞான தேசிகசுவாமிகளருளிய பாடல்களின் தொகுதி 'திருவருட்பா' எனவழங்குகின்றது. ஸ்ரீகாசியாத்திரை மேற்கொண்ட இவர்கள் அங்குள்ள ஸ்ரீ விசுவநாதர், ஸ்ரீ விசாலாட்சியம்மை ஸ்ரீ அன்னபூரணி அம்மை முதலிய பதினொரு மூர்த்திகள் மேல் இனியபதிகங்கள்பாடியுள்ளார்கள். ஒருஇளம்பெண்ணை சிவதீட்சையால் முதியவளாக்கியருளினார்கள். மலைநாட்டு மன்னன் துங்கன் என்பான்மகளைப் பற்றியிருந்த பிரமராட்சசத்தை விலக்கியருளினார்கள். இவர்கள்காலத்தில் தமிழாகர முனிவர், காவை அம்பலவாணமுனிவர், சைவ-எல்லப்ப நாவலர் போன்ற தமிழ்ச்சான்றோர்கள் திருமடத்திலிருந்து சைவத் தமிழ்த் தொண்டாற்றியுள்ளனர்.

## ஸ்ரீ கந்தப்ப தேசிக சுவாமிகள் :

பதினொன்காவது குருமூர்த்திகள் ஸ்ரீ கந்தப்பதேசிக சுவாமிகள். இவர்கள் திருநெல்வேலிக்கு எழுந்தருளியிருந்த காலத்தில் மழையின்மையால் மக்கள் வருந்தினர். வரிசெலுத்த இயலாது, வெள்ளையராகிய கலெக்டரிடம் மக்கள் முறையிட்டனர். அவர் ஏளனமாக, மழைஇல்லை என்றால் (அப்போது நெல்லையில் தங்கியிருந்த குருமூர்த்திகளை நினைவில் கொண்டு) உங்கள் பாதிரியாரிடம் கூறி மழை பெய்யச் செய்யுங்களேன்

www.saivamonline.com

எனக் கூறினர். அன்பர்கள் இதனைக் குருமூர்த்திகளிடம் விண்ணப்பித்தனர். ஸ்ரீசொக்கநாதப் பெருமானைப் பூசித்துக் குருமூர்த்திகள்,

*"சைவ சமயம் சமயமெனில் அச்சமயத்*
*தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில்–ஐவரைவென்று*
*ஆனந்த வெள்ளத்து அழுந்துவதே முத்தியெனில்*
*வானங்காள் பெய்க மழை'*

என்ற திருப்பாடலை அருளிச்செய்ய, உடனே பெருமழை பெய்தது. கலெக்டர், இவர்கள் அருளாற்றலை வியந்து குருமூர்த்திகளிடம் நூறு வராகன் பொன்னைப் பாத காணிக்கையாக வைத்துப் போற்றிப் பிழை பொறுக்க வேண்டினர்.

## ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் :

இருபத்து நான்காவது குருமூர்த்திகள் ஸ்ரீசண்முக தேசிகசுவாமிகள் 'ஞான சம்பந்தம்' திங்கள் இதழ்தோற்று வித்து, ஸ்ரீமெய்கண்டான் சித்தாந்தமாநாடு கூட்டியவர்கள். இவர்கள் அருளாட்சிக் காலத்தில் வேத சிவாகம பாடசாலை, தேவாரப்பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி முதலிய கல்விநிலையங்கள் தொடங்கப் பெற்றன. தருமையாதீனத் திருக்கோயில்கள் பலவற்றிற்கும் அவ்வப்போது எழுந்தருளி, அவற்றிற்கு உரிய திருப்பணி களைவிரிவாகமேற்கொண்டார்கள். ஆதீனஇசைப்புலவராகத் திரு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களையும், ஆதீனத் தமிழ்ப் புலவர்களாகத் திருவாளர்கள் ஈசானசிவாசாரியார் ச. தண்டபாணிதேசிகர், க. வச்சிரவேல் முதலியார், ஔவை சு. துரைசாமி பிள்ளை, வயிநாகரம், வே. இராமநாதஞ் செட்டியார் போன்றோர்களையும் பட்டமளித்துச் சிறப்பித்து ஆதீனப்பணிகளில் பயன்கொண்டார்கள். 25-வதுகுருமூர்த்தி ஸ்ரீ கயிலைசுப்பிரமணிய தேசிக சுவாமிகள். தருமையாதீனக் கோயில்கள் இருபத்தேழையும் குடமுழுக்குச் செய்வித்

www.saivamonline.com

தவர்கள். திருமுறைகளுக்கு உரைகண்டவர்கள். திருக்குறள் உரைவளம் வெளியிட்டருளியவர்கள். தமிழ்க் கல்லூரி தொடங்கியவர்கள். கயிலாய யாத்திரை மேற்கொண்டு அன்பர்களால் கனகாபிஷேகம் செய்விக்கப் பெற்றவர்கள் இவர்களின் தமிழ்ப்பணிகள் பின்னே விரிவாக ஆராயப் பட்டுள்ளன.

## 26-வது குருமூர்த்திகள் :

தற்போது 26-வது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பழுத்த தமிழ்ப்புலமை பாலிக்கப் பெற்றவர்கள். தேவாரத் திருமுறைகளில் முறையான பயிற்சி மிக்கவர்கள். ஆதீனத்தின் பல்வேறு அறங்களையும் புரந்துவரும்இவர்கள் சமய-சமூக வளர்ச்சி நோக்கில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம் கண்டவர்கள். தத்துவஆய்வில் மேலைநிலைஆய்வு நிகழ்த்த ஆய்வு மையம் ஒன்றைத் தோற்றுவிக்க ஆவன செய்து வருபவர்கள்.

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் நூல்கள் :

தமிழ்இலக்கிய வரலாற்றில், சமயச்சார்பற்ற கவிதை நூல்கள் மிகச்சிலவே. கடைச்சங்கத்திற்குப் பிற்பட்ட நூல் களில் பெரும்பாலன ஏதேனும் ஒருசமயத்தின் பின்னணி யிலேயே எழுந்துள்ளன. இந்நாட்டின் தொன்மைச் சமயங் களாகிய சைவம், வைணவம், வடபுலத்திலிருந்து வந்து புகுந்து நிலைகொண்ட சமணம், பௌத்தம், பிறநாடுகளில் இருந்து மிகப்பிற்காலத்தில் தமிழகத்தில் திட்டமிட்டுப் பரப்பப் பெற்ற கிருத்துவம், மற்றும் இஸ்லாமிய சமயம் போன்ற பல்வேறு சமயங்களும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப்பல்வேறுஅடிப்படைகளில் உதவிசெய்துள்ளன. என்றாலும், இவற்றுளெல்லாம் சைவ சமயம் வழங்கிய கொடைமிக்க பெருமிதத்திற்குரியது ஸ்ரீ திருஞானசம்பந்தர்

www.saivamonline.com

காலந்தொடங்கிய தற்காலம்வரையிலும் முறையாக மதிப்பீடு செய்தால் இந்தஉண்மை தெற்றெனப் புலனாகும். இந்தநீண்ட பாரம்பரியத்தில் தருமை பாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞான சம்பந்ததேசிகசுவாமிகள் அருளிச்செய்த நூல்களும் சிறப்பாகப் போற்றிக்கொள்ளத்தக்க பெருமிதம் உடையன. சைவசமயஞ் சார்ந்த தோத்திரங்கள் சாத்திரங் கள்; யோகநூல்கள் என அமைந்திருப்பினும், தமிழ்மொழி யின் இலக்கியவரலாற்றில் இவைபெறும்இடம் மிகச் சிறப்பானது.

## தோத்திரம், சாத்திரம், யோகம்:

ஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக சுவாமிகள் அருளிய எட்டு நூல்களை முன்னரே வரலாற்றில் நினைவுகூர்ந்தோம். இவற்றுள் சொக்கநாதக்கலித்துறை, சொக்கநாத வெண்பா ஞானப்பிரகாசமாலை, நவரத்தினமாலை என்ற நான்குநூல் களும் தோத்திரங்கள், இவற்றுள் முன்னைய இரண்டும் சிவ தோத்திரங்கள். பின்னைய இரண்டும் குருதோத்திரங்கள். சிவ போகசாரம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் முத்தி நிச்சயம் என்பன மூன்றும் சைவ-சித்தாந்த ஞானசாத்திர நூல்கள். சோடசகலா பிராசாதசட்கம் யோகநூல். இவற்றுள் மூன்றுநூல்கள் வெண்பாயாப்பின. மூன்று நூல்கள் கட்டளைக் கலித்துறை. ஒரு நூல் அகவல். பிறி தொன்று எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம். தருமை யாதீனத்தில் 1971-இல் வெளியிடப்பெற்ற ஸ்ரீஞானசம்பந்தர் அட்டகத்தின் படி[1] -மிகைப்பாடல்கள் உட்பட இவர்கள் அருளிச்செய்த பாடல்களின் தொகை 337. இவ்வெட்டு நூல்கள் அல்லாது ஞானாவரண விளக்கம், சிவபூசா பத்ததி என்ற இரண்டு வேறுநூல்களும் இவர்களால் அருளிச் செய்யப்பெற்றனவாகும். தருமையாதீனத் திருக்கூட்டத்து

---

1. தருமையாதீன வெளியீடு எண் 626

www.saivamonline.com

அடியவர்களுள் ஒருவராகிய சண்முகத்தம்பிரான் சுவாமிகள் எழுதிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் சரித்திரம் என்ற நூலுள் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிகசுவாமிகள் அருளிச்செய்தனவாக பேரானந்தசித்தியார், பரமானந்ததீபம் என்ற இரண்டுநூல்களும் புதிதாகக் குறிக்கப்பெற்றுள்ளன. இவ்விரண்டும் இவர்கள் அருளியன அன்று என்று ஆராய்ச்சி அறிஞர்கள் கருதுகின்றனர்.[1] இவைபற்றி விரிவான ஆய்வு மேற்கொண்டால் பல உண்மைகள் புலனாகும். இனி ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் அருளிய ஞானநூல்களைத் தனித்தனியே சுருக்கமாகக் காணலாம்.

## சொக்கநாதக் கலித்துறை :

ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிகசுவாமிகள் அருளிச் செய்த நூல்களுள் முதல் நூலாகக் கருதத்தக்கது சொக்கநாதக் கலித்துறை. பதினொருபாடல்களால் இயன்றது. இவற்றுள் ஒன்பது பாடல்கள் 'சொக்கநாயகனே' என்றும் இரண்டு பாடல்கள் 'மதுராபுரிப் பிஞ்ஞகனே' என்றும் நிறைகின்றன. கி. பி 16-ஆம் நூற்றாண்டில் எழுந்த இவர்களது பாடல்கள் கி. பி. 17, 18-ஆம் நூற்றாண்டில் எழுந்த கவிதைகளை விட எளிய யாப்பில் பொருளுணரும்வண்ணம் அமைந்துள்ளமை இங்கே நினைவுகூரத்தக்கது. சிறிய சிறிய சொற்றொடர்களால் கவிதைகள் பொருளுணர்ச்சியூட்டி நம் நெஞ்சில் நிறைகின்றன.

---

1. 'பேரானந்த சித்தியார்' கண்ணுடைவள்ளல் பாடியதாகக் கருதத்தக்கது என்றும், பரமானந்த தீபம் (விளக்கம்) வேதாந்தச் சார்புடையது என்றும் பேராசிரியர் திரு. மு. அருணாசலம் குறித்துள்ளார். ஸ்ரீ குருஞானசம்பந்தர். காந்தி வித்தியாலயம். திருச்சிற்றம்பலம் பக். 19. 1975.

www.saivamonline.com

"கல்லது நெஞ்சம்: இரும்பே இருசெவி: கண்கள் மரம்:
சொல்லுவ தும்பொய்: அவமே தொழில்: துக்கசாகரமாம்
அல்லல் என்பங்கு:நின் அன்பர்பங் கானந்தம்; ஆகவைத்
தாய்
நல்லது: நல்ல மதுரா புரிச்சொக்க நாயகனே![1]

இந்த எளிமை 16 ஆம் நூற்றுண்டுக் கவிதை வரலாற்றில் முற்றிலும் புதுமையானது. சைவ-சமய வரலாற்றில் சாத்திரங்கள் தோற்றங்கொண்ட 12 ஆம் நூற்றுண்டுக்குப் பின் தோன்றிய நூல்கள் பலவும் கடுமையான கற்றேர்க்கே விளங்கும் தமிழில்எழுந்தன: வடசொற்களைக் கணக்கின்றிக் கலந்தன. சித்தாந்த சாத்திரஉண்மைகளை எளிமைப்படுத்திக் கேட்டார் மனங்கொள்ளும்வகையில், தேவையானஅளவுக்கு மட்டும் வடசொற்கலந்து வழங்கிய ஒரு புதியநெறி ஸ்ரீகுருஞானசம்பந்தரால் தொடங்கிவைக்கப்பெற்றிருப்பது இந்நூலாலும், இவர்கள் அருளிய பிறநூல்களாலும் நன்கு புலனாகின்றன.

மதுரையில் பெற்றேர்களைவிட்டு நீங்கி வாழ்ந்திருந்த காலத்தில் சொக்கநாதப் பெருமானை விண்ணப்பித்துப் பாடியனவாகவே இந்நூற்பாடல்கள் காணப்படுகின்றன. சொக்கனைப் பாட விரும்பிய நெஞ்சம்: அவன் திருமுன்பு ஆடவிரும்பிய கால்கள்: பஞ்சமலங்களை விட விரும்பிய உள்ளம்: சிவானந்தப் பெருவெள்ளத்தில் திளைத்தாட விரும்பிய விருப்பம் இவை யாவும் ஒருகவிதையில் நிலை கொண்டிருக்கும் அழகை இந்நூலுள் கண்டுமகிழமுடிகிறது.

'பாடும் படிசெய்: நினைநினைந் தேத்திப் பணிந்தெழுந்தே
ஆடும் படிசெய்: மலம்ஐந்து மேஅடி யேன் உளத்தே
வீடும் படிசெய்: நின்ஆனந்த சாகரம் மேல்எனவே
நாடும் படிசெய் மதுராபுரிச் சொக்க நாயகனே,[2]

1. சொக்கநாதக்கலித்துறை-8 2. சொக்கநாதக்கலித்துறை-4

www.saivamonline.com

தம்கரத்தில் பெட்டகக் கோயிலோடு கிடைக்கப்பெற்ற சிவலிங்கத் திருமேனியில் பெருமானே! நீ எழுந்தருளி இருத்தல் வேண்டும்; அவ்வாறு எழுந்தருளியிருந்து, நின்னை வழிபடும் சீரடியார்களுக்குப் பிறவித்துயரை மாற்று; சிவானந்தத்தை வழங்கியருள் எனவேண்டும் ஒருபாடல் சொக்கநாதக் கலித்துறையில் காணப்படுகிறது.[1]

ஸ்ரீ குருஞானசம்பந்தர் வேண்டுகோளுக்கு இரங்கிச் சிவலிங்கத் திருமேனியில் எழுந்தருளிய செந்தமிழ்ச் சொக்கன், இன்றளவும் தருமையாதீனப் பூஜாமூர்த்தியாகத் திகழ்ந்து அன்பர்களுக்குப் பிறவித்துயர்கடிந்து, சிவானந்தப் பெருவாழ்வை வழங்கிவரும் அருமைப்பாடு இங்கே நினைவு கூரத்தக்கது. 'சொக்கநாதா! எளியேனுகிய என்னையும் நின்கருணையாகிய பூரணவாரியுள்ளே நண்ணும்படிசெய்,' 'மும்மலம் ஆதியெல்லாம் போகவிடுத்து எனக்கு ஆனந்தம் காட்டு,' சிவானந்தவெள்ளக் குணக்கடலை நாடாமல் நாட அருள்,' வினைமார்க்கத்து அழுந்தி என்றும் நையாது அருள் செய்,' 'நின் ஆனந்தசாகர பூரணத்தைப் பிரிவற்றிருக்க வைப்பாய்' எனவரும் வேண்டுகோட்பகுதிகள் தனக்காக வேண்டுவனபோல் தோன்றினும், தம் அன்பர்களை ஈடேற்றும் பொருட்டுத் தம்மேல் ஏற்றி உரைத்தனவாகவே கொள்ளத்தகுவன. பெரியபுராண வரலாற்றில் குறிப்பாகக் காரைக்கால் அம்மையார் வேண்டுகோளாக வரும் 'இறவாத இன்ப அன்பு' என்ற பாடலின் சாயல் ஒருஇனியபாடலில் அங்ஙனமே அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

*'பிறவாத சென்மம் அழுந்தாத துன்பம் பிறந்தடியேன்*
*இறவாத தானமும் உண்டுகொ லோஎளி யேன்திரும்ப*
*அறவாஇங் கென்னை இனிஆட்டல் போதும்நின் ஆனந்தத்தே*
*நறவார் பொழில்மன் மதுராபுரிச் சொக்க நாயகனே'*[2]

---

1. சொக்கநாதக்கலித்துறை–5 2. சொக்கநாதக்கலித்துறை–9

www.saivamonline.com

சைவத் திருமுறைகளில் இவர்கள் கொண்டிருந்த ஈடு பாட்டிற்கும் பயிற்சிக்கும் இவ்வாறு சான்று கூறும்பகுதிகள் பலவற்றை இவர்களது நூல்களில் பரக்கக்காணமுடிகிறது.

## சொக்கநாத வெண்பா :

சொக்கநாதவெண்பா ஒருதொகுப்பு நூல்: மதுரை திருவாரூர், தருமபுரம் போன்றதலங்களில் தங்கியிருந்து தம்ஆன்மார்த்த மூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமானை முன்னிலைப்படுத்தி ஸ்ரீ குருஞானசம்பந்தர் அவ்வப்போது அருளிச்செய்த பாடல்கள் இந்நூலுள் இடம்பெற்றுள்ளன. தனிப்பாடல்கள் எனக்குறிக்கப்பெற்றன உட்பட நூற்றொரு நேரிசை வெண்பாக்களால் இந்நூல் நிறைகிறது. பெரும் பாலான பாடல்கள் 'சொக்கநாதா' என்று முடிவைப் பெற்றுள்ளன. அன்றாடவாழ்வில் பண்டிதர்முதல் பாமரர் வரை அனைவர் உள்ளத்திலும் இறையருள்பற்றி எழும் பல்வேறு எண்ணங்களுக்கு விடை கூறுவனவாகவும் வாழ்வியலுக்கு உரியநெறி காட்டியருளுவனவாகவும், வினா-விடைகளாகவும் இந்நூற்பாடல்கள் அமைந்திருக்கும் பாங்கு வேறு எங்கும் காண இயலாதது. சைவ-சமயத் தோத்திர நூல்களுள் இந்நூற்கவிதைகள் இனிய நடையமைதியும் எளிமையும் கொண்டு விளங்குகின்றன. மதுரையில் பெருமான் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல் களுள் பலவற்றை இந்நூலுள் குறிப்பிட்டு ஸ்ரீ குருஞான சம்பந்தர் பாடும் பாடல்கள் மிகவும் நுட்பமானவை. பஞ்சமாபாதகம் தீர்த்தமை, பன்றியாய்வந்து பால் கொடுத்தமை, பழிக்கஞ்சியமை ஆகியவற்றை ஒவ்வோர் பாடலில் குறிக்கும் ஆசிரியர் எல்லாம்வல்ல சித்தரான திருவிளையாடலை மூன்று பாடல்களுள் குறிப்பிடுதல் ஓர் உண்மையை உணர்த்தவென்றே தோன்றுகின்றது.

www.saivamonline.com

## ஒருவினவும், விடையும் :

'சொக்கநாதா! என்வாக்கில் உரை பொய்! மனம் நினைப்பது கவடு; ஆக்கை தினம் செய்வது அகிர்த்தியம்; இவற்றைவிட்டு உய்திபெற வேண்டுமென்று முயல்கின்றேன் ஆயின் அது என்னால் கூடவில்லை; நீயோ எல்லாம்வல்ல சித்தன் என்கிறார்கள்; அது உண்மையானால் உன்சித்து வன்மையால் நீ என் பொல்லாமையைப் போக்கு பார்க்கலாம்' என வித்தகமாய் வினவுகின்றார்.

*"எல்லாமும் வல்லசித்தர் என்றக்கால் என்னுடைய*
*பொல்லாக் கருத்தகற்றப் போகாதோ"?[1]*

ஆயின் சொக்கனின் திருவருள் கூடவில்லை. ஐயம் எழுகிறது. பின் ஒரு தெளிவும் பிறக்கிறது. 'நான் பிறர்போல் பேரன்பன் அல்லேன்; பிழை செய்யாதவனும் அல்லன்; ஓரன்பும் இல்லா உலுத்தன்' எனவே தகுதி இன்மையால்தான் சொக்கநாதன் திருவருள் தமக்குக் கிடைக்கவில்லை என்ற தெளிவு பிறக்கிறது; இந்தத் தெளிவில் பிறக்கும் வினாவொன்று மிக நுட்பமாக எழுகிறது. நீயோ எல்லாம்வல்ல சித்தன்; நின்பால் அன்புகொண்ட தகுதிபடைத்தவர்களுக்கு மட்டும் அருட்கருணை பாலித்து அன்புசெய்யத் தெரியாத பக்குவ மற்றவர்களுக்குக் கருணை செய்யாதிருக்கின்றாய்; எல்லாம் வல்ல சித்தன் நீ என்பது உண்மையானால் தகுதி இல்லாதார்க்கும் கருணைகாட்டி ஈடேற்றி இருக்கவேண்டும். அதுசெய்திலை; எனவே எல்லாம்வல்லசித்தன் என்றபெயர் உனக்கு இன்னமும் எதற்கு? என்கிறார்.

*'அன்பர்க்கு அருள்புரிவ தல்லாமல் தேவரீர்*
*வன்பர்க்கு அருள்புரிய மாட்டீரேல்-உம்பர்தொழு*
*நல்லார் புகழ்மதுரை நாதரே தேவரீர்க்கு*
*எல்லாமும் வல்லசித்தர் ஏன்?'[2]*

---

1. சொக்கநாதவெண்பா–8 2. சொக்கநாதவெண்பா–79

www.saivamonline.com

சைவசித்தாந்தம், உயிர்கள் தத்தம் வினையினைத் தாம் எடுக்கும் பிறவிகளில் அனுபவித்தே கழிக்கவேண்டும் என்பதனைத் தெளிவாக விளக்குகிறது. உயிர்கள் மெல்ல மெல்ல மலநீக்கம் பெறவும், பெற்றபின் அவற்றைத் தம்மொடு இணைத்துக் கொள்ளவும் இறைவன் திருவருளே துணையாகிறது. தாமரைமலர்வது ஆதவனின்கதிர்ஒளியால் என்பது உண்மையாயினும் எல்லாமொக்குகளும் ஒரே நேரத்தில் மலர்ந்து விடுவதில்லை. தாமரையை மலர்விக்கும் திறம் இருப்பது உண்மையானால் எல்லாமொக்குகளையும் ஏன் ஒரேநேரத்தில் ஆதவன் மலர்விக்கவில்லை என்றவினா மனவளர்ச்சி பெறாதநிலையில் எழுவது. மொக்குகளையும் மெல்லமெல்ல வளரச்செய்து ஒருநாள் மலர்விப்பவன் ஆதவனே என்பதுபோல், உயிர்கள் தம்மலத்தினின்றும் நீங்க உதவிப் பின் அவற்றை உரியபோதில் தன்னடியில் இறைவன் இணைத்துக் கொள்வான் என்ற உண்மையை ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிகசுவாமிகள் தம் வாழ்வியல் அனுபவங்களால் உணர்ந்தபோது, இறைவன் எல்லாமும் வல்லசித்தரே எனஉடன்படுகிறார். அன்று மலகடினராக இருந்த தாம் இன்று திருவருள் பெற்றமையை நினைக்கும் போது இறைவன் உயிர்களின் வளர்ச்சிக்குத்தக்க அருள் செய்யும் கருணை புலனாகிறது. இதனை,

> "என்போல் மலகடினர் எவ்விடத்தும் கண்டதுண்டோ
> இன்பே மதுரைக் கிறைவனே-அன்பேதும்
> இல்லா தெனையாண்ட எண்ணத்தால் தேவரீர்
> எல்லாமும் வல்லசித்த ரே"[1]

உயிர்களே பெறற்கரும் மானுடப் பிறவியில் மலங்களை நீக்கிக்கொண்டு உய்திபெற வேண்டுமென்ற சித்தாந்த உண்மையை இவ்வாறு விளக்கினார்.

---

1. சொக்கநாதவெண்பா-66

www.saivamonline.com

## யாக்கை இழிவு :

யாக்கையின் இழிவுபற்றிய பாடல்கள்பல இந்நூலுள் உள்ளன. 'உன்னைச் சிங்காரித்து உனதழகு பாராமல், என்னைச் சிங்காரித்து இடர்ப்பட்டேன்' என்று பேசும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உடல் இன்பத்தையே நாடிநின்று வாழும் கீழோர்களுக்கு யாக்கை நிலையாமைகூறி அறிவுறுத்தும் பகுதிகள் அரிய படிப்பினைகளாக அமைகின்றன. 'புண்கட்டுதோல்' என்றும், 'காக்கை நரி ஞாளி கழுகு பருந்துக்கு இரையாம் ஆக்கை' என்றும் 'அருவருப்பே மெத்தியிடும் ஆகம்' என்றும், 'துஞ்சப் பிணமென்னச் சுற்றத்தார், இட்டத்தார், அஞ்சச்சலிக்க அருவருக்கக்-கொஞ்சமுற வந்ததனு' என்றும், 'தேகாதி எல்லாம் சடம் பிணம்பொய்' என்றும் வருவன இங்கே நினைவுகூரவேண்டுவன. மோகாபிமானமும், தேகாபிமானமும் ஒழியாதவரை இறையருள் கூடாது என்பதனைத் தன்மேல் வைத்து அறிவுகொளுத்தும் பாங்கு சிறப்பாக அமைகிறது.

*'மோகாபி மானமின்னும் முற்றும் மறக்கவில்லை*
*தேகாபி மானம் சிதையவில்லை-ஒகோ*
*உனையடைந்தும் பாசம் ஒழியவில்லை கூடல்*
*தனையடைந்த சொக்கநாதா,*[1]

## உவமை அழகு :

சொக்கநாத வெண்பா நூல்முழுதும் தனியே ஆராயத் தக்க விரிவுடையது. கவிதைநயம் காட்ட இந்நூலுள் ஆளப்படும் அரிய உவமைகள் பல.

---

1. சொக்கநாதவெண்பா–43

www.saivamonline.com

'வறிஞர்தமை ஒக்கவைக்கும் மன்னர்போல்'
'எரிசுடுவதல்லால் இரும்பு சுடுமோ'
'ஓர் புருடன் காதல்கொண்டாள் போல்'
'எவ்வினையை மாக்கள் பயிர் இட்டார் இட்டவரே
அவ்விதையின் போகம் அருந்துதல் போல்'

என்பன, அரிய கருத்துக்கள் சிலவற்றை விளக்க வந்த ஆசிரியரின் உவமைகள். சாத்திர நுட்பங்களை உவமை வாயிலாக எடுத்துக்காட்டும் சைவ சித்தாந்தமரபு இவற்றால் நன்கு சிறக்கிறது. மலச்சோறு, (18) பரதேசி (64) தன் மதுரை (65) சிங்காரித்து (92) போன்ற அரிய சொல்லாட்சி களையும், பூரணம் (2) துட்டர் (4) பேசானுபூதி (5) ஆசா பசாசை (5) சிற்பரானந்தா (5) தற்பரா (5) சுகபூரணம் (15) தன்யா (18) சிரகரா (63) போன்ற வடசொல், சொற்றொடர்களும் இப்பகுதியில் எடுத்தாளப்படுகின்றன. அருணகிரிநாதர் கூறும் பேசானுபூதியை இரண்டிடத்தில் குறிக்கிறார். 'பொல்லாங்கு' என்ற சொல்லுக்கு எதிர் மறையாக 'நல்லாங்கு' என்ற புதிய சொல் அமைப்பு ஒன்றும் ஆளப்படுகிறது.

## தன்னிலை இரக்கம்:

தன்னிலை இரக்கமாக வரும் பாடல்கள் பல உள்ளன. இவை சாத்திர நுட்பங்கள் கொண்டன-

'என்றால் உனையடைய வல்லேன்எனில் இடரில்
இன்னாள் அளவும் இருப்பேனோ?' (7)

என்பதனால் ஆன்மா தானே பதியைத் தேடிச்சென்று அடைய முடியாது என அறிவுறுத்துகின்றார்.

'இறந்தும் பிறந்தும் இளைத்தேன் இனியான்
மறந்தும் பிறவா வரந்தா' (10)

என்பதனால், பெறத்தக்க பெரும்பேறு பிறவாமையே என வழிகாட்டியருள்கிறார்.

www.saivamonline.com

'எப்போது மும்மலம்விட் டேறுவேன் பூரணமாய்
எப்போதுன் இன்பசுகத் தெய்துவேன்' (12)

என்பதனுல் உயிர்கள் பெறவேண்டிய தாகத்தை நினைவூட்டுகிருர்.

"கான்றசோ றுயுலகம் காணவில்லை இன்பவெள்ளத்
தூன்றி அடியேன் உறங்கவில்லை—என்ற
இருள்சகலம் நீங்கவில்லை ஏழையேற் குன்றன்
அருளுறுமோ சொக்கநா தா: (20)

என்பதனுல் இறையருளன்றி உலகப்பற்றறுதல் இல்லை என்பதனை வற்புறுத்துகின்ருர்.

'எக்காலம் மெய்க்கே இரையிடுதல் இற்றிடுமோ
எக்காலம் இக்கரணம் இற்றிடுமோ—எக்காலம்
பேசா அனுபூதி பிறந்திடுமோ என்னுளத்தில்
ஆசானே சொக்கநா தா' (40)

என்பதனுல் முத்திக்கு வாயில்கள் இவை என்பதையும் குறித்தருளுகின்ருர்.

## அரிய பாடல்கள் சில:

நினைவுகூரத்தக்க சிறந்த பாடல்கள் பல இந்நூலுள் உள்ளன. இவை ஸ்ரீ குருஞானசம்பந்தரின் அனுபூதிநிலையினையும் அருள் நெஞ்சத்தையும், நூல்வல்ல புலமையையும், தோத்திர சாத்திரப் பேரறிவையும் விளக்குவனவாக உள்ளன.

'உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
கணத்தும் உணரும் வகை காணேன்' (26)

'தாயர் மகவருத்தம் சற்றும் தரியார்கள்
ஆயவினைக் கீடா அமைத்தாலும்—காயம்
பரிக்கும் துயரமெல்லாம் பார்க்கவுனக் கென்றும்
தரிக்குமோ சொக்கநா தா' (58)

www.saivamonline.com

"நீரிலே மூழ்கிலுமென் நித்தமருச் சிக்கிலுமென்
பாரிலே சுற்றிப் பணியிலுமென்-வேரிலே
உற்றிருந்தா லன்றோ உயிர்க்குறுதி ஒன்றிரண்டும்
அற்றவனே சொக்கநா தா' (75)

'ஆறுதலை இல்லை அடியேனுக் கன்பாகத்
தேறுதலைச் சொல்வார் சிலர்இல்லை—வேறெனக்குத்
திக்காரும் இல்லை சிவனே பழிக்கஞ்சிச்
சொக்கேநின் தாளே துணை' (94)

இவ்வாறான அரிய பாடல்களின் தொகுதியாகத் திகழ்கிறது இவ்வரிய நூல்.

## குருவழிபாட்டு நூல்கள் :

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தம்மை மாணுக்கராக ஏற்று ஞானேபதேசம் செய்த ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச தேசிகர் பால் கொண்டிருந்த பேரீடுபாடும், குருபக்தியும் இவர்கள் அருளிச் செய்த ஞானப்பிரகாசமாலை, நவரத்தினமாலை என்ற இரண்டு நூல்களாலும், சிவபோகசாரத்தின் இடையிடையே காணப்பெறும் சில வெண்பாக்களாலும் நன்கு புலனாகின்றன. ஞானேபதேசபரம்பரையில் குரு—சிஷ்யபாவம் இன்றியமையாப் பெருஞ்சிறப்பினது. தாம், தருமையாதீனக் குருமுதல்வராக அமர்ந்து பக்குவிகள் பலருக்கும் உபதேசித்திருப்பினும், தம் குருமூர்த்திகள்பால் மாணுக்கர் என்ற நிலையினின்றும்மாறாது ஸ்ரீ குருஞானசம்பந்தர் கொண்டிருந்த இணையற்ற பக்தித்திறம் ஏனையோர்க்கு வழிகாட்டுவதாக அமைகிறது. குருவழிபாடாக இவர்கள் அருளிய முதல்நூல் ஞானப்பிரகாசமாலை. இதனைப் பண்டாரக் கலித்துறை என்றே வழங்குதல் தருமையாதீன மரபாக இருந்துவந்திருக்கிறது.

www.saivamonline.com

## பண்டாரம் என்ற சொல் வழக்கு:

கமலை ஞானப்பிரகாசதேசிகர் என்றவழக்கு ஆங்காங்கே காணப்பெறினும், இவர்கள் திருநாமத்தைச் 'சிதம்பரநாத மாசிலாமணிக் கமலை ஞானப்பிரகாச பண்டாரம்' என்றே முத்திநிச்சயப் பேருரை குறிக்கிறது. பண்டாரம் என்ற சொல், பொன்னும் மணியும் குவிந்துகிடக்கும் கருவூலத்தைக் குறிக்கும் ஒருபழஞ்சொல். இறைவன் வழங்கும் திருவருட் செல்வத்தை 'மூலபண்டாரம்' எனக் குறிப்பர் மணிவாசகர் இச்சொல் கி. பி. 12 ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தில் துறவுநெறி நின்று, இறைவனின் திருவருட் செல்வத்தைத் தம்பால் குறைவறக் கொண்டிருந்த ஞானாசிரியப் பெரு மக்களைக் குறித்து வழங்கியது. உமாபதிசிவத்தின் வழி வந்த ஞானாசிரியர்பலரும் பண்டாரம் என்றே அழைக்கப் பெற்றனர். இவர்கள் குருநாதர்களாக இருந்து ஞானோபதேசம் செய்தமைபற்றித் 'தேசிகர்' என்றும் வழங்கப் பெற்றனர் 'தேசிகன்' என்ற பழஞ்சொல் ஞானாசிரியனைக் குறித்து வழங்கியது. பிற்காலத்தில் பண்டாரம்என்ற சொல் கல்வி கேள்விகளில் சிறந்த ஞானாசிரியர்களைக் குறித்து நிற்பதினின்றும் மாறி, யாசகர்களைக்குறித்து வழங்கலாயிற்று. தருமையாதீன குருமூர்த்திகளைப் பண்டாரம், பண்டார சந்நிதிகள் என்றே அழைக்கும் வழக்கு இருந்துவருகிறது. மூலபண்டாரமாய் விளங்குகின்ற இறைவனைச் சென்றடைவதற்கு இவ்வருளாளர்கள் வாயிலாக விளங்குதல்பற்றி இவ்வாறு வழங்குதல் மரபாயிற்று. ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளின் அருள்நூல்களுள் ஒன்று 'பண்டார மும்மணிக்கோவை' எனவே வழங்கப்பெறுகிறது. இச்சொற் பொருள் வழக்காற்றால் பொருள் திரிந்தமையின் அதனை விடுத்துக் 'குருமகா சந்நிதானம் என்று வழங்குதல் ஆதீன மரபாக இருந்து வருகிறது.

www.saivamonline.com

## பண்டாரக் கலித்துறை:

பண்டாரக்கலித்துறை முப்பத்தாறு கட்டளைக் கலித்துறைகளால் நடையிடுகிறது. சைவசித்தாந்தம் இறைவன் திருவருள்பெற அமைக்கும் படிநிலைகளாகிய தத்துவங்கள் முப்பத்தாறு. இத்தத்துவங்களைக் கடந்து சிவனருட்செல்வம் பெற ஞானோபதேசம் செய்த தம் ஆசிரியரை முப்பத்தாறு திருப்பாடல்களால் போற்றியிருப்பது பொருத்தமுற அமைகிறது. இரண்டு பாடல்களில்மட்டும் தம் ஞானாசிரியரைச் சம்பந்தன் என்று குறிக்கிறார். எஞ்சிய பாடல்கள் அனைத்திலும் 'ஞானப்பிரகாசன்' என்றே பேசுகிறார். இவர்களைக் குறிக்குமிடங்களில் 'ஞானப்பிரகாசதேசன்' 'ஞானப்பிரகாச சிவன்; 'ஞானப்பிரகாச ஆண்டவன்' 'ஞானப்பிரகாசமகிபன்' 'ஞானப்பிரகாச பரமன்' 'ஞானப்பிரகாச தேசிகன்' ஞானப் பிரகாச எழிற்குரு' என்றெல்லாம் தம் பேரன்பு தோன்றப் பலவாறாக விளிக்கிறார். ஞானப்பிரகாசனின் திருவடிக்கீழ் வருவார்க்கு எமபயம் இல்லை; அவர்களைப் பிரமன் மீண்டும் படைத்தல் செய்யான்: பேரின்பம் இவர்களுக்குத் தலைப் படல் உறுதி: இவன் முத்திக்கொடி கட்டி ஆள்கின்றான்: கருணையே வடிவானவன்: ஞானப்பிரகாசன் அடியன் என்ற பெயர் பெறுங்கள். இதுவே உங்கள் பிறப்பறுக்கும்; இவன்பால் வைக்கும் அன்பால் பரிபூரண சுகம் விளையும்; ஞானப் பிரகாசன் திருமடத்தில் வாழும் பல்லிகள் பதி, பசு, பாசத்தின் திறம் உரைக்கும்: இவன் திருவடிகளைப் பணிந்தவர்களுக்கு வீடுபேற்றையே நல்குவான்: ஞானப்பிரகாசனின் திருமடத்து வாசலுக்கு ஒருமுறை செல்பவர் கருவாசலில் செல்லார்: கள்வர்தம்வாசல் சேரார்: அரசன்பெருவாசலில் நின்றிரவார்: பேதையர் வாசலில் சென்று பின்னமுறமாட்டார்'' என்றெல்லாம் வரும் இந்நூற்பகுதிகள் உலகினரை ஈடேற்ற வந்த தம் ஞானாசிரியரின் அளப்பருங்கருணைத் திறத்திற்குக் கட்டியங்கூறி நிற்கின்றன.



www.saivamonline.com

## ஆசிரியரின் குருபக்தி :

தம் ஞானுசிரியர்பால் ஸ்ரீ குருஞான சம்பந்தர் கொண்டிருந்த ஈடுபாட்டிற்குப் பலபாடல்கள் சான்ருக நிற்கின்றன.

'மாதா பிதா குரு தெய்வந் துணைஎன்பர்
மக்கட்கு : உன்றன்
பாதார விந்தம் அடியேற்கு அந்நான்கெனப்
பற்றி,

என்ற பாடல்வரிகளில் இவர்கள்தம் வரலாற்று உண்மை பொதிந்துள்ளமை புலனுகிறது. தாய்-தந்தையரை 'நீவிர் உடலுக்குத் தாய்-தந்தையரேயன்றி உயிருக்குத் தாய் தந்தையர் அல்லீர்' எனப்பிரிந்து வாழ்ந்தமை முன்னரே கூறப்பட்டது. தெய்வமாகிய சொக்கநாதன் பின் பற்ருனுன். இப்பெருமான் கமலை ஞானப்பிரகாசர்பால் சென்றடையப் பணித்தான். எனவே எனக்கு மாதா, பிதா, தெய்வம் யாவும் குருநாதராகிய நீவிரே என்ற பேருள்ளம் நிழலாடுகிறது. மாதாவழிப பிதாவையும், பிதாவழிக் குருவையும், குருவழியே தெய்வத்தையும் சென்றடைதல் உலகியல். ஸ்ரீ குருஞானசம்பந்தருக்கோ குருநாதன் சிவனைக் காட்டும் நெறிக்கு மாருகச் சிவனுகிய சொக்கநாதனே குருவை அடையாளம் காட்டிய ஒரு புதிய நெறி உருவாக்கப் பெற்றிருக்கிறது.

'கிடந்தாலும் ஞானப்ர காசனென்பேன் : கிடந்தே எழுந்து
படர்ந்தாலும் ஞானப்ர காசன்என்பேன்'

என்ற திருப்பாடல் முன்னரே வரலாற்றில் காணப் பெற்றது. ஞானப்பிரகாசர் பரிபூரணம் எய்தியபின்னர் வருந்திப்பாடிய பாடல் ஒன்றும் இந்நூலுள் உள்ளது.

www.saivamonline.com

"பெருவே தனையுறும் காயத்தை நீக்கியுன் பின்தொடர்ந்து
வருவேன் அதனையும் மாற்றினையே: அந்தவாக்குக்கஞ்சித்
திரிவேன் கமலையுள் ஞானப்ரகாச சிதம்பரசற்
குருவே யுனைப்பிரிந்தின்னு மிருக்கவும் கூட்டியதே.[1]

"தேவே: எனைத்தடுத்து ஆட்கொண்டு ஆள்கிலே: ஆகை யினால் சாவேன் எனத்துணிந்தால் சிரிப்பார் உனை' என்ற பகுதியில் திருவாசகம் நிழலாடுகிறது.

'செத்திப்படுத்தித் தெளிவாக்கிச் செந்நெல் தெளிப்பது போல்
புத்திக் கடினம் கரைத்த மன்னே.'

என்ற உவமையும்,

'எல்லாம் உனதுசெயல் என்றறிந்தும் எனதுளத்தில்
பொல்லாத சங்கற்பம் ஏன்வருமோ'

என்ற வினவும்,

'நிருத்தனை, அன்பர் நினைத்தவெல்லாம் தரும்நித்தனைச்'சற்
குருத்தனை ஈசன் என்றெண்ணார் நரகிற் குடிமக்களே'

என்ற அறிவுரையும், இவைபோல் வருவன பிறவும் இந் நூலின் பெருமைக்குச் சான்றாக அமைகின்றன.

## நவரத்தினமாலை:

திருவாரூரில் வாழ்ந்திருந்த தம்ஞானாசிரியர் பரிபூரணம் எய்தியகாலை ஸ்ரீ குருஞானசம்பந்தர் வருந்திப் பாடிய ஒன்பது பாடல்களின் தொகுதி நவரத்தினமாலை என்பது. பெருமானே! நீ மாயப்பிரபஞ்ச வாழ்க்கை பொய் என்று காயத்தை நீக்கிப் பரிபூரணம் எய்தினாய்! எனையும் உடன் அழைத்துப் போகாது காயத்தோடு உழலச் செய்தனையே இது நியாயமோ? என்று அளப்பரிய துயரத்தோடு பாடும்

1. ஞானப்பிரகாசமாலை--35

www.saivamonline.com

பகுதி பேரிரக்கமாக அமைகிறது. ஞானப்ரகாச நவமணி, அருள்மணி-சிகாமணி-மகிழ்மணி-உயிர்மணி-நிதிமணி என்றெல்லாம் விளிக்கும் விளிகளில் அன்புள்ளம் தெரிகிறது. தருமைச்சம்பந்தன் என்று அன்பொழுக அழைத்து அடியார்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைக்கும் இப்பேரன்பினை இனி யான் என்றுபெறுவேன்; குருவாரந்தோறும் திருவாரூர் வந்து நின்னைக்காணப் பணித்தனையே! இன்று வந்துள்ளேன்; ஒருவார்த்தையும் உரையாது அந்தோ; பிரிந்தனையே! இது உனக்கழகாகுமோ? நான் உளம் கனியமாட்டேன் என்றும், கல்நெஞ்சன் என்றும் கருதியோ தேவரீர் எனைவிட்டுப் பிரிந்தீர் என்றெல்லாம்வரும் நவரத்தினமாலைப் பாடல்கள் கையறுநிலைப் பாடல்களாக அமைந்துள்ளன. இந்நூலின் ஒன்பதாவது பாடல்-பண்டாரக்கலித்துறையின் முப்பத்தைந்தாவது பாடலாகச் சிறிய மாற்றத்துடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.※ நவரத்தினமாலையும் தனிநூலாக எண்ணிச் செய்ததாகத் தோன்றவில்லை. ஒரு தொகுப்பு நூலாகவே தெரிகிறது.

## சிவபோகசாரம் :

சிவபோகசாரம் ஸ்ரீகுருஞானசம்பந்தர் அருளிய நூல்களுள் தலையாயது. இதுவும் நேரிசை வெண்பா யாப்பில் அமைந்த ஒரு தொகுப்பு நூலே. தனிப்பாடல்கள் எனப் பதிப்பிக்கப் பெற்றுள்ள ஐந்து பாடல்களும் உட்பட 144 பாடல்கள் தற்போது இந்நூலில் இடம் பெற்றுள்ளன. 19 ஆம் நூற்றூண்டின் இறுதியில் பதிப்பிக்கப்பெற்ற சித்தர் பாடல்களில் சிவபோகசாரமும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய நூல்களில் வெளியுலகுக்கு முதலில் அறிமுகமான நூல் இதுவே. ஸ்ரீஞானப்பிரகாசரைக் குறித்த பாடல்கள் 18 தற்போது இந்நூலுள்

※ பெருமெத்தனை என்னும் முதல்சீர் பெரு வேதனையுறும் எனவும். இரண்டாம் வரியின் இறுதியில் அதற்காக அஞ்சி என்பது வாக்குக்கஞ்சி என்றும் திரிந்து காணப்படுகின்றன.

www.saivamonline.com

இடம்பெற்றுள்ளன. இந்நூலுள் காணப்படும் சில பாடல்கள் இடைச்செருகலாக இருத்தல் கூடுமோ எனத்தோன்றுகின்றது. இவர்கள் அருளிய வேறுநூல்களுள் இடம்பெற வேண்டிய பாடல்களும் இதன்கண் கலந்திருக்கலாம். ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களால் பிற்காலத்துப் பாடப்பெற்ற சிலபாடல்களும் இடைத்தெரிவின்றி இந்நூலுள் சேர்க்கப் பெற்றிருக்கக் கூடும் எனத் தெரிகிறது. இந்நூல் பற்றிய விரிவான ஆய்வை மேற்கொண்டால் இவ்வுண்மைகள் நன்குபுலனாகும். தற்போது ஆதீனப் பதிப்பில் 1. அடிகள் வணக்கம் (10) 2. பெறுதற்கருமை (6) 3. அறியும்பகுதி (7) 4. உபதேசவிளக்கம் (20) 5. அனுபூதி நிலை (13) 6. உபாய நிலை (16) 7. பணியறுத்தல் (34) 8. துறவின் பகுதி (14) 9. அறிவோர்ப் புகழ்ச்சி (4) 10. மடவோர்ப் பழிப்பு (5) 11. பொதுநிலை (10) எனப்பதினொரு உட்தலைப்புக்களோடு இந்நூல் முறைப்படுத்தப் பட்டுள்ளது. இந்நூலுக்குச் 'சிவபோகசாரம்' என்றகுறியீடுஎப்போதுவந்ததுஎன்பதனைத் திட்டவட்டமாக அரிய இயலவில்லை. இந்நூல்பாடல்களை மேற்கோள் காட்டும் முத்திநிச்சயப்பேருரை ஆசிரியர் இவற்றை 'அனுபூதிவெண்பா' என்றே குறிக்கின்றார். இது ஆராயத்தக்கது. சிவனோடு உயிர் இரண்டறக்கலந்து நிற்குங்கால் பெறும் இன்பம் சிவபோகம் எனப்படும். இப்போகத்தைப் பெறுதற்குரிய சாத்திர நெறி விரிவானது. அவ்விரிந்த பகுதிகளை ஆய்ந்து பிழிவாகத்தரப்பெற்ற பாடல்கள் இந்நூலுள் உள்ளன. எனவே இந்நூல் 'சிவபோக சாரம்' என்ற குறியீடு பெற்றது என்று கொள்ளுதல் பொருத்தமாகும்.

## சிவஞானசித்திநெறி :

தருமையாதீன உபதேச நெறி சிவஞானசித்தி நெறி ஆகும். சிவஞானசித்தியார் நூற்பொருளும், நூற்கருத்துக்களோடு இயைந்த பலதொடர்களும் சிவபோக சாரத்தில் நிறைவாகக்காணப்பெறுகின்றன. ஸ்ரீ குருஞானசம்பந்தரால்

www.saivamonline.com

குறிக்கப்பெறும் ஒரேஇறைவன் ஸ்ரீ சொக்கநாதன். ஒரே குருமூர்த்திகள் கமலை ஞானப்பிரகாசர். ஒரே நூல் சிவஞான சித்தியார். தேவாரத்திருமுறை ஆசிரியர்கள் பற்றியோ உபதேச பரம்பரையில் வந்த ஸ்ரீ மெய்கண்டார் முதலிய ஆசிரியர்கள் பற்றியோ இவர்கள் அருளிச்செய்த நூல்களுள் குறிப்புக்கள் ஏதும் இல்லை. முப்பத்தாறு தத்துவங்களையும், இருபொருளும் காட்டா ஆணவமலத்தையும், பழவினைகளையும் சுட்டெரித்து வீடுபெற வழிகாட்டும் நூல் எது என ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகளை வினவினால் அவர்கள் கூறும் விடை சிவஞானசித்தியார் என்பதே.) அதிலும் ஒரு நுட்பம்: சுபக்கமும், பரபக்கமுமாக விரிந்துகிடக்கும் அப்பெரியநூல் முழுவதையும் கற்று இடர்ப்படவேண்டாம் ஒரே ஒரு திருவிருத்தம் சொல்வேன்; அதன் நெறி நிற்றல் போதும் என்பார். இதுகூட உங்களுக்கு இயலாவிடில் அந்த விருத்தப்பாவின் பாதி விரித்துக்கூறும் நெறிகளைக் கடைப்பிடித்தலே முத்தி தரும் என்று அருளிச்செய்கிறார்.

*'ஆறாறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்*
*நீறாக முத்திநிலை நிற்போர்க்குப்-பேறாகப்*
*பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியின் சித்தியிலே*
*ஓர்விருத்தப் பாதிபோ தும்'*[1]

என்பது இவர்கள் கூறிய அறிவுரையின் வெளிப்பாடாக அமைந்த வெண்பா. இவர்கள் இப்பாடலில் குறித்த பாதி என்பது கீழ்வரும் சிவஞானசித்தியார் பாடலின் முதற் பாதியை நினைவிற் கொண்டது என்பர்.

*'அறியாமை அறிவகற்றி அறிவி னுள்ளே*
*அறிவுதனை அருளினான் அறியாதே அறிந்து*
*குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடும்*
*கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாகில்*

1. சிவபோகசாரம்-23

www.saivamonline.com

*பிறியாத சிவன்தானே பிரிந்து தோன்றிப்*
*பிரபஞ்ச பேதமெலாம் தானய்த் தோன்றி*
*நெறியாலே இவையெல்லாம் அல்ல வாகி*
*நின்றென்றும் தோன்றிடுவன் நிராதார னயே'*[1]

இவ்வாறு சிவஞானசித்தியாரை அறிமுகப்படுத்தி உரைக்கும் ஆசிரியர், அந்நூல் விரிக்கும் பெருநெறி எல்லாராலும் அறிந்து கொள்ளத்தக்க எளிமை உடையதன்று என்பதனை உணர்ந்து எளிய இனிய தமிழில் அரியபெரிய சித்தாந்தச் சாத்திரநெறிகளை விரித்துரைக்கும் பாங்கு நினைந்து போற்றத்தக்கது. இறை, உயிர், தளை என்று கூறப்படும் சித்தாந்த முப்பொருள்களை இவ்வளவு எளிதாகக்கூறும் வேறுபாடல் தமிழில் உண்டோ என்ற ஐயம் நமக்கு வருமாறு சிலபாடல்கள் சிவபோக சாரத்தில் உள்ளன.

*"என்னை அறிவென்றன்: என்னறிவில் ஆனந்தந்*
*தன்னைச் சிவமென்றன்: சந்ததமும்-என்னை உன்னிப்*
*பாரா மறைத்ததுவே பாசமென்றன்; இம்மூன்றும்*
*ஆராய்ந் தவர்முத்த ராம்"* (26)

இப்பாடலில் வரும் என்றன் என்றசொற்கள் தம் ஞானசிரியர் தமக்கு உணர்த்தியவற்றை இவர்கள் தம் சீடர்களுக்கு உணர்த்தியதாகக் கொள்ளத்தக்கன. பசு, பதி இயல்புகளை விரிப்பதோடு ஆணவம், மாயை, கன்மம் என்பனவாகிய மும்மல இயல்புகளையும் ஒருபாடல் எளிமையாக விரிக்கிறது.

*'எங்கும் இருக்கும் அறிவுநீ; ஏகமாய்*
*அங்கங் குணர்த்தும் அறிவுநாம்-பொங்கும்*
*மலம் மறைத்தல்; மாயை மயக்கல்; விகாரப்*
*பலமனைத்தும் கன்மமலம் பார்'* (27)

---

1, *சிவஞானசித்தி—சுபக்கம்*-282,

www.saivamonline.com

## குருதரிசனம் :

சைவசித்தாந்தம் கூறும் முத்திநிலை ஞானசிரியன் வழியாகவே வந்தெய்தும் என்பது துணிபு. 'தாரமும் குருவும் தலைவிதிவசத்தால்' என்பது நம்நாட்டுப் பழமொழி. நல்ல ஞானகுரு கிடைத்துவிட்டால் வீடுபேறு எளிதில் சித்திக்கும். நல்லாசிரியனின் தரிசனமே எல்லாவற்றையும் தருமென்பர் சான்றோர். 'தெளிவு குருவின் திருமேனி காண்டல்' என்பர் திருமூலர். உபதேசநெறி புரக்கும் தருமையாதீன முதற்குரவர் அருட்பாடல்களில் ஞானகுருவின் தரிசனச்சிறப்பு இன்றியமையாமை போன்றன விரிவாகப் பேசப் பெற்றிருத்தல் வியப்பன்று. தன் அனுபவ வெளிப்பாடாக,

*'கண்டேன்; இப்பாசம் கழிந்தேன்; அமுதைமுகந்*
*துண்டேன்; சுகானந்தத் துள்ளிருந்தேன்-வண்டிமிர்காத்*
*தேனைப் பொழிகமலைச் செங்கமலப் பொற்பாத*
*ஞானப்ர காசனையே நான்'*[1]

என்று அருளிச்செய்கிறார்.

குருதரிசனத்தால் பாசங்கள் பாறுதலும், சிவானந்தம் தலைப்படுதலும் அருளனுபவ வெளிப்பாடாக இப்பாடலில் விளக்கமுற்று நிற்கின்றன. கோடிஆகமங்கள் கற்றிருந்தாலும், தவங்களில் தலைநின்றாலும், அட்டமா சித்திகளில் வல்லமை வாய்த்திருந்தாலும் குருவருள் பெறாதார் மனஅமைதி பெறுதல் இயலுமோ? இயலாது என்கிறார் ஆசிரியர்.

*'ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும்*
*பெருகுதவம் சித்தியெல்லாம் பெற்றும்-குருவருளால்*
*வைத்த படியிருக்க மாட்டாத மாந்தர்க்குச்*
*சித்தசல னம்மாந் தினம்'*[2]

---

1, 2. சிவபோகசாரம்-5, 15.

www.saivamonline.com

இந்த அரிய உண்மை, சித்தாந்தச் சாத்திரங்களில் இடம் பெற்றிருப்பினும் இங்கே எளிமையாகக் கேட்டார் உளங் கொள்ளும் வகையில் விரித்துரைக்கப்பட்டுள்ள அருமை நினைந்து போற்றத்தக்கது.

## தருமையாதீன உபதேச மரபு:

உபதேசமரபில் இரண்டு நிலைமைகள் உண்டு. ஞானாசிரியர்கள் தாங்களே தலயாத்திரை மேற்கொண்டு ஆங்காங்கு எதிர்ப்படும் பக்குவிகளுக்கு ஞானோபதேசம் செய்து கடைத்தேற்றுதல் ஒருவகை. பிறிதொருவகை இத்தகு ஞானாசிரியர்கள் தாங்கள் நிலையாக ஓரிடத்திலேயே தங்கியிருக்கப் பக்குவம் பெற்றவர்கள் இவர்களை நாடிவந்து உபதேசம் பெறுதல். இவ்வகையில் தருமையாதீன உபதேசநெறி இரண்டாம் வகையில் பெரும்பான்மையும் அமைவது. அதுவும் தம்மை நாடிவரும் எல்லார்க்கும் உபதேசித்தல் இங்கே மரபன்று. இவ்வுண்மையை விளக்கும் அரியபாடல் ஒன்று சிவபோகசாரத்தில் உள்ளது. 'பாத்திர மறிந்து பிச்சை இடு' என்பார்கள். தகுதி இல்லாதவர்களுக்கு ஞானநூற்பொருளை உரைத்தல் 'அங்கணத்துள் உக்க அமிழ்தம்' போல் பயன் இழக்கும். இங்கே உபதேசம் பெற விழைவார்க்கு நான்கு தகுதிகள் வேண்டும். முதலில், அவர்களுக்கு இறைவன் திருவடிகளில் அன்பு (பக்தி) இருத்தல் வேண்டும். இரண்டாவதாக, பக்தி இருந்தால் மட்டும் போதாது. அந்தப்பக்தி அறிவொடு பட்டதாக இருக்க வேண்டும். மூன்றாவதாகத் துன்பத்திற்குக் காரணமான தீயவினைகளை இப்பிறவியில் மேலும்மேலும் ஈட்டாது பழவினையை நீக்குதற்கு ஏற்ற செயல்களிலேயே அவர்கள் தலைநிற்க வேண்டும். நான்காவதாகப் பேரின்பமாகிய வீடுபேற்றில் அவர்களுக்குப் பெருவிருப்பம் இருத்தல் வேண்டும். இத்தனையும் உடைய நல்லன்பர், குருநாதர் இருக்குமிடம் தேடி, நாடிவந்து தாழ்ந்தால் அவர்களுக்கு

www.saivamonline.com

உபதேசிப்பதே பயன்தரத்தக்கது என்று இப்பாடல் அறிவுறுத்துவது பெரிதும் பொருத்தமாக அமைகிறது.

*'அன்புமிக வுண்டாய்; அதிலே விவேகமுண்டாய்த்;*
*துன்ப வினையைத் துடைப்பதுண்டாய்—இன்பம்*
*தரும்பூ ரணத்துக்கே தாகமுண்டாய்; ஓடி*
*வருங்கா ரணர்க்குண்மை வை'*[1]

இன்றுவரை தருமையாதீன உபதேசநெறி இவ்வாறே இருந்துவருதல் இங்கே நினைவுகூரத்தக்கது.

## பரத்தில் அன்பு:

ஆசையே பிறப்புக்கு வித்து என்பர் திருவள்ளுவர். உலகப் பற்றுக்களிலிருந்து விடுபடுவதே முத்திக்கு வாயில் என்பது சாத்திர உண்மை. எதைச் சொன்னாலும் அதனை அழுத்தமாக நெஞ்சில்பதியுமாறு கூறுதல் ஸ்ரீ குருஞானசம்பந்தரது இயல்பு. பற்றற்றான் பற்றினைப்பற்றி, பற்று விடு என்பதனைக் கூறவரும் ஆசிரியர்,

*"துரத்தியுன்னை ஆசை தொடராமல் என்றும்*
*விரத்தியினால் ஆங்கவற்றை விட்டுப்—பரத்திலன்பு*
*செய்யடா செய்யடா, சேரப்ர பஞ்சமெல்லாம்*
*பொய்யடா பொய்யடா பொய்"*[2]

என இருகால் ஒரேசொல்லை அடுக்கிக்கூறும் அறிவுரை நயமானது. 'சும்மா இருக்கை சுகம்' என்பதனை முன்னோர் நெறிநின்று விளக்கும் ஒரு பாடல், உலகியலில் கிடந்து சுழலும் மக்களுக்குச் சிறந்த அறிவூட்டலாக அமைகிறது.

---

1, 2. *சிவபோகசாரம்*–16, 107.

www.saivamonline.com

*'அருளறிந்து தானும் அறிவறிந்தே ஆங்குட்*
*பொருளறிந்து தானடங்கிப் போத—இருளகல*
*விம்மா திருந்து விகற்பமற ஒன்றாகிச்*
*சும்மா இருக்கை சுகம்'*[1]

## இடும்பை தீர வழிகாட்டுதல்:

ஸ்ரீ குருஞானசம்பந்தரைப் போன்ற ஞானாசிரியர்கள் சராசரி உலக மக்களுக்கும் பல நல்லுரைகளைக் கூறும் கடப்பாடு மிக்கவர்கள். இந்தவகையில் தன்னைத்தானே பெரியராக மதித்து மயங்குவோரைக் கண்டு, செல்வம் பெரிதுடையேம் எனத்தருக்குவாயாயின் உன்னினும் செல்வமுடையானை நினை: உன் செருக்கடங்கும். நீ உன்னைச் செல்வமற்ற வறிஞன் என்றுநினைந்து வாடுகிறாயா உன்னை விட வறிஞராக இருப்பாரோடு உன்னை ஒப்பவைத்து நோக்கி மனமகிழ்ச்சிகொள் என்கிறார்.

*'நின்னை மதிக்கின் நினக்கதிகர் செல்வம்நினை;*
*நின்னை வறிஞன்என நீநினையின்—நின்னின்*
*சிறியார் வறுமைநினை; சிந்தையுக என்றும்*
*குறியா இடும்பைதுக்கம் கோள்'*[2]

பிற்காலத்தே தருமையாதீன நான்காவது குருமூர்த்திகள்பால் ஞானோபதேசம் பெற்ற ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் செல்வம் 'இல்லை' என்று ஏங்குவார்க்கும், 'மிகக் கற்றோம்' என்று தருக்குவார்க்கும் கூறும் அறிவுரையாக அருளிய 'தம்மின் மெலியாரை நோக்கி' என்ற நீதிநெறி விளக்கப் பாடல் இச் சிவபோகசாரப் பாடலின் வளர்ந்தமைந்த வெளிப்பாடு என்று கருதுதல் பொருத்தமானதே. 'மனத்தை

1, 2. *சிவபோகசாரம்*–63, 120.

www.saivamonline.com

முன்னிலைப் படுத்திப் பாடும் மரபு சைவத்திற்குப் புதிதன்று. பரபரப்பே வாழ்க்கையாகி ஓடி உழலும் இன்றைய மாந்தர்க்கு ஸ்ரீ குருஞானசம்பந்தர் கூறும் அறிவுரையாக அமையும் ஒருபாடல் எல்லார் இல்லங்களிலும் எழுதிக் கண்ணாடிச் சட்டமிட்டுப் பார்வையில் வைக்கவேண்டிய ஒன்று. இன்றைய உலகத்தின் தடுமாற்றத்திற்கும், தாழ்ச்சிக்கும், பகைக்கும் அடிப்படையான தீமைகள் யாவும் அகல இதனினுஞ்சிறந்த அறிவுரையாக வேறு எப்பாடலை எடுத்துக்காட்ட இயலும்?

*'பரபரக்க வேண்டா; பலகாலுஞ் சொன்னேன்*
*வரவரக் கண்டாராய் மனமே—ஒருவருக்கும்*
*தீங்கு நினையாதே செய்ந்நன்றி குன்றாதே*
*ஏங்கி இளையா திரு'*[1]

ஒருவருக்கும் தீங்குசெய்யாதே என்று கூறாது, தீங்கு நினையாதே என்று கூறும் அருமைப்பாடு ஆசிரியரின் மன வியல் சார்ந்த பெருஞானத்தை விளக்குவது. நன்றி என்ற சொல்லுக்குப் பொருளே இல்லாதிருக்கும் இக்காலத்தில் தம் மனத்துக்குக் கூறுவாராய்ச் 'செய்ந்நன்றி குன்றாதே' எனப் பேசி நம்மவரை இடித்துரைத்தல் நாகரிகமான வெளிப்பாடு. இன்னும் இந்நூலுள் வரும் அரிய கருத்துக்கள் மிகப் பல. சிவநெறி நின்று உய்திபெற விரும்புவார்க்குக் கூறும் அறிவுரையாக அமைந்த ஒரு சிவபோகசாரப் பாடல் உலகுக்குத் தெரிந்த ஒன்று. இப்பாடலிலும் தம் நெஞ்சிற்கு விஞத் தொடுப்பார் போல ஆசிரியர் கூறும்பாங்கு பெருஞ் சிறப்பாய் அமைகிறது.

*'ஆசையறுாய், பாசம்விடாய், ஆனசிவ பூசைபண்ணாய்,*
*நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் — சீ சீ*
*சினமே தவிராய், திருமுறைகள் ஓதாய்,*
*மனமே உனக்கென்ன வாய்'*[2]

---

1, 2. *சிவபோகசாரம்*–132, 138.

www.saivamonline.com

சீசீ சினமே தவிராய் என்ற வெறுப்புரையும், மனமே உனக்கென்னவாய் என்ற புதுமையான வினவும் மறக்க இயலாதன. சிவபோகசாரம் இவ்வாறு ஓர் பல்பொருட் களஞ்சியமாய் நின்று இன்பம்பயக்கிறது.

## முத்தி நிச்சயம் :

முத்திநிச்சயம் என்பது ஸ்ரீ குருஞானசம்பந்தர் செய்த சிறந்த நூல்களுள் ஒன்று. 22 வெண்பாக்களால் இயல்கிறது. இந்நூற்பாடல்களாக வேறு ஆறு பாடல்களும் சிலபிரதி களில் காணப்படுகின்றன. முத்திநிச்சய உரையாசிரியர் வரைந்த உரை முற்கூறிய இருபத்திரண்டு பாடல்களுக்கு மட்டுமே உள்ளதால் இவை இடைச்செருகல் என்றே கருதத்தகும். இந்நூல் இவர்கள் காலத்தில் நிலவிய ஆன்மானந்த வாதத்தை மறுத்துச் சைவ-சமயாசாரியர், மற்றும் சந்தானசாரியர்களால் விளக்கியருளப் பெற்ற சித்தாந்தமுத்தி இது என்று நிச்சயித்து விளக்குதற் பொருட்டாக எழுந்தது. கண்கட்டி மறைஞானபண்டாரம் என்பார் ஒருநூல் இயற்றினர். 'முத்திநிலை' என்ற இந் நூலுள் 'முத்திபெற்ற ஆன்மா அந்நிலையில், தான் அனுபவிப்பது தனது ஆனந்தமேயன்றிச் சிவனது ஆனந்தமன்று' என்ற ஆன்மானந்த வாதத்தைச் சைவ-சித்தாந்த முத்திநிலைக்கு மாருகச் சாதித்திருந்தார். இக்-கருத்துக்கு மறுப்பாக ஸ்ரீ குருஞான சம்பந்தர் அருளிய இந்நூலுள், 'ஆன்மாவுக்கு இயற்கையாக ஆனந்தம் இல்லை; ஆன்மா சிவத்தோடு கலந்துநிற்றலே முத்தி; பேரின்பம் உயிர் சென்று சார்ந்த பொருளாகிய சிவத்துக்குரியது; ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய்ப் பேரின்பத்தை அனுபவிக்குமேயன்றிப் பேரின்பம் அதற்கு உரியதன்று; அது ஆன்மாவின் இயல்பு ஆகாது; ஆனந்தம் சிவத்தின் இயல்பன்று ஆன்மஇயல்பு' என்று கூறுவது ஆகமங்களுக்கு மாருனது; அது சித்தாந்த முத்திநிலையுமன்று'' என்பன நிலைநாட்டப்பெற்றன.

www.saivamonline.com

## ஆன்மானந்த வாதத்துக்கு மறுப்பு:

இந்நூல் மாணுக்கன் வினவும் வினுக்களுக்கு ஆசிரியர்கூறும் விடையுமாக அமைந்துள்ளது. தாம்கூறும் இச்சித்தாந்த பரமுத்தி, சந்தாஞசாரியர்களால் விளக்கி அருளப்பெற்றது. இதனையே தாம் இங்கே நிச்சயித்திருப்பதாக ஒருபாடல்வழி ஆசிரியர் இதில் விளக்கியுள்ளார்.

*'சந்தான நற்குரவர் தக்கோர், பிறர்சமயம்*
*நந்தாது தோற்றுவித்த நற்குரவர்- முந்தவே*
*எந்தமுத்தி சித்தாந்தம் என்ருர்கள் சைவத்தில்*
*அந்தமுத்தி நிச்சயிப்பேம் யாம்'*[1]

அந்தமுத்தி இன்னதென்பதை நூலில்வரும் பாடல்கள் எளிய இனிய உவமைகளால் நிரல்பட விளக்குகின்றன. ஆன்மாவிற்கு ஆனந்தம் உண்டென்பது உண்மையாளுல் அதுஏன் எண்ணற்ற பிறப்பை அடைகிறது? என்றவினுவை எழுப்பி, அதற்கு அது இல்லை என்பதை ஒரு உவமை வாயிலாக விவரிக்கிருர். ஒருபொருளைக் கண் காணுகிறது. கண் அப்பொருளைக்காண ஆதவன்ஒளி அப்பொருள்மேல் படவேண்டும். ஆதவனைப்போல் கண்ணுக்கும் ஒளிஉண்டு என்றுவாதித்தால், இருளை ஏன் கண்ணிலிருந்து தோன்றும் ஒளி ஓட்டவில்லை என்று வினுவுகிருர். எனவே கண்ணுக்குத் தன்ஞெளி இல்லை. அதுபோல் ஆன்மாவுக்கும் ஆனந்தமென்பது தன்னியல்பன்று என்று நிறுவுகிருர்.

*'அண்ணலைப்போல் ஆனந்தம் ஆன்மாவிற் குண்டாகில்*
*எண்ணில் பிறப்பிறப்பை எய்துமோ-கண்ணிருளை*
*ஓட்டாதோ ஆதவனுக் கொத்தஒளி' உண்டாகில்*
*கேட்டாயோ கேட்டிலையேல் கேள்'*[2]

1, 2. முத்திநிச்சயம்-2, 12.

www.saivamonline.com

இந்நூற்குத் தருமையாதீனத் திருக்கூட்டத்து அடியவர்களுள் ஒருவராகத் திகழ்ந்த தென்தமிழ் வடமொழி இரண்டிலும் அளப்பிலாப் புலமைபெற்று விளங்கிய ஸ்ரீ வெள்ளியம்பலவாணர் எழுதிய சிற்றுரை ஒன்றும், பேருரை ஒன்றும் உள்ளன. இப்பேருரையின் சிறப்பினை இங்கே விரித்துரைத்தல் எளிதன்று. தருமையாதீனக் குருமரபு பற்றிய பல அரிய செய்திகள் இவ்வுரையால் விளங்குவன. இவர்கள் காலத்துக்குப் பிறகே சிவஞான சுவாமிகள் சிவஞான போதத்திற்குச் சிற்றுரை ஒன்றும் பேருரை ஒன்றும் எழுதினார்கள் என்பது இங்கே நினைவு கூரத்தக்கது.

## பிராசாத சட்கம்:

சோடசகலாப் பிராசாத சட்கம் என்பது ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் அருளிய ஒரு யோகநூல். இந்நூல் ஏழு ஆசிரிய விருத்தங்களால் நடையிடுகிறது. இதுவடமொழியில் உள்ள 'பிராசாத ஷட்ஸ்லோகீ' என்ற ஆறு பாடல்கள் கொண்ட சிறுநூலின் மொழிபெயர்ப்பே என்பர்.[1] வட மொழி நூலுக்கும், தமிழ்நூலுக்கும் பழைய உரைகள் உள்ளன. (ப்ரா-ஸா- தம் என்பது வடமொழி. சிவஞான கதியைத்-தருவது என்பது இதன்பொருள்) சோடசம் என்பது-பதினாறு: கலை-கூறு: பிராசாதம் என்பது-ஒரு மந்திரம்; சட்கம்- இதனைப்பற்றிக் கூறும் ஆறுசெய்யுட்களால் ஆகிய நூல்.

'திருமூலர்' மேதாதி ஈரெட்டுமாகிய மெல்லியல் (1070) என்ற வரியில் பிராசாத யோகத்தைக் குறிப்பிட்டுள்ளார். இப்பிராசாதயோகத்தை முதன்முதல் சீகாழித்தத்துவப் பிரகாசர் தத்துவப்பிரகாசம் என்ற நூலில் 15பாடல்களால்

---

1. திரு. மு. அருணசலம், ஸ்ரீ குருஞானசம்பந்தர், காந்தி வித்தியாலயம் திருச்சிற்றம்பலம். 1975, பக் 37

www.saivamonline.com

உரைத்தார். அடுத்துக் காவை அம்பலவாணத்தம்பிரான் இதைப் பிராசாத அகவல் என்ற தம் நூலில் விரிவாக விளக்கினார். இருவரும் 14-ஆம் நூற்றாண்டினர். கண்ணுடை வள்ளலின் மாணவர் ஒருவர் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் பிராசாததீபம் என்ற தம் நூலில் 37 விருத்தப்பாக்களால் இதனை விரித்தார். இவையே தமிழில் பிராசாதம் கூறும் நூல்கள். 16-ஆம் நூற்றாண்டில் கமலை ஞானப்பிரகாசர் பிராசாதமாலை – பிராசாத விருத்தம் என்றுவழங்கும் ஒரு சிறு நூலாக இந்நெறியை விளக்கினார். இதன்பின் எழுந்ததே இங்குக் குறிப்பிடப்பெற்ற பிராசாத சட்கம் என்ற ஸ்ரீ குருஞானசம்பந்தரின் யோகநூல். இப்பிராசாத யோகநெறி என்பது சிற்றம்பலநாடி வழியேவந்த ஒரு யோகநெறி. மேற்குறிப்பிட்ட மெய்கண்ட பரம்பரை யாளரையன்றிப் பிறபரம்பரையினர் இவ்யோகநெறிபற்றி ஏதும் கூறிற்றிலர்.[1]

## பிராசாத யோகம்–ஒருவிளக்கம்:

இந்நூல் உரைக்கும் யோகநெறி பெரிது. இதனை உள்ளவாறு உணர்ந்து அனுட்டித்து முத்திபெற்றோர் பலர் தருமையில் வாழ்ந்திருந்தனர். தருமையில் ஸ்ரீ சொக்கநாதர் பூஜை மடத்திற்குப் பின்னால் பதினாறடுக்கம் என்ற பதினாறு பகுதிகொண்ட ஒருதனி யோகமண்டபம் இன்றும் உள்ளது. இங்கே பக்குவம் பெற்ற முனிவர்கள் பலர் தங்கியிருந்து பிராசாதயோக நெறி நின்றனர். இந்நூல் கூறும் பிரணவ கலைகள் 16, அவை அகாரம், உகாரம், மகாரம், விந்து, அர்த்தசந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாபினி, வியோமரூபினி, அநந்தை, அநாதை அநாசிருதை, சமனை, உன்மனை என்பன. ஆன்மாவிடத்தில் குண்டலினி சக்தியை மேல்நோக்கிச் செலுத்துவதால் இப்பதினாறுகலை களையும் முறையாகத் தரிசித்து, அப்பால் மேல்சென்று

1. திரு. மு. அருணசலம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பக். 38.

www.saivamonline.com

சிவத்துடன் இரண்டறக்கலத்தல் பிராசாத யோகநெறி என்று சைவ சித்தாந்த ஆகம நூல்கள் கூறும். அட்டாங்க யோகம் இந்நெறிக்குரிய படிகளேயாகும். ஒரு முடிந்த முடிபன்று. இந்நூல் பதினாறு கலைகளுக்கும் உரிய வன்னம், தானம், அளவு, வடிவு, தேவதை, மலநிலை, சோதனைப்படும் தன்மை, மாத்திரை, அறுவகைச்சூனியம் என்ற பொருள்களை நிரல்படக்கூறுகின்றது. இந்நூல் யோகநெறி வல்லார்க்கே விளங்கித் தோன்றும் தன்மையது.

## தசகாரிய அகவல்:

திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் என்பது இவர்களால் அருளிச்செய்யப்பெற்ற ஞானசாத்திர நூல்களுள் ஒன்று. இந்நூல் ஆசிரியப்பாவால் 136 அடிகளில் நடையிடுகிறது. பாச தசகாரியம், ஆன்ம தசகாரியம், சிவதசகாரியம் என முப்பகுதியாகப்பகுத்து ஆராயத்தக்கது. திரிபதார்த்தம்-பாசம், பசு, பதி என்ற முப்பொருள் ரூபாதி தசகாரியம்-ரூபம் முதலாகச் சொல்லப்படும் (எட்டுத் தன்மைகளை அடக்கிய) பத்துச்செயல். தசகாரியம் என்பது தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பன. தசகாரியங்களை விளக்க எழுந்த சாத்திர நூல்கள் பல. தத்துவம், ஆன்மா, சிவம் என்ற மூன்றிலும் முதற்கண் வருவது ரூபம் என்பது. இதனுல்தான் இந்நூலைத் 'திரிபதார்த்த ரூபாதி' என்று குறித்தார். இவற்றுள் தத்துவம் முதலிய மூன்றிலும், முதல் இரண்டில் மும்மூன்றும், மூன்ருவதில் நான்குமாய் வரும் பத்தே தசகாரியம் எனப்படுகிறது. ஆயின், ஸ்ரீ குருஞான சம்பந்தர் தத்துவம், ஆன்மா, சிவம் என்ற ஒவ்வொன்றிலும் பத்து அல்லது பதினெரு பகுதிகளாக விரித்து மூன்று அகவல்கள்போலநிற்கும் இந்நூலுள் கூறியருளுகிருர்.



www.saivamonline.com

## தசகாரியப் புதியநெறி:

ஒவ்வொரு பொருளிலும் சொல்லப்படும் பத்துப் பொருள்கள் சுபாவம், வியாத்தி, வியாபகம், குணம், விசேடம், உருவகம், உருவம், சொரூபம், தரிசனம், சுத்தி என்பன. ஆன்மாவாகிய பசுவை விரிக்கும் போது இப்பத் தோடு இலாபம் என்ற ஒன்றும் கூட்டிப் பதினொன்றாக விரிக்கிறார். சிவத்தை உணரும் முறை கூறுமிடத்து முற் கூறப்பட்ட பத்துள் சுத்தி என்ற ஒன்றை நீக்கி யோகம், போகம் என்ற இரண்டும் கூட்டிப் பதினொன்றாக விரிக் கின்ற அருமைப்பாடு தெரிகிறது. இந்நூலுள் கூறப்படுவன பந்தத்தினின்றும் நீங்குதல் ஆதலின் பாச தசகாரியம், ஆன்ம தசகாரியம், சிவ தசகாரியம் என முறைமாற்றி இந் நூலுள் உரைக்கப்படுகின்றன. இந்நூலைத் தம் ஞானாசிரியர் அறிவுறுத்தியவாறு தாம் விரித்துரைத்ததாக ஆசிரியர் இந்நூலின் இறுதியில் கூறி நிறைவிக்கிறார்.

*'ஆக ஆகமம் அறைந்த திதுவெனத்*
*தேசிக மாமணி' தென்கம லாபுரி*
*நாசமில் சீர்த்தி ஞானப்ர காசன்*
*அருளிய அட்ட வணையின் அடைவே*
*பெரிதும் பயனுறப் பேசினன் அறியே'*

தசகாரிய அமைப்பில் இந்நூல் புதுநெறி காட்டுவது.

## ஞானாவரண விளக்கம்:

மேற்கூறிய எட்டு நூல்களேயன்றி ஞானாவரண விளக்கம், சிவபூசாபத்ததி என்ற இரண்டு வேறு நூல்களும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளியனவாக அறியப்படுகின்றன. இவற்றுள் ஞானாவரண விளக்கம் சிவஞானசித்தியார் பரபக்கம், சுபக்கம் என்ற இருபகுதியின் பொருளையும் விரித் துரைக்கும் நோக்கில் பெருவிளக்கமாக ஸ்ரீ குருஞான சம்பந்தரால் அருளிச்செய்யப்பெற்றது. ஞானம் என்பது

www.saivamonline.com

சிவஞானம்: ஆவரணம் என்பது மறைப்பு: எனவே, இந் நூல் சிவஞானத்தைச் சூழ்ந்திருக்கும் தடைகளை அகற்றி விளக்கமுறுத்துவது என்ற பொருளில் அமைகிறது. இந்நூல் முழுதும் இதுபோது கிடைக்கவில்லை. சிலசில பகுதிகள் மட்டுமே கிடைக்கப்பெற்று அச்சிடப்பெற்றுள்ளன. கிடைத்த பகுதிகளைக் கொண்டு நூலின் தன்மையை மதிப்பிட இயலவில்லை. கிடைத்தவரை ஸ்ரீ வெள்ளி யம்பலவாணர் உரையோடு இந்நூல் இரண்டு பிரிவாக, அச்சிடப் பெற்றிருக்கிறது. முதல் பிரிவு பரபக்கம் ஞானனந்தம், அளவியல் என்ற மூன்று பகுப்புக்களை யுடையது. இரண்டாவது பிரிவு சுபக்கம் என்பது.

## ஞானவரண விளக்கம்: அரும்பத விவேகம்:

இந்நூல் சிவஞானசித்தியார்க்கு விளக்கமாகச் செய்யப் பட்டிருப்பினும் இது ஒரு தனி நூல் என்று கருதத்தக்க தன்று. சிவஞானசித்தியார் பாடல்களை விளக்கத்தக்க பழம் பாடல்களை இடையே சேர்த்து, தாமும் சில பாடல்களை விளக்கத்திற்காக அருளிச்செய்து கோவைப்படுத்தியஒரு நூல் இது. ஸ்ரீ வெள்ளியம்பலவாணர் இப்பெருநூலுக்கு அரும்பத விவேகம் என்ற உரை ஒன்று வரைந்தார். மிகவிரிவாக இவ்வுரை அமைகிறது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொகுத்த மூலத்தை ஞானவரணதீபிகை என்றும், தம் உரையை அஸ்பஷ்ட பத போதனீயம் என்றும் உரையாசிரியர் குறித்துள்ளார். திருவாரூர் நிர்மலமணிதேசிகரிடம் தாம் உபதேசம்பெற்று இந்நூல் செய்ததாக ஸ்ரீ வெள்ளி யம்பலவாணர்உரைத்துள்ளார். இந்நூலுள்1161செய்யுட்கள் இருந்தனவாகத் தெரிகிறது. செய்யுட்கள் சிலவே கிடைத் துள்ளன. உரைகாரர் பாடல்களை எடுத்துக்காட்டாது உரை களை மட்டுமே கூறியுள்ளார். இந்நூல் 2000 பாடல்களுக்கு மேலும் சிலபாடல்கள் கொண்டதாக அமைந்திருக்கக் கூடும். இந்நூலுள் கிடைத்த ஸ்ரீ குருஞானசம்பந்தர் பாடல்களைச் சிந்திக்க ஒருபாடலை இங்கே காணலாம்.

www.saivamonline.com

*"உறுமலம் போனால் மீண்டும் உலகறி வல்லாதில்லை
இறையருள் என்று நூற்கும் எழுதுவன் உரைநான் என்று
குறியிடு சொற்கிடக்கை கொண்டுதான் பொருள்வேறுக்கும்
அறிவிலா தவரைக்கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே"*

தம்காலத்தில் மரபுக்கு முரணாக உரைகண்டாரை வெறுத்துப் பாடியதாக இப்பாடல் காணப்படுகிறது. இந் நூற்பாடல்கள் முழுதும் கிடைக்கப்பெறாமை சைவத்தமிழ் உலகிற்குப் பெரும் இழப்பேயாகும்.

## சிவபூஜா பத்ததி :

சிவபூஜாபத்ததி என்ற உரைநடைநூல் ஒன்றும் இவர்களால் செய்யப் பெற்றிருக்கக்கூடும் என அறிஞர்கள் கூறுவர்.[1] இந்நூல் இதுவரை அச்சிடப்பெறவில்லை. தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ள ஏட்டுச்சுவடி ஒன்றின் இறுதியில்,

*'தானே வரக்கண்டும் கைப்பாணி வாங்கியும் தாரணியில்
ஊனே வளர்த்துத் திரிவதல்லால், உண்மையாம் சிவத்தில்
யானே இறக்க இருப்பதெந் நாட்சொல், எனதுளத்தில்
தேனே, கமலையில் ஞானப்ரகாச சிதம்பரனே'*

என்ற கமலை ஞானப்பிரகாசர் துதி ஒன்று காணப்படுதல் பற்றி இந்நூல் ஸ்ரீ குருஞானசம்பந்தர் செய்ததாகலாம் எனக் கருதுவர். துவாரபூசை முதல் அட்டபுட்பபூசைவரை மிக விரிவாகப் பூசைமுறைகளை விரித்துக்கூறும் இந்நூல் ஆராயத்தக்கது.

## ஏனைய அருள் நூல்கள் :

தருமையாதீனத்தின் ஞானபீடத்தமர்ந்து அருட் செங்கோல் செலுத்திய குருமூர்த்திகளில் பலரும் சிவஞானச்

1. திரு. மு. அருணாசலம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பக் 47, 48

www.saivamonline.com

செல்வர்களாய்த் திகழ்ந்ததோடன்றிச் செந்தமிழ் வல்ல அருட் கவிஞர்களாகவும் விளங்கியுள்ளனர். செந்தமிழ்ச் சொக்கனைப் பூஜாமூர்த்தியாகக்கொண்டு போற்றும் இவ்வருளாளர்களுக்குத் தமிழில் பேரறிவு நிறைதல் வியப்பன்று. ஸ்ரீ குருஞானசம்பந்தருக்குப் பின்வந்த அனைவரும் தமிழ்வல்ல பேரருளாளர்கள் என்றாலும், அவருள் செந்தமிழில் நூல் செய்தாரையும், அவர்களால் இயற்றப் பெற்ற நூல்களைப் பற்றியும், விரிவஞ்சிச் சுருக்கமாக இங்கே காணலாம். சைவ-சமயம் சார்ந்த நூல்களாக இவை இருப்பினும் செந்தமிழின் பல்துறைக் கலைவளத்திற்கு இவை தரும் ஊற்றங்கள் பெருமிதத்துக்குரியன.

## வருணாசிரம சந்திரிகை :

வருணாசிரம சந்திரிகை என்ற நூல் ஒன்று தருமையாதீன ஏழாவது குருமூர்த்திகள் ஸ்ரீ திருவம்பலதேசிகரால் இயற்றப் பெற்றது. மெய்கண்ட சந்தானத்தில் உமாபதி சிவாசாரியர்க்குப் பின்வந்த அருளாளர்கள் அனைவருமே சைவ-வேளாளர் மரபில் வந்தவர்கள். இப்பெருமக்கள் சிவனருள் நிரம்பப் பெற்று, பூரணத்தகுதியோடு ஞானானுபூதிச் செல்வர்களாகத் திகழ்ந்து உபதேசமரபைப் போற்றி வளர்த்து வந்தனர். என்றாலும் செல்வாக்கு மிக்க மேல் வருணத்தார் அவ்வக்காலத்தில் நான்காம் வருணத்தினராகிய இவ்வேளாளர்களுக்குக் குருநாதராக எழுந்தருளியிருந்து ஞானோபதேசம் செய்யத் தகுதியில்லை; இது வேத-சிவாகம நெறிகளுக்கு முரணானது என அவ்வப்போது பேசியும் எழுதியும் சிறுகுறும்பு செய்தே வந்துள்ளனர். இந்தப் போராட்டம் சைவத்தில் நெடுநாள் நிலவியிருந்த தென்பதை உறுதிப்படுத்த நிறைவான சான்றுகள் உள்ளன. அவைபற்றிய விளக்கம் இந்நூலின் முற்பகுதியிலும் விளக்கப் பெற்றன, ஏழாவது குருமூர்த்திகள் காலத்தில் தஞ்சை மன்னன் ஒருவன் ஸ்ரீ குருஞானசம்பந்தரின் குருமூர்த்த ஆலய அர்த்தசாம மணியோசை காதில்

www.saivamonline.com

கேட்டமையே பெரிய அபசாரம் என்று கருதி 'இச் சூத்திர சமாதியை இடிக்க' என்று கட்டளை இட்டான் என்ற வரலாறு, மன்னனைச் சூழ்ந்து நின்ற அரசியல் ஆதிக்கம் பெற்ற முதல்வருணத்தாரின் பகையுணர்ச்சிக்குக் கட்டியம் கூறி நிற்கிறது. இம்மன்னன் இட்டகட்டளையால் குருமூர்த்த ஆலயம் இடிக்கப்பட அனைவரும் மூர்ச்சையுற, இவன் கண்ணொளி இழந்தான். ஸ்ரீ திருவம்பலதேசிகர் மன்னனை மன்னித்து ஒரு மண்டலம் தங்கியிருந்து அர்த்தஜாம பூசையைத் தரிசனம்செய் என்று அருளினார்கள்.

இவ்வாறுதங்கி வழிபாடாற்றி வரும்காலத்தில் தஞ்சை மன்னன் ஸ்ரீ திருவம்பலதேசிகரிடம் சூத்திரர்களுக்குச் சந்நியாசம்பெற அதிகாரமில்லை என்று கூறி அடியேனை மயக்கி விட்டார்கள். அதன் உண்மையைத் தெரிவித்தருள வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டான். அவன் கொண்ட ஐயத்தினை நீக்கவேண்டி இவர்களால் அருளிச் செய்யப்பெற்ற அருள்நூல் வருணாசிரம சந்திரிகை என்பது. நான்காம் வருணத்தினர்க்கும் சந்நியாசம் உண்டு என்பதனை சுப்ரபேதம், காமிகம், அஜிதம், காலோத்தரம் முதலிய ஆகமங்களில் காணப்படும் வசனங்களை ஆதாரமாகக் கொண்டு இந்நூல் நிறுவுகிறது. இதேபோல் குருநாதராக எழுந்தருளியிருந்து ஞானோபதேசம் செய்யும் உரிமை நான்கு வருணத்தார்க்கும், இல்லறம், துறவறம் என்ற இருவகை நிலையிலும் உரியது என்பதனையும் இந்நூல் சான்றுகளோடு நிறுவுகிறது. தருமையாதீனத்தில் இந்நூல் அச்சிடப் பெற்றுள்ளது. இந்நூல் எழுந்த காலத்திற்குப் பிறகு ஓரளவு மேற்கூறப்பட்ட முதல்வருணத்தாரின் குரல் அடங்கியதாகவே தெரிகிறது. இந்நூல் அனைவரும் திறந் தெரிந்து போற்றவேண்டிய ஓர் அரியநூல்.

## சமாதிலிங்கப் பிரதிட்டாவிதி :

தமிழகத்துத் திருக்கோயில்களின் அமைப்பு சிவாகமங்களில் கூறப்பெற்றிருக்கும் நெறிமுறைகளை அடிப்படை

www.saivamonline.com

யாகக் கொண்டது. இந்நூல்கள் பலவும் வடமொழியிலேயே உள்ளன. இவ்வகையில் தமிழில் ஓர் நூல் இல்லாத குறையை நீக்கும்வகையில் 220 திருப்பாடல்களால் ஸ்ரீ திருவம்பல தேசிகரால் அருளிச்செய்யப்பெற்ற நூல் சமாதிலிங்கப் பிரதிட்டாவிதி என்னும் அரிய நூல். இந் நூலில் சமாதியில் சிவலிங்கப் பிரதிட்டை செய்வதற்குரிய விதிமுறைகளும், மற்றும் அம்மை, பரிவார தெய்வங்களை எழுந்தருளச் செய்யவேண்டிய நெறிமுறைகளும், கொடி மரம், பலிபீடம் இவற்றின் அமைதியும், நாட்பூசை, பெருவிழா நடத்தும் முறைகளும், நடத்துவோர் எய்தும் பயனும் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன. இந்நூல் கோயில் சார்ந்த கலைவளத்திற்குத் தருமையாதீனம் தமிழில் வழங்கிய கொடையாகும்.

## சித்தாந்த நிச்சயம் :

முத்திநிச்சயம் நூல் எழுந்த தருமையாதீனக் குரு பரம்பரையில் எழுந்த பிறிதொரு ஞானசாத்திர நூல் சித்தாந்த நிச்சயம் என்பது. இது ஒன்பதாவது குரு மூர்த்திகள் ஸ்ரீ திருநாவுக்கரசு தேசிகரால் அருளிச்செய்யப் பெற்ற அரிய நூல். தமக்குமுன் வாழ்ந்த குருமுகமாகக் கேட்ட உபதேசங்களை அடிப்படையாகக்கொண்டு இந்நூல் இயற்றப் பெற்றதாகத் தெரிகிறது. 'சித்தாந்தம் ஈதெனப் பாரில்வந்து தருமை யமுகிய சிற்றம்பலகுரு சாற்றினனே' என்ற நூல்பகுதியில் ஆசிரியர் இதனை உறுதிப்படுத்தி யுள்ளார். இந்நூல் சிறப்பாக ஆணவமலத்தின் மூவகை நிலைகளையும் விளக்குகின்றது. ஆணவமலங்களின் உண்மை: உருவம்: 'ஒருபொருளும் காட்டாது இருள்உருவம் காட்டும்: இருபொருளும் காட்டாதுஇது' என்று முன்னோர் விளக்கிய ஆணவத்தின் கொடுமை ஆகியவற்றை விரிவாக விளக்கும் இந்நூல் தருமையாதீன வெளியீடாக அச்சிடப் பெற்றுள்ளது.

www.saivamonline.com

## திருவருட்பா திரட்டு

தருமையாதீன பத்தாவது குருமூர்த்திகளாகத் திகழ்ந்த ஸ்ரீ சிவஞானதேசிகர் செந்தமிழ்வல்ல அருட்கவிஞராக விளங்கியவர்கள். இவர்கள் அருளிச்செய்த சிறுநூல்கள் பதினாறு. இந்நூல்கள் புள்ளிருக்குவேளூர், சீகாழி, தில்லை, திருவாரூர், ஸ்ரீகாசி முதலிய தலங்களில் எழுந்தருளியுள்ள இறையவர்கள் மேல் தோத்திரங்களாக அருளிச் செய்யப் பெற்றன. இவர்கள் அருளிச் செய்த நூல்கள் யாவும் 'திருவருட்பாத்திரட்டு' என்றபெயரில் ஆதீனத்தில் அச்சிடப் பெற்றுள்ளன. இத்திரட்டு நூலுள் காணப்பெறும் இவர்கள் அருளிய நூல்கள் காசி துண்டிராஜகணபதி திருவருட்பா, காசிவிசுவநாதர் திருவருட்பா, கேதாரநாதர் திருவருட்பா, காசிவிருத்தகாளேச்சுரர் திருவருட்பா, காசி காலபைரவர் திருவருட்பா, காசி தாரகப்பத்து, காசி அன்னபூரணிஅம்மை திருவருட்பா, காசி கேதார கௌரியம்மை திருவருட்பா, காசி பாகீரதியம்மை திருவருட்பா, காசி கதிர்வேலவர் திருவருட்பா, சிதம்பரநடேசர் திருவருட்பா, அசபா நடனப் பதிகம், தக்ஷிணாமூர்த்தித் திருவருட்பா, ஆபதுத்தாரணர் மாலை, செல்வமுத்துக்குமாரசாமி திருவருட்பா, சொக்கநாத சுவாமி திருவருட்பா என்பன. காப்புச்செய்யுட்கள் உட்பட இந்நூல்களுள் 187 திருப்பாடல்கள் உள்ளன. வடமொழியிலும் தென்தமிழிலும் பெரும்புலமை பெற்று விளங்கிய இவர்களின் பக்தியுள்ளத்தை இவர்கள் அருளிய பாடல்களில் நிறைவாகக் காணலாம். 18-ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் எழுந்த சிறந்த தோத்திர நூல்கள் இவை. புள்ளிருக்கு வேளூர் முருகப்பெருமான் மீது இவர்கள் அருளிய திருவருட்பாவில் ஒரு பாடல், அப்பெருமானின் பன்னிரு செவிகளின் செயல்களை விளக்குவதாக அமைகிறது. இப்பாடலில் அமைந்துள்ள பக்தியும், நயமும் மிகமிகச் சிறப்பானவை.

www.saivamonline.com

"அன்னைசொற்கு ஒருசெவி; ஐயர்சொற்கு ஒருசெவி;
அம்மான் துதிக்கு ஒருசெவி;
ஆணைசொற்கு ஒருசெவி; வீரர்சொற்கு ஒருசெவி;
அயன்துதிக்கு ஒருசெவி; விணோர்

மன்னர்சொற்கு ஒருசெவி; வள்ளிசொற்கு ஒருசெவி;
வான் வனிதைசொற்கு ஒருசெவி;
மறைதுதிக்கு ஒருசெவி; அடியர்சொற்கு ஒருசெவி;
வல்லசுரர் சொற்கு ஒருசெவி;

பன்னிரண்டுங் கொடுத்து என்சொல் கேளாமல்
பராமுகம தாயிருந்தால்
பாவியேன் மெலிவுகுறை எவர்செவியி லேற்றிப்
படுந்துயர் களைந்து கொள்வேன்;

முன்னம்மறை நாலும்வந் துன்னுபுள் ளூரனே
முக்கட் குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக் குமார குருவே'[1]

வடசொல் வீச்சும், பக்திக்கனிவும், உலகியல் ஒழுக்கமும் நிறைந்த இவர்களின் பாடல்கள் படித்துப் பயன் கொள்ளத் தக்க இன்றியமையாத சிறப்பின.

## செந்தமிழ்ப் பூம்பொழில்:

பதினொராவது குருமூர்த்திகள் ஸ்ரீ சச்சிதானந்ததேசிகர் அருளிய சிவஞானபோத பாஷ்யம் என்ற நூல் ஒன்றும் உண்டு. இதுவடமொழிசிவஞானபோத நூலுக்கு-வடமொழி யிலேயே இயற்றப்பெற்ற விரிவுரை நூலாகும். இவர்களுக்குப் பின்வந்த அனுபூதிச்செல்வர்கள் நூல்கள் ஏதும் இயற்றிய

1. ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசாமி திருவருட்பா—பாடல்–4

www.saivamonline.com

தாகத் தெரியவில்லை. இவ்விருபதாம் நூற்றாண்டில், தருமையாதீன 25 வதுகுருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் இவ்வாதீன அருள் வரலாற்றில் பொற்காலங் கண்டவர்கள். சைவத்தமிழ் வளர்ச்சிக்காகப் பெருந் தொண்டாற்றியவர்கள். இவர்கள் அடியார்கள் திருமுன்பு அவ்வப்பொழுது வழங்கியனவும், தருமையாதீனத் திங்கள் இதழ் ஞானசம்பந்தத்திற்கு வழங்கியனவுமாகிய ஆசியுரைகள் பல. இவையாவும் கருத்து அடிப்படையில் பகுக்கப்பெற்றுச் 'செந்தமிழ்ப் பூம்பொழில்' என்றபெயரில் ஐந்து தொகுதிகளாக ஆதீனத்தில் அச்சிடப் பெற்றுள்ளன. இவை சைவத்திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், பண்டாரசாத்திரங்கள், நீதிநூல்கள் போன்ற பலவற்றைப்பற்றிய கருத்துக் கருவூலங்களாகத் திகழ்வன.

## திருவருட் செய்தி:

தற்போது தருமையாதீன 26 வது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்து அருளரசு ஓச்சும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள் செந்தமிழ்த் திறம் வல்ல சிவஞானச் செல்வராக விளங்குபவர்கள். முறையான திருமுறைப்பயிற்சியுடையவர்கள். தமிழில்'வித்துவான்' தேர்ச்சி பெற்றுத் தமிழ்ப்பேராசிரியராகத் திகழ்ந்தவர்கள். குருபக்தியும்-சிவ பக்தியும் நிறைந்து விளங்கும் இவர்கள் செந்தமிழ் நலம்விளங்க, ஆங்காங்கே அன்பர்களுக்கிடையே வழங்கிய ஆசியுரைகள் ஆழ்ந்தநோக்குடையன. ஞானசம்பந்தத்தில் தொடர்ந்து வெளிவந்த இவர்களின் அருளனுபவச் செய்திகள் 'திருவருட்செய்தி' என்ற பெயரில் தனிநூலாக வெளியிடப்பெற்றுள்ளது. இவர்களின் உலகியல் நோக்குடன் நிறைந்த செந்தமிழ்நலத்திற்கு இந்நூல் அரிய சான்று.

## ஆதீனமுனிவரர் அருளியன:

தருமையாதீன அருள்வரலாற்றில், குறிக்கத்தக்கபெருஞ் சிறப்புக்களுள் ஒன்று, இவ்வாதீனத் திருக்கூட்டத்து அடியவர்களின் செந்தமிழ்ப்புலமை, சிவராஜதானியாய் விளங்கும்

www.saivamonline.com

தருமையாதீனச் செந்தமிழ்ப்பண்ணையில் விளைந்த ஞானப் பனுவல்கள்பல,இவ்வடியர்களின்சிவநெறிசார்ந்தசெந்தமிழ்ப் புலமைக்கும், வடமொழிப் பயிற்சிக்கும் சான்றுகூறி நிற்கின்றன.இவ்வாறுன நூல்கள்நாற்பதிற்கும்மேலாக உள்ளன. இவற்றின் சிறப்புக்களை எல்லாம் இங்கே விரித்துரைக்க இடமேது? சிலவற்றைமட்டும் இங்கே அறிமுகத்திற்காகக் காணலாம். ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள், ஸ்ரீ வெள்ளியம்பல வாணமுனிவர், ஸ்ரீசம்பந்த சரணலயர், தமிழாகர முனிவர், ஸ்ரீ சொர்க்கபுரம் அழகிய திருச்சிற்றம்பலவர், படிக்காசு முனிவர், சிதம்பரநாத முனிவர், சிவானந்த முனிவர், புன்கூர் சிவப்பிரகாசர், காவை அம்பலவாண முனிவர், சண்முக சுவாமிகள் எனப் பலர் இயற்றிய சிவஞானத்தமிழ்நூல்கள் தருமையாதீனம் தமிழ் உலகுக்கு வழங்கிய அருட்கொடைகளாகத் திகழ்வன.

## ஸ்ரீ குமரகுருபரர்:

தருமையாதீன நான்காவது குருமூர்த்திகள் ஸ்ரீ மாசிலாமணிதேசிகர்பால் ஞானோபதேசம் பெற்றவர்கள். பிற்காலத்தே ஸ்ரீ காசிமடத்தைத் தோற்றுவித்தவர்கள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள். பிறந்து ஐந்தாண்டுகள் வரை ஊமையாய் இருந்து, ஸ்ரீ செந்திலாண்டவன் திருவருளால் பேசும்திறம் பெற்றுக் கந்தர்கலிவெண்பா முதல், சகலகலாவல்லிமாலை ஈறுக 14 அருள் நூல்களை அருளிய பேரருளாளர் இவர்கள். வாக்குத் தடைப்படும் இடத்தில், நினக்கு ஞானகுருதரிசனம் கிட்டும்என்றசெந்திலாண்டவன் திருவருட் செய்தியின் வண்ணம் தருமையில் வாக்குத்தடைப் பட ஞானசிரியராக ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை அடையப் பெற்றவர்கள். 'ஐந்துபேரறிவும்' என்ற பெரியபுராணப் பாடலுக்கு அனுபூதிப்பொருள் வினவிய குருநாதர்முன்பு வாக்குத் தடைப்பட்டது. அன்றுமுதல் செந்தமிழ்வாழ்வும் தலையெடுத்தது. குருநாதர் உபதேசவழி ஸ்ரீ காசிசென்று அங்கே திருமடம் நிறுவித் தருமையாதீன சிஷ்யபாரம்

www.saivamonline.com

பரியத்தைச் சிறப்பித்த ஸ்ரீ குமரகுருபரர் அருளிய நூல்கள் யாவும் தருமையாதீனம் விளைத்த ஞானச்செல்வத்தின் வெளிப்பாடுகளேயாகும்.

## ஸ்ரீ குமரகுருபரரின் நூல்கள் :

குட்டிக்கந்தபுராணமாகச் சாத்திரமும், தோத்திரமுமாக நின்று, பல்லாயிரம் தமிழ்மக்களின் பாராயண நூலாகத்திகழும் கந்தர்கலிவெண்பா; ஸ்ரீ குமரகுருபரர் அவதரித்த கயிலாயபுரத்திலுள்ள இறைவன்மேல் இயற்றப் பெற்ற கயிலைக்கலம்பகம்; பிள்ளைத்தமிழ் நூல்களின் முடிமணியாகத் திகழ்வதும், உமையம்மையே வந்து ஆசிரியர்க்கு முத்தாரமிட்டுப் பாராட்டும் வண்ணம் பக்தி நிறைந்து விளங்குவதுமாகிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்; குறம் என்ற சிற்றிலக்கியத்தின் முன்னோடியாகத் திகழும் மீனாட்சியம்மைகுறம்; வெண்பாவும், கலித்துறையும் விரவி வர அந்தாதித்தொடையாய் நிரம்பிநிற்கும் மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை; தமிழைக்கூட்டுண எழுந்த வேட்கையால் இறைவன் உமையம்மையோடும், முருகனோடும் மதுரைக்கு வந்தான் எனத்தமிழ்ச் சிறப்புப்பேசும் மதுரைக் கலம்பகம்; வெண்பா யாப்பில் 102 செய்யுட்களால் நல்லறங்களை உளங்கொள்ள விளக்கிநிற்கும் நீதிநெறிவிளக்கம்; 40பாடல்களால் இயலும் கற்பனைமிக்க திருவாரூர் நான்மணிமாலை; புள்ளிருக்குவேளூரில்,

*'ஆனேறு உயர்த்திட்ட ஐயர்க்கும் அம்மைக்கும்*
*அருமருந் தாகிநின்ற ஆதிப்பிரான்'*

என்று போற்றப்பெறும் செல்வமுத்துக்குமாரனை அன்றிக் கண்கண்ட தெய்வம் வேறுஉண்டோ எனவினவி நிற்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்; கோயில் என்றாலே சிதம்பரத்தைக் குறிக்கும் என்பார்களே அந்தச் சிதம்பர நாதனின் எல்லையில்லாத ஞானநடனத்தின் நலம்பேசி நிறையும் சிதம்பர மும்மணிக்கோவை; யாப்பருங்கலக்

www.saivamonline.com

காரிகைக்கு மேற்கோள்காட்டச் சைவஞ்சார்ந்த பாடல்கள் வடிப்பேன் என்றநோக்கில் தம் யாப்பறிவின் எல்லைக்குச் சான்றுகூறி நிற்கும் சிதம்பரச்செய்யுட் கோவை; சிவகாமி அம்மைக்குச் சூட்டிய இரட்டைமணிமாலை; தம்ஞானாசிரியர் பால்கொண்ட பேரன்பின் விளக்கமாகத் திகழும் பண்டார மும்மணிக் கோவை; 'பாவலரும் நாவலரும், பண்மலரக் கண்மலரும், காவலரும் ஏடவிழ்க்கும் காசி' என அரிய சிலேடைகளோடு கூடிய காசிக்கலம்பகம்; மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரையும் தம்பண் கண்ட அளவில் பணியச்செய்த கலைமகள்மேல் பாடிய சகலகலாவல்லிமாலை முதலிய அனைத்தும் இவர்களின் பழுத்த தமிழ்ப்புலமைக்குச் சான்றுகூறி நிற்பன. இந் நூல்களின் சிறப்புக்கள் அளவிடற்கரியன. கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த ஸ்ரீ குமரகுருபரரின் அருள்நூல்கள் தமிழ்இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுவன. இவர்கள் இயற்றியருளிய அருள்நூல்களைத் தொகுத்து 'ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு' என்ற பெயரில் அச்சிடப்பெற்றுள்ளது.

## கந்தர் கலிவெண்பா:

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் நூல்களுள் குறிப்பிடத் தக்க அரிய அருள்நூல் கந்தர் கலிவெண்பா. 122 கண்ணிகளில் அமைந்துள்ள இந்நூல் முருகப்பெருமானின் திருவருட்கருணையை வியப்பதாகத் தோன்றினும் சைவ சித்தாந்தச் செம்பொருளைச் சுருக்கமாக விளக்கும் அருமைப் பாடுடையது. முருகப்பெருமானுக்கும்–சிவபெருமானுக்கும் வேற்றுமை இன்மையின் சிவபெருமானின் விசேடணங் களையே முதற்கண் விரிவாகப் பேசி இந்நூல் தொடங்கு கின்றது. இறைவன் உயிர்களின் ஈடேற்றத்திற்காகத் தாமே குருவாக எழுந்தருளிவருவன் என்பதனை,

www.saivamonline.com

"......பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி—உலவாது
அறிவுக்கு அறிவாகி அவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்
கருணைத் திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு."

என அழகுறக் குறித்தருளுகின்றார். தொடர்ந்து முருகப் பெருமானின் திருவுருவ வர்ணனைகளை விரித்துரைத்து, அப்பெருமானின் தசாங்கங்களைவியந்து, முருகப்பெருமானின் திருவவதாரத்தை அடுத்து மிக அழகாக விளக்கியருளி, அவனது திருவிளையாடல்களை நயம்படக்கூறி, வள்ளி–தெய்வயானையாகிய இருமாதர்களை மணந்த திறம்பேசி, இறுதியில்,

"ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப்பியத் தொகையும்–ஓசை
எழுத்துமுத லாமைந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து"

அருள வேண்டுமென ஆசிரியர் விடுக்கும் வேண்டுகோளுடன் இந்நூல் நிறைகிறது. இந்நூலின் ஆழமும், அழகும் தனித்து விரிவாக ஆராயத்தக்க சிறப்புடையன.

## சில அரிய குறிப்புக்கள் :

செந்தமிழ் மொழியின்மேல் ஆசிரியர் கொண்டிருந்த அளப்பரிய பேரீடுபாட்டிற்குச் சான்று பகரும் பகுதிகள் பல இவர்களது பிரபந்தங்களில் காணப்படுகின்றன. திருமாலை,

'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப்பசுங் கொண்டலே'[1]

எனப் பாராட்டுவார். மதுரைச் சொக்கநாதனை,

---

1. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், பாடல்—1

www.saivamonline.com

'பொழிந்தொழுகு முதுமறையின் சுவைகண்டும் புத்தமுதம்
வழிந்தொழுகும் தீந்தமிழின் மழலைசெவி மடுத்தனையே'[1]

எனப் போற்றிவியப்பார், கலைமகளைப் பாடவரும் ஆசிரியர்,

'வடநூற்கடலும்,
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்
செந்நாவினின்று காக்கும் கருணைக்கடல்'[2]

என்ற தொடர்களால் பணிந்து போற்றுவார். இலக்கணத் திட்பம் மிக்க கற்பனைகளில் குமரகுருபர சுவாமிகளின் ிதைகள் பெரும் சிறப்பானவை. அம்மை அப்பராக ஒரே வடிவில் தோன்றும் அர்த்தநாரீசுவர வடிவத்தை எப்படி அழைப்பேன்? ஒருவன் என்று ஆண்பாலில் அழைப்பதா? அன்றி ஒருத்தி எனப் பெண்பாற் சொல் பெய்வதா? என்று மயங்குவார்போல் நின்று, பின் திடீர் என நினைவு கொண்டார் போல் இவ்வடிவினைக் குறிக்க ஒருவர் என்ற ஒரு சொல் உளதே என்று மகிழ்வார்.

'ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவொன் றுலவ்
வுருவையஃ தொருத்த னென்கோ ஒருத்தி யென்கோ
இருவருக்கும் உரித்தாக ஒருவ ரென்றோர்
இயற்சொல் இலதெனின் யான்மற் றென்சொல்கேனே.'[3]

இவ்வாறான கற்பனைகள் பலவற்றை இவர்கள் நூல்களில் காணலாம். கல்வி, உலகியல், சமூக ஒழுக்கம், இறை உணர்வு இவை பற்றியெல்லாம் ஆசிரியரின் விரிவான பார்வைகள் மிக்க நலஞ்சிறந்தன. தமிழ் மொழியில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளின் நூல்களுக்குத் தனித்த ஓர் சிறப்பிடம் உண்டு.

---

1. மதுரைக் கலம்பகம், பாடல்—2
2. சகலகலாவல்லி மாலை, பாடல்—7
3. சிதம்பரச் செய்யுட்கோவை, பாடல்—54

www.saivamonline.com

## பண்டார மும்மணிக்கோவை :

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் இயற்றிய அருள்நூல்களுள் பண்டார மும்மணிக்கோவை தருமையாதீன குருமரபின் சிறப்பினை விளங்க உரைக்கும் சாத்திர அடைவு மிக்க அருள்நூல். மும்மணிக்கோவை என்பதற்கு இணங்க முப்பது பாடல்களால் இயன்ற இந்நூல் தம் ஞானாசிரியராகிய ஸ்ரீ மாசிலாமணிதேசிகர் தம்பால் கொண்ட கருணையை வியந்து போற்றுவதாக அமைகிறது. இவர்கள் எழுந்தருளியிருக்கும் இடங்களை,

*'தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும்*
*திருநகராக அரசுவீற் றிருக்கும்*
*மாசிலாமணித் தேசிக ராய'*[1]

என்று வரிசைப் படுத்துகின்றார். ஞானாசிரியரைப் புகழ்ந்து பேசுமிடங்களில் 'கைமாறற்ற கணக்கில் பேரின்ப மோனவாழ்வளிக்கும் ஞானதேசிகன்' என்றும் 'பேரருட்குரிசில்' என்றும் 'அருட்பெருஞ் சைவத்து அருங்கல நாப்பண் ஆசற விளங்கும் மாசிலாமணி' என்றும் நெஞ்சம்நெகிழப்பாராட்டுகின்றார். மாசிலாமணி என்ற சொல் ஏதுவாக இவர் தம் ஞானாசிரியரை நயந்தோன்றப் போற்றும் இடங்கள் பல. அவற்றுள்,

*'விண்புரக்கும் சிந்தா மணியென்கோ மெய்ச்சுடரால்*
*மண்புரக்கும் சூளா மணிஎன்கோ-பண்பார்*
*திருமா முனிவர் சிகாமணி என்கோ சீர்*
*தருமா சிலாமணியைத் தான்'*[2]

எனப் போற்றுவது நயமிக்கப் பகுதிகளுள் ஒன்று. தம்

---

1. பண்டாரமும்மணிக்கோவை பாடல்-7 வரி 14-16.

2. மேற்படி பாடல்-11.

www.saivamonline.com

ஆசாரிய மூர்த்திகள்பால் அவர்கள் விடுக்கும் வேண்டுகோள் சைவசித்தாந்தத்து இறவாநெறி' வழங்க வேண்டுதலே. இதனை,

'ஈண்டுனைத் தமியேன் வேண்டுவது யாதெனின்
அந்நிய மென்றும் அநநிய மென்றும்
இந்நிலை இரண்டும் எய்திற் றென்றும்
பல்வேறு உரைக்குநர் சொல்வழிப் படாது
திவ்வியம் பழுத்த சைவசித் தாந்தத்து
இறவா நிலைமைபெற்று இன்பமார்ந் திருக்கும்
பிறவா நல்நெறி பெறப்புரி வதுவே'[1]

என வரும் பாடல் பகுதி நன்கு உணர்த்தும். இந்நூல் உரைக்கும் சைவ-சித்தாந்த சாத்திர நுட்பங்களும் எடுத்தாளப்படும் உவமைகளும் பெருஞ்சிறப்பின. தருமையாதீனக் குருதோத்திரங்களில் இந்நூலே முடிமணியாகத்திகழ்வது. ஸ்ரீ குமரகுருபரரின் பிரபந்தங்கள் விரிவான ஆராய்ச்சி முன்னுரையோடும், அரும்பத உரைகளோடும் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் வெளியீடப் பெற்றுள்ளன. பண்டார மும்மணிக்கோவை, தருமை ஆதீன வெளியீடாக அச்சிடப் பட்டுள்ளது.

## சமுகமாலை முதலியன:

வடமொழி தென்தமிழ் இரண்டிலும் பெரும் புலமை பெற்று ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் காலத்தில் வாழ்ந்திருந்த ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர் தருமையாதீனத் திருக்கூட்டத்து அடியவர்களுள் பெருஞ்சிறப்பு மிக்கவர்கள். இவர்கள் செய்த நூல்கள் ஆறு. மூன்று ஸ்ரீ குருஞானசம்பந்தர் துதியாக அமைந்தவை. இரண்டுநூல் உரைநூல், ஒன்று உபாகமம் (தமிழ்). ஸ்ரீ குருஞானசம்பந்தர்மேல், ஞானசம்பந்த தேசிகர் சமுகமாலை, குருஞானசம்பந்தர் தாலாட்டு

1. பண்டாரமும்மணிக்கோவை பாடல்-4, வரி 19-25



www.saivamonline.com

திருப்பள்ளி யெழுச்சி என்ற மூன்று தோத்திர நூல்கள் இவர்களால் இயற்றப்பெற்றன. இவற்றுள் சமூக மாலை குருநாதனுடைய திருச்சமூகம் எவ்வெவ்வாறு விளங்குகின்றது என்பதனை விளக்கும் 12 விருத்தப்பாக்களால் இயன்றது. ஸ்ரீ குருஞானசம்பந்தருடைய சமூகம் நாதாதிபாசங்கழன்று சல்லாபஞ் செய்யும் சிவானுபவச் செல்வர்கள் சேர்ந்தது: அருள்வெள்ளம் ஈர்க்கக் குறையிரப் போர்கள் கூடியிருப்பது; சந்நிதிசார என்ன புண்ணியம் செய்தோம் என ஏக்கமுத்த முற்றிருப்பார் இனிதிருப்பது எனப் பலவாறு இந்நூலில் புகழ்ந்துரைக்கப் பட்டுள்ளது. ஸ்ரீ குருஞானசம்பந்தரைக் குழந்தையாகப்பாவித்து 40 கண்ணிகளில் இயன்றது தாலாட்டு நூல். இதனுள்,

*"மெய்யன்பர் எல்லாம் வியன்கருணை பாராட்டப்*
*பொய்யன்ப னேனைப் பொருட்படுத்தும் போதகனே'*

என்றும்,

*'ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுட்கலந்து*
*தேனாய் அமுதமுமாய்த் தித்திக்கும் தேசிகனே'*

என்றும் வரும் பகுதிகள் இனியன. அறிதுயிலமர்ந்திருக்கும் ஆசாரியனைத் துயிலுணர்த்துவதாக அமைந்த பிறிதொரு நூல் திருப்பள்ளியெழுச்சி, இதனுள் 'தண்டமிழ்ச்சொல் தென்தருமை ஞானசம்பந்தன்' என்றும், 'சாதிகுலமேனி சமயம் புகல வந்த ஒரு சற்குரு' என்றும் பெருமை பேசுகிறார்.

## முத்திநிச்சயப்பேருரை :

இவர்களின் பெரும் புகழுக்குக் காரணமாக விளங்கும் பெரிய உரை நூல்கள் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய முத்தி நிச்சயத்திற்கு வெள்ளியம்பலவாண முனிவரால் வரையப்பெற்ற சிற்றுரையும், பேருரையுமேயாம். இவை பற்றி முன்னரே கூறப்பட்டன. சிற்றுரை, ஒவ்வொரு பாடலாலும் கூறப்படும் பொருளைச் சுருங்கக்கூறி, பதவுரை,

www.saivamonline.com

விசேடவுரை, இலக்கணக் குறிப்புக்கள் என அமைகிறது. தொகுப்பும், உள்ளுறை நுட்பமும் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன. முத்திநிச்சயப்பேருரை விரிவாக அமைகிறது. இப்பேருரை விரிவாக ஆராயப்பட்டு 1946-இல் தருமையாதீனத்தில் சிறப்பாக அச்சிடப் பெற்றிருக்கிறது. இந்நூலுரையால் விளங்கும் தருமையாதீனம் பற்றிய வரலாற்றுச் செய்திகள் பலவாகும். இவ்வுரை, 'வெள்ளியம்பலவாண மாபாடியம்' என்றும் வழங்கப் பெறுகிறது. இவர்கள் தம் உரையில் குறித்துச் செல்லும் அறுபதிற்கு மேற்பட்ட நூல்கள் பெயர் மாத்திரம் அறியப்பட்டு இன்றும் வெளிவாராதனவாகவுள்ளன. இவர்களே இறந்துபோன நூல்களாக 26 நூல்களைக் குறித்துள்ளார்கள். இப்பேருரைபற்றி விரிவான செய்திகள் உண்டு. அவற்றை ஆதீன வெளியீட்டால் நன்கு உணரலாம். இவர்கள் செய்தனவாகக் குறிக்கப்பெறும் நூல்கள் பல இன்று கிடைத்தில து.

## மிருகேந்திரம் :

மிருகேந்திரம் என்பது உப ஆகமங்களுள் ஒன்று. இது சூத்திரயாப்பான் அமைந்த தமிழ் மொழிபெயர்ப்பு நூல். பாயிரம், உபோத்காதப்படலம், பரமோட்சநிராசப் படலம், பதிபடலம், சிருஷ்டிப்படலம், அனுக்கிரகப்படலம், பசுபடலம் என ஆறு படலங்களையுடையது. இறைவனிடம் இந்திரன் நரசிங்கத்தின் தோலைப் போர்த்திக்கொண்டு கேட்டதால் இந்நூல் இப்பெயர்பெற்றது. இது தில்லையில் ஸ்ரீ வெள்ளியம்பலவாணர் தங்கியிருந்தகாலத்துச் செய்தது இது இந்திரனுல் பரத்துவாச முனிவர்க்கு மனநிலையை நன்ருக அறிந்த பிறகு உபதேசிக்கப் பெற்றது. ஞானநூல் கற்ருர் மேற்கொண்டொழுக வேண்டிய நியதிகளை விரிக்கிறது. நூல்வரலாறு, புறச்சமயங்களில் கூறப்படும் முத்தி இலக்கணம், சித்தாந்த முத்தி இயல்பு, பதி இலக்கணம், பாச நீக்கம் முதலியன சுருக்கமாக இந்நூலுள் விளக்கப்

www.saivamonline.com

பெற்றுள்ளன. ஸ்ரீ வெள்ளியம்பலவாணர் தருமை யாதீனத்தின் வைப்பு நிதியாகப் போற்றத்தக்க பெருஞ் சிறப்பினர்.

## கந்தபுராணச்சுருக்கம்:

கந்தபுராணச் சுருக்கம் என்பது ஸ்ரீ சம்பந்தசரணாலய முனிவரால் இயற்றப்பெற்ற ஓர் அரிய காப்பியம். கச்சியப்பர் செய்த கந்தபுராணமாகிய பெருங்காப்பி யத்தின் நலம் சிறிதும் குறைவுபடாது இந்நூல் இயன் றுள்ளது. 1049 திருப்பாடல்களால் ஆறு காண்டங்களாக அமைந்துள்ளது. இவர்கள் பாடிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் தோத்திரமே முன்னர் காட்டப்பெற்ற 'சீரணியும் நுதலின் விழி' என்ற திருப்பாடல். பாயிரத்தை அடுத்து ஆசிரியர் புராணவரலாறு என 18 பாடல்கள் அருளியுள்ளார். கச்சியப்பர் வழிநின்று தாம் இந்நூலைச் சுருக்கி உரைத்தி ருப்பதாகவே ஆசிரியர் கூறுகிறார். சஷ்டி விரத நாட்களில் கந்தபுராண பாராயணம்செய்ய இயலாதவர்கள் இக்கந்த புராணச் சுருக்கத்தை நியமமாகப் பாராயணம் செய்து வருகிறார்கள். அவையடக்கம் பாடும் ஸ்ரீசம்பந்தசரணாலயர்,

> 'தனக்கிணை தானேயான சம்பந்தன் கமலைவேந்தன்
> கனக்கவே என்பால் அன்பால் கருணைவைத் திடுதலாலே
> உனற்கருங் காந்தந் தன்னை உரைத்தனன் சுருக்கியல்லால்
> எனக்குமிக் கதைக்கும் நாடில் எத்தனை தூரமாமால்'

என்று தம் ஞானாசிரியரின் அருளின்றி இதனைத் தம்மால் இயற்றியிருக்க இயலாது எனக் கூறியிருப்பது இவரது குருபக்தியை விளக்குகிறது. இந்நூல் இறுதியில்வரும் வாழ்த்து கந்தபுராண வாழ்த்தோடு ஒப்பவைத்து நோக்கத்தக்கது.

www.saivamonline.com

*துய்யதா மறைகளாலும் துதித்திட அரியதான*
*செய்யவே ளடிகள் வாழ்க; சேவலும் மயிலும் வாழ்க;*
*வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க; அன்னோன்*
*பொய்யில்சீர் அடியார் வாழ்க; வாழ்கவிப் புவனமெல்லாம்,*

தருமையாதீன ஆருவது குருமூர்த்திகள்பால் ஞானோபதேசம்பெற்று, ஸ்ரீ வெள்ளியம்பலவாணரிடம் கல்விபயின்ற ஸ்ரீ சம்பந்தசரணாலயர் தம்ஞானாசிரியர்மேல் பாடிய 11 பாடல்கள் கொண்ட சிறு நூல் ஒன்று உண்டு. இது “சிகாரத்தினமாலை” என வழங்குகின்றது. இந்நூலுள்,

*கொஞ்சுகிளி மறையோதும் கூடலம் பதியினும்*
*குலவு கமலாபுரியினும்,*
*குருமணி பதித்தொளிகள் மருவுமா ளிகைகளும்*
*கொண்டல்தவழ் மண்டபஞ்சேர்*
*செஞ்சொலவர் பரவவளர் தருமைநக ரினுமருட்*
*செங்கோல் நடாத்து குருவே!*
*சீர்தருமை வாழவரு ஞானசம் பந்தனும்*
*தேசிக சிகாரத்னமே!*

எனக்கூறும் பாடல்பகுதி மதுரை, கமலை, தருமை என்ற மூன்றையும் இணைத்துப் பேசுவதாகும். குமரகுருபரரும் இக்கருத்தைத் தம் பண்டார மும்மணிக்கோவை என்ற நூலில் குறித்துள்ளார்.

## ஆசௌச தீபிகை:

தமிழாகர முனிவர் என்பார் 108 விருத்தப்பாக்களால் இயற்றிய ஆசௌச தீபிகை என்றநூல் ஆசௌசவிதி ஆகமங்களில் கூறப்பட்டிருப்பதன் காரணங்களை ஆராய்கிறது. இவர்களே இயற்றிய ஞானசம்பந்தர் குருராய அட்டகம் என்பது, தம்மை ஆட்கொண்ட ஞானாசிரியரைப் போற்றி, அவர்கள் அருள்பெற்றமையால்

www.saivamonline.com

நெஞ்சில்எழுந்த மகிழ்ச்சியின் வெளிப்பாடாய் இயற்றப் பெற்ற சிறுநூல் இது. 16 பாடல்களைக் கொண்ட சந்திர கலாமாலை என்ற வேறு ஒருநூலும் இவர்கள் இயற்றியது. 'தவராசர் பிரியாத சிவராச தானியுன் சந்நிதானம்' என்றும் உன் மடத்தில் 'நாயாகக் கடைத்தலையில் மவுனியாய் அசையாமல் நானிருக்கக் கிடைத்தது' என்றும் வரும் இந்நூற்பகுதிகள் நெஞ்சை நெகிழ்விப்பன.

## அறிவானந்த சமுத்திரம் :

சொர்க்கபுரம் அழகிய திருச்சிற்றம்பலவர் இயற்றிய நூல் அறிவானந்த சமுத்திரம். இது சித்தாந்த தோத்திர நூல். சகசானந்த உல்லாச வாழ்வு, மலபரிபாக வாழ்வு, உபதேசக் கிரமம் எனமூன்று பெரும் பிரிவுகளையுடையது. 105 உட்பிரிவுகளோடு 1154 பாடல்களால் ஆக்கப் பெற்றுள்ளது. தேவாரப் பாடல்களைப்போல் யாப்பமைதி யும், இசையமைதியும் உடையது. இந்நூல் உவமைகளும் சாத்திர நுட்பங்களும், இலக்கிய அழகுங்கொண்ட ஒரு சிறந்தநூல். தமது ஆசிரியர் ஸ்ரீ அழகியசிற்றம்பல தேசிகர் மீது 158 கண்ணிகளைக்கொண்ட கிளிவிடுதூது என்னும் நூல் ஒன்றும் இவர்களால் பாடப்பெற்றுள்ளது.

## புள்ளிருக்குவேளூர்க்கலம்பகம் :

புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் படிக்காசு முனிவர் இயற்றிய ஓர் சிற்றிலக்கியம். 101 பாடல்களால் அமைந்தது. சந்தக்கொழிப்புமிக்க அரிய பாடல்கள் இந்நூலுள் உள்ளன. புயவகுப்பு மட்டுமின்றி, பாத வகுப்பு என்ற ஒரு துறை புதிதாக இக்கலம்பகத்துள் காணப்படுகிறது. சித்தாமிர்த தீர்த்தச் சிறப்பு,

*'சித்தாமிர்தக் குளத்தீர்த்தநீர் ஆடினோர்*
*திவலைகள் தெறித்த வுடனே*
*தீராத நோயையும் போகாத பேயையும்*
*தேடிப் பிடிப்பிப்பனே'*

www.saivamonline.com

என்று பாடலால் விளக்கப்படுகிறது. திருமால் எதற்காக இம்மண்ணுலகத்தை எல்லாம்உண்டு துன்புற்றார்? வேளூரில் பிரமகுண்டத்திலுள்ள ஒரு சிறு மண்ணுருண்டையை உண்டிருந்தாலே பிறவி தீர்ந்திருக்குமே! அவர் இதனை அறியாரோ என வினவுகிறார் ஒரு பாடலில்.

*'பாருண்ட மண்ணையெல்லாம் ஏனுண்டார்*
*வேளூர்எம் பரம குண்டத்து*
*ஒருருண்டை மண்ணையுண்டால் இரண்டு பிறப்பும்*
*அவர்க்கு ஒழிக்கல் ஆமே'*

என்பது அப்பாடல். இக்கலம்பக அம்மானைப்பாடல் நயமானது. இந்திரன் மகள் தெய்வயானையை மணந்த முருகன் வள்ளியை ஏன் மணந்தான் என்ற கேள்விக்கு 'வள்ளியம்மை அம்மான் மகள் அலவோ அம்மானை' என்று கூறும் விடை அழகானது. இவர்கள் இயற்றிய தொண்டைமண்டல சதகம் வரலாற்றுக்குப் பெருந்துணைபுரிவது. இவர்கள் இயற்றிய பிறநூல்கள் உமைபாகர் பதிகம், சிவந்தெழுந்த பல்லவனுலா, பிள்ளைத்தமிழ், பாம்பலங்காரவருக்கக்கோவை திருச்செங்கோட்டுத்திருப்பணி மாலை என்பன.

## நித்தியகன்மநெறிக்குறள் :

திருப்பதிகம், நித்தியகன்மநெறிக்குறள் என்ற இரண்டு நூல்களை இயற்றியவர் 10வது குருமூர்த்திகள் ஸ்ரீ சிவஞான தேசிகர்பால் உபதேசம்பெற்ற சிதம்பரநாத முனிவர் என்பவர். திருப்பதிகம் தம் ஞானாசிரியர்மீது பாடப்பெற்ற பத்து விருத்தப்பாக்களால் இயன்றது. இந்நூல் மெய்கண்ட பரம்பரை ஆசாரியமரபு பற்றியும் ஆசாரியப்பெருமக்களை அடியார்களும், புலவர்களும்பாடிய கவிதைத்தொகுதிகளைப் பற்றியும் விளக்குகிறது. நித்திய கன்ம நெறிக்குறள் வடமொழிஆகமங்களையும், பத்ததிகளையும் ஆராய்ந்து செய்யப் பெற்றது. 755 குறள் வெண்பாக்களால் ஆக்கப்பெற்றது.

www.saivamonline.com

தியானவிதி முதல் போஜனவிதி ஈருகஒன்பது பகுப்புக்களை யுடையது. அனுட்டான முறை, சிவபூஜாவிதி முதலியன பற்றி அழகிய குறள் வெண்பாக்களால் நடையிடும் நூல். சைவ-சமயத்தவரும் பிறரும் மேற்கொண்டொழுகத்தக்க சிறப்பினது.

## நடராச சதகம் :

தமிழில்வழங்கும் சதகநூல்களுக்கு முன்னோடியாகத் திகழ்வது மணிவாசகரின் திருச்சதகம். இதனை அடியொற்றி நூறுபாடல்களால் பிற்காலத்தே பல சதக நூல்கள் தோன்றின. இவற்றுள் தில்லை நடராஜப் பெருமான்மேல் பாடப்பெற்ற சிறந்த ஒரு சதகநூல் நடராச சதகம் என்பது. தருமையாதீன 10வது குருமூர்த்திகள் காலத்தில் வாழ்ந்திருந்த ஸ்ரீ சிதம்பரநாத முனிவரால் இயற்றப்பெற்ற இவ்வரிய நூலுள், சைவர்களின் சிறந்த முத்தித்தலமாகிய சிதம்பரத்தின் அளப்பரிய பெருமைகளும், தில்லை மூவாயிரவர்களது சிறப்பும், நடராசப்பெருமானின் ஐந்தொழில் ஆடலும், சைவ-சித்தாந்த சாத்திர உண்மைகளும் மிகச்சிறப்பாக விளக்கப் பட்டுள்ளன. அபிடேகங்கள், விரதங்கள்போன்ற சைவச்சார்புடைய நெறிகள்பலவற்றை இந்நூலுள் விரிவாகக் காணலாம். உலகில் எவ்வெச் செயல்கள் மேன்மைபயக்கும் எனக்கூறவரும் ஆசிரியர் ஒருபாடலில்,

"கருதரிய செல்வமது பெறுவதே மேன்மை; உயர்
கல்விஅது தனினும் மேன்மை;
கற்பதிலும் மேன்மையது வாம்இனிய மூதறிவு;
காசினி யெலாம் மதிக்கும்
பெருகிய உதாரசற் குணமுடைய ததின்மேன்மை;
பிழையில் இல்லறம் நடாத்திப்
பிதிர்தெய்வம் உடன்விருந்து ஒக்கல் மனம்மகிழவே
பெறுதல்உது தனினும் மேன்மை;

www.saivamonline.com

*அரியபல உயிரெலாம் தன்னுயிர்க் கொப்பஅன்*
*படைதலது தனினுமேன்மை;*
*அறையுமிவை யாவுமொரு வர்க்குள தாயில்உன்*
*அருட்செல்வ ராவர்........"*

(பாடல் 100)

என்று இவ்வாறு விரித்துக் கூறுகின்றார். இச்சதகநூல் சைவநெறி வாழ்வார்க்கு ஓர் அரிய புதையல்போல் நின்று உதவும் பெருஞ்சிறப்பினது.

## க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் :

ஸ்ரீ சிதம்பரநாதமுனிவர் அருளிய இன்னொரு தோத்திர நூல் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ். இந்நூல் பிள்ளைத்தமிழ் நூல்களுள் ஒருபுதிய நெறியினை வகுத்துள்ளது. ஏதேனும் ஒருதலத்தில் உள்ள ஒருமூர்த்தியின் மேல்தாம் பிள்ளைத்தமிழ் நூல்கள் பாடப்பெற்றுள்ளன. இந்நூலில் ஆசிரியர் ஏறத்தாழ எண்பது தலங்களில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான்மீது இப்பிள்ளைப் பாட்டைப் பக்திக்கனிவோடு இயற்றியுள்ளார். அருணகிரி நாதரால் பாடப்பெற்றதும், பெருததுமாகிய பலதலங் களுக்கு இந்நூலில் பாடல்கள் உள்ளன. இந்நூல் ஆசிரியரின் குருபக்தியும்-சிவபக்தியும் இம்முருகதோத்திரத் தில் நன்கு பிரகாசிக்கின்றன. இந்நூல் பிற்காலத்தெழுந்த சிற்றிலக்கியங்களுள் குறிக்கத்தக்க ஒன்று. இவர்கள் தருமையாதீனத்தின் 10வது குருமூர்த்திகள் தமக்கு ஞானோபதேசம் செய்து ஈடேற்றியமையைப் பாடும்போது,

*"உம்பர்பணி யாரூர னருளினு லானந்த*
*ஒளிவடிவ மான குரவன்*
*ஒருசெந்தி லம்பதியில் உன்னருளி னுல்பாடும்*
*உயர்குமர குருபர முனிக்*
*கம்புயத் தாள்சென்னி சூடினேன் எலிபூனை*
*அரவுபோத்து குயில்கிளி*

www.saivamonline.com

*அத்துவித மாகவே சத்திநிரு வாணமெனும்*
*அருள்ஞான தீட்சை செய்தோன்*
*எம்பவ மகற்றிடுேன் எண்ணிலா அடியவரை*
*இன்பவா ரிதியில் வைத்தோன்''*

எனஇவ்வாதீனக் குருமூர்த்திகள் பலரையும் நினைவுகூர்ந்து துதித்தல் சிறப்பாக அமைந்துள்ளது. இவர்களை இப்பாடல்வரிகளால் தருமையாதீன முனிவரர் என எளிதில் உணரலாம்.

## சிவானந்தமாலை :

இனி, சிவானந்தமுனிவரால் இயற்றப்பெற்றசிவானந்த மாலைபற்றி ஒருசிலவற்றைக் காணலாம். வெண்பாயாப்பில் 414 பாடல்களைக்கொண்ட சித்தாந்தச் சார்புநூல் இது. சித்தாந்த அனுபவத்தை உவமைவாயிலாக உணர்த்துவது. இந்நூற்பாடல்கள் பிற்காலச் சாத்திர உரைகளில் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றுள்ளன. கடவுள் வாழ்த்தில் திருஞானசம்பந்தரை இந்நூலாசிரியர் பெரிதும் சிறப்பித்துள்ளார். இறைவன் சுட்டுவிரலையும் கட்டை விரலையும் சேர்த்த 'போதக முத்திரை'யால் காட்ட முடியாத உண்மையைச் சுட்டுவிரலால் காட்டிய தோன்றல் என இவரை ஆசிரியர் பாராட்டுகின்றார். சரியைமுதல் நாற்பாதங்களும், அவத்தைநிலைகளும், சத்திநிபாதவகைகளும், குருசீட இலக்கணங்களும், தீட்சைமுறைகளும், தசகாரிய பேதங்களும் உவமைநலமும் பொருள்நலமும் தோன்ற இவ்வரிய நூலுள் விரித்துரைக்கப் படுகின்றன. மற்றும் 70வரிகளில் ஆசிரியப்பாவால் இயன்ற சிவானந்த போதசாரம் என்ற சிறிய தத்துவ விளக்கநூல் ஒன்றும், குருமரபில் நிலவும் சம்பிரதாயங்களை விளக்கும் சம்பிரதாய தீபம் என்றநூல் ஒன்றும் சிவானந்த முனிவரால் அருளப் பெற்றுள்ளன.

www.saivamonline.com

## சிவப்பிரகாசக்கட்டளை முதலியன :

புன்கூர் சிவப்பிரகாசர் இயற்றிய சிவப்பிரகாசக் கட்டளை என்ற உரைநடை நூல் ஒன்றும், காவை அம்பலவாணமுனிவர் இயற்றிய 100 கட்டளைக்கலித் துறையால் இயன்ற திருவருட்பயன் உதாரணக்கலித்துறை என்ற மேற்கோள் விளக்கநூல் ஒன்றும், இவ்வாதீன முனிவர்களால் இயற்றப்பெற்றுள்ளன. ஸ்ரீ சண்முகசுவாமிகள் என்பார் திருப்பனந்தாள் செஞ்சடையப்பர்மேல் சடையப்பர்மாலை என்ற 30 பாடல்களைக்கொண்ட சிறு நூல் ஒன்று செய்துள்ளார். இத்தலத்து இறைவிமீது இவர்கள் பாடிய பிறிதொரு சிறுநூல் பெரியநாயகிமாலை. சந்தானதேசிகர் போற்றிக்கலிவெண்பா என்ற 105 கண்ணிகளையுடைய பிறிதோர் நூலில் ஸ்ரீகண்டதேவர் முதல் தருமையாதீன 20-வது குருமூர்த்திகள் வரையுள்ள மெய் கண்ட சந்தானத்து ஞானாசிரியப் பெருமக்களுக்கு வணக்கம் கூறப்பட்டுள்ளது. 32 கட்டளைக் கலித்துறைகளினால் ஆகிய ஞானசம்பந்த தேசிகமாலை, அகப்பொருள் நவமணிக் கோவை, செந்தமிழ் இரட்டை மணிமாலை என்பனவாகிய மூன்று நூல்களும் சண்முகசுவாமிகளால் இயற்றப்பெற்றன. இவ்வாறு இவ்வாதீன அருளடியவர் நூல்கள் அளப்பரும் விரிவும் சிறப்பும் பெற்றுத்திகழ்கின்றன.

## சார்பு நூல்கள் :

தருமையாதீனத்தின்பால் அன்புகொண்டு வாழ்ந்த அருளாளர்களும், ஆதீனத்தின் ஆதரவு பெற்ற புலவர்பெரு மக்களும் இயற்றிய ஆதீனத் தொடர்புடைய நூல்கள் சில உண்டு. இவையும் போற்றத்தக்க சிறப்புடையன. இவ்வகையில் நிரம்ப அழகியதேசிகர் என்பார் குருஞானசம்பந்தர் மேல் பாடிய தசமணிமாலை என்ற நூல் ஒன்று 10 ஆசிரிய விருத்தங்களைக் கொண்டுள்ளது. குருமூர்த்திகளின் நாளோலக்கச் சிறப்பு கூறும் அழகிய நூல் இது. ஆறுவது

www.saivamonline.com

குருமூர்த்திகள் மேல் திருவாரூர்ச் சிதம்பரநாதமுதலியார் என்பவரால் 22 வெண்பாக்களால் பாடப்பெற்ற தோத்திரப் பாடல் என்ற தொகுப்பு ஒன்றும் உள்ளது. அந்தகக் கவி வீரராகவ முதலியார் 10 வது குருமூர்த்திகளின் சிறப்பினை வியந்து ஆறு ஆசிரிய விருத்தங்களால் பாடிய நூல் பஞ்ச ரத்தினம் என்பது. இவர்கள் மேல் பாடப்பெற்ற பிறிதொரு அழகிய நூல் சிவஞானதேசிகர் நான்மணிமாலை. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் 16-வது குருமூர்த்திகளைப் போற்றி 101 கலித்துறைகளால் பாடியது சச்சிதானந்த தேசிகர் மாலை. தருமை சொக்கநாதப் பெருமானைப் போற்றி மாயூரம் முத்துசாமிப்பிள்ளை என்பார் பாடிய 100 பாடல்களைக் கொண்ட நூல் தருமைச் சொக்கநாதர் மாலை. 23-வது குருமூர்த்திகள் பால் அன்பு கொண்டார் பாடிய பாடல் தொகுதி தோத்திரத்திரட்டு என்ற நூல். திருவையாறு இராம. கோவிந்தசாமிப்பிள்ளை அவர்கள் 24-வது குருமூர்த்திகள் மேல் 659 அடிகளால் பாடிய நூல் சண்முக தேசிகர் ஆற்றுப்படை. சக்திவேற்பிள்ளை என்பார் இவர்களைப் பாடிய பிறிதோர் சிறுநூல் சண்முகதேசிகர் இரட்டைமணி மாலை. ஆதீனச்சார்பு தனிப்பாடல்கள் பலவும் உண்டு.

www.saivamonline.com

# ஆதீனத் திருக்கோயில்கள்

## 27 திருக்கோயில்கள்:

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தின் பராமரிப்பில், தஞ்சை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களைச் சார்ந்த 27 திருக்கோயில்கள் பல நூற்றாண்டுகளாய் முறையாக அருட்பொலிவோடு சிறந்து விளங்குகின்றன. கி. பி. 16 ஆம்நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஸ்ரீகுருஞான சம்பந்தரால் தோற்றுவிக்கப் பெற்ற தருமையாதீனத்தின் சைவம் வளர்க்கும் மாண்பினையும், இங்கே எழுந்தருளியிருந்த அருளாளர்களின் சீலத்தையும் உணர்ந்த அக்கால ஆட்சியாளர்களும், பிறரும் பல திருக்கோயில்களை இவ்வாதீனத்தின்பால் ஒப்புவித்தனர். சைவ சித்தாந்த சாத்திர நெறி வளர்க்கும் தருமபுர ஆதீனம் 'மால்அற நேயம் மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே' என்ற சாத்திரவாக்கிற்கு ஏற்பத் திருக்கோயில் பராமரிப்பையும் மகிழ்வோடு ஏற்றுச்செயல்பட்டு வருகிறது. தருமையாதீனத்தின் பராமரிப்பில் உள்ள 27 திருக்கோயில்களில் பல எப்போது, யாரால் இவ்வாதீனத்தின்பால் ஒப்புவிக்கப்

www.saivamonline.com

பெற்றன எனத் திட்டவட்டமாக அறியக்கூடவில்லை. என்றாலும், கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்துக்கு முன்பாக அதாவது இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னரே பல திருக்கோயில்கள் இவ்வாதீன பராமரிப்பின் கீழ் வந்துவிட்டன என்பதற்கு ஆவணச் சான்றுகள் பல உள்ளன.

## எடுத்துக்காட்டாக விளங்கும் திறம்:

இன்று, தமிழகத்தில் தருமையாதீனத் திருக்கோயில்கள் என்றாலே, யாவர்க்கும் இக்கோயில்களின் தூய்மையும், பராமரிப்புத்திறனும், ஆகம நெறிமுறை தவறாத பூஜைமுறைகளுமே நினைவுக்கு வரும். தமிழ்நாட்டில் பலபெரியகோயில்களின் தூய்மையான நிர்வாகத்திற்கு வழிகாட்டியாக விளங்குவன ஆதீனத் திருக்கோயில்கள். இன்று இக்கோயில்களுக்கு நிறைவான நிலபுலங்கள் இருப்பதைக் கண்டு பலபேர் சொத்துடைய கோயில்களைப் பராமரிப்பது எளிதான செயல் தானே எனப்பேசுகின்றனர். ஒரு உண்மை அவர்களுக்குத் தெரிந்திருக்க முடியாது என்றே தோன்றுகிறது. தருமையாதீனத் திருக்கோயில்களில் பல இவ்வாதீனத்தின்பால் ஒப்படைக்கப்பட்ட பொழுது நித்திய வழிபாட்டுக்கே போதுமான வளமின்றி இருந்தன. ஆதீனக் கோயில்களில் மிகப் பெரிது புள்ளிருக்குவேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி திருக்கோயில். இக்கோயிலுக்கு இன்று பலஆயிரம் ஏக்கர் நஞ்சை–புஞ்சை நிலங்கள் உள்ளன. இந்நிலங்கள் வந்த வரலாறு பற்றி ஒருநிகழ்ச்சியை இங்கே நினைவுகூர்தல் தகும்.

## ஒருஉருக்கமான நிகழ்ச்சி:

தருமையாதீன 10வது குருமூர்த்திகள் ஸ்ரீ சிவஞான தேசிகர் (கி. பி. 1715-1770) காலத்தில் புள்ளிருக்குவேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில் கட்டளைவிசாரணையாக இருந்தவர்கள் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்

www.saivamonline.com

களுள் ஒருவராகிய ஸ்ரீ அட்சயலிங்க சுவாமிகள். அவர்கள் காலத்தில் இத்திருக்கோயிலுக்கிருந்த நிலம் மிகக்குறைவு. நிலத்தை உழுது பயிரிட, ஏரில் பூட்ட ஒருகாளைமட்டுமே இருந்தது. வைராக்கிய சிந்தைகொண்ட சுவாமிகள், ஒருநாள் ஏரின் ஒருபக்கத்தில் காளையைப் பூட்டச்செய்து நுகத்தடியின் இன்னொரு பக்கத்தில் தான்நின்றுகொண்டு இழுத்துக் கோயில்நிலத்தை உழுதார்கள். இக்காட்சி அவ்வழியே சென்றமன்னன் கண்ணில்பட்டது. சுவாமிகளின் சிவத்தொண்டின் ஈடுபாட்டை, கோயில் விசாரணைத் திறமையை வியந்தான். இவ்வாறு தாங்களே மாடாக நின்று உழக்காரணம் என்ன என்றுகேட்ட மன்னனுக்கு மற்றொரு காளைவாங்கி உழவுசெய்யத் திருக்கோயிலுக்குப் பொருள்வருவாய் இல்லைஎன்று உண்மைநிலையை எடுத்துரைத்தார்கள். மன்னன் சுவாமிகளின் பக்தி ஈடுபாட்டைக் கண்டு இக்கோயிலுக்குப் பலநிலங்களைத் தானமாக வழங்கிச் சென்றான். இவ்வாறு ஆதீனத்தின் அருளாட்சியில்தான் இத்திருக் கோயில்களில் பெரும்பாலானவை முறையாக வளர்ந்தோங்கி இன்றுள்ள பெருநிலையைப் பெற்றன.

## ஆட்சியாளர்களின் மதிப்பு :

தருமையாதீன அருளாட்சியின்கீழ் வளர்ந்துவந்திருக்கும் திருக்கோயில்களை ஒருமுறை கிழக்கிந்தியக் கம்பெனியார் தம்வசமாக்கிக் கொண்டனர். பின்னர்ச் சிறிது காலத்திற்குப் பிறகு, பிரிட்டிஷ்அரசின் உத்தரவுக் கிணங்க மீண்டும் இத்திருக்கோயில்கள் 14வது குருமூர்த்திகள் ஸ்ரீ கந்தப்பதேசிகர் (கி. பி. 1840-1842) காலத்தில் ஆதீனத்திலேயே ஒப்படைக்கப்பெற்றன. ஆதீனஆலயங்களை மீண்டும் அவர்கள்பால் ஒப்புவிக்க சென்னை ரெவின்யு போர்டு (1841) இட்டஉத்தரவு ஒன்று கிடைத்துள்ளது. அதன் சுருக்கம் வருமாறு:-

www.saivamonline.com

> "மற்றவற்றிலும் ஆதீனக்கோயில்கள் என்பவை தனித்தன்மை வாய்ந்தவை; உரிமையில் வேறுந்தன்மை அவற்றிற்குண்டு; அவற்றை மேற்பார்வையிடும் அதிகாரிகளை நியமிக்கும் உரிமை அந்த ஆதீனங்களுக்கே உண்டு; அவை, அந்த ஆதீனத்தின் தம்பிரான்களால் பரிபாலிக்கப் படுபவை; அரசாங்கம் மேற்பார்வையிட்டு வந்தகாலத்திலும், அவர்களுக்கு மதிப்பளித்து, இந்த உரிமையை ஏற்றுக் கொண்டு, அக்கோயில்களில் உள் துறை நிர்வாகத்தில் தலையிடாது விடப்பட்டிருந்தது. ஆதீனக்கோயில் நிர்வாகம் டிரஸ்டி பாத்தியதை சுதந்திரமானது. இதில் தலையிட நமக்கு அதிகாரமில்லை.[1]

இதிலிருந்து பல்வேறு காலங்களிலும் சிறுசிறு தடைகள் வந்தாலும், அவை திருவருளால் தாமேவிலக ஆதீனத்திருக் கோயில்களின் நிர்வாகம் தருமையாதீனக் குருமூர்த்தி களால் பரம்பரை பரம்பரையாகச் சிறப்பாகப் பராமரிக்கப் பெற்றுவருதல் உறுதியாகிறது.

## பாடல்பெற்ற தலங்கள் :

தருமையாதீனத் திருக்கோயில்களைப் பற்றிய ஒரு சிறு அறிமுகத்தையும், இத்திருக்கோயில்களைச் சார்ந்து எழுந்த நூல்களையும், இத்திருக்கோயில்கள் வாயிலாகத் தருமை யாதீனம் செய்து வந்திருக்கும் தமிழ்த் தொண்டுகளையும் பற்றி இங்கே சில குறிப்புக்கள் தரப்பெறுகின்றன. ஆதீனத் திருக்கோயில்கள் பற்றிய விரிவான செய்திகளை அறிய வேறு பலநூல்கள் உள்ளன.[2] தருமையாதீனத்தின் பராமரிப்பில் உள்ள திருக்கோயில்கள் 27 என முன்னரே காட்டப்பட்டது.

---

1. புள்ளிருக்குவேளூர்-கும்பாபிஷேகமலர்-வேளூர் தேவஸ்தான வெளியீடு 1970-பக்கம் 372.

2. தருமபுர ஆதீனத் திருக்கோயில்கள், தருமையாதீன வெளியீடு தருமபுரம் 1949.

www.saivamonline.com

இவற்றுள் 17 திருக்கோயில்கள் தேவாரப்பாடல் பெற்றவை. ஆறு திருக்கோயில்கள் பாடல்பெறுதன. மூன்று திருக் கோயில்களில் ஒவ்வோர் கட்டளைமட்டும் தருமையாதீனத் தின்கீழ் உள்ளன. ஒன்று திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை யில் உள்ள ஸ்ரீ மௌனமடம். இக்கோயில்கள் பற்றிய விபரங்கள் பின்னிணைப்பில் தரப்பெற்றுள்ளன.

## பல்வேறு சிறப்புக்கள் :

தருமையாதீனத்திருக்கோயில்களுக்கு சமயவரலாற்றுப் பின்னணியில் பல சிறப்புக்கள் உண்டு. இறைவனின் பெரு வீரம் நிகழ்ந்த தலங்கள் எட்டு. இவற்றை அட்டவீரட்டத் தலம் என வழங்குவர். இவற்றுள் மார்க்கண்டேயர்க்கு அருள்புரிதல் வேண்டிச் சிவபெருமான் காலனைக் காய்ந்த தலம் திருக்கடவூர். சிவநிந்தனை செய்தமைக்காகத் தட்சனை வீரபத்திர தேவரை விடுத்துத் தலைபறித்த தலம் திருப் பறியலூர். ஆணவங்கொண்டு மலரம்புகளைத் தம் மேனி யில் விடுத்த மன்மதனை எரித்த தலம் திருக்குறுக்கை. இம்மூன்று வீரட்டத்தலங்களும் தருமையாதீனத்தின் பரா மரிப்பில் உள்ளன. தேவார மூவருள் முதல்வராகிய திரு ஞானசம்பந்தப் பெருமான் திருவவதாரஞ்செய்து மூன்று ஆண்டில் திருமுலைப்பால் உண்டு சிவஞானம் பெற்ற சீகாழித் திருக்கோயிலும், புண்ணியப் பதினாறாண்டில், திருமணக்கோலத்தில் தம் துணைவியாரோடும், அடியார் களோடும் இவர்கள் சிவசோதியில் கலந்தருளிய ஆச்சாள் புரத்திருக்கோயிலும் தருமை ஆதீனத் திருக்கோயில்களே.

சடாயு, வேதம், முருகப்பெருமான், சூரியன் முதலியோர் வழிபட்ட புள்ளிருக்குவேளூர் என்ற பழம் பெயர் கொண்டிலங்கும் வைத்தீஸ்வரன் கோயிலும், சுந்தரமூர்த்திசுவாமிகள் வரலாற்றோடு தொடர்புடையதும் சப்தவிடங்கத் தலங்களில் ஒன்றுமாகிய திருக்கோளிலி என்னும் திருக்குவளையும், தென்கயிலாயம் என்ற சிறப்புப்



www.saivamonline.com

பெற்றதும் திருநாவுக்கரசு நாயனர் கயிலாயக் காட்சி கண்டு மகிழ்ந்ததுமாகிய திருவையாறும், தாடகை என்ற பெண்ணின் பக்திக்காகத் தலைசாய்த்தும், குங்குலியக்கலயர் அன்பிற்காகத் தலை நிமிர்ந்தும் செஞ்சடையப்பராகச் சிவபிரான் எழுந்தருளியிருக்கும் திருப்பனந்தாளும், ஞான சம்பந்தர் யாழ்மூரிப்பண் பாடிய காரைக்காலை அடுத்த தருமபுரமும், எங்கும் காணப்படாத தோற்றத்தோடு இரணியனைக்கொன்ற இரத்தவெறியால் சுழன்றதிருமாலைப் பிளந்து உலகைக்காத்த சரபமூர்த்தி வடிவாய்ச் சிவபிரான் எழுந்தருளியிருக்கும் திருபுவனமும் இவை போன்ற சிறப்புக்கள் பலஉடைய ஏனைய தலங்களும் தருமை யாதீனத்தின் அருளாட்சியில் நாளும் நாளும் தழைத்து வருகின்றன. மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானமும், திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயிலில் பிச்சைக்கட்டளையும், திருவாரூர் ஸ்ரீ தியாகராஜஸ்வாமி திருக்கோயிலில் இராஜாங்கக் கட்டளையும் ,புதுவை மாநிலப்பகுதிக்குட்பட்ட திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரர் திருக்கோயிலின் நிர்வாகப் பொறுப்பும் தருமையாதீனத்திற்குட்பட்டனவே.

## நிர்வாகச்சிறப்பு :

ஆதீனத் திருக்கோயில்கள் பலவும் அவ்வப்பொழுது பெரும் பொருட் செலவில் திருப்பணிகள் நிறைவேற்றப் பெற்றுக் குடமுழுக்குச் செய்விக்கப் பெற்றுக் கலையழ கோடு தூய்மையாய் விளங்குகின்றன. இக் கோயில்களில் எல்லாம் முறையான வேத சிவாகமப் பயிற்சிபெற்ற சிவாசாரியர்கள் நியமிக்கப்பெற்று, அவர்களால் காலந் தவறாது நியமமாக நாட்பூசையும், பெருவிழாவும் நடத்தப் பெற்று வருகின்றன. தேவாரத் திருமுறைகளில் முறையான பயிற்சிபெற்ற ஓதுவாமூர்த்திகள் இத்திருக்கோயில்களில் நியமிக்கப் பெற்றுள்ளனர். வழிபாட்டு வேளைகளில் தமிழ் மறையாகிய திருமுறைகளை ஓதி வழிபாடாற்றும் முறை

www.saivamonline.com

ஆதீனத் திருக்கோயில்களில் பல ஆண்டுகளாக நிலவிவருவது. தமிழில் அர்ச்சனை செய்யப்படுதலும் வழக்கில் உள்ளது. ஆதீனக் கோயில்களில் அவ்வத்தலத்திற்குரிய தேவாரத் திருமுறைப்பனுவல்கள் கல்வெட்டாகப் பொறித்து வைக்கப் பெற்றுள்ளன. பழைய கல்வெட்டுக்கள் முறையாகப் படி எடுக்கப்பெற்று, ஆராய்ந்துதொகுக்கப்பட்டுள்ளன. அவ்வக் கோயில்களுக்கும் தக்காரைக் கொண்டு தலபுராணங்கள் இயற்றுவிக்கப் பெற்றன. தலத்துக்குரிய நூல்கள் யாவும், ஆராய்ந்து உரைக் குறிப்புக்களோடு பலமுறை அச்சிடப் பெற்றுள்ளன.

குடமுழுக்குக் காலங்களில் சிவநெறிக்கும்–செந்தமிழ்க் கும் நலஞ்சேர்க்கும் அரிய விழாமலர்கள் வெளியிடப் பெற் றுள்ளன. ஆதீனக்கோயில்களில் நூலகங்கள் வைத்துப் பரா மரிக்கப்பெற்று வருகின்றன. விழாக்காலங்களில் திருமுறை மாநாடுகள் கூட்டப்பெற்று, தக்க அறிஞர்களால் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கப் படுகின்றன. சிறு குழந்தைகளுக்கு நாள்தோறும் திருமுறை வகுப்புக்கள் நிகழ்த்தப்படுகின்றன. தருமை ஆதீனக் குருமகாசந்நிதானங் களின் உத்தரவு பெற்ற–தமிழில் 'வித்துவான்' பட்டம் பெற்ற கட்டளைத் தம்பிரான் சுவாமிகள் ஒவ்வொருவரால் ஆதீனத் திருக்கோயில்களின் நிர்வாகங்கள் நேரடியாகக் கண்காணிக்கப் பெற்று வருகின்றன. இவ்வாறு, ஆதீனத் திருக்கோயில்களைக் கொண்டு எவ்வெவ்வாறெல்லாம் செந் தமிழ் மொழி வளர்ச்சிக்கு உதவமுடியுமோ அந்தந்த வகை களில் எல்லாம் தருமையாதீனம் இயற்றிவரும் பணிகள் தமிழ் கூறும் நல்லுலகத்தால் பெரிதும் போற்றத்தக்க சிறப் புடையனவாய்த் திகழ்கின்றன.

## ஆதீனத் திருக்கோயில்களைச் சார்ந்து எழுந்த நூல்கள்:

தருமையாதீனத் திருக்கோயில்களில் பல மூவர் தேவாரப் பாடல்கள் பெற்றன. திருமுறைகளில் சிறப்பிக்கப்

www.saivamonline.com

பெறுவன. சில அருணகிரி நாதரால் பாடப்பெற்றன. இவ்வாதீனத்தின் பராமரிப்பின்கீழ் இத்திருக்கோயில்கள் வந்த பிறகு பல அரிய சிற்றிலக்கியங்களும், தலபுராணங்களும் அருட்பனுவல்களும் இவ்வாதீனத்தின் தூண்டுதலாலும், நல்லாதரவாலும் கவிஞர்பெருமக்களால் இயற்றப்பெற்றன. இம் முயற்சிபற்றி விரிவான செய்திகள் உண்டு. விரிவஞ்சிச் சிலவற்றை மட்டும் இங்கே காண்டல் தகும்.

## வேளூர் இலக்கியங்கள் :

தருமையாதீனத் திருக்கோயில்களுள் சிறந்தது வைத்தீஸ்வரன் கோயில். புள்ளிருக்கு வேளூர் என்பது இத்தலத்தின் பண்டையபெயர். இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் ஒன்றும், அப்பர் பெருமானின் இரண்டு பதிகங்களும், அருணகிரிநாதரின் திருப்புகழும் உண்டு. ஆதீன அருளாட்சிக் காலத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளால் செல்வமுத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் என்ற அரிய சிற்றிலக்கியம் ஒன்று பாடப்பெற்றது. 10 வது குருமூர்த்திகள் ஸ்ரீசிவஞான தேசிகர் முத்துக்குமாரசாமி திருவருட்பா என்ற இனிய தோத்திர நூல் இயற்றியருளினார்கள். இவ்விருநூல் பற்றியும் முன்னரேகுறிக்கப்பெற்றது. இத்தலத்தில் கட்டளை விசாரணையில் இருந்த ஸ்ரீ உலகநாத முனிவர் என்பவர்கள் தவசிகாமணியாக விளங்கியவர்கள். அக்காலத்தில் வாழ்ந்திருந்த வடலூர் இராமலிங்க சுவாமிகளுக்கு இத்தம்பிரான் சுவாமிகள் மேல் பேரீடுபாடு உண்டு. இத்தொடர்பால் இராமலிங்க சுவாமிகள் வேளூர்ப்பெருமான் மீது 'வைத்தியநாதர் பதிகம்' என்ற இனிய பதிகம் ஒன்றை இயற்றியுள்ளார். பன்னிரண்டு பாடல்கள் கொண்ட இப்பதிகத்தின் எல்லாப்பாடல்களிலும் 'தவசிகாமணி உலகநாத வள்ளல்' என்று இம்முனிவர் பெருமானைப் போற்றுவது பெருஞ்சிறப்பு. எல்லாப் பாடல்களும்,

www.saivamonline.com

*'தவசிகாமணி உலகநாத வள்ளல்*
*மகிழவரு வேளூரில் அன்பர்பவ ரோகமற*
*வளர் வயித்திய நாதனே.'*

என்றே நிறைகிறது. இனிய தோத்திர நூல் இது. இவை யன்றிக் காளமேகப் புலவரின் தனிப்பாடல்கள் 20க்கு மேல் இத்தலத்திற்குரியன. இப்பாடல்களின் சுவையைப் பலரும் அறிவர். வேளூரை அடுத்துள்ள ஒரு சிற்றூர் இன்று காத்திருப்பு என்று வழங்கப் பெறுகிறது. இவ்வூரின் பழம் பெயர் காத்தியாயனர்இருப்பு என்பது. இவ்வூரில் வாழ்ந் திருந்த வடுகநாத தேசிகர் என்பாரைக் கொண்டு வேளூர்த் தலபுராணம் இயற்றப் பெற்றது. இந்நூல் 1133 விருத்தங் களால் அமைந்த சிறந்த சொற்சுவை, பொருட்சுவை மிக்கது.

## சீகாழிச் சிற்றிலக்கியங்கள் :

சீகாழி சைவ-சமய வரலாற்றில் பெருஞ்சிறப்பிடம் பெறுவது. திருஞானசம்பந்தர் அவதரித்து அருள்பெற்றது. இவர்கள் அருளிச் செய்த திருப்பதிகங்களுள் ஏறத்தாழ ஐந்தில் ஒருபங்கான 67 திருப்பதிகங்கள் இத்தலத்திற்குரியன, அப்பர் பதிகங்கள் மூன்றும், சுந்தரர் பதிகம் ஒன்றும் உள்ளன. திருவாசகத்திலும் திருவிசைப்பாவிலும் இத்தலக் குறிப்புக்கள் உண்டு. பட்டினத்தடிகள் அருளிய திருக்கழுமல மும்மணிக்கோவை என்ற நூல் ஒன்றும் இத்தலத்திற்குரியது. தருமையாதீன அருளாட்சிக்காலத்தில் 10வது குருமூர்த்திகள் அருளிய ஆபதுத்தாரணர்மாலை என்ற ஒரு சிறு நூல் இங்குள்ள ஸ்ரீ சட்டைநாதர்மேல் அருளிச் செய்யப்பெற்றது. திருவாவடுதுறை ஆதீனத்து 8வது குருமூர்த்திகள் ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் என்ற இனிய நூல் ஒன்றைப் பாடியுள்ளார்கள்.

www.saivamonline.com

## ஒரு சுவையான சம்பவம்:

தக்கவர்களைக் கொண்டு தமிழ் நூல்களைப் பாடுவிக்க வேண்டுமென்பதில் தருமையாதீனம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல. இவ்வாறான முயற்சிகளுக்கு ஒரு நல்ல சான்று, சீகாழி அருணாசலக் கவிராயரைக் கொண்டு இத் தலத்திற்குச் சீகாழிப்பள்ளு, சீகாழியந்தாதி, சீகாழித் தலபுராணம் என்ற மூன்று அரிய நூல்களை அக்காலத்தில் பாடுவித்துக் கொண்டது. தருமை ஆதீனப் புலவர் சீகாழி அருணாசலக் கவிராயர். இவர்கள் தங்கி வாழ்ந்தது தில்லையாடி என்ற சிற்றூரில். ஸ்ரீ சிதம்பரநாதமுனிவர் என்பார் சீகாழி கட்டளை விசாரணையாக இருக்கையில் அருணாசலக்கவிராயரைக்கொண்டு சில நூல்களை உருவாக்க நினைத்தார்கள். ஒருமுறை கவிராயர் சில நாட்கள் சீகாழி யில் தங்கி, சீகாழிப்பள்ளு என்ற நூலில் சில பாடல்கள் பாடினார்கள். இடையே வேலை நிமித்தமாகப் பாண்டிச்சேரி செல்ல நேரிட்டது. அடிக்கடி கவிராயர் வெளியூர் செல்வதால் நூல் விரைந்து முற்றுப் பெறுமை உணர்ந்த ஸ்ரீ சிதம்பரநாத முனிவர் தமிழ் அன்பால் ஒரு விளையாடல் நிகழ்த்தினார்கள். கவிராயர் ஒருமுறை பாண்டிச்சேரி சென்றிருந்த நேரத்தில் தக்கவர்களை அனுப்பி, கவிராயர் அழைத்துவரக் கூறியதாகத் தில்லையாடியில் இருந்த அவர்கள் குடும்பத்தாரைக் குடிபெயர்த்துச் சீகாழிக்குக் கொண்டு வந்து ஒரு இல்லத்தில் குடியமர்த்தினார்கள். கவிராயர் பாண்டிச்சேரியிலிருந்து திரும்பிச் சீகாழி வந்தார்கள். சில நாள் கழித்து வீதிவலம் வருவோம் எனக் கவிராயரை அழைத்துக்கொண்டு சுவாமிகள் புறப்பட்டார்கள். வடக்கு வீதி வந்ததும் ஓர் இல்லத்தில் தம் குடும்பத்தார் இருப்பது கண்டு அளவிலா வியப்படைந்தார். சுவாமிகள் உம்மைச் சீகாழியிலேயே இருத்துதற்கு நாமே இக்காரியம் செய்தோம் என்றார்கள். சுவாமிகளின் தமிழ் அன்பு கண்டு நெகிழ்ந்த அருணாசலக்கவிராயர் அன்றுமுதல் சீகாழியிலேயே தங்கினார் கள். தில்லையாடிக் கவிராயரைச் சீகாழி அருணாசலக்

www.saivamonline.com

கவிராயராக மாற்றி மேற்கண்ட நூல்களை அவர்வழி உலகுக்கு வழங்கிய பெருமை தருமையாதீனத்திற்கே உரியது. தமிழ் மொழியில் விளங்கும் சிறந்த இசை நூல்களுள் ஒன்ருகிய 'இராமநாடகக் கீர்த்தனை' இவர்களாலேயே பாடப்பெற்றது. மற்றும் சிறந்த சாகித்தியங்கள் பல செய்த சீகாழி முத்துத்தாண்டவர், தமிழ் அறிஞராகத் திகழ்ந்த காழி சிவ. கண்ணுசாமிப்பிள்ளை போன்ருேரும் ஆதீன அருளாதரவில் தமிழ்ப்பணியாற்றியவர்கள்.

## மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை நூல்கள் :

அக்காலத்தில் சிறந்த தமிழ்க்கவிஞராகவும், விரைந்து பாடல்பாடும் வல்லுநராகவும் திகழ்ந்து, பிற்காலக் கம்பர் என்றே பாராட்டப் பெற்றவர்கள் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள். இவர்களைக் கொண்டு குறுக்கைத் தலபுராணம் (736 விருத்தம்), திருத்துருத்தி (குத்தாலம்) தலபுராணம் (1602பாடல்) என்ற இரண்டு பெரிய தலபுராணங்களும், ஆச்சாள்புரத்து எழுந்தருளியிருக்கும் உமையம்மைமீது, திருவெண்ணீற்றுமையம்மை பிள்ளைத்தமிழும்,[1] திருக்கற்குடிமாலை (100 பாடல்) என்ற கனிவுமிக்க சிறுநூல்ஒன்றும் தருமையாதீனத் திருக்கோயில்களுக்குச் செய்துகொள்ளப்பெற்றன. இதுபோல் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரைக் கொண்டு ஆச்சாள்புரத் தலபுராணம், சீகாழி வடுகநாத தேசிகரைக் கொண்டு தென்திருமுல்லைவாயில் தலபுராணம் என்ற இரு நூல்கள் இயற்றுவிக்கப்பெற்றன. திருப்பறியலூர்த் தலபுராணத்தைத் திருவாவடுதுறை ஸ்ரீ பின்வேலப்பதேசிகர், கடவுள்வாழ்த்து உட்பட 11 சருக்கங்களாகப் பகுத்துக் கொண்டு 655 திருவிருத்தங்களால் பாடியுள்ளார்கள்.

---

1. தருமையாதீனத்தில்இந்நூல் மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் உரையோடு அச்சிடப் பெற்றுள்ளது.

www.saivamonline.com

திருவையாற்றுத் தலபுராணம் கோவிந்த தீட்சிதர் முயற்சியால் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர் ஒருவரால் இயற்றப் பெற்றது. செஞ்சடை வேதிய தேசிகர் என்ற சிவாசாரியர்ஒருவர் பனசைப் புராணமும் (திருப்பனந்தாள்) பனசைப்பதிகம் ஒன்றும் இயற்றியுள்ளார். இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஸ்ரீ சண்முகத் தம்பிரான் என்பவர்கள் செஞ்சடையப்பர்மாலை, பெரியநாயகிமாலை, என்ற இரண்டு சிறு நூல்கள் இயற்றியமை முன்னரே நினைவுகூரப்பெற்றது. திருக்கோளிலிநாதர்உலா என்ற நூல் ஒன்றும் உளது. இதன்ஆசிரியர் யார் என்று விளங்கவில்லை. திருபுவனத்திற்கு ஒரு வடமொழித் தலபுராணம் உள்ளது. 307 பாடல் கொண்ட தலபுராணம் ஒன்று திருநள்ளாற்றுக்கும் உள்ளது,

## அபிராமி அந்தாதி :

திருக்கடவூர்த் தலத்தில் வாழ்ந்திருந்த அபிராமி பட்டரை அறியாதவர் சமயஉலகில் இன்று எவரும் இலர். இருப்பினும் அபிராமி அந்தாதி அனைவர் நெஞ்சிலும் இருப்பது. திருக்கடவூர்த் தலத்திற்கு அபிராமி பட்டர் செய்த இவ்வந்தாதிநூலோடு, அபிராமிஅம்மை பதிகம் முதலிய சிலபதிகங்களும் உண்டு. இவ்வாறு தருமையாதீன அருளாட்சிக்குட்பட்ட திருக்கோயில்களில் தமிழும், தமிழ் நெறியும் தமிழ்ச் சிற்றிலக்கியங்களும், பேரிலக்கியங்களாகக் கருதத்தக்க தலபுராணங்களும் தோற்றங்கொண்டு வளரத் தருமையாதீனம் செய்துவரும் பணிகள் மிகப்பல

* ஞானக்கூத்தர்

* திருவைகாவூர் உலா.

www.saivamonline.com

# ஆதீன வெளியீடுகள்

## பன்னிரு திருமுறைகள் :

தமிழ் இலக்கிய வரலாற்றில் சைவசமயத்தின் பங்கு பெரிது. சைவஞ்சார்ந்த தோத்திரங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், சாத்திரங்கள் போன்ற இவற்றை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் தமிழ் இலக்கிய வரலாறே முழுமைபெற இயலாது. ஒருவகையாகக் கூறவேண்டு மானால் தமிழ்இலக்கியவரலாறு, சைவ இலக்கிய வரலாருகவே காணப்பெறும். இத்தகு பேரிடத்தைப் பெற்றுத் திகழும் சைவ–சமய நூல்களுள் குறிப்பிடத்தக்க சிறப்பு மிக்கன பன்னிரு திருமுறைகள். இவை முறையே முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் அருளியன. நான்கு, ஐந்து, ஆறுந் திருமுறைகள் திருநாவுக்கரசர் அருளியன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது ஏழாந் திருமுறை. திருவாசகமும் – திருக்கோவையாரும் மாணிக்கவாசகர்

www.saivamonline.com

அருளிய எட்டாம் திருமுறை. ஒன்பது அருளாசிரியர் களின்[1] பாடல் தொகுப்பு ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பா-திருப்பல்லாண்டு. பத்தாந்திருமுறை திருமூல நாயனாரின் திருமந்திரம். திருவாலவாயுடையார் முதலாக பன்னிரண்டு[2] அருளாசிரியர்களின் நாற்பது நூல்களின் தொகுதி பதினோராந்திருமுறை. பன்னிரண்டாம் திருமுறை சேக்கிழார்சுவாமிகளின் பெரியபுராணம்.

## திருமுறைகளுக்கு உரை காணப்படாமை ஏன்?

சைவத்தில் இத்திருமுறைகள் பெருஞ்சிறப்புப் பெற்று வழங்கிவருவன. திருமுறைப்பாடல்கள் இசையோடு திருக் கோயில்களில் ஓதுவா மூர்த்திகளாலும், பிற அன்பர் களாலும் ஓதப்பெற்றன. என்றாலும் இவற்றிற்கு உரை காணும் முயற்சி மேற்கொள்ளப் பெறாமலேயே இருந்து வந்தது. 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லு வார்-செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்' என்று அருள்நூல்கள் இம்முயற்சிக்கு வழிகாட்டியிருந்தும், திரு முறைகளுக்குப் பிறழ உரை காண்பது மரபுக்கு மாறானது என்று நம்முன்னோர்களால் எண்ணப்பட்டது. கும்பகோணம்

---

1. ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா ஆசிரியர்களும் அவர்கள் அருளிய பதிகங்களும் 1. திருமாளிகைத் தேவர்-4, 2. சேந்தனார்-3, 3. கருவூர்த் தேவர்-10, 4. பூந்துருத்திநம்பி காடநம்பி-2, 5. கண்டராதித்தர்- , 6. வேணாட்டடிகள்-1, 7. திருவாலியமுதனார் 4, 8. புருடோத்தமநம்பி-2, 9. சேதிராயர்-1

திருப்பல்லாண்டு: ஆசிரியர் சேந்தனார்-பதிகம் 1

2. பதினோராம் திருமுறை ஆசிரியர்களும் அவர்கள் அருளிய நூல்களின் தொகையும்: 1, திருவாலவாயுடையார்-1, 2 காரைக்கால் அம்மையார் -3, 3. ஐயடிகள் காடவர்கோன்நாயனார்-1, 4. சேரமான் பெருமாள் நாயனார்-3, 5. நக்கீர தேவநாயனார்-10, 6. கல்லாடதேவ நாயனார்-1, 7. கபிலதேவநாயனார்-3, 8.பரணதேவ நாயனார்-1, 9. இளம் பெருமான் அடிகள்-1, 10. அதிராவடிகள்-1, 11. பட்டினத்துப் பிள்ளையார்-5 12. நம்பியாண்டார் நம்பி-10.

www.saivamonline.com

அரசினர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியராக விளங்கிய திரு. தியாகராஜச் செட்டியார் போன்றோரும் இக்கருத்தினர் என அறிகிறோம்.[1] அருளனுபவம் பெற்ற ஞானாசிரியர்களால் அருளிச்செய்யப் பெற்ற திருமுறைகளை அவ்வாறான சான்றோர்கள் வாயிலாக மரபுவழிப் பெற வேண்டுமே யன்றித் தான்தோன்றித்தனமாக எழுதுதல் பிழையாய் முடியும் என்ற அச்சமே இதற்குக் காரணம் என அறிய முடிகிறது. என்றாலும் காலப்போக்கில் பொருளறிந்து பயில விரும்பியவர்களுக்கு உரை நூல்கள் இல்லாமை ஏமாற்றமாக அமைந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் திருமுறைகளுக்கு உரை காணும் முயற்சி ஆங்காங்கே மேற்கொள்ளப் பெற்றது. திருவாசகத்தின் சில பகுதிகளுக்கு இவ்வாறான உரைகள் தகுதி மிக்க நல்லறிஞர்களால் எழுதி அச்சிடப் பெற்றன.[2] இவர்கள், வைஷ்ணவத்தில் உள்ளதுபோல் பேருரை காணமுற்பட்டமையின் இம்முயற்சிகள் முற்றுப் பெறுமலேயே நின்றன- பல்லாயிரக்கணக்கான அருட் பாடல்களுக்கு உரைகாண வேண்டுமே என்ற மலைப்பும், இவற்றை அச்சிட்டு வெளியிடுவதில் ஏற்படும் செலவு பற்றிய எண்ணமும் இம்முயற்சிக்குத் தடையாய் இருந்தன.

## உரைகாணும் முயற்சி :

தருமையாதீனம் சைவத்திற்குச்செய்யும் அரியதொண்டு என்று மட்டும் இதனைக் கருதாது செந்தமிழ் மொழிக்குச் செய்யும் பெரிய சிறப்பாகக் கருதித் திருமுறைகளுக்கு உரை காணும் மாபெரும்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

---

1. திருவாசகத்திற்கு உரை வரைய வற்புறுத்திய அன்பர் ஒருவரைக் கோபித்துக் காவிரியில் விழுந்து உயிர்விடுவேன் என இவர்கள் கூறியதாக டாக்டர். உ. வே. சா. குறித்துள்ளார்.

2. மறைமலையடிகள் முதல் நான்கு அகவல்களுக்குத் திருவாசகப் பேருரை ஒன்று வரைந்துள்ளார்.

www.saivamonline.com

தருமையாதீனத்தின் 25வது குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் செந்தமிழிலும் சிவநெறியிலும் பேரீடுபாடு கொண்டவர்கள். திருவருள்வலம் வாய்க்கப் பெற்றவர்கள். திருமுறைகளுக்கு உரைகாணும் முயற்சியை உறுதியோடு மேற்கொண்டார்கள். வடமொழி, தென்மொழி இரண்டிலும் பெரும்புலமைமிக்கு, அக்காலை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் துணைத்தலைவராகப் பணியாற்றிய மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களிடம் முதல் திருமுறைக்கு உரைகாணும்படி உத்தர விட்டார்கள். சீகாழித் தலத்திற்கே சென்று திருஞான சம்பந்தர் திருவடிகளைப் பணிந்து 'தோடுடைய' என்ற முதல் பதிகத்திற்கு உரை கண்டு, தம் பக்தியும் புலமையும் துணையாக முதல் திருமுறைக்கு உரை கண்டார்கள்.

## முதல் திருமுறை உரைநூல்:

தருமையாதீனக் குரு முதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழா மலராக 3—6—1953 அன்று முதல்திருமுறை உரையோடு தமிழுலகிற்குக் கிடைத்தது. பண்முறையில் அமைந்த முதல் திருமுறையில், நட்டபாடை முதல் மேகராகக்குறிஞ்சி வரை ஏழு பண்களில் 136 பதிகங்கள் உள்ளன.[1] அக்காலை மௌன ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திருவாரூர் இராஜாங்கக்கட்டளை கட்டளைவிசாரணையாக விளங்கினார்கள். இவர்களே இம் முதல் திருமுறையின் பதிப்பாசிரியர். தருமையாதீன வெளியீட்டு வரிசையில் இந்நூலின் வெளியீட்டு எண் 290. மூலமும் உரையும் 626 பக்கங்கள். முன்னுரை முதலியன தனியே 119 பக்கங்கள். காசிவாசி ஸ்ரீ-ல-ஸ்ரீ அருள்நந்தித்

---

1 முதல் திருமுறையில் 1 நட்டபாடை-22, 2. தக்கராகம்-24 3. பழந்தக்க ராகம்-16, 4. தக்கேசி-12, 5. குறிஞ்சி-29, 6. வியாழக் குறிஞ்சி-25, 7. மேகராகக் குறிஞ்சி-7. என்ற ஏழு பண்கள் உள்ளன. 136–வது பதிகம்-யாழ்மூரி-இது ஒரு பண் வகையாகக் கொள்ளப்பெறுவதில்லை.

www.saivamonline.com

தம்பிரான் சுவாமிகளும் மற்றும், குடந்தை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்களும் இவ்வுரை நூலுக்கு மதிப்புரை வழங்கியுள்ளார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகளின் மதிப்புரையில்,

> "எங்கள் தருமபுர ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக மூர்த்திகள் 'திருமுறைகள் ஓதாய்' என்று பணித்தருளினார்கள். உலகு எளிதில் ஓதி உணர்ந்து உய்தற்பொருட்டு, எங்கள் குருஞானசம்பந்தர் வழிவழி எழுந்தருளியுள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இத் திருமுறைகளைக் குறிப்புரையுடன் வெளியிட்டருளத் திருவுளம் பற்றியது, 'வேதநெறி தழைத்தோங்கவும்' 'மிகு சைவத்துறை விளங்கவும்' செய்யும். இது திண்ணம்."

எனப் போற்றியிருப்பது இங்கே நினைவுகூரத்தக்கது ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள்,

> "நிகண்டுகளையும், ஆராய்ச்சிகளையும் கொண்டு அருள்வாக்குகளுக்குப் பொருளறிய முனையுங்கால், அவற்றின் உண்மைப் பொருள்களினின்று பிறழும் நிலை நேரிடக்கூடும் என்னும் சில பெரியோர்களின் கொள்கை உண்மையேயாயினும், அத்திருமுறைகளை மேனோக்காக நோக்குங்காலும், அவைகளில் பதிந்து கிடக்கின்ற சிறப்புப் பொருளாம் மாணிக்கங்களினின்று ஒளி வீசும் ஒளிகளின் கொழுந்தையேனும் மக்கள் கண் குளிரக் காணும்படிச் செய்தாலன்றிச் சமயக் கல்வி முறை குன்றிவரும் இக்காலத்துச் சூழ்நிலையில், நமதினைஞர்களுக்கு, நமது அரிய பெரிய அருள்வாக்குக் களைச் சுவைக்கும் பேறே எட்டாதாகிவிடுமோ என்ற அச்சத்தை அகற்ற இக்காலை....... தருமை ஆதீனத்தி னின்றும் வெளிவரும் திருமுறைப்பதிப்பை மனமார வாழ்த்துகின்றோம்."

www.saivamonline.com

எனக் கூறியிருப்பது தருமையாதீனம் தக்க நேரத்தில் மேற்கொண்ட இன்றியமையாத முயற்சி இத்திருமுறை உரை வெளியீடு என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

## திருமுறை உரைநூல்: அமைப்பும்: சிறப்பும்:

முதல் திருமுறை உரைப் பதிப்பின் அமைப்பு இங்கே ஓரளவு நோக்கத் தக்கது. திருஞானசம்பந்தரின் மூவண்ணத் திருவுருவப் படம் முதற்கண் இந்நூலை அலங்கரிக்கிறது. தொடர்ந்து நூல்மதிப்புரைகள், தல அட்டவணை, முகவுரை, தலங்களின் குறிப்புக்கள், தேவாரத்திருப்பதிகங்கள் பாட்டு முதற்குறிப்பகராதி என இந்நூலைப் பாகுபடுத்திப் பதிப்பித்துள்ளனர். தலங்களின் குறிப்புக்கள் என்ற பகுதியில் முதல் திருமுறையில் இடம்பெற்றுள்ள 87 தலங்கள் பற்றி மிக விரிவான குறிப்புக்கள் தரப்பெற்றுள்ளன. தலக்குறிப்புக்களில் தலம்: தலவிசேடங்கள்: சுவாமிகளின் பெயர்கள்: தீர்த்தங்கள்: வழிபட்டோர்: தலம் அமைந்திருக்கும் இடம் அவ்வத்தலத்தின் கல்வெட்டுக்கள் பற்றி விரிவாக ஆராய்ந்து தொகுக்கப்பெற்ற கல்வெட்டுச் செய்திகள் என்பன நிரலே இடம் பெற்று, ஒவ்வொரு தலம்பற்றியும் நிறைவான வரலாற்றை வழங்குகின்றன. கல்வெட்டுக் குறிப்புக்களில் சிலவற்றை அண்ணுமலைப்பல்கலைக்கழக ஆராய்ச்சிவிரிவுரையாளர் திரு. தி. வி. சதாசிவ பண்டாரத்தார் எழுதி உதவியுள்ளார். முப்பதிற்கும் மேற்பட்ட தலவிளக்கப் படங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் வெளியீட்டில் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், திரு. மு. ஆறுமுக தேசிகர், திரு. வீ. சா. குருசாமி தேசிகர், திரு. வை. திரு. ஞானசம்பந்தன் போன்ருர் தலங்களின் வரலாறு முதலியன எழுதி உதவியுள்ளனர். உரை திட்பநுட்பஞ் செறிந்ததாய் அரும்பத உரையாக, புராண வரலாறு, இலக்கண முடிபுகள் முதலியனவற்ருேடு அமைந்துள்ளது. மேலே பாடல்களும் கீழே விரிவான குறிப்புரைகளுமாக நூல் அச்சிடப் பெற்றுள்ளது. ஒவ்வொரு பதிகத்தின் தொடக்கத்திலும்

www.saivamonline.com

பெரியபுராண அடிப்படையில் பதிக வரலாறு ஒன்றும் சுருக்கமாக எழுதப் பெற்றுள்ளது. இவ்வாறு தமிழ்உலகுக்கு ஒரு அரிய பேருக முதல் திருமுறை உரை நூலைத் தருமையா தீனம் வெளியிட்டது. இவ்வளவு பெரிய நூலுக்கு ஆதீனம் குறித்த விற்பனை விலை என்ன தெரியுமா? ரூபாய் 3-50. இந் நூல் தருமையாதீனம் ஞானசம்பந்தம் அச்சகத்தில் பதிப் பிக்கப் பெற்றது.

## இரண்டாம் திருமுறை:

தருமையாதீனம் திருமுறை உரைவெளியீட்டில்காட்டிய பேரார்வத்திற்கு முதல்திருமுறை வெளிவந்த பிறகு அடுத்த ஆண்டுக்குருமுதல்வர் குருபூஜைவிழாவிலேயே(23—5—1954) இரண்டாம் திருமுறை உரை வெளியிடப்பெற்றதே சான்ருகத் திகழ்கிறது. தருமையாதீனப் பல்கலைக்கல்லூரியின் பேராசிரியராகவும் பின்னர்முதல்வராகவும் திகழ்ந்தபெரும் புலவர் வித்துவான் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் இவ்விரண்டாம் திருமுறைக்கு உரை கண்டார்கள். இந்நூலின் வெளியீட்டு எண் 317. இதன்கண் இந்தளம் முதல் செவ்வழி வரை ஆறுபண்களில் 122 பதிகங் கள் உள்ளன.[1]

முதல் திருமுறையில் காணப்பெற்ற நலங்களுக்கு மேலாகப் புதியபல முயற்சிகள் இவ்விரண்டாம் திருமுறை யில் மேற்கொள்ளப்பெற்றன. மேலைநாட்டு ஆங்கிலநூல் பதிப்புக்களுக்கு இணையாகப் பல அரிய பகுப்புக்களும் குறிப்புக்களும் இந்நூலுள் இடம்பெற்றன. திருவாவடுதுறை ஆதீன 21வது குருமூர்த்திகள் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் பாராட்டுரை வழங்கி இவ்வுரை நூலுக்கு அணிசேர்த்திருக்கிருர்கள். திரு. சி. எம். இராமச்

1. இரண்டாம் திருமுறையில் இடம் பெற்ற பண்களும்-பதிகங்களும், 1. இந்தளம்-39, 2. சீகாமரம்-14, 3. காந்தாரம்-29, 4. பியந்தைக் காந்தாரம்-14, 5. நட்டராகம்-16, 6. செவ்வழி-10, ஆகப்பதிகம், 122.

www.saivamonline.com

சந்திரஞ்செட்டியார் அவர்கள் தலவரலாறுகளும் கல்வெட்டுக் குறிப்புக்களும் எழுதியுள்ளார். இவர்களோடு இணைந்துநின்று இப்பணியில் ஒத்துழைத்தவர்கள் திரு. வை. சுந்தரேசவாண்டையார் அவர்கள். இப்பதிப்பில் அணிந்துரை என்ற புதியபகுதி ஒன்று உரையாசிரியரின் திறமையைப் பாராட்டுகின்றது. இதனைத் திரு. பண்டித. அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார். வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் இந்நூல் குறிப்புரைகளைப் பலமுறை நின்று ஆராய்ந்து 25பக்கஅளவில் குறிப்புரை மாட்சி என்ற கட்டுரை ஒன்றை முதற்கண் எழுதியுள்ளார். இது இந்நூல் உரையில் நம்நெஞ்சை ஈடுபடவைக்கும் முன்னோடியாக விளங்குகின்றது. மற்றும் உரையில் மேற்கோளாக எடுத்துக்காட்டப்படும் நூல்களுக்கு அவற்றின் பக்கங்களோடு மேற்கோள்நூல் அகராதி தொகுக்கப்பட்டுள்ளது. நூலில் இடம்பெற்றுள்ள 14 படங்களுக்கும் அட்டவணை தரப்பெற்றுள்ளது. அடுத்துத் தரப்பெற்றுள்ள 'தலமும் பதிகவரலாறும்' பற்றிய அட்டவணை மிகஅழகாகத் திட்டமிட்டு அமைக்கப் பெற்றுள்ளது. தொடர்எண்: தலமும் பதிகத் தொடக்கமும்: பதிக எண்: பதிகப் பக்கம்: தலவரலாற்றுப்பக்கம் எனமுறையே நீண்டுசெல்லும் இவ்வட்டவணை நூலுள் நுழையப் பேருதவிபுரிகிறது.

இரண்டாம் திருமுறையில் 90 தலங்களின் வரலாற்றுக் குறிப்புக்கள் மிகவிளக்கமாக 177 பக்கங்களில் அச்சிடப் பெற்றுள்ளன. இவையே தனியே ஒருநூலாகக் கருதத் தக்கன. மேலும் இரண்டாம் திருமுறையில் சிறப்பாகவரும் திருப்பதிக வரலாறுகளுக்கு ஒருபட்டியல் தரப்பெற்று உள்ளது. இத்திருமுறையில் இடம்பெற்றுள்ள பண்களையும்-அப்பண்ணில் அமைந்த பதிகத்தொகையினையும் இன்னொரு பக்கத்தில் முறையாகத் தந்துள்ளனர். முதல் திருமுறைபோலவே பாடல்கள்மேலும், பதிகப்பாடல்களின் குறிப்புரை கீழுமாய் அச்சிடப் பெற்றுள்ளன. உரைப் பகுதியின் இறுதியில் மிஞ்சும் இடங்களில் முறையாக

www.saivamonline.com

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதிப் பாடல்களை அச்சிட்டிருப்பது ஒருநல்லமுயற்சி. உரையாசிரியரின் புலமைத் திறத்தையும், உரைச்சிறப்பையும் தமிழுலகம் நன்கு அறியும். இந்நூல் 596 பக்கங்கள் கொண்டது. விலை ரூபாய் 5–50. தற்போது தருமையாதீன 26வது குருமூர்த்திகளாகத் திகழும் ஸ்ரீ–ல–ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், அக்காலை ஒடுக்கம் வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் என்ற திருநாமத்தோடு சென்னை தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தின் தலைவராக விளங்கினார்கள். இவர்களே இவ்விரண்டாம் திருமுறையின் பதிப்பாசிரியராக இருந்து இந்நூலைப் பதிப்பித்துள்ளார்கள்.

## மூன்றும் திருமுறை :

காந்தார பஞ்சமம் முதல் அந்தாளிக்குறிஞ்சி முடிய 9பண்களில்[1] 125 பதிகங்களைக் கொண்ட மூன்றுந்திருமுறைக் குறிப்புரை திரு. பண்டித. அ. கந்தசாமிப்பிள்ளை அவர்களால் எழுதப்பெற்றது. உரையாசிரியர் பாரம்பரியம் மிக்க தமிழ்க்குடும்பத்தில் வந்தவர். கல்லூரிப் பேராசிரியராக இருந்து ஓய்வுபெற்றவர். முன்வெளிப்போந்த இருதிருமுறை உரைகளைப் போலவே இம்மூன்றும் திருமுறையும் அடுத்த ஆண்டுக் குருமுதல்வர் குருபூஜைவிழாவில் (11—6—1955 இல்) வெளிவந்தது. குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்கள் இவ்வுரை நூலுக்குப் பாராட்டுரை வழங்கியுள்ளார்கள். இம்மூன்றுந் திருமுறையில் புதியஉத்தி ஒன்று கையாளப் பெற்றுள்ளது. மூன்றுந்திருமுறையின் பொருள்நலத்தைப் பன்முறை நின்று ஆராய்ந்து மூன்றுசட்டுரைகள் 66பக்க அளவில் எழுதி அச்சிடப்பட்டுள்ளது. இவற்றிற்குச்

1. மூன்றும் திருமுறைப்பண்களும்-பதிகத்தொகையும்: 1. காந்தாரபஞ்சமம் -24, 2. கொல்லி-17, 3. கொல்லிக்கௌவாணம்-1, 4. கௌசிகம்-15. 5- பஞ்சமம்-10, 6. சாதாரி-33, 7. பழம்பஞ்சுரம், 17, 8. புறநீர்மை-6 9. அந்தாளிக்குறிஞ்சி-2, ஆகப்பதிகம் 125.



www.saivamonline.com

சிற்றுராய்ச்சிப் பெரும்பொருட் கட்டுரைகள் என்று பொதுத் தலைப்பிடப் பெற்றுள்ளது. அடியார் பெருமை என்ற தலைப்பில் வித்துவான். திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், இயற்கைப் பொருளின்பம் என்ற தலைப்பில் வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனார் அவர்களும், இன்ப உணர்ச்சியில் திளைத்தல் என்ற தலைப்பில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும் இக்கட்டுரைகளை வடித்துள்ளனர். இவை அரிய பொருட் சிறப்பு மிக்கன. இம்மூன்றும் திருமுறையில் 85 தலங்களின் வரலாறு மற்றும் கல்வெட்டுக் குறிப்புக்களை 135பக்கத்தில் வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார் அவர்கள் சிறப்புறத் தொகுத்துள்ளார். இதன் இறுதியில் பாடல்முதற் குறிப்புஅகராதியோடு மூன்று திருமுறைகளிலும் வந்துள்ள அருஞ்சொற்களைத் திரட்டி அகரவரிசைப்படுத்திப் பதிக எண்ணும்-பாடல் எண்ணுமாகச் சொல்லகராதிச் சுருக்கம் ஒன்றை 35 பக்கங்களில் அச்சிட்டுள்ளது பாராட்டத்தக்க அரிய முயற்சியாகும். இந்நூல் 667 பக்கம் கொண்டது. விலை ரூபாய் 5–75 இதனைப்பதிப்பித்தவர்கள் திருநள்ளாறு தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.

## நாலாந்திருமுறை :

நாலாந்திருமுறை, இரண்டாம் திருமுறைக்குறிப்புரை ஆசிரியர் வித்துவான். திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களே குறிப்புரை வரைய 1957-இல் முன்னைய பதிப்புக்களின் நலமெலாம் நிறைய வெளிவந்தது. இதன்கண் கொல்லி முதல் குறிஞ்சி வரை 10 பண்களில் 113 பதிகங்கள் உள்ளன.[1] அப்போது அறநிலையத்துறை

1. நாலாந்திருமுறையில் இடம் பெற்றுள்ள பண்களும் பதிகங்களும்: 1. கொல்லிப்பண்ணில் (அ) முதல்திருப்பதிகம்-1, (ஆ) திருநேரிசை, 58, (இ) திருவிருத்தம்-34, ஆகப்பதிகம் -93., 2. காந்தாரம்-6, 3. பியந்தைக் காந்தாரம்-1. 4 சாதாரி-, 5. காந்தார பஞ்சமம்-2, 6. பழந்தக்கராகம்-2, 7. பழம்பஞ்சுரம்-2, 8. இந்தளம்-3, 9. சீகாமரம் -2, 10. குறிஞ்சி-1. ஆக 113.

www.saivamonline.com

அமைச்சராக விளங்கிய திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் இவ்வுரை நூலுக்கு மதிப்புரை வழங்கியுள்ளார். இதில்,

> 'சைவத்தைப் பரப்பும் வகையில் இவர்கள் (தருமபுரம் ஆதீனம்) ஆற்றியுள்ள அருஞ்செயல்கள் பல. அவற்றினுள்ளே இவ்வாறான வெளியீடுகளையும் அவர்கள் மேற்கொண்டுள்ளது மிகவும் போற்றத்தக்கதாகும். தமிழ் உலகம், குறிப்பாகச் சைவப் பெருமக்கள் இவர்களின் இந்நன் முயற்சியைப்போற்றி வாழ்த்துவர் என்பதிலே ஐயமில்லை. அவர்களின் தமிழகத் தொண்டும் சைவத் தொண்டும் பன்னெடுங்காலம் வாழவேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.'

எனத் திருமுறை உரைவெளியீட்டு முயற்சியை மனம் நிறையப் பாராட்டியிருப்பது நினைவுகூரத்தக்கது. சமயத் துறையைச் சார்ந்தவர்களை மட்டுமின்றி அரசியல் நெறி நிற்போரையும் தருமையாதீனத் தமிழ்ப் பணிகள் பெரிதும் கவர்ந்துள்ளன என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

பெரியபுராணப் பேருரையாசிரியர் கோவை திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் (சம்பந்தசரணாலயர்) இப் பதிப்பிற்கு அணிந்துரை வழங்கியுள்ளார். பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல், திருமுறை உரை நூல் வெளியீடுகளின் அருமை தெரிந்த இவர்கள்,

> 'இவற்றுக்கு (திருமுறைகள்)ப் பொருள் காணுதல் மிகுந்த சிரமமான காரியம்: தேவாரங்களைப் பொருளுடன் வெளியிடுதல் இதுவரை எவரும் செய்யாத வேலை: தருமபுர ஆதீனத்தில் இதனை மேற்கொண்டது சைவஉலகத்திற்கும் தமிழுலகத்திற்கும் பேருபகாரமான காரியம். திருமுறைகளுக்குப் பொருள் காணுதல் எளிதன்று.'

www.saivamonline.com

என்றெல்லாம் பாராட்டியிருப்பது இத்துறையில் மேலும் மேலும்முயற்சி மேற்கொள்ள ஒருதூண்டுதலாக அமைந்தது. நாலாந்திருமுறை உரைநலம் குறித்து வித்துவான் திரு. சொ. சிங்காரவேலனுர் அவர்களால் எழுதப்பெற்ற உரைமாட்சி என்னும் திறனுய்வுக்கட்டுரை ஒன்றும் இந் நூலின் தொடக்கத்தில் உள்ளது. திருநாவுக்கரசுநாயனுர் வரலாறு சுருக்கமாக எழுதி இணைக்கப்பெற்றுள்ளது. சாத்திர நுட்டமும், சொற்பொருளாராய்ச்சியும் மிக்கதாக நாலாந்திருமுறை உரை மிக விரிவாக அமைந்துள்ளது. 848 பக்கங்கள் கொண்ட நாலாந்திருமுறையின் வெளியீட்டு எண் 391. விலை ரூ. 8-00. இதன் பதிப்பாசிரியர் வேளூர் தேவஸ்தானக் கட்டளை விசாரணை ஸ்ரீமத். சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.

## ஐந்தாம் திருமுறை :

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்களின் மதிப்புரையுடன் 1961-இல் ஐந்தாம் திருமுறை உரைநூல் வெளியிடப் பெற்றது. ஐந்தாம் திருமுறையில் முதன் முறையாக, தேவாரப் பாடல்களுக்குப் பொழிப்புரை எழுதப்பெற்றன. இதனை வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனுர் அவர்கள் எழுதியுள்ளார். வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் அவர்கள் குறிப்புரை வரைந்துள்ளார். பதிகவரலாற்றை வித்துவான். சிரோமணி திரு. வி. சபேசன் அவர்கள் தொகுத்துள்ளார். இவ்வாறு மூவரின் இணைந்த முயற்சியாக இவ்வுரை நூல் வெளியிடப் பெற்றுள்ளது. இவ்வுரை நூலுக்கு முன்னதாக வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் வரைந்துள்ள உரைச்சிறப்பு என்ற கட்டுரை ஒன்று இடம்பெற்றுள்ளது. வெளியீடு எண் 500 பக்கங்கள் 648. விலை ரூ. 8-00. ஒடுக்கம். வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற இந்நூலுள் திருக்குறுந்தொகைப் பதிகங்கள் 100 உள்ளன.

www.saivamonline.com

## சித்தாந்தக் கலைமணி :

தருமையாதீனத் திருமுறை-உரை வெளியீட்டுப் பணியில் பெரும்பங்கு வகிப்பவர்கள், தருமையாதீனத் தமிழ்ப் புலவரும், சித்தாந்தக்கலைமணி என்ற சிறப்புப் பெற்றவர்களும் ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமாகத் திகழ்ந்த மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள். இவர்களின் ஆழ்ந்தகன்ற தமிழ்ப் புலமையும், நுண்மாண் நுழைபுலமும், உரைகாணும் திறமும், இவர்களால் உரை வரையப் பெற்ற திருமுறை நூல்களின் சில ஏடுகளைப் புரட்டுபவர்களுக்கே எளிதின் விளங்கும். தருமையாதீனத் திருமுறை உரை வெளியீட்டு வரிசையில் ஆறுந்திருமுறை தொடங்கிப் பத்தாந்திருமுறையின் முதல் மூன்று தந்திரங்கள்வரை இதுவரை வெளிவந்திருக்கும் திருமுறைகள் அனைத்திற்கும் இவர்களாலேயே உரைவிளக்கம் செய்யப் பெற்றுள்ளன.

## ஆறுந் திருமுறை :

ஆறுந்திருமுறையாகிய அப்பர் பெருமானின் 99 பதிகங்கள் கொண்ட திருத்தாண்டகம்[1] 1963-இல் குரு முதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தரின் குருபூஜை விழா மலராக வெளிவந்தது. தருமையாதீன உரை வெளியீடுகள் ஒன்றினும் ஒன்று மேன்மேலும் புதிய அமைப்புக்களோடு வெளிவந்தன. இம்முறையில் இவ்வாறும் திருமுறையில், திருநாவுக்கரசு சுவாமிகளின் வரலாறு என்ற அரிய கட்டுரை ஒன்று வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் அவர்களால்

---

1. இருபத்தேழ் எழுத்து முதலாகப் பெற்று வரும் அடிகளாலாகிய செய்யுட்கள் 'தாண்டகம்' எனப்படும். இருபத்தேழ் எழுத்துக்களுக்குக் குறைந்து வரும் அடிகளாலாகிய செய்யுட்கள் 'சந்தம்' எனப்படும். சந்த அடிகளும் தாண்டகங்களுள் விரவி வருதல் உண்டு. இவை சந்தத் தாண்டகம்-தாண்டகச் சந்தம்–சமசந்தத் தாண்டகம் என ஏற்ற பெற்றியான் வழங்கப்படும். இதன் இலக்கணம் யாப்பருங்கல விருத்தியுள் கூறப்பட்டுள்ளது.

www.saivamonline.com

எழுதப்பெற்றுள்ளது. 33 பக்கங்களுள் அமைந்துள்ள இக்கட்டுரை அப்பர்பெருமானின் அருள்வரலாற்றை முற்றிலும் அகச்சான்று காட்டி நிறுவுவது பெருஞ்சிறப்பு. வழக்கம் போல் அப்பர் தேவாரத்தின் இலக்கியப் பண்புகள் என்ற கட்டுரை வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் அவர்களாலும், நாவுக்கரசர் அருளிய நன்ஞானம் என்ற சாத்திர நோக்குக் கட்டுரை இந்நூல் உரைஆசிரியராலும், புராண வரலாற்றுக் குறிப்புக்கள் சிரோமணி, வித்துவான். திரு. வி. சபேசன் அவர்களாலும் வரையப் பெற்றுள்ளன. ஒடுக்கம் வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இதன் பதிப்பாசிரியர். ஆங்கில நூல்களில் காணப்படுவது போல முதன் முதலாக இப்பதிப்பில் அரும்பொருள் அகராதி என்ற ஒரு இன்றியமையாப் பகுதி மிகச் சிறப்பாகத் தயாரித்து வெளியிடப் பெற்றுள்ளது. நூலுள் காணப்பெறும் செய்திகளைக் கருத்துவகையால் தேடிக்காண இம்முயற்சி பெரிதும் உதவியாக அமைவது. குறிப்பாக,

அத்துவித விளக்கம்–பக் 374, 375

ஆக்கச்சொல் உவமை குறித்து வருதல்–49, 211

இராவணன் என்பதன் பொருள்–179

உருத்திர பல்கணத்தார்–731

கருடன் செருக்கு நீங்கிய வரலாறு–197

என இவ்வாறு 40 பக்கங்களில் இந்நூற் செய்திகளைத் தொகுத்துப் பட்டியலிட்டிருப்பது ஆய்வு மேற்கொள்வார்க்கும், ஒரு சில கருத்துக்களைத் தேடித் திரட்டமுயல்வார்க்கும் பெரும்பயனுய் அமைகிறது. இதுவன்றிச் சொல்லகராதிச் சுருக்கம் தனியே பின்னே தொகுத்து வழங்கப்பெற்றுள்ளது. இவ்வாறான உரைநூல்களைத் தருமையாதீனம் இலாபம் கருதி வெளியிடாது தமிழ் மொழிக்குச் செய்யும் தொண்டாகவே கருதியுள்ளமை (192+820)=1012 பக்கங்

www.saivamonline.com

களில் உயரிய காகிதத்தில் அச்சிடப்பெற்றுள்ள இந்நூலுக்கு ரூபாய் 8–00 மட்டுமே விலை குறித்துள்ளமையால் இனிது உணரலாம். இந்நூலின் வெளியீட்டு எண் 545.

## ஏழாந்திருமுறை :

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் ஏழாந்திருமுறைப் பாடல்கள் செறிவு மிகவுடையன. இதனால் ஏழாந்திருமுறைப் பாடல்கள் அனைத்திற்கும் பொழிப்புரையும், தனியே குறிப்புரையும் எழுதப் பெற்றுள்ளன. இத்திருமுறையில் இந்தளம் முதல் புறநீர்மை வரை 17 பண்களில் 100 பதிகங்கள் உள.[1] ஆறுந்திருமுறையில் காணப்பெறும் அனைத்து நலங்களும் இதிலும் இடம் பெற்றுள்ளன. 1964-இல் இப் பெரிய உரைநூல் வெளிவந்தது. ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளின் மதிப்புரை முதற்கண் அலங்கரிக்கிறது. 25வது குருமகாசந்நிதானம் அவர்கள் கயிலாயதரிசனம் முடித்துத் திரும்பியதை நினைவுகூர்ந்து கயிலை மால்வரையிலிருந்து தமிழ்பாட மண்ணுலகில் வந்த சுந்தரர் தேவாரத்தை அம்மால்வரையைத் தரிசித்து மீண்ட குருமணிகள் வெளியிடுவது எவ்வளவு பொருத்தம் எனக் குறித்துள்ளார்கள். அகச்சான்றுடன் சுந்தரர் வரலாறு விரிவாக ஆராய்ந்து தொகுக்கப் பெற்றுள்ளது. சுந்தரர் தேவாரத்தில் இலக்கியஇன்பம் என்ற கட்டுரையை வித்துவான் திருமதி ப. நீலா அவர்களும், சுந்தரர் தேவாரப் பொருளாராய்ச்சி என்ற கட்டுரையை வித்துவான் திரு. சொ. சிங்காரவேலனார் அவர்களும் வரைந்துள்ளனர்.

---

1. சுந்தரர் தேவாரம் (ஏழாந் திருமுறை) பண்களும்-பதிகங்களும்:
1. இந்தளம்-12, 2. காந்தார பஞ்சமம்-1, 3. காந்தாரம்-5, 4. குறிஞ்சி 4, 5. கொல்லி-7, 6. கொல்லிக் கௌவாணம்-7, 7. கௌசிகம்-1, 8. சீகாமரம்-4, 9. செந்துருத்தி-1, 10. தக்கராகம்-4, 11. தக்கேசி-17, 12. நட்டபாடை-5, 13. நட்டராகம்-14, 14. பஞ்சமம்-5, 15. பியந்தைக் காந்தாரம்-1, 16. புறநீர்மை-3, ஆகப்பதிகம் 100.

www.saivamonline.com

உரையாசிரியர் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார். அவர்களின் இலக்கிய நலஞ்சான்ற புலமைக்கு இவ்வுரைநூல் அருஞ்சான்று. இந்நூலின் வெளியீட்டு எண் 555. பக்கங்கள் 180 + 872 = 1052. விலை 8-00 ரூபாய். வேளூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இதன் பதிப்பாசிரியர்.

## திருவாசக உரை:

திருவாசகமும், திருக்கோவையாரும் ஒன்றாகப் பொருள் காணப்பெற்று 1966-இல் வெளிவந்தது. இந்நூல் அரிய முயற்சி. திருவாசகத்துக்கு உரைகாணுதலில் உள்ள கடுமையை உணர்ந்தவர்களுக்கே இந்நூலின் பெருமை உள்ளவாறு புலப்படும். இதனை விளக்கும் வகையில் வித்துவான் திரு. சொ. சிங்காரவேலனார் அவர்களின் உரை மாட்சி என்ற கட்டுரை அமைகிறது. பழைய பதிப்புக்கள் போலவே வரலாறு, இலக்கியச்சுவை, அணிநலன் முதலியன பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. திருவாசக உள் தலைப்புக்கள் குறித்து உரையாசிரியர் ஆங்காங்கே எழுதியுள்ள விரிவான விளக்கங்கள் அருமைப்பாடு மிக்கன. திருச்சிற்றம்பலக் கோவையாரின் உரை இலக்கிய நயத்தோடு வரையப் பெற்றுள்ளன. பதிப்பாசிரியர் ஒடுக்கம். வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், பக்கங்கள் (1108 + 52) = 1160. வெளியீடு எண் 572. விலை ரூபாய் 9-00.

## ஒன்பதாந்திருமுறை:

ஒன்பதாம்திருமுறை திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் உரையுடன் 1969-இல் வெளியிடப் பெற்றது. இதில்

www.saivamonline.com

இந்தளம் முதல் புறநீர்மை வரை ஆறுபண்களும் 29 பதிகங்களும் உள்ளன.[1] இத்திருமுறையில் இடம் பெற்றுள்ள தலங்களின் வரலாற்றுக் குறிப்புக்களைக் கல்வெட்டுச் சான்றுகளுடன் முயன்று திரட்டி வழங்கியுள்ளார் திரு. வை. சுந்தரேசவாண்டையார் அவர்கள். ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்கள் வரலாறு அகச்சான்றுகளுடன் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களால் தொகுக்கப் பெற்றுள்ளது. திருவிசைப்பா பொருள் நலம்; இலக்கிய நலமும் பண்பாடும் என்ற இரு கட்டுரைகள் வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனார் அவர்கள், வித்துவான் திருமதி. ப. நீலா அவர்கள் இருவராலும் எழுதப் பெற்றுள்ளன. குறிப்புரையாக – விரிவாக இந்நூல் உரை நடையிடுகிறது. ஒடுக்கம், வித்துவான், ஸ்ரீமத், சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இதனைப் பதிப்பித்துள்ளார்கள். இந்நூல் (100 + 264) = 364 பக்கங்கள்: வெளியீடு எண் 602. விலை ரூபாய் 5–50.

## திருமந்திரம்: முதல்மூன்று தந்திரங்கள்:

தருமையாதீனம் 26 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ–ல–ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளப்பாங்கின் வண்ணம் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரமாலையின் 866 பாடல்கள் கொண்ட முதல் மூன்று தந்திரங்கள் மகாவித்துவான். திரு. சி அருணைவடிவேல் முதலியார் அவர்களின் தெளிவுரை, குறிப்புரைகளுடன் மிகச் சிறந்த பதிப்பாக 1974 இல் வெளிவந்தது. தமிழ்நாடுஅரசு திட்டக்குழு பொருளாதார ஆலோசகர் டாக்டர் திரு. ப. நடராசன் அவர்களின் மதிப்புரை முதற்கண் இந்நூலில் இடம் பெறுகிறது. இம்மதிப்புரையில்,

---

1. ஒன்பதாம் திருமுறைப் பண்களும்–பதிகங்களும்: 1. இந்தளம்-1, 2. காந்தாரம்-1, 3. சாளரபாணி-1, 4. நட்டராகம்-1, 5. பஞ்சமம்-21, 6 புறநீர்மை-3, ஆகப்பதிகம்-29.

www.saivamonline.com

'சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதையே தம் பிறவிப் பெரும் பயனாகக் கருதும் தருமையாதீன 26 வது குருமகாசந்நிதானமாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவருளால் திருமந்திரத்தில் மூன்று தந்திரங்கள் தெளிவுரை, குறிப்புரை தாங்கி வெளி வருதல் பெருமகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்...இதனை வெளியிட்ட தருமையாதீனத்திற்கு அறிவுலகும் ஆன்ம உலகும் என்றும் கடப்பாடு உடையதாகும்.

என்று பாராட்டியுள்ளமை இங்கே நினைவுகூரத்தக்கது.

திருமந்திரம் பற்றிய மரபு வழிப்பட்ட செய்திகளைத் தாங்கி வரும் முன்னுரை ஒன்றைத் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் எழுதியுள்ளார்கள். திருமூலநாயனார் அருள்வரலாற்றை வித்துவான். திரு க. வெள்ளைவாரணம் அவர்கள் பல்வேறு அகச்சான்றுகளுடன் வரைந்துள்ளார். இந்நூல் வெளியீட்டில் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர்கள் பலரும் பல வகையில் உதவியுள்ளனர். திருமந்திர உரை முதற்பகுதி வெளிவந்த பிறகு இந்நூற்கு ஏராளமான பாராட்டுக்கள் தமிழகத்தின் பலமுனைகளிலிருந்தும் வந்துள்ளன. உரையாசிரியர் மகாவித்துவான் திரு. சி, அருணைவடிவேல் முதலியார் அவர்களின் சாத்திர, யோக நூல் புலமைக்கும், தமிழ்நூல் விரிவுக்கும் இவ்வுரை சான்றாக உள்ளது. வெளியீடு எண் 613. பக்கங்கள் 66 + 837 = 903. விலை ரூபாய் 15.

## தலப்பதிக வெளியீடுகள்:

தருமையாதீனத் திருமுறை வெளியீட்டுப் பணியில் இடையே பல்வேறு காரணங்களால் ஏற்பட்டிருந்த தேக்க நிலையை நீக்கி, மிகவிரைவில் எஞ்சிய திருமுறைகளுக்கும் உரைவரைந்து வெளியிட, தருமையாதீனம் 26வது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் பாலித்திருக்கிறார்கள். திருமந்திரத்தின் அடுத்த மூன்றுதந்திரங்கள் விரைவில்

www.saivamonline.com

வெளிவரும். தருமையாதீனத் திருமுறை வெளியீட்டில்பாடல் பெற்ற தலங்களின் பதிகங்களை வரலாற்றுக்குறிப்புகளோடு வெளியிடும் பணி இடையறாது நடந்து வருகிறது. தலங்களை நேரில் சென்று பார்வையிட்டு மிகவிரிவான செய்திகளோடு தனித்தனியேஅவ்வத்தலங்களின் பதிகங்கள்குறிப்புரையோடு வெளியிடப்பெற்று வருகின்றன. 26 வது ஸ்ரீ–ல–ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் ஜென்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் திங்கள் தோறும் ஒன்று அல்லது இரண்டு தலங்களின் திருமுறைகள் இவ்வாறு அச்சிடப்பட்டு வழங்கப்பெறுகிறது. இப்பெரும் பணியை ஸ்ரீ–ல–ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம் தருமை ஆதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர். வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர். எம். ஏ., அவர்கள் முனைப்போடு இயற்றிவருகிறார்கள்.

1924ஆம் ஆண்டு விரிவாகத் தொடங்கப்பெற்ற தருமை ஆதீன வெளியீட்டுப்பணி 56ஆண்டுகளாக இடையறாது நிகழ்ந்து வருகின்றன. 1924க்கு முன்னரும் பலநூல்கள் அச்சிடப்பெற்றன. ஆயினும் இவற்றிற்கு அப்போது தொடர்எண் தரப்பெறவில்லை. இன்றுவரை இத்தொடரில் சிறியனவும் பெரியனவுமாக 769 நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. இவற்றில் பெரும்பாலன திருமுறை வெளியீடுகளே.

## திருக்குறள் உரைவளம்:

தருமையாதீனம் தமிழ்மொழிக்கு ஆற்றிவந்திருக்கும் அரிய-பெரியபணிகளில் ஒன்று அறநூலாகிய திருக்குறளுக்கு பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளைத் திரட்டி வெளியிட்ட திருக்குறள் உரைவள வெளியீடு ஆகும். பல்லாயிரக்கணக்கான ரூபாய் பொருட்செலவில் ஒரு பல்கலைக்கழகம் மேற்கொள்ள வேண்டிய இப்பெரிய பணியைச் சமயவளர்ச்சி நோக்கில் எழுந்த தருமையாதீனம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தருமையாதீனம்

www.saivamonline.com

25வது குருமகாசந்நிதானம் அவர்கள் சமயவளர்ச்சிநோக்கில் திருமுறை-உரைகளை வெளியிட்டதுபோல், தமிழ்மொழி வளர்ச்சி நோக்கில் இத்திருக்குறள் உரைவளத்தையும் வெளியிடத் திருவுளம்பற்றினார்கள். வேளூர் தேவஸ்தானக் கட்டளைவிசாரணை மௌனஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இந்நூலின் பதிப்பாசிரியர். 1950இல் திருக்குறள்-உரைவளம்-அறத்துப்பால் முதன்முதல் வெளிவந்தது. தருமையாதீனக் கீழ்த்திசைப் பல்கலைக்கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராகத் திகழ்ந்த மகாவித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் தொகுப்பாசிரியராக இருந்து பல்வேறு சிறப்புக்களோடு இந்நூலை வெளியிடப் பெருந்துணை செய்துள்ளார்கள்.

## உரைவளம் : அறத்துப்பால் :

இந்நூல் அமைப்பு மிகநுட்பமாகத் திட்டமிட்டு அமைக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் உரையாசிரியர்கள் தரும் விளக்கங்கள் முதற்கண் அவரவர்களின் பெயரில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அடுத்துத் தற்போதுள்ள-பரிமேலழகர் அமைத்துக்கொண்ட முறையில் திருக்குறள் பாடல்கள் தரப்பெற்றிருக்கின்றன. குறளின் கீழ் உரைப் பகுதி என்ற தலைப்பில் 1. பரிமேலழகர், 2. மணக்குடவர், 3. ஒருபழையவுரை, 4. பரிதியார், 5 காளிங்கர் என்போரின் உரைகள் நிரலே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இவற்றை அடுத்து உரைவிளக்கப்பகுதி என்றதலைப்பில் நுண்பொருள்மாலை மற்றும் இராமானுஜ கவிராயர் ஆகியோரின் கருத்துக்கள் பதிப்பிக்கப் பெற்று உள்ளன. அடுத்து உரியகுறள் யாரரால், எங்கெங்கே மேற்கோளாக எடுத்துக்காட்டப் பட்டுள்ளது என்பதனை விளக்கும் மேற்கோள்பகுதி அமைகிறது. நான்காவதாக விளக்கப்பெற்ற குறளோடு ஒத்தபிற இலக்கண-இலக்கிய சாத்திரப் பகுதிகளை விளக்கும் வண்ணம் ஒப்புமைப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது. இம்முயற்சி தமிழ்நூல் பதிப்பு வரலாற்றிலேயே ஓர்அரிய முன்னோடி முயற்சி.

www.saivamonline.com

அறத்துப்பாலின் தொடக்கத்தில் நூலாசிரியர் மற்றும் உரையாசிரியர்களின் வரலாறுகள் சுருக்கமாக ஆய்ந்து தரப்பெற்றுள்ளன. அறத்துப்பால் செய்திகளை ஆராய்ந்து ஆராய்ச்சிக் குறிப்புக்கள் சில, நான்குபக்கஅளவில் குறள் எண்களோடு தரப்பெறுகிறது. இவ்வறத்துப்பால் உரைவள முயற்சியைப் பெரிதும் பாராட்டி திரு. எம். பக்தவத்சலம், டாக்டர். திரு.ஆர்.சே.சண்முகம்செட்டியார், ரசிகமணி திரு. டி.கே. சிதம்பரநாத முதலியார், டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார் போன்ற பேரறிஞர்கள் மதிப்புரை வழங்கி யுள்ளார்கள். திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தம் மதிப்புரையில்,

> 'வள்ளுவர் காட்டிய அறநெறியைப் பின்பற்று வதற்கு ஆதீனம் வெளியிடும் உரைவளம் மகிழ்ச்சி யுடன் வரவேற்கத் தக்கது. இது மிகவும் சிறந்த ஒரு வெளியீடாகும். ஆதீனகர்த்தரால் தமிழ் மக்களுக்குத் தீபாவளிப் பரிசாக அளிக்கக் கூடியது இவ் வெளியீட்டை விடச் சிறந்தது வேறென்றும் இல்லை. என் பாராட்டுதலை ஆதீனத்திற்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.'

என நெஞ்சம் திறந்து இவ்வுரை வளத்தைப் போற்றி யுள்ளார்கள். திரு. ஆர். கே. சண்முகம்செட்டியார் அவர்கள்,

> 'தமிழ்ப் பண்பாட்டின் சரித்திரத்தில் இந்த வெளியீடு ஓர் சிறந்த நிகழ்ச்சியென்று சொல்ல வேண்டும். மகாசந்நிதானத்தின் ஆணையால் இப் போது வெளிவந்த இந்தத் திருக்குறள் உரைவளம் தமிழ் மக்களுக்குக் கிடைத்த ஒரு களஞ்சியம். அவர்கள் அதை நன்றியோடு பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.'

எனப் போற்றுவதோடு, தமிழ் உலகம் இவ்வெளியீட்டுக் காக ஆதீனத்திற்கு நன்றி செலுத்த வேண்டுமென்று

www.saivamonline.com

வற்புறுத்தியிருப்பது ஆதீனத் தமிழ்ப் பணிக்கு சான்றோர் உலகம் தரும் மரியாதையாகவும் உள்ளது. இவ்வாறுகப் பாராட்டத்தக்க முறையில், பெரிய எழுத்தில் நல்ல கட்டோடு, பாடல் முதற்குறிப்பகராதி, சொல்லகராதி முதலியவற்றுடன் வெளியீட்டு எண் 234 ஆக இவ்வுரைக் களஞ்சியம் வெளியிடப்பெற்றது. இவ்வுரைவெளியீட்டில் புலவர். திரு. எஸ். சீனிவாசன் அவர்கள், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள், திரு. மு. ஆறுமுகதேசிகர் அவர்கள் முதலியோர் உடனிருந்து உதவியுள்ளனர். பக்கங்கள் 32+536=568. விலை ரூபாய் 6-00.

## உரைவளம்-பொருட்பால்:

இதே பெருஞ்சிறப்புக்களோடு வெளியீடு எண் 254 ஆக 1951-இல் ஆவணிமூல நன்னாளில் திருக்குறள் உரை வளம்-பொருட்பால் வெளியிடப் பெற்றது. தொகுப்பு ஆசிரியர் மகாவித்துவான். திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள் இந்நூல் தொடக்கத்தில் 14 பக்க அளவில் எழுதி யுள்ள முகவுரை பல அரிய குறட்செய்திகளைத் தருகிறது. சென்னை மாநில அப்போதைய முதலமைச்சர் திரு. பி. எஸ். குமாரசாமிராஜா அவர்கள் இந்நூற்கு அழகிய மதிப்புரை ஒன்று வழங்கியுள்ளார். இவர்கள் தம் மதிப்புரையில்,

> 'சமய நூல்களையும், பழந்தமிழ்க் காவியங்களையும், வெளியிடுவதன் மூலம், பொதுவாகத் தமிழ் நாட்டவர்க்கும் சிறப்பாகச் சமயத்துக்கும், தமிழ்க் கலைவளர்ச்சிக்கும் தருமபுர ஆதீனம் செய்து வரும் சிறந்தபணியை அனைவரும் அறிவர். அதனைஒட்டித் தமிழ்வேதம் எனப்படும் திருக்குறளுக்கு விரிவுரை எழுதுவித்து திருக்குறள் உரைவளம் என்னும் பேரால் நூல் வடிவமாக வெளியிடும் அதனினும் சிறந்த அறப்பணியை ஆதீனம் மேற்கொண்டது யாவராலும் போற்றற்குரியதாகும்.'

www.saivamonline.com

என்று பாராட்டி மகிழ்கிறார்கள். திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இந்நூல் பற்றி வழங்கிய பாராட்டுரை மிகச் சிறப்பானது:

> 'தமிழும் சிவமும் ஒன்றெனக் கருதினர் சைவர். சைவ மடங்கள் சிவம் வளர்க்க வந்து தமிழை வளர்த்தன: அந்தப் பழங்காலை இன்றும் தூர்ப்பார் இல்லை. சோறு கொடுத்துப் பசியாற்றிய தருமை; மருந்து கொடுத்து நோயாற்றிய தருமை—சிவம் கொடுத்துப் பிறவிப்பணி நீக்கிய தருமை இன்று திருக்குறளின் பல முகப்பட்ட ஒளிகளாம் உரை களை ஒருசேர வெளியிட்டுத் தமிழைக் கொடுத்து நம் குறை எல்லாம் ஒருங்கு நீக்க முற்பட்டிருக் கிறது.'

பாராட்டுரைகளை எதிர்நோக்காது தொண்டுகளைக் கடமையாகச் செய்து வரும் தருமை ஆதீனத்திற்கு நல் அறிஞர்களின் இவ்வாறான உண்மையான பாராட்டுரைகள் மேன்மேலும் விளக்கத்தை நல்கியுள்ளன. திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்,

> 'சற்றேறக்குறையப் பதினைந்தாம் நூற்றாண்டின் பிற் பகுதியிலிருந்து தென்னாட்டுச் சைவ மடங்களே மொழியையும்—சமயத்தையும் பாதுகாக்கும் அரண் களாக விளங்குகின்றன.'

எனச் சைவ ஆதீனங்கள் இல்லையேல் இன்று தமிழ் இல்லை என்பதனை இந்நூலுக்கு வழங்கிய மதிப்புரையின் ஊடே கூறியுள்ளார்கள். திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் தம் மதிப்புரையில்,

> 'திருக்குறள் வீட்டு நூல்; நாட்டு நூல்; உலக நூல்; இத்தகைய ஒரு நூல் இதுகாறும் யாண்டும் வெளி வந்ததில்லை. இப்பெரு நூலுக்குப் பழைய உரை கள் உண்டு. அவற்றுள் ஐந்து இந்நூலுள் ஒருங்கே

www.saivamonline.com

திரண்டு இப்பதிப்பில் காட்சியளிக்கின்றன. காட்சி கண்ணையும் கருத்தையும் கவர்வது. நன்முறையில் இப்பதிப்பை வெளியிட்டவர் தருமபுரத் திரு மடத்தார். திருமடத்தார் காலத்துக்கேற்ற தொண்டு புரிதல் மகிழ்ச்சியூட்டுகிறது.'

என்று ரத்தினச் சுருக்கமாகத் தமக்கே உரிய நடையில் ஆதீன வெளியீட்டுப் பணிகளைப் போற்றியுள்ளமை இங்கே சிந்திக்கத் தக்கது. திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் அறத்துப்பாலை வெளியிட்ட ஓராண்டுக்குள் இவ்வளவு பெரிய பொருட்பாலை எப்படி வெளியிட முடிந்தது? என வியப்புத் தெரிவித்துள்ளார்கள். இவ்வாறான பெருஞ் சிறப்புக்களோடு 1100 பக்க அளவில் பொருட்பால் உரை வளத்தைத் தமிழ் உலகுக்கு ஆதீனம் அடக்கத்தோடு அச்சிட்டு வழங்கியுள்ளது.[1] இவ்வாறான பதிப்புக்கள் திருக்குறள் தொடர்பான பல்வேறு ஆய்வுகளுக்கு எவ்வாறெல்லாம் பெருந்துணை புரிந்துள்ளதென்பதனைத் தமிழ் ஆராய்ச்சி அறிஞர்கள் நன்கு அறிவர்.

## உரைவளம்–காமத்துப்பால் :

வெளியீடு எண் 268 ஆக 1951-இல் இறுதியாகத் திருக்குறள் காமத்துப்பால்உரைவளம் வெளியிடப்பெற்றது. முன்னைய திருக்குறள் வெளியீடுகளின் அமைப்பே இங்கேயும் மேற்கொள்ளப் பெற்றிருக்கிறது. இந்நூல் தொடக்கத்தில் திருக்குறள் ஆராய்ச்சி என்ற தலைப்பில் மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் எழுதியுள்ள 128 பக்கங்கள் கொண்ட கட்டுரை திருக்குறளைப் பலமுனை நின்று ஆராய்கிறது. இக்கட்டுரை பல்வேறு ஆராய்ச்சி முயற்சிகளுக்குத் தோற்றுவாயாக அமைந்தது. இவ்வாறு

1. இதன் அடக்கவிலை ருபாய் 13–00 மட்டுமே.

www.saivamonline.com

மூன்று தனித்தனி நூல்களாக வெளிவந்த திருக்குறள் உரைவளத் தருமையாதீன வெளியீடுகள், அக்காலத்தில் தமிழ் இலக்கிய உலகில் பெரிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது எனலாம். அக்காலத்துச் சான்றோர்களும், செய்தி ஏடுகளும் ஆதீனத்தின் இவ்வெளியீட்டு முயற்சிக்குத் தந்திருக்கும் பாராட்டுக்களும் புகழுரைகளும் மிகப்பல. அவற்றுள் சில காமத்துப்பாலின் இறுதியில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் சில கீழே தரப்பெற்றுள்ளன.

> தமிழர் போற்றும் பெருநூல் ஒன்றை இவ்விதமாகப் பதிப்பிக்க வேண்டுமென்று எடுத்துக் காட்டுவது போல அமைந்துள்ளது இப்பதிப்பு. உண்மையில் இது உரைவளமேயாகும்.
>
> — சுதேசமித்திரன்.

> மடாலயங்கள் எவ்வளவு நல்ல தொண்டு புரிந்து வந்திருக்கின்றன என்பதற்கு ஓர் அருமையான அத்தாட்சி இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது.
>
> — கல்கி.

> இப்பதிப்பு தருமபுர ஆதீனகர்த்தரின் பிறந்தநாள் அணிவிழா மலராக மலர்ச்சி பெற்றிருப்பதுடன் தமிழகம் கொண்டாடிவரும் மறுமலர்ச்சித் திருவிழாவிற்கே ஓர் அணிமலராகவும் மணம் தருவதாகும்.
>
> — ஆனந்தவிகடன்.

> பலகாலமாக ஆராய்ந்து தொகுத்த உழைப்பும் ஆழ்ந்து பயின்ற பயிற்சியும், பலநூல்களைப் படித்து நோக்கிய புலமையும் சேர்ந்தாலன்றி இத்தகைய பதிப்பை வெளியிட இயலாது.
>
> — கலைமகள்.



www.saivamonline.com

## பிற வெளியீடுகள் :

தருமையாதீன வெளியீடுகள் ஒவ்வொன்றைப் பற்றியும் இங்கே விரிவாகக் குறிப்பிடவேண்டியது முறையேயாயினும், போதிய இடமின்மையால் சிலவற்றை மட்டும் இங்கே நினைவுகூர்தல் தகும். தருமையாதீனம் 24வது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிகர் அவர்கள் காலத்தில் நடைபெற்ற மெய்கண்டான் சித்தாந்த மாநாடு அக் காலத்தில் நிகழ்ந்த மிகப்பெரிய சாத்திர மாநாடுகளுள் தலையாயது. இம்மாநாட்டைஒட்டி வெளியிடப் பெற்ற மலர் பல அரிய கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது. 1941-இல் வெளியீடு எண் 45 ஆக இந்நூல் வெளிவந்தது. பெரியபுராணப் பேருரை ஆசிரியர் திரு. சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கத் தருமையாதீன வெளியீடாக (எண் 65) அப்பர் சுவாமிகள் புராணம் உரைநூல் 800 பக்க அளவில் மிகச் சிறப்பாக வெளியிடப்பெற்றது. 25வது குருமகா சந்நிதானம் அவர்கள் மேற்கொண்ட ஸ்ரீ காசியாத்திரை, திருக்கயிலாய யாத்திரை, ஜோதிர்லிங்கத் தலயாத்திரை முதலியன யாத்திரை நூல் களாக இத்தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு வழிகாட்டியாக உதவும் வண்ணம் படவிளக்கங்களுடன் விரிவாக வெளியிடப் பெற்றன. திருவாசகம், சித்தாந்த சாத்திரங்கள் மூலம், சித்தாந்தத் தெளிவியல், சித்தாந்த வினாவிடை போன்ற அரிய நூல்கள் பல வெளிவந்துள்ளன. இவற்றுள் சித்தாந்தத் தெளிவியல் இனிய எளிய உரைநடை யில் சைவ சித்தாந்தம் பற்றிக் கூறுகிறது. இது சென்னை யில் முன்னர் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி வெளியிடப்பெற்றது. ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக நினைவுமலர் அரிய கட்டுரை களைத் தாங்கி வெளிவந்தது.

www.saivamonline.com

## ஆங்கில நூல்கள் :

முற்றிலும் ஆங்கிலத்திலும், ஆங்கில மொழிபெயர்ப்பு களுடனும் பல நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வாறு வெளிவந்த நூல்களுள் சில.

சிவபோகசாரமும்–சொக்கநாதவெண்பாவும்
வெ. எண் 16 ஆண்டு 1936.

சிவப்பிரகாசம் 69–1945
சிவஞானபோதம் 86-1945
திருவருட்பயன் 92–1946
சித்தாந்தத்திரயம் 106-1946
உண்மை விளக்கம் 112–1946
இருபா இருபஃது 134–1947
சிவஞானசித்தியார் சுபக்கம் 157–1948
சிவராஜ்யா 214–1950
குருஞானசம்பந்தர் வரலாறு 298–1953
சைவ சித்தாந்தம் 336-1955, 525–1962
மடமும்–திருக்கோயில்களும் 484–1960
தென்னாட்டில் சைவ மறுமலர்ச்சி 554–1964

இவையன்றி வடமொழியிலிருந்து பத்து நூல்களுக்கு மேல் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பெற்றுள்ளன. சிவபோகசாரம் - சொக்கநாத வெண்பா இரண்டும் இந்தி மொழிபெயர்ப்போடும் வெளிவந்துள்ளன. விஞ்ஞானம் தொடர்பாகப் பரமாணுப் புராணம் என்ற ஒரு நூல் வந்தது. மற்றும் இசைக்கலை – மருத்துவம் தொடர்பான நூல்களும் வெளியிடப்பெற்றுள்ளன.

www.saivamonline.com

## பதிப்புரிமை பெற்றநூல்கள் :

தக்க அறிஞர்களின் நூல்கள் சிலவற்றைத் தருமையாதீனம் அவ்வவ்வறிஞர்களிடமிருந்து பதிப்புரிமை பெற்று வெளியிட்டன. திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடமிருந்து மெய்கண்டநூல்கள் உரைநடைகளும், திரு ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை அவர்களிடமிருந்து சைவ சித்தாந்த நூல்களும், திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்களிடமிருந்து சிவப்பிரகாசம் ஆங்கில நூலும், கோவை திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களிடமிருந்து திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் – உரையும் இவ்வாறு பதிப்புரிமைபெற்ற நூல்களுள் குறிக்கத்தக்கன. ஆதீன நிதி உதவிபெற்றுவெளிவந்த நூல்கள் பல உண்டு.

## ஞானசம்பந்தம்-திங்கள் இதழ் :

'முன்னைப் பழம் பொருட்கும்-முன்னைப் பழம்பொருளே பின்னும் அப்புதுமைக்குப் பேர்த்தும் அப்பெற்றியனே' என்றுசிவபெருமானைப்போற்றுவர் மாணிக்கவாசகர். பழமையானவற்றுளெல்லாம் பழமையானவனாகவும், புதுமையானவற்றுளெல்லாம் புதியவனாகவும் திகழ்பவன் பெருமான். இச்சிவபெருமானின் திருவருட் பேற்றினைக் குருஉபதேசமாக உலகத்துக்கு வழங்கும் தருமையாதீனம் பழமைப் பண்புகளுக்கும்-பழந்தமிழ் நாகரிகத்திற்கும் சான்றுகூறி ஒருபால் திகழ்ந்தாலும் காலத்தின் விரைந்த மாற்றங்களையும் ஏற்று நின்று புதுமைக்கும் தோள் கொடுத்து வளர்ந்து வந்திருப்பதைப் பல சான்றுகளால் விளக்க இயலும். இவ்வாறுனை காலத்தோடு ஒட்டி நின்று சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டாற்ற வேண்டும் என்ற சீரிய நோக்கில் தருமையாதீனம் 24 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிகசுவாமிகள் அவர்களால் 1941ஆம் ஆண்டு, கார்த்திகைத் திங்களில் மக்களுக்கு ஊனசம்பந்தம் நீக்கி, ஞானசம்பந்தம் சேர்க்க 'ஞானசம்பந்தம்' திங்கள் இதழ் தொடங்கப் பெற்றது.

www.saivamonline.com

பல்வேறு நெருக்கடிகளையும், சோதனைகளையும் கடந்து நாளும் நாளும் புதியபொலிவோடு வளர்ந்து முப்பத்தொன்பது ஆண்டுகளை நிறைவித்துக்கொண்டு 40வது ஆண்டில் ஞானசம்பந்தம் பெருமிதத்தோடு நடையிட்டுக் கொண்டு வருவதைச் சைவத்-தமிழ் அன்பர்கள் பலரும் நன்கு அறிவர். தருமையாதீனத்தை-வெளியுலகத்தோடு குறிப்பாகத் தமிழ்மக்கள்-இந்தியமக்கள்-வெளிநாட்டுமக்கள் பேசன்ற பல்லாயிரவர்களோடு தொடர்பு படுத்தும் பாலமாக ஞானசம்பந்தம் இதழ் அமைந்துள்ளது. ஒரு திங்கள் இதழைத் தொடர்ந்து நடத்துவதில் உள்ள இடர்ப் பாடுகளை நம்மில் பலர் அறிந்திருக்கக்கூடும். தடைகளை எல்லாம் திருவருளாலும்-குருவருளாலும் கடந்துவரும் ஞானசம்பந்தம், சைவம்-மற்றும் தமிழ்த் தொடர்பான பேராய்வுகளுக்குத் தற்காலத்தே அறிஞர் பெருமக்களால் பார்வை நூலாகக் கொள்ளப்பெறும் அளவிற்குச் சிறப்புப் பெற்று வளர்ந்துள்ளது. ஆதீனத்தின் பிரசாரக்கருவியாக மட்டும் இது அமையாமல் பல்வேறு நிலைகளில் பலஅரிய செய்திகளை உலகுக்கு வழங்கி வந்துள்ளது. தமிழ்மொழி யின் இலக்கண-இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகள்-தமிழ் இசை-நாடகம்-சிற்பம்-ஓவியம்-மருத்துவம்-கோயில் சார்ந்த கலைகள், புராணம் இதிகாசம் போன்ற பல்துறைக் கட்டுரை கள், சுவடியிலிருந்து முதன்முதலாகப் பெயர்த்தெழுதப் பெற்ற புதியநூல்களின் அறிமுகங்கள், மற்றும் மொழி பெயர்ப்புகள்-சோதிடம் போன்ற பல்துறைச் செய்திகளைத் தமிழ்மக்களுக்கு வழங்கும் காமதேனுவாக ஞானசம்பந்தம் இயற்றி வந்திருக்கும் அரியபணிகள் விரிவாக ஆராயத்தக்க பெருமிதம் உடையன- தமிழகத்தின் பல்துறைச் சான்றோர் களில் ஞானசம்பந்தத்தில் தங்கள் படைப்புக்களை வெளி யிடாதவர்களே இலர் என்று கூறலாம். இத்திங்கள் இதழின் சிறப்புக்கு இதன் வெள்ளிவிழாவைஒட்டி வெளியிடப்பெற்ற சிறப்புமலரில் அறிஞர் பெருமக்கள் வழங்கியிருக்கும் பாராட்டுரைகள் சான்று கூறுவன.

www.saivamonline.com

'சிவம் என்றால் மங்களம்: மங்களமான சைவ சம்பந்தமான நூல்கள் கட்டுரைகள் மூலமாக மக்களுக்கு ஞானசம்பந்தத்தைப் புகட்டும் 'ஞான சம்பந்தம்' மேன்மேலும் எல்லோரும் ஞான சம்பந்தத்தை அடைய உதவியாயிருக்கட்டும்.'

— காஞ்சி. ஸ்ரீ சங்கராசாரியர்.

'ஞானசம்பந்தம் உண்மையிலேயே ஒருசிறந்த ஞானக் கருவூலமாகவும், மக்களிடையே திருவருட் பேற்றின் உண்மையை உணர்த்தும் சிறந்த சஞ்சீவியாகவும் திகழ்கின்றது'

— மதுரை ஆதீனகர்த்தர்.

'மக்களை மாக்கள் நிலையினின்றும் நீக்கி மக்கள் ஆகவே நிறுத்தி இறையருளைப் பெறச்செய்து சிறந்த முறையில் திகழ்கிறது இப்பத்திரிகை'

— மயிலம். ஸ்ரீ–ல–ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள்.

'தெய்வ சம்பந்தமும், சைவ சம்பந்தமும் பெற்று விளங்கும் தருமையாதீனம் ஞானசம்பந்தத்தின் மூலம் கடந்த கால்நூற்றாண்டாக மக்கள் உய்யும் பொருட்டுச் சமய நன்பொருள்களையும், இலக்கிய இன்பொருள்களையும் வழங்கி வருவது தமிழ்நாடு செய்த தவப்பயனாகும்'

—திரு. ஒ. வி. அளகேசன்.

'அஞ்ஞான இருளில் மூழ்கித்தவிக்கும் மக்கட்கு மெய்ஞ்ஞானத்தை வாரிவழங்கி, மெய்ஞ்ஞானத் தோடு தொடர்பு படுத்துதலின் ஞானசம்பந்தம் என்னும் பெயர் மிகவும் பொருத்தமாக அமைந் துள்ளது.'

—டாக்டர். திரு. கே. அரங்கசாமிப்பிள்ளை.

www.saivamonline.com

இவ்வாறான தமிழ்ப்பெருமக்களின் பாராட்டுதல்களையும் நல்லாதரவையும் பெற்று வளர்ந்துவரும் ஞானசம்பந்தம் தற்போது கடல்கடந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் கைகளிலும் தவழ்கிறது. 24வது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமூர்த்திகளால் தோற்றுவிக்கப் பெற்ற இவ்விதழுக்கு 'ஞானசம்பந்தம்' அச்சகம் என்ற பெரிய அச்சுக்கூடம் ஒன்றும் உள்ளது. ஸ்ரீ-ல-ஸ்ரீ 26வது குருமூர்த்திகள் தற்போது அரியநூல்களை வெளியிடும் நோக்கில், 'ஞானசம்பந்தம் பதிப்பகம்' ஒன்றையும் நிறுவித் தமிழ்நூல் வெளியீட்டுப்பணிகளை மேலும் விரிவுபடுத்தி வருகிறார்கள்.

www.saivamonline.com

# தமிழ் வளர்ச்சிப் பணிகள்

## கல்வி நிலையங்கள் :

தருமையாதீனத்தின் அருள் விளக்கத்தில் காலத்தோடு இயைந்து சிறந்து வரும் கல்வி நிலையங்கள் பல. இன்று தருமபுரத்தில் திருமுறைக் கல்விக்காகத் தேவாரப் பாடசாலையும், வேதாகமக் கல்விக்காக வேத–சிவாகம பாடசாலையும், தொடக்கக் கல்விக்காக ஸ்ரீ குருஞான சம்பந்தர் தொடக்கப்பள்ளியும், உயர் கல்விக்காக ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளியும், தாய்மொழி வளர்ச்சிக்காகத் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியும், சைவ-சித்தாந்த சாத்திரக் கல்விக்காகப் பல்கலைக்கல்லூரியோடு இயைந்த பகுதிநேரக் கல்வி நிலையமாக ஸ்ரீ-ல–ஸ்ரீ கயிலைக்குருமணி கனகாபிஷேக நினைவு சைவ–சித்தாந்தக்கல்லூரியும் நடைபெற்று வருகின்றன. இவற்றில் கற்றுத்தேர்ந்த பல்துறைச் சான்றோர்கள் பலர் இவ்வாதீனத்தின் அருட் கொடையாக நாடெங்கும் பணியாற்றி வருகிறார்கள்.

www.saivamonline.com

## தேவாரப் பாடசாலை:

தருமையாதீனத் தேவாரப் பாடசாலை தமிழகத்தில் நிலவிவரும் பாடசாலைகளுள் முதன்மையானது. தருமை யாதீனம் 24-வது குருமூர்த்திகள் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிகர் காலத்தில் இப்பாடசாலை நிறுவப்பெற்றது. சைவ-மரபில் வரும் அடிப்படைத் தமிழ்க்கல்வி பெற்ற சிறுவர்கள் இப் பாடசாலையில் சேர்க்கப்படுகின்றனர். இவர்களுக்கு உண்டி யும், உறையுளும், பிற தேவைப்படு பொருள்களும் இலவச மாக வழங்கப் பெறுகின்றன. இக்கல்வி ஐந்தாண்டுகள் கற்பிக்கப்படுகிறது. உரிய பாடதிட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளன. தேவார-திருமுறைப் பாடல்கள், இத்துறையில் சிறந்து விளங்கும் ஓதுவா மூர்த்திகளால் பண்ணோடு கற்பிக்கப் பெறுகின்றன. மொழிப்பயிற்சிக்காகவும் இசைப் பயிற்சிக்காகவும் வேறு ஆசிரியர்கள் நியமிக்கப் பெற்று உள்ளனர். இப்பள்ளியில் பயிலும் திருமுறை மாணாக்கர் களுக்கு ஆதீனத் திருக்கோயில்களில் நடைபெறும் விழாக் களில் பங்கேற்கும் வாய்ப்புக்கள் வழங்கப் பெறுகின்றன. மாணவர்களை ஊக்கமூட்டும் வகையில் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன. ஐந்தாண்டுகள் முறையாகப் பயின்று, தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்குத் 'தேவார இசைமணி' என்ற பட்டம் வழங்கப் பெறுகிறது. இன்று தமிழகத்தில் பல்வேறு திருக் கோயில்களில் திருமுறைப் பணிபுரியும் நூற்றுக் கணக்கான ஓதுவா மூர்த்திகள் தருமையாதீனத் தேவாரப் பாடசாலையில் உருவானவர்களே. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும், கடல் கடந்த இலங்கை முதலிய நாடுகளிலிருந்தும் இப்பாடசாலையில் மாணவர்கள் பயின்று பயன் பெற்று வருகின்றனர்.

## வேத-சிவாகம பாடசாலை:

'வடமொழியும், தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன்காண்' என்று சிவபெருமானை அப்பர் பெருமான் குறிப்பர். தருமையாதீனம் தமிழோடு வடமொழியையும்

www.saivamonline.com

வளர்க்கும் வேறுபாடற்ற நோக்கில், வேத-சிவாகமக் கல்விக்கென 40 ஆண்டுகளாகப் பாடசாலை ஒன்றை நிறுவிச் சிறப்பாக நடத்தி வருகிறது. சிவாசாரிய மரபில் வந்த 12வயதிற்குட்பட்ட சிறுவர்கள் இப்பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப் பெறுவர். தேவார பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பெறும் அனைத்தும் இவர்களுக்கும் வழங்கப் பெறுகின்றன. முறையான பாட திட்டங்களோடு ஐந்து ஆண்டுகள் மாணவர்கள் பயிற்றுவிக்கப் பெறுகின்றனர். "ஆகமப்ப்ரவீண" என்றபட்டம் இவர்களுக்கு வழங்கப்பெறுகிறது. ஆதீனத் திருக்கோயில்களில் இவர்கள் நேர்முகப் பயிற்சிபெறுதல் பிற்காலத்தில் சிவாலயங்களில் பூசனைபுரியப் பெரிதும் உதவியாக அமைகிறது. வடமொழி-மற்றும் இதிகாசப் பயிற்சிக்கெனத் தனியே ஆசிரியர்கள் நியமிக்கப் பெற்றுள்ளனர். வெளிநாடுகளிலும், வெளிமாநிலங்களிலும் தருமையாதீன வேத-சிவாகம பாடசாலையில் பயின்ற சிவாசாரியர்கள் நூற்றுக்கணக்கில் பணிபுரிந்துவருகின்றனர்.

## தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி:

ஆதீனக் குருமுதல்வர் பெயரால் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கபள்ளி ஒன்று ஆதீனத்தின் பராமரிப்பில் இளஞ்சிறூர்களுக்குத் தொடக்கக் கல்வி வழங்கி வருகிறது. பல்லாண்டுகளாக ஏழை மாணவர்களுக்கு மதியத்தில் இலவச உணவு வழங்கப்பெற்று வருகிறது. 400 குழந்தைகள் இங்கே பயின்று வருகின்றனர். 24-வது குருமூர்த்திகள் ஆட்சிக்காலத்திலேயே இப்பள்ளி நிறுவப்பெற்றது. இதே போல் கீழ்த்திசை உயர்நிலைப்பள்ளி ஒன்றும் குருமுதல்வர் பெயரால் நடைபெற்று வருகிறது இது தற்போது பத்தாம் வகுப்பு வரை கற்பிக்கும் உயர்நிலைப் பள்ளியாக நிலவி வருகிறது. இதற்கென அரசின் உதவியோடு தனியே புதிய கட்டிடம் சட்டப் பெற்றுள்ளது.

www.saivamonline.com

## பல்கலைக்கல்லூரி:

தருமையாதீனத்தின் தமிழ் வளர்ச்சிப் பணியில் இங்கே நடைபெற்று வரும் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி ஒரு அங்கமாகத் திகழ்கிறது. 25 வது ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள் மொழிப்புலமை பெற வேண்டுமென்ற நோக்கில் 1946-இல் இக்கல்லூரியைச் சென்னைப் பல்கலைக்கழக அங்கீகாரத்தோடு தோற்றுவித்தார்கள். தொடக்க காலத்தில் தமிழ் வித்துவான் வகுப்புக்கள், வடமொழி-சிரோமணி வகுப்புக்கள், இசை வகுப்புக்கள் முதலியன நடைபெற்றன. காலப் போக்கில் பிற துறைகள் நலிந்தன. தருமையாதீனத் தமிழ்க் கல்லூரி முப்பத்துமூன்று ஆண்டுகளில் ஏறத்தாழ ஒரு ஆயிரம் தமிழ்ப் புலவர்களை உருவாக்கிச் செந்தமிழ்ப் பணியாற்றத் தமிழகத்திற்கு வழங்கியுள்ளது. சமயநூல் பயிற்சியும், நல்லொழுக்கமும் மிக்க மாணவர்களாக இங்கே பயிலும் மாணவர்கள் உருவாக்கப் பெறுகின்றனர். தற்போது தனித்தமிழில். பி. லிட். பட்ட வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. தருமையாதீனம் 26 வது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இக்கல்லூரியிலேயே பயின்று பின்னர் இங்கேயே தமிழ்ப்பேராசிரியராகவும் திகழ்ந்து இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார்கள். திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் (தவத்திரு குன்றக்குடி அடிகளார்) அவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்துத்தலைவராகவிளங்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீமுத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளும், தமிழகத்தில் எழுத்து, பேச்சு, சிந்தனை போன்ற பலதுறைகளில் சிறந்து விளங்கும் வேறு பலரும் இக்கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் என்பது குறிக்கத்தக்கது.

தமிழகத்தின் சிறந்த தமிழ் வல்ல பெரியோர் பலர் இக்கல்லூரியின் பேராசிரியர்களாகத் திகழ்ந்துள்ளனர். திரு. சி. புன்னைவனநாத முதலியார், ஆட்சிச்சொல் காவலர்

www.saivamonline.com

திரு. கி. இராமலிங்கனர், மகாவித்துவான். திரு. ச. தண்டபாணிதேசிகர், திரு. வேங்கடராமச் செட்டியார், மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார், பிற்காலத்தில் காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனகர்த்தராகத் திகழ்ந்த வித்துவான். திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் போன்ற தமிழ் அறிஞர்களிடம் பயிலும் வாய்ப்பு இங்கே பயின்ற மாணவ—மாணவியர்களுக்குத் கிடைத்தது. ஆண்டு தோறும் ஆவணி மூலவிழாவில் மாணக்கர்களுக்கு ஸ்ரீ–ல–ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தோத்திர சாத்திர நூல்களையும், ரொக்கப் பரிசுகளையும் வழங்கி ஊக்கமூட்டி வருகிறுர்கள். இறுதியாண்டில் முதல் வகுப்பில் முதல்மதிப்பெண் பெறும் மாணக்கர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கி ஆசீர்வதிக்கிறுர்கள். இங்குப் பயின்ற ஐவர் மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ச்சி பெற்றுத் திருப்பனந்தாள் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் நினைவுத் தமிழ்ப் பரிசாகிய ரூபாய் ஆயிரத்தைப் பரிசாகப் பெற்றுள்ளனர். இக்கல்லூரியோடு இணைந்து சைவ–சித்தாந்தக் கல்லூரியும் இயங்கி வருகிறது. தருமையாதீனம் 26வது குருமகாசந்நிதானம் அவர்கள் தாம் பயின்ற இக்கல்லூரியைக் கண்போல் புரந்து வருவதோடு, வரும்கல்வியாண்டில் முதுகலைத் தமிழ்ப் பட்டவகுப்புக்களைத் தொடங்கியருளத் திருவுளம் பாலித்திருக்கிறுர்கள். கல்லூரியில் நாலாயிரம் நூல்களோடு கூடிய சிறந்த நூலகம் ஒன்று உளது. திருப்பனந்தாள் ஸ்ரீ–ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும், அன்பர்கள் சிலரும் இக்கல்லூரி மாணக்கர்களுக்கு ஆண்டு தோறும் சிறந்த பரிசுகளை அளித்து வருகின்றனர்.

## ஆதீன நூலகம்:

தருமை ஆதீனத் திருமடத்தில் மிகப்பெரிய நூலகம் ஒன்று சிறப்பாகப் பராமரிக்கப்பெற்று வருகிறது. தமிழகத்தில் உள்ள சிறந்தபெரிய நூலகங்களுள் இதுவும் ஒன்று. இந்நூலகத்தில் இன்று 12011 நூல்கள் உள்ளன. பல்கலைக்

www.saivamonline.com

கழகங்களிலும், வேறுபெரிய நூலகங்களிலும் கிடைக்கப் பெறாத அரிய நூல்கள் பல உள்ளன. 17, 18-ஆம் நூற்றாண்டில் அச்சிடப்பெற்ற தொன்மையான நூல்களும் உள்ளன. குறிப்பாகத் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மூன்றுமொழிகளில் பல்வேறு துறைகளைச் சார்ந்த நூல் களும் உள்ளன. இவையாவும் துறைவாரியாகப் பிரிக்கப் பெற்று, நூலகப்பட்டியல் ஒன்றில் விபரமாக அச்சிடப் பெற்றுள்ளன. இந்நூலகத்தில் உள்ள பல்வேறு மொழி நூல்களின் எண்ணிக்கை மட்டும் இங்குத்தரப்பெற்றுள்ளன. தமிழ்: 5717, வடமொழி 1029, ஆங்கிலம் 2609, தெலுங்கு 139, கன்னடம் 9, இந்தி 92, மராத்தி 14, பெங்காலி 25, பஞ்சாபி 1, பெர்சியன் 7, அரபி 8, உருது 41, கிரீக் 164, இலத்தீன் 107, பிரஞ்சு 80, ஜெர்மன் 143, ரஷ்யன் 3, ஸ்பானிஷ் 1, இத்தாலி 9, ஹீப்ரு 13 இவ்வாறு இருபது மொழிகளில் நூல்கள் இடம் பெற்றுள்ள இந்நூலகம் நூற்றுக்கணக்கான ஆராய்ச்சி அறிஞர்களுக்குப் பேருதவி யாகத் திகழ்கிறது. அரிய ஏட்டுச்சுவடிகள் பலவும் இங்கே பாதுகாக்கப்பெற்று வருகின்றன. செந்தமிழில் பலஅரிய நூல்கள் வெளிவர இந்நூலகம் வழங்கியகொடை பெரிது.

## சென்னையில் பிரசார நிலையம்:

தருமையாதீனத் திருமடம், மற்றும் திருக்கோயில்களின் சார்பில் தமிழகத்தின் தலைநகரில் செந்தமிழும் சிவநெறியும் வளர்க்கும் நோக்கில் சமயப் பிரசாரநிலையம் ஒன்று 25வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ–ல–ஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளாட்சிக்காலத்தில் தோற்றுவிக்கப் பெற்றது. சென்னை தியாகராயநகர் வடக்கு உஸ்மான் சாலையில் இதற்கெனப் பெரிய கட்டடம் ஒன்று வாங்கப்பெற்றது. 'தருமையாதீன மடாலய, தேவாலய சமயப் பிரசாரநிலையம்' என்றபெயரில் வேளூர் இறைபணி மன்றமாக இது விளங்கிவருகிறது. அப்போதைய முதலமைச்சர் திரு. சி. இராஜகோபாலா சாரியார் அவர்களால் இது திறந்து வைக்கப் பெற்றது.

www.saivamonline.com

தருமையாதீனம் 26 வது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தொடக்க காலம் முதற்கொண்டு வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் என்ற திரு நாமத்தோடு இதன் தலைமையையேற்றுத் தலைநகரில் செந் தமிழ் வளர்ச்சிக்கும் சிவநெறி வளர்ச்சிக்கும் பெருந் தொண்டாற்றினார்கள். தமிழறிஞர்கள் பலரும் இப்பிரசார நிலைய விழாக்களில் பங்கேற்றார்கள்.

தலைநகரில்வாழும் மக்களுக்குச் சமயவிழிப்புணர்ச்சியை இந்நிலையம் நல்கியது. மாலைநேரத்தில் தக்க தமிழ்அறிஞர் களைக்கொண்டு இலவசப் புலவர்வகுப்புக்கள் நடத்தப் பெற்றுவருகின்றன. சிறு குழந்தைகளுக்குத் தேவார இசைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. வட மொழி வகுப்புக்கள் திருவாசகவகுப்புக்கள், சாத்திரபாட வகுப்புக்கள் முதலியன வும், நாயன்மார் குருபூஜை விழாக்களும் முறையாக நடை பெற்று வருகின்றன. சென்னையிலும் அதனைச் சார்ந்த பகுதியிலும் மாதாந்திர வழிபாடும், சமயப்பிரசாரமும் நடைபெற்று வருகின்றன. சேரிவாழ் மக்களுக்கு அறிவு கொளுத்துதல், நோயாளிகளை மருத்துவ மனைகளில் சென்று கண்டு ஆறுதல்கூறி உதவுதல், சிறைக்கைதிகளைச் சந்தித்து அறவுணர்வு ஊட்டுதல் முதலிய பல பணிகளை இந்நிலையம் தலைநகரில் இயற்றிவருகிறது. தமிழ்விழாக்கள்பல நடை பெற்று வருகின்றன. 2000க்கு மேற்பட்ட நூல்களோடு கூடிய நூலகம் ஒன்றும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்கேயே திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை சதாபிஷேகநினைவு அப்பர்குருகுலம்' ஒன்றும் நடைபெற்று வருகிறது. ஏழை மாணவர்களுக்கு உணவு-உடை-உறையுள் வழங்கி இவர்கள் உயர்கல்விபெற இக்குருகுலம் தொண்டாற்றி வருகிறது. பிரசாரநிலையம் தருமையாதீனத்தின் பணிகளை வெளி யுலகத்தோடு இணைக்கும் பாலமாகத் திகழ்ந்து வருகிறது.

## தமிழறிஞர்களுக்குப் பாராட்டும் பட்டமும் :

தருமையாதீனம் தமிழறிஞர்கள் பலரையும் ஆதரித்து அவர்கள் வழியே தமிழுக்கு அரிய பல சிறப்புக்களைப்பெற்று

www.saivamonline.com

வழங்கி வந்திருத்தலைச் சீகாழி அருணாசலக் கவிராயரைப் பற்றிய குறிப்பில் கண்டோம். இம்முறையில் தமிழ்வல்ல சான்றோர்களை அவ்வப்போது அழைத்து அவர்களுக்குத் 'தருமையாதீனத் தமிழ்ப்புலவர்' என்ற பட்டம் பொறித்த பொற்பதக்கம் வழங்கிப் பொன்னாடைபோர்த்திச் சிறப்பித்து அவர்கள் தமிழ்த் தொண்டினை மேலும்சிறக்க ஊக்கு விப்பது தருமையாதீனத்தில் நெடுநாட்களாக மேற் கொள்ளப்பெற்று வருகிறது. இவ்வகையில் ஆதீனத்தமிழ்ப் புலவர்களாகத் தற்போது ஏறத்தாழ இருபதின்மர் திகழ் கிறார்கள். பாலகவி. திரு. வே. இராமநாதன்செட்டியார், வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம்பிள்ளை, மகா வித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர், மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார், பண்டிதவித்துவான் திரு, கு. சுந்தரமூர்த்தி, திருக்கோயில்ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், டாக்டர். திரு. சொ. சிங்கார வேலன், வித்துவான், திரு. வி. சா. குருசாமிதேசிகர் போன்ற பல தமிழ் அறிஞர்கள் இவ்வாதீனத் தமிழ்ப் புலவர்களாக விளங்கி நின்று ஆதீனத்தமிழ் வளர்ச்சிப் பணிகளில் பெருந் தொண்டாற்றி வருகின்றனர். இதுவன்றித் தருமையாதீனம் முத்தமிழ் வளர்ச்சி நோக்கில் இசைவல்லாரையும் பட்ட மளித்துப் பாராட்டி வருகிறது. தருமையாதீன இசைப் புலவர் என்ற பட்டம்பெற்றுப் பல்லாண்டுகள்பணியாற்றித் தேவார இசைக்குத் தொண்டாற்றி மறைந்த இசையரசு திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களுக்குப் பின் சீகாழி திரு. எஸ். கோவிந்தராஜன் அவர்களுக்கு இப்பட்டம் வழங்கப்பெற்றுள்ளது. இவ்வாறன்றித் தமிழகத்தில் பல் வேறு துறைகளில் சிறப்பான தொண்டாற்றிய பெருமக்கள் பலருக்கும் ஆதீனம் உரிய பாராட்டும் பட்டமும் வழங்கி அவர்களை ஊக்கமூட்டி வருகிறது. சிதம்பரம் டாக்டர் திரு. எம். அரங்கசாமிப்பிள்ளை அவர்களுக்கு 'அறப்பணிச் செல்வர்' என்ற பட்டமும், லால்குடி திரு. ஜி. வரதராஜ பிள்ளை அவர்களுக்குத் 'திருக்குறள் வேள்' என்ற பட்டமும், திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுக்கு 'அமுத

www.saivamonline.com

மொழிக் கொண்டல்' என்ற பட்டமும், பூம்புகார் திரு. இரா. இராஜசேகரன் அவர்களுக்குச் 'செந்தமிழ்க் காவலர்' என்ற பட்டமும் வழங்கப்பெற்றமை சில காட்டுக்களாகும்.

தருமையாதீனம் 25-வது குருமகாசந்நிதானம் அவர்கள் ஆட்சிக்காலம் முதலாக மணிவாசகர் பொருட்டுச் சொக்கநாதப்பெருமான் மண் சுமந்து-பிரம்படிபட்டுத் திருமேனியில் புண் சுமந்த திருநாளாகிய ஆவணி மூலத்திருநாளில் ஆண்டுதோறும் தமிழ் அறிஞர் ஒருவருக்கு அவர்கள் மேற்கொண்டு தொண்டாற்றிச் சிறந்த துறைகளுக்குத்தகப் பொருத்தமான பட்டம் ஒன்றை வழங்கிச் சிறப்பித்து வருகிறது. 'சொல்லின் செல்வர்' என்ற பட்டமும் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுக்கு வழங்கப் பெற்றது. திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார், டாக்டர், திரு. மா. இராசமாணிக்கனார், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், திரு. க. வச்சிரவேல் முதலியார், திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. க. வெள்ளைவாரணனார், டாக்டர், திரு. ந. சஞ்சீவி போன்ற தமிழறிஞர்கள் பலரும் ஆவணிமூல விழாவில் சிறப்புப்பட்டம் அளிக்கப் பெற்றவர்கள். இதுவன்றிச் சிவாசாரியப் பெருமக்கள், சிற்ப, ஓவிய, இசைக் கலைஞர்கள் முதலிய பல பெருமக்களும் தருமையாதீனத்தால் பட்டமளித்துப் பாராட்டப்பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் சைவத்திருமுறைகள் செந்தமிழ் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பன. இத்திருமுறைகளை முறையாகக் கற்றுப் பல்லாண்டுகள் தொண்டாற்றிய திருமுறை இசைவாணர்களையும் தருமையாதீனம் பட்டமளித்துப் பாராட்டிச் சிறப்பித்து வருகிறது. ஆண்டுதோறும் அப்பர் சுவாமிகள் திருவவதாரத் தலமாகிய திருவாமூரில் சித்திரைச்சதய நன்னாளிலும், திருஞானசம்பந்தர் திருவவதாரத் தலமாகிய சீகாழியில் திருமுலைப்பால் திருநாளிலும் சிறந்த ஓதுவாமூர்த்திகள் ஒருவருக்குத் 'திருமுறைக்கலாநிதி' என்றபட்டம்

www.saivamonline.com

பொறித்த பொற்பதக்கம் வழங்கி, ரூபாய் ஆயிரத்து ஒன்று பொற்கிழி அளித்துப் பொன்னுடை போர்த்திச் சிறப்பிக்கப் பட்டுவருகிறது. இவ்வாறு செந்தமிழ்ச் சிவநெறிவளர்ச்சியில் தொண்டாற்றிய அறிஞர் பெருமக்களைப் பாராட்டி, இத் துறையில் பணியாற்ற இளைஞர்களுக்கு ஊக்கமூட்டும் பெருஞ் செயலைப் பல்லாண்டுகளாகத் தருமையாதீனம் அடக்கமாகச் செய்து வருகிறது.

## பிற தமிழ்ப்பணிகள்:

ஆங்கிலம் பயிற்றும் கல்வி நிறுவனங்கள் பலவற்றில் பயிலும்மாணாக்கர்களுக்குத் தமிழில் நாட்டஞ்சிறக்கவேண்டி மாயூரத்தில் உள்ள பள்ளிகள் கல்லூரிகள் அனைத்திற்கும் தனித்தனியே பரிசுகளைத் தருமையாதீனம் வழங்கிவருகிறது. நிறைநிலை வகுப்பில் தமிழில் முதல் மதிப்பெண் பெறு வோர்க்குத் தங்கப்பதக்கங்கள் வழங்கப்பெற்று வருகின்றன. இவையன்றித் தமிழகத்தின் பல ஊர்களிலும் இம்மாதிரியான பரிசுகள் மாணாக்கர்களுக்கு வழங்கப்பெற்று வருகின்றன. காலத்திற்குஏற்ற பணியாகத் தேவாரத் திருமுறைப் பாடல் களைத் தக்கவர்களைக் கொண்டு இசைத்தட்டுக்களில் பதிவு செய்து உலகுக்கு வழங்கிய பெருமை முதன்முதலாகத் தருமையாதீனத்திற்கே உரியது. ஆண்டுதோறும் நடை பெறும் ஆதீனக் குருமுதல்வர் குருபூஜைத் திருநாளை ஒட்டிப் பத்து நாட்களுக்குத் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு ஒன்று மிகச்சிறப்பாக நடத்தப்பெற்று வருகிறது. இந் நாட்களில் உண்டியும் உறையுளும் வழங்கி, தக்க அறிஞர் களைக் கொண்டு கோடைக்கால சமயப்பயிற்சி வகுப்புக் களும் நிகழ்த்தப்பெற்றுவருகின்றன.



www.saivamonline.com

தருமையாதீனம் கடந்த 450ஆண்டுக் காலமாக நிகழ்த்தி வரும் அனைத்துப்பணிகளையும் ஆராயமுற்படுதல் இந்நூலின் நோக்கமன்று. ஒரு கோணத்தில் இவ்வாதீனத்தின் தமிழ் வளர்ச்சிப்பணிகள் மட்டுமே இங்கே நினைவுகூரப்பட்டுள்ளன. ஆதீனத் தமிழ்வளர்ச்சிப் பணிகளை முழுவதுமாக இந்நூல் விளக்கியதாகாது. மேலெழுந்தவாரியான ஒரு பார்வை யாகவே இது கருதத்தகும். இவ்வாறான வரலாற்றுச்சிறப்பு மிக்க – தமிழ் வளர்ச்சியின் ஊற்றுக்கண்களுள் ஒன்றாகத் திகழும் தருமையாதீனத்தின் பணிகளை நன்றியோடுபோற்றி இதன் வளர்ச்சிக்கு ஒல்லும் வகைஎல்லாம் உதவுதல் தமிழர் கடனாகும்.

www.saivamonline.com

# பிற்சேர்க்கை

www.saivamonline.com

## தருமையாதீனக் குருமூர்த்திகள் :

1. ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிகர்
2. ,, ஆனந்தபரவச தேசிகர்
3. ,, சச்சிதானந்த தேசிகர்
4. ,, மாசிலாமணி தேசிகர்
5. ,, ஞானசம்பந்த தேசிகர்
6. ,, திருஞானசம்பந்த தேசிகர்
7. ,, திருவம்பல தேசிகர்
8. ,, அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்
9. ,, திருநாவுக்கரசு தேசிகர்
10. ,, சிவஞான தேசிகர்
11. ,, சச்சிதானந்த தேசிகர்
12. ,, முத்துக்குமர தேசிகர்
13. ,, ஞானசம்பந்த தேசிகர்
14. ,, கந்தப்ப தேசிகர்
15. ,, மாசிலாமணி தேசிகர்
16. ,, சச்சிதானந்த தேசிகர்
17. ,, மாணிக்கவாசக தேசிகர்
18. ,, சிவஞான தேசிகர்
19. ,, மாணிக்கவாசக தேசிகர்
20. ,, சிவஞான தேசிகர்
21. ,, சச்சிதானந்த தேசிகர்
22. ,, மாணிக்கவாசக தேசிகர்
23. ,, சுப்பிரமணிய தேசிகர்
24. ,, சண்முக தேசிகர்
25. ,, சுப்பிரமணிய தேசிகர்

தற்போது 26-வது குருமூர்த்திகளாக
எழுந்தருளியிருப்பவர்கள்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள்

www.saivamonline.com

# தருமையாதீன அருளாட்சிக்குட்பட்ட திருக்கோயில்கள்

1. ஆச்சாள்புரம் – சிவலோகத் தியாகர்–திருவெண்ணீற்று உமையம்மை
2. சீகாழி – பிரமபுரீசுவரர் – திரிபுரசுந்தரி
3. குறுக்கை – வீரட்டேசுவரர் – ஞானம்பிகை
4. வைத்தீஸ்வரன் கோயில் – வைத்தியநாதர் - தையல்நாயகி
5. மாயூரம் – குமரக்கட்டளை – சுப்பிரமணியசுவாமி
6. மாயூரம் – வள்ளலார் கோயில் – வதாந்நியேசுவரர் – ஞானம்பிகை
7. கருங்குயில்நாதன் பேட்டை – சத்திபுரீசுவரர் – ஆனந்தவல்லி
8. திருபுவனம் – கம்பகரேசுவரர் – அறம்வளர்த்த நாயகி
9. குத்தாலம் – சொன்னவாறறிவார் - அரும்பன்னவனமுலையாள்
10. மணக்குடி – சுந்தரேசுவரர் – ஞானம்பிகை
11. திருவையாறு - ஐயாறப்பர் – அறம் வளர்த்த நாயகி
12. மாயூரம் – விசுவநாதர் கோயில் - விசுவநாதர் – விசாலாட்சி
13. திருப்பனந்தாள் – செஞ்சடையப்பர் – பெரியநாயகி
14. திருநள்ளாறு – நள்ளாறர் – போகமார்த்தபூண்முலையம்மை
15. திருத்தருமபுரம் - யாழ்மூரிநாதர் – மதுரமின்னம்மை
16. விளநகர் – துறைகாட்டும் வள்ளல் – காம்பனதோளியம்மை

www.saivamonline.com

17. திருப்பறியலூர் – வீரட்டேசுவரர்
– இளங்கொம்பனையாள்

18. திருக்கருப்பறியலூர் – குற்றம்பொறுத்தநாதர்
– கோல்வளைநாயகி

19. திருநின்றியூர் – இலக்குமிபுரீசுவரர் – உலகநாயகி

20. பேரளம் – சுயம்புநாதர் – பவானியம்மை

21. திருக்கற்குடி – உச்சிநாதர் – அஞ்சனாட்சி

22. திருவாரூர் – இராஜன் கட்டளை

23. திருச்சிராப்பள்ளி – மௌனமடம்

24. திருவிடைமருதூர் – பிச்சக்கட்டளை

25. திருக்கடவூர் – அமிர்தகடேசுவரர் - அபிராமியம்மை

26. திருக்கோளிலி – பிரமபுரீசுவரர்
– வண்டமர்பூங்குழலாள்

27. தென்திருமுல்லைவாயில் – முல்லைவனநாதர்
– அணிகொண்டகோதையம்மை

## தருமையாதீனத்தில்
## தொன்றுதொட்டுவரும் சில தமிழ் வழக்காறுகள்

1. ஆதீனத்திலிருந்து - திருக்கோயில் கட்டளைத்தம்பிரான்களுக்கு எழுதப்படும் கடித வாசகம்:—

"உ குருபாதம். ஸ்ரீவைத்தியநாதசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை இராமலிங்கத் தம்பிரானுக்கு பண்டாரத் திருவுள்ளத்திலே சிவக்ஞானம் மேன்மேலும் உண்டாவதாக. நாளது வரைக்கும் நாமும் தம்பிரான்களும் பண்டாரத் திருவுள்ளத்திலே பரிபூரணமத்திலிருக்கிறோம்............ மற்றபடி தாம்/அங்குத்தி

www.saivamonline.com

சுகமே இருக்கிற செய்திக்கெழுதியனுப்பவும். சதா காலமும் சிவசிந்தனை மறவாமலிருந்து/பண்டாரத் திருவருளே கண்ணுயிருந்து வரும்படி சிந்திக்கவும்''

2. ஆதீனத்திலிருந்து - ஆதீன சீடர்களாக விளங்கும் அன்பர்களுக்கு அனுப்பப் பெறும் குருபூஜை விழா அழைப்புக் கடித வாசகம் :—

"உ குருபாதம் சகலகுணசம்பந்நரான ........ அவர்கள் — ... ... ..........அவர்களுக்குப் பண்டாரத் திருவுள்ளத்திலே சிவஞானமும், தீர்க்காயுளும், சிந்தித மனோரத சித்தியும், அரோக திடகாத்திரமும், சகலபாக்கியமும் மேன்மேலும் உண்டாவதாக.

நாளது .......... ...வரை நாமும் தம்பிரான்களும் பண்டாரத் திருவுள்ளத்திலே பரிபூரணத்திலிருக்கிறோம்................30—5—1975 சுக்கிரவாரநாள் குருபூஜையும் மற்றைய நாள் பட்டினப்பிரவேசமும் நிறைவேறுவனவாய் இருக்கும். தாங்கள் வந்திருந்து சிறப்பிக்க வேண்டும்.

*'அதிக நல்லறம் நிற்பதென் றறிந்தனை அறத்துள்*
*அதிக மாஞ்சிவ புண்ணியம் சிவார்ச்சனை: அவற்றுள்*
*அதிகமாஞ்சிவ பூசையுள் அடியவர் பூசை*
*அதிகமென்றறிந் தன்பரை அருச்சனை செய்வாய்'*

என்றவாக்கியம் தங்களுக்கியல்பாமே. மற்றபடி தாங்களும் மற்றுமுண்டான பேர்களும் சுகமேயிருக்கின்ற செய்திக்கு எழுதியனுப்ப வேண்டும். சதாகாலமும் சிவசிந்தனை மறவாமலிருந்து வரும்படி சிந்திக்கவும், சுவாமிக்குச் சாத்திய விபூதி வரக் காட்டினோம். வாங்கித் தரித்துக் கொள்ளவும்.

www.saivamonline.com

## தருமையாதீனம் ஆவணிமூலவிழாவில் சிறப்புப்பட்டம் வழங்கப்பெற்ற அறிஞர்கள்

1. 1951 திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.
– 'சொல்லின் செல்வர்'

2. 1952 திரு. தெ பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,
எம். ஏ., பி. எல்.
– 'பல்கலைச் செல்வர்'

3. 1953 திருமதி. இ. த, இராஜேஸ்வரி அம்மையார்,
எம். ஏ
– 'விஞ்ஞானச்செல்வி'

4. 1954 திரு. கி. வா. ஜகந்நாதன், எம். ஏ.
- 'செந்தமிழ்ச் செல்வர்

5. 1955 டாக்டர். திரு. அ சிதம்பரநாதன் செட்டியார்
எம். ஏ., பிஎச். டி.
– 'செந்தமிழ்க் காவலர்'

6, 1956 திரு கி. சிவராமன், எம். ஏ.
– 'சித்தாந்தச் செல்வர்'

7. 1957 திரு. லெப. கரு. இராமநாதன் செட்டியார்.
– 'முத்தமிழ் வித்தகர்'

8. 1958 திருமதி. சி. ந. குழந்தையம்மாள்.
- 'செந்தமிழ்ச்செல்வி'

9. 1959 டாக்டர். திரு. டி. எம். பி. மகாதேவன்,
எம். ஏ., பிஎச். டி.,
– 'வேதாந்த வித்தகர்'

10. 1960 திரு. அ. சீனிவாசராகவன், எம். ஏ.
– 'செந்தமிழ்ச் செம்மல்'

11. 1961 திரு. கு அருணாசலக்கவுண்டர்
– 'பைந்தமிழ்ச் செம்மல்'

www.saivamonline.com

12. 1962 டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார், எம். ஏ., எம். ஓ. எல். பிஎச். டி.
– 'சைவஇலக்கியப் பேரறிஞர்'

13. 1963 திரு. ச. சிவகுமாரன், எம் ஏ.,
– 'பைந்தமிழ்ச் செல்வர்'

14. 1964 திரு. என். ஆர். முருகவேள். எம். ஏ., எம். ஓ. எல்.
– 'சித்தாந்தப் புலவர்மணி'

15. 1965 திரு. அ. ச. ஞானசம்பந்தன், எம். ஏ.
– 'செந்தமிழ் வித்தகர்'

16. 1966 திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., பி. டி.
– 'சித்தாந்த கலைச்செல்வர்'

17. 1967 திரு. ச சச்சிதானந்தம்பிள்ளை, பி ஏ, எல். டி.,
– 'சைவம் பெருக்குஞ்சீலர்'

18. 1968 டாக்டர் திரு. வ. ஆ. தேவசேனபதி எம். ஏ., பிஎச். டி.,
– 'சித்தாந்த வித்தகர்'

19. 1969 திரு. க. வெள்ளை வாரணனார்
– 'திருமுறை ஆராய்ச்சிக்கலைஞர்'

20. 1970 டாக்டர். திரு. ந. சஞ்சீவி. எம். ஏ., பிஎச். டி.,
– 'செந்தமிழ் இலக்கியச் செம்மல்'

21. 1971 திரு. ம. ப. பெரியசாமித்தூரன்
– 'செந்தமிழ்க் கலைச்செல்வர்'

22. 1972 திரு. பெ. திருஞானசம்பந்தம்பிள்ளை எம். ஏ., எல் டி.,
– 'மும்மொழிக் கொண்டல்'

23. 1973 திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்
– 'செந்தமிழ்க் கவிதைச் செம்மல்'

www.saivamonline.com

24. 1974 திரு. மீ. ப. சோமசுந்தரம் (சோமு)
– 'பல்கலை வித்தகர்'

25. 1975 திரு. அ. சங்கரநாராயணன்,
எம். ஏ, எம். லிட்.,
– 'செந்தமிழ்ச் சிவநெறிச் செம்மல்'

26. 1976 டாக்டர். திரு. பா. நடராசன்,
எம். ஏ., பிஎச். டி.
– 'பொருளியல் தத்துவப் பேரறிஞர்'

27. 1977 திரு. கீ. இராமலிங்கனார், எம். ஏ.
– 'தமிழ்மொழிக் காவலர்'

28. 1978 திரு. எஸ். மகாராஜன், பி. எஸ்சி., பி. எல்.
– 'இலக்கிய ரசிகமணி'

29. 1979 டாக்டர். திரு. வை. இரத்தினசபாபதி
எம். ஏ., பிஎச். டி.
– 'சித்தாந்தக் கலைஞர்'

30. 1980 டாக்டர். திரு. கி. ஆ. பெ. விசுவநாதன்
– 'செந்தமிழ்க் காவலர்'

## ஆதீனச்சார்புக் கல்வெட்டுகள் :

ஸ்ரீ குருஞான சம்பந்தரின் கால ஆராய்ச்சிக்கு
உதவியாக அமைந்த
சிக்கல் வெண்ணெய்ப்பெருமான் கோயில்
கல்வெட்டு.

'மஹாராயர் பிருதிவிராஜ்யம் பண்ணியருளா நின்ற சகாப்தம் 1482-ன் மேல் செல்லாநின்ற இரவுத்திரி வருஷம் ஆனி (2)மீ 4-உ அளி [ய] ராமராசைய்ய குமாரர் கிருஷ்ணமராசையன் உத்தாரப்படிக்கு அவ[ஸ]ரம்

www.saivamonline.com

விருபாக்ஷ நாயக்கர் சிக்கல் வடகுடி ஓடாச்சேரி முதலான தேவஸ்தானங்களுக்கு (3) திருவாரூர் ஞானப்பிரகாச பண்டாரத்தைப் பரதேசி முத்திரையும் கணக்கு எழுத்து மடைத்துக் கொள்ளும்படியும் [.,] பரதேசி முத்திரைக்கு நாள் க-க்கு ஒட்டொடுக்கு பிரசாதம் 4 உ யும் மாசம் க-க்கு பு-2 கணக்குப் பிள்ளைக்கு, அறையிலக்கப்படி சுவாமியஸ்வதந்தரமும் பற்றிக்கொண்டு கொற்றிலக்கை (5) கடைக் கூட்டிலக்கை நீங்கலாக ஸர்வமாந்யமாக கட்டளையிட்டபடியாலே சந்திராதித்த வரையும் பூசை திருப்பணி நன்றாக விசாரித்துக்கொண்டு வரக்கடவாராக. (6) இந்த தர்மத்துக்கு யாதொருத்தர் அதிகம் பண்ணினால் கங்கைக் கரையிலே காராம்பசுவைக் கொன்ற தோஷத்திலும் தன்னுடைய மாதாவையும் பிதாவையும் (7) கொன்ற தோஷத்திலேயும் போகக்கடவாராகவும்.'

## ஆதீன மடாலயத்திலுள்ள கல்வெட்டு.

"கலியுக வருஷம் 4842-இல் 1663-க்கு மேற்செல்லா நின்ற ரௌத்திரி வருஷம் சித்திரைமீ 3உ ஒன்பதாங் குரு மூர்த்தமாக அவதரித்த திருநாவுக்கரசு தேசிகனருள் பெற்ற சிவஞானதேசிக சம்பந்தன் அருட்செங்கோல் செலுத்தும் நாளையிற் சொக்கநாத சுவாமி பூசைமடமுந் தம்பிரான்கள் பூசைமடமுந் தொட்டிக்கட்டுஞ் சித்திரக்கட்டுங் கருங்கல் திருப்பணியாகக் கட்டிநிறைவேறினது."

## தருமபுர ஆதீனத்துக்குட்பட்ட புள்ளிருக்குவேளூர் அம்மன் சந்நிதியிலுள்ள தீர்த்தப்படித்துறையிலுள்ள கல்வெட்டு.

"ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1692 கலியுகஞ் 4871-க்கு இதன்மேற் செல்லாநின்ற விக்ருதிஞ வைகாசி மீ போசலே வங்கிசத்தார்களான துளசாமகாராசா சாயபு அவர்கள் ராஜ்ய பரிபாலனம் பண்ணுகிற நாளையில்

www.saivamonline.com

ஸ்ரீமல்லாசி காடேராயரவர்க்குச் சீகாழிச்சீமை முகாசு நடக்கையில் தருமபுரம் பண்டார சன்னதி ஸ்ரீ சிவஞான தேசிக சம்பந்தன் அநுக்கிரகத்தைப் பெற்ற முத்துக் குமரசாமித் தம்பிரான் அவர்கள் வயித்தியநாத சுவாமி கட்டளை அதிகாரம் பண்ணுகிற காலத்தில் தீர்த்தக்கரை நாற்சாரியும் மண்டபமும் சாங்கமாகக் கருங்கல் திருப் பணியாய்க் கட்டி நிறைவேறினது.''

தருமபுர ஆதீனத்துக்குட்பட்ட புள்ளிருக்கு வேளூர் அம்மன் சந்நிதியிலுள்ள தீர்த்தப் படித்துறையிலுள்ள கல்வெட்டு.

''ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1689 கலியுகஞு 4868 இதன் மேற்செல்லாநின்ற சருவசித்துஞு ஆவணிமீ போஸ்லே வங்கிசத்தார்களான துளசாமகாராசா சாயபு அவர்கள் ராச்சிய பரிபாலனம் பண்ணுகிற நாளையில் ஸ்ரீ மல்லாசிகாடேராயரவர்களுக்கு சீகாழிச்சீமை முகாசு நடக்கையில் தருமபுரம் பண்டாரசன்னதி ஸ்ரீ சிவஞான தேசிக சம்பந்தன் அநுக்கிரகத்தைப் பெற்ற முத்துக் குமரசாமித் தம்பிரான் அவர்கள் வயித்தியநாதசுவாமி கட்டளை அதிகாரம் பண்ணுகிற காலத்தில் இரண்டாம் பிரகாரம் நாலுபுறத்து மதிலும் திருமாளிகைப் பத்தியும் அம்மன்சன்னதி தட்டி சுற்றி மண்டபமும் சாங்கமாகக் கருங்கல் திருப்பணியாய்க் கட்டி நிறைவேற்றி அந்தத் திருமாளிகைப் பத்தியின் மேலே நாலுபுறமும் வவ்வால் நெற்றிகட்டி நிறைவேறினது.''

தருமபுர ஆதீனத்துக்குட்பட்ட மணக்குடி ஆலயத்திலுள்ள கல்வெட்டு

''மணக்குடி கோவில் கலியுக வருஷம் 4654 சகாப்தம் 1775 மேற்செல்லாநின்ற பிரமாதீச வருஷம் வைகாசிமீ 23உ தருமபுரம் ஆதீனம் கந்தப்பதேசிகன் அருளைப்பெற்ற மாசிலாமணித்தேசிகன் நாளையில் சுவாமிகோயில் கட்டி நிறைவேறினது. உ நீடூழி உ.''

www.saivamonline.com

# ஆதீனத் தமிழ்ப்பணிகள்குறித்து அறிஞர்களின் பாராட்டு....

வள்ளுவர் காட்டிய அறநெறியைப் பின்பற்றுவதற்கு ஆதீனம் வெளியிடும் உரைவளம் மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தக்கது. இது மிகவும் சிறந்த ஒரு வெளியீடாகும்.

— திரு. எம். பக்தவத்சலம்.

நன்முறையில் இப்பதிப்பை வெளியிட்டார் தருமபுரத் திருமடத்தார். திருமடத்தார் காலத்துக்கேற்ற தொண்டு புரிதல் மகிழ்ச்சியூட்டுகிறது.

— திருவாரூர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்.

சோறு கொடுத்துப் பசியாற்றிய தருமை; மருந்து கொடுத்து நோயாற்றிய தருமை; சிவம் கொடுத்துப் பிறவிப்பிணி நீக்கிய தருமை, இன்று திருக்குறளின் பலமுகப்பட்ட ஒளிகளாம் உரைகளை ஒருசேர வெளியிட்டுத் தமிழைக் கொடுத்து, தம் குறை எல்லாம் ஒருங்கு நீக்க முற்பட்டிருக்கிறது.

— திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்.

சற்றேறக்குறைய பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தென்னாட்டுச் சைவ மடங்களே மொழியையும், சமயத்தையும் பாதுகாக்கும் அரண்களாக விளங்குகின்றன.

— திரு. ரா. பி. சேதுப்பிள்ளை.

மடத்தவர்கள் செய்யவேண்டிய கடமைகளில் ஒன்றாகிய தமிழ்ப்பணியில் ஈடுபட்ட தருமபுர ஆதீனத் தலைவர் அவர்களின் வண்மைக்குத் தமிழ் மக்கள் நன்றி செலுத்தும் கடமையுடையவர்கள்.

— டாக்டர். திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார்.

குருகுலம் பிரிண்டர்ஸ், வேதாரண்யம். போன்: 27-A

www.saivamonline.com